விலை ரூபா 30
பக்கங்கள் 56

# உதயன்

சுடர் 31 | கதிர் 122 | வள்ளுவர் ஆண்டு 2047 | பங்குனி 14, ஞாயிற்றுக்கிழமை 27.03.2016

மகாராஜா பொதிகள் சேவை
சிக்கனப் பொதிகள் சேவை
Per Kg
லண்டன் 449/= கனடா 549/= சுவிஸ் 449/=
GTV Enterprises (Pvt)Ltd.
இல 225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2224338 / 021-4925024
இல 25, கந்தசாமி கோவில் வீதி, வவுனியா.
024 - 4930200 / 076 - 6908961

# ஊடகப் படுகொலைகளுக்கு நீதி விசாரணை நடக்குமென உறுதி கூறட்டும் அமைச்சர்

## வடக்கு ஊடகவியலாளர்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 27
வடக்கில் கடந்த காலத்தில் இடம் பெற்ற ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் ஆகியோரின் படுகொலைகள் தொடர்பில் இது வரை நீதியான விசாரணைகள் நடத்தப்படவில்லை. தற்போது வட பகுதிக்கு வருகை தந்துள்ள ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக, இந்தப் படுகொலைகள் தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என்பதை உறுதி செய்யவேண்டும் என்று வடக்கு ஊடகவியலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக தலைமையில் தென் பகுதி ஊடகவியலாளர்கள் சுமார் நூறு பேர் வடபகுதிக்கு நேற்றைய தினம் மூன்று நாள் பயணமாக வருகை தந்துள்ளனர். இந்தக் குழுவினர் இன்றைய தினம் பல தரப்பினரையும் சந்திக்கவுள்ளனர்.

குறிப்பாக, முப்படையினரையும் இவர்கள் சந்தித்துப் பேசவுள்ளனர்.

மேலும் படுகொலை செய்யப்பட்ட ஊடக பக். 53

## இலங்கையின் போதைப்பொருள் கடத்தல்காரர் தாய்லாந்தில் கைது

கொழும்பு, மார்ச் 27
தாய்லாந்தில் கைது செய்யப்பட்ட பிரபல போதைப் பொருள் கடத்தல்காரரான வசந்த மெண்டிஸ் நேற்று இலங்கைக்கு பக். 53

## முஸ்லிம்களை குறி வைக்கும் மகிந்த அணி

கொழும்பு, மார்ச் 27
மகிந்த அணியான பொது எதிரணியின் அடுத்த கூட்டம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் பேருவ பக். 53

## சர்வதேச விமான நிலையமாக மாற்றப்படமாட்டாது பலாலி

### பிராந்திய விமானப் போக்குவரத்தே இடம்பெறும் என்கிறது இலங்கை அரசு

கொழும்பு, மார்ச் 27
பலாலி விமான நிலையம், சர்வதேச விமான நிலையமாக மாற்றப்படமாட்டாது. இந்தியா உள்ளிட்ட தெற்காசிய நாடுகளுடன் விமானப் போக்குவரத்தை மேற்கொள்ளும் பிராந்திய விமான நிலையமாகவே மாற்றப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் அத்துல ஜெயவிக்கிரம.


பலாலி விமான நிலையத்தைப் பிரா பக். 53

முச்சந்தி முரளி



அதைத்தான் முதலில செய்ய வேணும் கண்டியளே...

## இயற்கை ஒதுக்கிடப் பிரதேசமானது நாகர்கோவிலில் 7882 ஹெக்ரேயர்



யாழ்ப்பாணம், மார்ச் 27
நாகர்கோவில் பகுதியில் 7 ஆயிரத்து 882 ஹெக்ரேயர் நிலப் பரப்பைத் தாவர விலங்கினப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் 'நாகர் கோவில் இயற்கை ஒதுக்கிடப் பிரதேசமாக', அரசு பிரகடனப் படுத்தியுள்ளது.

இதற்குரிய வர்த்தமானி அறிவித்தல், இந்த மாதத்தின் ஆரம்பத்தில், வனஜீவ ராசிகள் அமைச்சர் பக். 53

## வெள்ளவத்தையில் வைத்து வெள்ளை வானில் கடத்தினர்

விரிவு பக். 02

## முகநூல் மூலம் அறிமுகமாகி பெண்களிடம் நகைகள் மோசடி

### பொலிஸாரிடம் சிக்கினார் யாழ். இளைஞர்

யாழ்ப்பாணம், மார்ச் 27
முகநூல் (பேஸ்புக்) மூலமாகப் பெண்களுடன் தொடர்பை ஏற்படுத்தியவர் என்று கூறப்படும் யாழ்ப்பாண நபர் ஒருவர் பெண்ணொருவரிடம் நகைகளைப் பெற்றுக் கொண்டு தலைமறைவாக பக். 53

## மேலும் ஒரு தொகுதி காணிகள் வலி.வடக்கில் விடுவிக்கப்படும்

யாழ்ப்பாணம், மார்ச் 27
வலி.வடக்கில் மேலும் ஒரு தொகுதி காணிகளை விரைவில் விடுவிக்க நடவடிக்கை எடுக்கப் படுவதாக யாழ்.மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்குரிய நடவடிக்கைகள் இராணுவத்தினராலும் - பாதுகாப்பு அமைச்சினாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை, அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்துவதற்கான செயற்பாடு விரைவில் இடம்பெறும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

வலி.வடக்கில் கடந்த டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி 700 ஏக்கர் விடுவிக்கப்பட்டிருந்தது. கடந்த 12 ஆம் திகதி குறித்த காணிகளை மக்களிடம் உத்தியோகபூர்வ பக். 53

## உணவு தவிர்ப்பை இடைநிறுத்தினர் கேப்பாப்பிலவு மாதிரிக் கிராம மக்கள்

### வடக்கு முதலமைச்சரின் உறுதிமொழியை அடுத்து

முல்லைத்தீவு, மார்ச் 27
தமது பூர்வீக வாழ்விட நிலங்கள் தமக்கு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, கடந்த மூன்று நாள்களாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட கேப்பாப்பிலவு மக்கள், நேற்று மாலை 5.00 மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் வழங்கிய எழுத்து மூல உறுதிமொழியை தொடர் பக். 53



www.sdb.lk
நிலையான வைப்புகளுக்கு
உயர்ந்த வட்டி
ஐந்து வருட நிலையான வைப்பொன்றுக்கு
12.00% உச்ச வருட வட்டி (முதிர்ச்சியில்) வ.தே.வ. 9.86%

| | 3 மாதம் | 6 மாதம் | 1 வருடம் |
|---|---|---|---|
| முதிர்ச்சியில் (வ.வ.வி.) | 8.00% | 8.50% | 9.25% |
| வ.தே.வ. | 8.24% | 8.68% | 9.25% |

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்காக இலங்கை மத்திய வங்கியின் நிபந்தனைகளுக்கு அடங்க, 1 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல சிரேஷ்ட பிரஜைகளுக்கும் மேலதிக வட்டியும் உரித்தாகும்.
ஏனைய நிலையான வைப்புகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டி வீதம்
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள சணச அபிவிருத்தி வங்கிக் கிளையை நாடுங்கள்
011 5 411 411
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி

# வவுனியாவில் 5 நிமிடங்களே நின்றார் ஊடக அமைச்சர்

## பிராந்திய ஊடகவியலாளர் பிரச்சினைகள் எதுவும் பேசப்படவில்லை எனவும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

வடக்குக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஊடக அமைச்சர் ஐந்து நிமிடங்கள் வரையிலேயே வவுனியாவில் நின்றிருந்தார் என்றும் இதன் போது பிராந்திய ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை என்றும் நிகழ்வில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலகவின் வடக்குப் பயணத்தின் வரவேற்பு நிகழ்வுக்குத் தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்று முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்ட சிங்கள ஊடகவியலாளர்கள், ஊடக அமைச்சரிடம் நேரில் தெரிவித்துள்ளனர்.

ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக தலைமையில் தென்பகுதி ஊடகவியலாளர்கள் நூறு பேர் வரையில் வடபகுதிக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்டு வருகை தந்தனர். கொழும்பிலிருந்து ரயிலில் புறப்பட்ட இவர்களை, வவுனியா ரயில் நிலையத்தில் வரவேற்கும் நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது பிராந்திய ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும், அமைச்சர் கலந்துரையாடுவார் என்று தெரிவிக்கப்பட்டே இந்த வரவேற்பு நிகழ்வு ஏற்பாட்டாளர்களால் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்ட சிங்கள ஊடகவியலாளர்கள் இந்த நிகழ்வுக்குத் தமக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என்பதை ஊடக அமைச்சரிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன் ஊடக அமைச்சரை வரவேற்பதற்காக மாலை அணிவிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இறுதி நேரத்தில் இந்தக் குழப்பங்களின் காரணமாக மாலை அணிவித்து வரவேற்பது கைவிடப்பட்டது.

5 நிமிடங்கள் வரையிலேயே வவுனியாவில் அமைச்சர் நின்றிருந்தார் என்றும், இதன் போது பிராந்திய ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எதுவும் பேசப்படவில்லை என்று இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்கள் தெரிவித்தனர்.

(ற-ஜ-5-402)

# வெள்ளவத்தையில் வைத்து வெள்ளை வானில் கடத்தினர்

## ஆணைக்குழு முன்பாக தந்தை சாட்சியம்

முல்லைத்தீவு,மார்ச் 27

வன்னியில் போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது கொழும்புக்கு வியாபார நிமித்தம் சென்ற என்னுடைய மருமகன் சுவேந்திரன் 20.11.2008 அன்று வெள்ளவத்தையில் வைத்து வெள்ளை வானில் கடத்தப்பட்டார்.

இதனை நேரில் பார்த்த எனக்குத் தெரிந்தவர் ஒருவர் சொன்னார். அவரும் இப்போது இறந்து விட்டார். பல இடங்களில் மகனைத் தேடிப் பார்த்தேன். ஒரு இடத்திலும் காணவில்லை. இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் என்னுடைய மகளும் இறந்து விட்டார் - இவ்வாறு நேற்று முல்லைத்தீவில் ஜனாதிபதி ஆணைக்குழு முன் கண்ணீர் விட்டழுதார் தந்தை ஒருவர்.

காணாமற் போனவர்களைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வு நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது. இதில் புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட முறைப்பாட்டாளர்கள் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டிருந்தனர். இந்த அமர்வில் சாட்சியமளித்த போதே குறித்த தந்தை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளதாவது-

எனது மருமகன் வெள்ளை வானில் கடத்தப்பட்டமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமும் முறைப்பாடு செய்திருந்தேன். மருமகன் கொழும்பில் தங்கியிருந்த இடமும் எங்களுக்குத் தெரியாது.

வெள்ளை வானில் கடத்தப்பட்டுக் காணாமற் போனதில் இருந்து அவர் பற்றிய ஒரு தகவலும் இல்லை. அதாவது எட்டு வருடங்களாக எனது மருமகன் தொடர்பில் ஒரு தகவலும் இல்லை. இறுதிப் போரில் இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் என்னுடைய மகளும் இறந்து விட்டார். - என்றார்.

காணாமற்போன மருமகனுக்கு இறப்புச் சான்றிதழ் தந்தால் அதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா என்று ஆணைக்குழுவினர் கேட்டபோது, "அவரைத் தேடிப் பார்த்தால் நல்லம். 16, 12 வயதுகளில் அவருக்கு பெண் பிள்ளைகள் இருக்கின்றனர். அப்பா வேணும் என்று அவர்கள் அழுகின்றார்கள்" - என்று கண்ணீருடன் அவர் கூறினார்.

உயிருடன் இருக்கின்றார் என்று எண்ணி உங்கள் மருமகனைத் தேடிப் பார்ப்போம். எறிகணைத் தாக்குதலில் இறந்த உங்கள் மகளுக்கு நட்ட ஈட்டைப் பெற்றுக்கொள்ளவதற்குத் துரித நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என்று ஆணைக்குழுவினர் இதன் போது தெரிவித்தனர்.

(ற-ஜ-ரி7)

# எமது இலக்கை அடைவதற்காக பொறுமையுடன் இருக்கின்றோம்

## மாவை. சேனாதிராசா எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 27

சர்வதேச அரங்கில், ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் ஏற்படுத்தப்பட்ட தீர்மானத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காகவும், அழிந்து போன எமது தேசத்தைக் கட்டி யெழுப்புவதற்காகவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. எனினும் நாங்கள் இந்த அரசை விட்டு உடனடியாக வெளியேற முடியாது. இலக்கை அடையும் வரை நாங்கள் பொறுமையுடன் இருக்கின்றோம். நல்ல திட்டங்கள், தீர்மானங்களுக்கு ஆதரவு வழங்குகிறோம். - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.



தமிழரசுக் கட்சியின் வட்டுக் கோட்டை அலுவலகத்தில் இயங்கும் உதய வாழ்வு வாழ்கைத் திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் எட்டாவது அணி மாணவர்களின் வாழ்க்கைத்திறன் கண்காட்சியும், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாங்கள் ஒரு அரசை உருவாக்குவதற்கு வாக்களித்து விட்டோம் என்றாலும் அரசின் பங்காளிகளல்ல, அமைச்சரவையில் அங்கம் வகிப்பவர்கள் அல்ல.

அரசியல் தீர்வு ஒன்று எட்டப்பட வேண்டும். அழிந்து போன எமது தேசம் மீளவும் கட்டியெழுப்பப்பட்டு வாழ்வும் வளமும் பெற வேண்டும். எங்களுடைய இளைய சமுதாயத்தையும் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்புவதற்குரித்தான,இனப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சந்தர்ப்பங்களாக மாற்றியமைக்க வேண்டும்.

எங்களுடைய தமிழ்ப் பெண்குலம் உலகத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது எவ்வளவு துன்பங்களை அனுபவித்து வருகின்றது. 92 ஆயிரம் பெண்கள் தமது வாழ்வை இழந்து நிற்கின்றனர். இவர்களில் இளம் பெண்கள் குழந்தைகளோடு அதிகளவில் அநாதரவாக நிற்கின்றனர். அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டியது எமது கடமை.

எங்களுடைய பெண்கள் எம் மத்தியிலே சமத்துவமாக வாழ வேண்டும். அரசு பாதிக்கப்பட்ட பெண்கள் தொடர்பில் அவர்களின் எதிர்காலம் குறித்து எந்த விதமான ஆக்கபூர்வமான விடயங்களையும் இதுவரை செய்யவில்லை. நாங்கள் சர்வதேசத்திடமும் இது தொடர்பில் பேசி இருக்கின்றோம், பேசிக் கொண்டிருக்கிறோம்.

பாதிக்கப்பட்ட பெண்கள் மீண்டும் வாழ்வு பெறுவது தான், எங்களுடைய எதிர்கால வரலாற்றிலே எங்கள் சமுதாயத்தின் வெற்றியாகவும் முயற்சியாகவும் வாழ்வாகவும் இருக்குமென நினைக்கிறேன்.

ஆட்சி மாற்றத்தின் பின்பு சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவு திட்டத்திலே இளம் சமுதாயம் வேலை வாய்ப்புப் பெற்றுக்கொள்ளக் கூடிய எந்தவித திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை. நிதிகள் ஒதுக்கப்படவில்லை. மிகக் குறைந்தளவே ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒரு குடும்பம் சிறக்க வேண்டும் எனில் ஆணும் பெண்ணும் சமத்துவம் பெற வேண்டும். ஆகவே எமது இனப் பெண்களுடைய வாழ்வு வளம் பெற வேண்டும். சுதந்திரமாக சகல உயர்வுகளையும் பெற்று வாழ வேண்டும் - என்றார்.

(ற-ஜ-ரி2,ரி5)

# உதய வாழ்வு வாழ்கைத் திறன் மேம்பாட்டுநிறுவன கண்காட்சியும், சான்றிதழ்கள் வழங்கல் நிகழ்வும்





தமிழரசுக் கட்சியின்வட்டுக்கோட்டை அலுவலகத்தில் இயங்கி வரும் உதய வாழ்வு வாழ்கைத்திறன் மேம்பாட்டு நிறுவனத்தின் எட்டாவது அணி மாணவர்களின் வாழ்க்கைத் திறன் கண்காட்சியும், சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் நேற்று தலைமைச் செயலக வளாகத்தில் அமைந்துள்ள அரங்கத்தில் இடம்பெற்றன.

உதயன் குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் திருமதி யசோதா சரவணபவன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் மற்றும் சுடரொளி குழுமத்தின் தலைவருமான ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட சிரேஷ்ட பேராசிரியர் க.தேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

கண்காட்சி நிகழ்வில் கணினிக் கற்கை நெறி, சிறுவர் பெரியோருக்கான ஆடை வடிவமைப்பு, பனம் பொருள் உற்பத்தி சார் பொருள்கள், அழகுசாதன, முக அலங்காரம் தொடர்பிலான குறிப்புக்கள், பனை சார் அலங்காரப் பொருள்கள், கேக் ஐசிங், கழிவுப் பொருள்களில் இருந்து உருவாக்கப்பட்ட அழகு சாதனப் பொருட்கள், சிறுவர்களுக்கான பொம்மை வடிவமைப்புக்கள் போன்றவற்றின் காட்சிப்படுத்தல்கள் இடம்பெற்றன.

நிகழ்வில் எட்டாவது அணி மாணவர்களாக இணைந்து தமது தொழில்சார் பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு விருதுகளும் வழங்கப்பட்டன. பயிற்சிகளை வழங்கிய ஆசிரியர்களும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப் பட்டனர்.

நிகழ்வின் சிறப்பம்சமாக யாழ்.மாநகர சபையால் 2015 ஆம் ஆண்டிற்கான யாழ்.விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீட சிரேஷ்ட பேராசிரியர் க.தேவராஜா பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் உதயன் பத்திரிகையில் கடமையாற்றுவோரின் பிள்ளைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(ற-ஜ-ரி2,ரி5)

# இதழியல் டிப்ளோமா கற்கையை மீண்டும் உடனே ஆரம்பியுங்கள்

## யாழ். ஊடக வளங்கள் பயிற்சி மையத்தின் பழைய மாணவர் அமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஊடக வளங்கள் பயிற்சி மையத்தினூடாக நடத்தப்பட்ட இதழியல் டிப்ளோமா பயிற்சிகளை மீளவும் உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு, ஊடகத்துறை அமைச்சரிடம் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் பழைய மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் ஊடகத்துறை அமைச்சருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் பல்வேறு விடயங்களையும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக் கொள்ளாத இளைஞர்கள் மற்றும் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் ஊடகக் கல்வியைப் பெறும் வாய்ப்பு இதழியல் டிப்ளோமா பயிற்சிநெறி நிறுத்தப்பட்டமையினால் தடைப்பட்டுள்ளது. இதனால் இதில் தலையிட்டு இதழியல் டிப்ளோமா பயிற்சி நெறியை உடனடியாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் குறைந்த கட்டணத்தில் ஊடகக் கல்வியைப் பெறுவதற்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும்.

2003 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட ஊடக வளங்கள் பயிற்சி மையத்தை பல்கலைக் கழகத்திலுள்ள மீன்பிடியியல் மற்றும் விளையாட்டு விஞ்ஞானத்துறை அலகுகள் போன்று தனியான அலகாகப் பிரகடனம் செய்து அதற்கான உரிய உத்தியோகத்தர்களை நிரந்தரமாக நியமித்து அதனைத் தொர்ச்சியாக இயங்க பல்கலைக் கழகத்திற்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். தற்போது பல்கலைக்கழக நிர்வாகம் இந்தப் பயிற்சி நிலையத்தை மூடி பல்கலைக் கழகத்தின் பட்டப்படிப்புத் துறையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிகிறோம். இதனால் தமிழ் ஊடகவியலாளர்களுக்குச் சேவையாற்றுவதற்காக இருக்கக் கூடிய ஒரே நிறுவனத்தையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் தமிழ் ஊடகத்துறை பாதிப்படையும்.

> “ தமிழ் ஊடகவியலாளர்கள் பட்டப் படிப்புக்களை மேற் கொள்வதற்கு வசதியாக வெளி வாரியாக ஊடகத் துறையில் பட்டம் பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்படுத்தித்தரப்பட வேண்டும். ”

தமிழ் ஊடகவியலாளர்கள் பட்டப் படிப்புக்களை மேற்கொள்வதற்கு வசதியாக வெளிவாரியாக ஊடகத்துறையில் பட்டம் பெறுவதற்கும் வாய்பு ஏற்படுத்தித் தரப்பட வேண்டும். அத்துடன் இரண்டு வருட இதழியல் டிப்ளோமா கற்கையைப் பூர்த்தி செய்தவர்கள் ஊடகத்துறையில் நேரடியாகப் பட்டப்படிப்பை மேற்கொள்வதற்கு வாய்ப்பேற்படுத்தித் தருமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

இதழியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்தவர்கள் நேரடியாகப் பல்கலைக்கழக பட்டப்படிப்பில் இணைந்து கொள்ள முடியும் என்று ஏற்கனவே யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் உறுதியளிக்கப்பட்டிருந்ததை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் டிப்ளோமா பயிற்சிகளைப் பூர்த்தி செய்து கொண்ட மீன்பிடியியல் மற்றும் விளையாட்டு விஞ்ஞானத் துறையினருக்கு அரச வேலைவாய்ப்பு வழங்கப்படுகின்றது. ஆனால் இதழியல் டிப்ளோமா பயிற்சியைப் பூர்த்தியாக்கியோருக்கு அரச வேலை வாய்ப்பில் உள்ளீர்க்கும் வாய்ப்பு மறுக்கப்படுகின்றது.

குறிப்பாக பாடசாலைகளில் ஊடகக்கற்கைகள் பாடத்தைக் கற்பிப்பதற்கான ஆசிரியர் வெற்றிடங்கள் தற்போதும் நிரப்பப்படாமல் உள்ளன. அதே போன்று பொது மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் மற்றும் ஊடகத் தொடர்பு உத்தியோகத்தர் பதவிகளும் அரச சேவைகளில் உள்ளன. இதற்கு இதழியல் டிப்ளோமா பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களை நியமிக்க அமைச்சரவைப்பத்திரம் ஒன்றின் மூலம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி மையத்தைத் தொடர்ச்சியாக இயக்குவதற்கு வசதியாக ஊடக நிறுவனங்களின் ஆசிரியர்களையும் உள்ளடக்கிய முகாமைத்துவக் குழுவொன்றை நியமித்து தமிழ் ஊடகக் கல்வியைத் தொடர்ச்சியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஊடக வளங்கள் பயிற்சி மையத்தை தொடர்ச்சியாக இயக்குவதற்கும் வலுப்படுத்துவதற்கும் வசதியாக ஊடக அமைச்சினூடாகத் தொடர்ச்சியாக நிதியுதவியை வழங்கியுதவுமாறும் கேட்டுக் கொள்வதாக, அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2754 திகதி: 2016-03-26
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
31 46 48 68 U
போனஸ் இல. 05
புதன்கிழமை ஜக்பொட் ரூ. 11,701,100/-
தொ.இல: 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
2016.03.30 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 479
சீட்டிழுப்பு திகதி 2016.03.26
வெற்றி இலக்கங்கள்
16 46 62 63 W
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 49,069,620/=
தொ.இல: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 1985 . 06 . 13

விண்ணில் 2012 . 03 . 28

அ.றெனோல்ட் எல்ரன்

(யாழ் பல்கலைக்கழக மாணவனும் வடமராட்சி கிழக்கு பட்டப் படிப்பு மாணவர் ஒன்றியத்தின் மு.செயலாளரும் ஆவார்)

கனவுகளுடன் நாம் காத்திருக்க
காலனிடம் நீ சென்றதேனோ !
என்றாவது நீ மீண்டும் வருவாயா? என
ஏக்கத்துடன் நாம் காத்திருக்கின்றோம்
என்றும் உன் ஆன்மா
அமைதியில் இளைப்பாற ஆண்டவனை
வேண்டுகின்றோம்.

நாளை (28.03.2016) திங்கட்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

# சித்திரைப் புத்தாண்டு சம்பள முற்பணம் வழங்க நிதியைப் பெற்றுக் கொடுக்குக

## சிவில் அமைப்புகள் அரசிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 27

தமிழ், சிங்களப் புத்தாண்டுக்கான சம்பள முற்பணத்தை வழங்க நிதியைப் பெற்றுக் கொடுக்குமாறு ஊழல் எதிர்ப்பு முன்னணி உட்பட சில சிவில் அமைப்புக்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரச திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவன ஊழியர்களுக்கு, புத்தாண்டுக்கான சம்பள முற்பணத்தை வழங்கத் தேவையான நிதியை வழங்குமாறு நிதியமைச்சு, திறைசேரி உட்பட பொறுப்புக் கூற வேண்டிய நிறுவனங்களிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

**ஊழல், மோசடிகள் காரணமாக நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்கள் பலருக்கு சம்பள முற்பணத்தை** வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பெரும் நட்டம், கடனைத் திரும்பச் செலுத்த முடியாத நிலைமை, வீண் விரயம் மற்றும் ஊழல் போன்றவை காரணமாக அரச நிறுவனங்கள் இந்த நிலைமைக்கு உள்ளாகியுள்ளன.

இப்படியான சில நிறுவனங்களுக்குச் சம்பளத்தை வழங்க மாத்திரம் திறைசேரி மாதாந்தம் நிதியை வழங்கி வருகிறது. எனினும், புத்தாண்டுக் கொடுப்பனவுகளை வழங்க இந்த நிறுவனங்களிடம் போதிய நிதி வசதிகள் இல்லை.

இதன் காரணமாக இலங்கையின் மிகப் பெரிய கலாசாரப் பண்டிகையின் போது அவற்றில் பணியாற்றும் ஊழியர்கள் பெரும் பொருளாதார சிரமங்களை எதிர் நோக்கியுள்ளனர் எனவும் **ஊழல் எதிர்ப்பு முன்னணி குறிப்பிட்டுள்ளது.** (த-5)

சன்சக்தி ரேடர்ஸ்
கிக்விசன் / HIKVISION
World No.1
by asmag Germany/Frankfurt in 2012 and 2015
4 கமராக்கள்
DVR, Power Supply,
BNC, DCjack
42,000/=
இருந்து பெற்றுக்கொள்ளலாம்.


விலை உயர்ந்தவை ஆனால் தரத்தில் பன்மடங்கு உயர்ந்தவை!.
SST - சன்சக்தி ரேடர்ஸ் www.sunsakthy.com Email info@sunsakthy.com
தொலைபேசி 0212217994 கை.தொ.077 593 0335

# ES Printers

# ES GiftZ

உங்கள் உறவினர்களுக்கு
அன்பளிப்பு பொருள்களை
எம் இணையத்தளம் ஊடாக
அனுப்பி மகிழுங்கள்

**www.esgiftz.com**

info@esgiftz.com

Poster / Notice
Lable / Wedding
Card / Bag Print /
Award / Frame Item /
Batch / Vehicle Brand /
T-Shirt / Cap
ID Card / Key Tag
Book Mark /
Pen Print /
Book Printing /
Woodent Print




**சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில், விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில் குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.**




(C(29555)(10.17)

#357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 492 7471 / 021 492 7472

esprintersjaffna@gmail.com

# பனைமரம் தறிப்பதை உடன் நிறுத்த வேண்டும்

## பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், மார்ச் 27

பனைமரத்தை மக்கள் தமது தேவைக்குக் கண்டபடி தறிப்பதை உடன் நிறுத்த வேண்டும்.

குடா நாட்டின் இந்தப் பனை வளத்தால் தான் மழை வீழ்ச்சியும் காணப்படுகின்றது என்று பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளை தெரிவித்தார்.

காரைநகர் பிரதேசத்தில் பனைக் கைப்பணிப்பயிற்சிநெறி ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

குடாநாட்டின் பனை வளம் அருகிச் செல்கின்றது. பனைகளை மக்கள் தமது தேவைக்குத் தறிப்பதை உடன் நிறுத்த வேண்டும். பனை வளத்தைப் பாதுகாக்கவும், ஊக்குவிக்கவும் உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.

பனைகள் அதிகமாக உள்ளதால் தான் மழையும் பெய்கின்றது. இந்தப் பனைகளை தினமும் அழித்துச் சென்றால் குடா நாடு மழை வீழ்ச்சி இன்றி பாலைவனமாக மாறிவிடும். இதன் காரணத்தால் பனைகளை அழிப்பதை மக்கள் உடன் நிறுத்த வேண்டும்.

பனைகளைப் பாதுகாத்து அதிலிருந்து பயன்களை மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பனை வளத்தை நம்பியே ஆயிரக்கணக்கான மக்கள் தமது குடும்ப வாழ்க்கையை நடத்தியும் வருகின்றனர்.- என்றார். (ற-ஜ-17)

# ஐக்கிய தேசியக் கட்சியில் சீர்திருத்தம் செய்ய முடிவு

## தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்காலம் மற்றும் ஏற்பட்டிருக்கும் சவால்களுக்கு பொருத்தமான வகையில் சீர்திருத்தம் செய்வதற்கு கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கமைய கட்சியின் இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்டத் தலைவர்களுக்கு அதிகமான சந்தர்ப்பம் வழங்குவதை அடிப்படையாகக்கொண்டு இந்த சீர்திருத்த நடவடிக்கைகளை ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்தார்.

கட்சியின் ஏற்பாடு நடவடிக்கைளை வலுவடைய செய்வதன் மூலம், எதிர்வரும் காலங்களில் மக்களின் செல்வாக்கைப் பெற்றுக் கொள்வது இதன் பிரதான காரணமாகும்.

இந்தச் செயற்பாடுகளைத் தொடர்ந்து கொண்டு செல்வதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக, கட்சியின் முதல்மட்டத் தலைவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கிவிட்டு அவர்களிடம் காணப்படுகின்ற முன்னேற்றம் மற்றும் வெற்றிக்கமைய எதிர்காலத்தலைமைத்துவம் வழங்கப்பட வுள்ளது.

கட்சியின் மூன்றாம் மட்ட தலைமைத்துவம் தற்போது வரையில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற நிலையில், அண்மையில் இடம்பெற்ற புதிய இலங்கைக்கு இடமளிக்கவும் என்ற தலைப்பிலான நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கான பிரதான பொறுப்புகளும் அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கூட்டு எதிர்க்கட்சியின் முதலாம் மட்ட தலைவர்கள் ஏற்பாடு செய்த ஹைட்பார்க் மைதான கூட்டத்தை விடவும் மிகவும் சிறப் பாக இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்ய மூன்றாம் மட்டத்தினருக்கு முடிந்துள்ளமை குறித்து பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் சந்தர்ப்பம் வழங்குவதற்காகவும் மேலும் விரிவாக்கம் செய்வதனை நோக்கமாகக் கொண்டு கட்சியில் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது என்று கட்சியின் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற-ஜ-5)

# வல்லப் பட்டையுடன் சீனர் கைது

கொழும்பு, மார்ச் 27

இலங்கையில் பிரஜாவுரிமை பெற்றுள்ள சீனர் ஒருவர், ஒரு தொகை வல்லப் பட்டைகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்டுள்ளார் என்று இலங்கை சுங்கப்பிரிவு அறி வித்துள்ளது.

நாட்டிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் தொழில்நுட்ப அதிகாரியாகக்கடமையாற்றும் இவர், சீனாவுக்குப் பயணிக்க கட்டுநாயக்க விமான நிலையம் சென்ற போதே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இவரது பொதியை சுங்க அதிகாரிகள் சோதனையிட்ட போது 28 கிலோ கிராம் பெறுமதியான வல்லப்பட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கைப்பற்றப்பட்ட இந்த வாசனைப் பொருளின் பெறுமதி 50 லட்சம் ரூபா என தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஜ-5)

# புதிய வாழ்க்கையின் எதிர்பார்ப்பை கிறிஸ்துவின் உயிர்ப்பு தருகின்றது

## வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

இலங்கை வாழ் அனைத்து கிறிஸ்தவ மக்களுக்கும் ஈஸ்டர் தின வாழ்த்துக்கள். இயேசுவின் வாழ்க்கையும் போதனைகளும் உலகளாவிய ரீதியில் அநேகமானோரின் வாழ்க்கைகளில் இன்னும் தாக்கம் செலுத்துகின்றது. இயேசுபிரான் தனது உலக வாழ்க்கையில் ஏழைகளையும் சமூகத்தில் அதிகாரம் இல்லாதவர்களையும் குறித்து மிகுந்த கரிசனை கொண்டிருந்தார் என்பதை அவரது வாழ்க்கைக்கூடாகக் கண்டு கொள்ளலாம் என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் தனது ஈஸ்டர் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த நாளானது ஒரு புதிய வாழ்க்கைக்கான எதிர்பார்ப் பைக் கொண்டு வந்ததான மரணத்திலிருந்து இயேசுபிரான் உயிர்த்ததனை நினைவு கூருகின்ற தினமாக அமைகின்றது.

இந்த நாளைக் கொண்டாடு கின்ற அதேவேளை இயேசு பிரானின் போதனைகளையும் அவரது முன்னுதாரணமான வாழ்க்கை முறையையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஈஸ்டர் தினம் கொண்டு வருகின்றதான நம்பிக்கையின் செய்தி எம்மக்கள் அனை வருக்கும் ஆசீர்வாதமானதாக அமையட்டும்–என்றார். (த)

# சோபித தேரரின் இறப்புத் தொடர்பில் தம்மாலோக்க தேரரிடம் வாக்குமூலம்

கொழும்பு,மார்ச் 27

மறைந்த சோபித தேரரின் இறப்புத் தொடர்பில் சந்தேகம் இருக்கின்றது என்றும், இது தொடர்பில் அரசு ஆணைக்குழு அமைத்து விசாரணை நடத்தவேண்டும் என்றும் தம்மாலோக்க தேரர் அண்மையில் கூறியிருந்தார்.

இது சம்பந்தமாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மேற்கொள்கின்ற விசாரணைக்காக உடுவே தம்மாலோக்க தேரரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

உடுவே தம்மாலோக்க தேரரிடம் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நேற்று விசாரணைகளை மேற்கொண்டனர். குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்று வாக்குமூலம் அளித்தேன் என்று உடுவே தம்மாலோக்க தேரர் தெரிவித்துள்ளார். (ற-ஜ)

# போர்ட் சிற்றியை நிறுத்தினால் நட்டஈடு கொடுக்க வேண்டும்

## ஒப்பந்தத்தில் பல குறைபாடுகள் என்கிறார் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, மார்ச் 27

சர்ச்சைக்குரிய கொழும்பு துறை முக நகரத் (போர்ட் சிற்றி) திட்டத்தை இடைநிறுத்தினால் சம்பந்தப்பட்ட சீன நிறுவனத்துக்கு மாதாந்தம் 30 தொடக்கம் 35 மில்லியன் வரையான அமெரிக்க டொலரை நட்டஈடாகச்செலுத்த வேண்டி வரும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த நட்டஈட்டுத் தொகை இலகுவான தொகையல்ல எனவும், இந்தத் தொகையை மாதாந்த அடிப்படையில் பல வருடங்களுக்குச்செலுத்த வேண்டி வரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

போர்ட் சிற்றி திட்டம் தொடர்பாக சீனாவுக்கும், இலங்கைக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன எனவும் அவை இலங்கை அரசமைப்புக்கு முரணானவை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசமைப்புக்குப் பாதகமான சரத்துக்களை ஒப்பந்தத்திலிருந்து நீக்குவது குறித்து சீன அரசுடன் பேச்சு நடத்தப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

போர்ட் சிற்றி திட்டம் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட போது இலங்கைக்குப் பாதகத்தை ஏற்படுத்தக்கூடிய சரத்துகளில் அப்போதிருந்த அரசு கவனம் செலுத்தத் தவறியுள்ளது என்றும் ஜனாதிபதி குற்றம் சாட்டியுள்ளார். (ற-ஜ)

# குடும்பத்தின் அச்சாணியான பெண்கள் தம்மைத்தாம் தற்பாதுகாக்க வேண்டும்

## தாதியர் கல்லூரி சிரேஷ்ட போதனாசிரியர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

குடும்பத்தின் அச்சாணியாகத் திகழும் பெண்கள் தங்களை முதல் தற்பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று யாழ்ப்பாணம் தாதியர் கல்லூரி சிரேஷ்ட போதனாசிரியர் திருமதி சதானந்தி நந்தகுமாரன் தெரிவித்துள் ளார்.

இலங்கைசென்ஜோன்ஸ்அம்புலன்ஸும் இலங்கை முதியோர் சுகவாழ்வுக் கழகமும் ஒன்றிணைந்து முதியோர் மாதாந்த ஒன்றுகூடலில் உலக மகளிர் தின நிகழ்வு நேற்று சனிக்கிழமை யாழ்ப்பாணம் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் மண்டபத்தில் க.கணேசமூர்த்தி தலைமையில் நடை பெற்றது

இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு 'மகளிரும் ஆரோக்கியமும்' என்ற தலைப் பின் கீழ் சிறப்புரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இன்றைய கால சூழ்நிலையில் தொற்றா நோய்களின் தாக்கம் அதிகரித்துக் காணப்படும் நிலையில் அவற்றுக்கான சிகிச்சைகளைக் காலதாமதமின்றி மேற் கொள்ள வேண்டும்.

வாழ்க்கையில் தனிப்பட்ட வாழ்க்கை, குடும்ப வாழ்க்கை, சமூக வாழ்க்கை, தொழில் வாழ்க்கை என்ற 4 படிகளும் சம விகிதத்தில் இருக்கும் பொழுதுதான் ஆரோக்கியம் இருக்கும். ஆரோக்கியத்தில் இன்றைய பெண்கள் கவனம் செலுத்து வதில்லை. இது முற்றாக நீக்கப்பட வேண்டும்.

பெண்கள் தங்களது உடலில் கவனம் செலுத்தி பரிசோதனைகளை உடனுக்குடன் மேற் கொள்ள வேண்டும். உள்ளத்தாலும், உடலாலும் பெண்கள் தங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டும். அப்போதுதான் நாடு ஆரோக்கியமாக இருக்கும் – என்றார்.

நிகழ்வில் திருமதி சதானந்தி நந்தகுமாரனால் மகளிர் கௌரவிப்பும் அதனைத் தொடர்ந்து முதியோர் பத்திரிகையின் 5 ஆவது வெளியீடும் தலைவர் கணேசமூர்த்தியால் வெளியிடப்பட்டது. (ற-ஜ-ரி)

## மரண அறிவித்தல்கள்

### பிரகாசம் ஜெசீலன்



மயிலணியைப் பிறப்பிடமாகவும் சூராவத்தை சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிரகாசம் ஜெசீலன் 25.03.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் கௌரியின் அன்புக் கணவரும் இந்துஜன், இந்துஜா, இந்துமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சூராவத்தை,
சுன்னாகம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

### துரைசிங்கம் ஐங்கரன்

(யூனியன் வங்கி அலுவலர்,
யாழ்/ இந்துக்கல்லூரி பழைய மாணவன்)



யாழ்ப்பாணம், வண்ணார்ப் பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் ஐங்கரன் (26.03.2016) சனிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் துரைசிங்கம் (பிரதேச சபை, பூநகரி)- ஶ்ரீவையந்தினி தம்பதியரின் அன்புப் புதல்வனும் சிவாகரன் (முகமைத்துவ உதவியாளர்), செல்வி. தாட்சாயினி (யாழ்/ இந்து மகளிர் கல்லூரி, A/L மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கோண்டாவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக சின்னாலடி கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கொட்டைக்காட்டு ஒழுங்கை,
வாமஸ் சந்தி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

077 983 9245

### திருமதி
### தவமணி கந்தசாமி (ஐஸ்மாமி)



தோற்றம் 1947.03.07 மறைவு 2016.03.25

அராலியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி, கல்வயலை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பு மட்டக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி கந்தசாமி (ஐஸ்மாமி) 25.03.2016 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், ஏரம்பு கந்தசாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சிறிதரன் (U.K), சந்திரபாலு (U.K) சுபேஷினி (சுபா-U.K ), இந்துமதி (கனடா), தனுஷன் (இலங்கை) ஆகியோரின் அருமைத் தாயாரும், சரத்குமார், குகநேசன், வேல்விழி, சுகிர்தா ஆகியோரின் மாமியாரும், விஷாகன், சாம்பவி, அபிராமி, அஷ்வின், அஷ்லின், அஷ்வர்த்தன், அபிஷேக், ஜோனத்தன், கிருஷ்த்தன் ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற மயில்வாகனம், பரமசிவம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற தங்கலட்சுமி, சிவகங்கை, கண்மணி, மனோன்மணி, லோகமணி, காலஞ்சென்றவர்களான நாகராசா, பூபாலசிங்கம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், பரமேந்திரன், ரவீந்திரன், கயேந்திரன், சாந்தகுமாரி, வதனகுமாரி, விஜயகுமாரி, வசந்தகுமாரி, ராஜகுமாரி, துஷ்யந்தகுமாரி, ஜீவகுமாரி, தேவகுமார், ரஞ்சிதகுமார், கோகிலகுமார், பாலகுமார், மீனகுமார், செல்வகுமார், லலித்குமார், சிந்துஜா ஆகியோரின் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.03.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைக்காக மாதம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1/4,B5, Farm Road,
Colombo - 15

(70292)
(11,17,18)

தகவல்:
ஏ.கந்தசாமி
(கணவர்)

ப.தனுசன் - 077 929 1087

# மேடைப் பேச்சுகளை கேட்டு சலித்துள்ளது தமிழ்ச் சமூகம்

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27
தாய்மாரின் வயிற்றில் இருந்து பிறக்கும் குழந்தைகள் இன - மத வேறுபாடுகளுடன் பிறப்பதில்லை என்ற கருத்து உயரியது.

ஆனால், இத்தகைய கருத்துகளை ஜே.ஆர் முதல் ராஜபக்ச வரை சொல்லக் கேட்டுக் கைதட்டிக் கைதட்டித் தமிழ் சமூகம் சலித்துப் போயுள்ளது. நண்பர் அனுரகுமாரவும் இதைச்சொல்லும் போது தமிழர்கள் மீண்டும் ஒருமுறை கைதட்டுவார்கள். முஸ்லிம்களும் கூடவே கை தட்டுவார்கள். ஆனால் அதற்கு மேல் ஒன்றும் நடக்காது. நடக்க வேண்டும் என்றால் அதிகாரப் பகிர்வு என்ற புதிய அத்தியாயத்தை மக்கள் விடுதலை முன்னணி திறக்க வேண்டும். - இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கம்பன் கழகத்தில் உரையாற்றிய மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமாரவின் கருத்துக்குப் பதிலடி கொடுத்துக்கருத்துத்தெரிவிக்கையிலேயே அமைச்சர் மனோ கணேசன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அமைச்சர் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழர்களை நோக்கி மக்கள் விடுதலை முன்னணி இன்று நகர்வுகளை மேற்கொள்வதை இருகரம் கூப்பி வரவேற்கிறேன்.

ஆனால், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், அடிப்படை உரிமைப் பட்டியலில் அதிகாரப்பகிர்வு என்பதுவே எப்போதும் முதலிடத்தில் இருந்து வருகிறது.

இதற்காகத்தான் தமிழர்கள் சொல்லொணாத் துன்பங்களைச் சந்தித்து சளைக்காமல் கடந்த 68 வருடங்கள் சுதந்திர இலங்கையிலே பல்வேறு விதமாகப்போராடி வருகிறார்கள். எனவே தமிழ் மக்களை அணுகும் எந்த ஒரு கட்சியும் அதிகாரப் பகிர்வு என்ற விடயம் பற்றிய தனது அதிகார பூர்வ நிலைப்பாட்டை அறிவிக்க வேண்டும். இது இன்று தமிழ் மக்களை நோக்கி நகரும் மக்கள் விடுதலை முன்னணி என்ற ஜே.வி.பிக்கும் பொருந்தும் என்பதை நண்பருக்கு எடுத்துக்கூற நான் கடமைப் பட்டுள்ளேன்.

இனமோதல்களுக்கு ஜே.வி.பி ஒருபோதும் இடந்தராது என்ற நண்பரின் உறுதிமொழியையும் நான் மதித்து வரவேற்கிறேன். ஆனால், சமகாலத்தில் நடைபெற்ற பெரும்போருக்கும் அதற்கு வழிகோலிய, அதிகாரங்களைப் பகிர்ந்து தரமறுக்கும் பிடிவாத இனவாதத்துக்கும் ஜே.வி.பியின் மருந்து என்ன என்பது பற்றி ஜே.வி.பியிடம் தெளிவான நிலைப்பாடுகளை நாம் காணவில்லை.

இங்கே அனுர அடிப்படை உரிமை பற்றியும், ஒரு தாய் வயிற்று பிள்ளைகள் பற்றியும் பேசும் போது, இன்னொரு இடத்தில் ஜே.வி. பியின் பொதுச்செயலாளர் நண்பர் ரில்வின் சில்வா மற்றும் பரப்புரைச் செயலாளர் நண்பர் விஜித ஹேரத் போன்றோர் புதிய அரசியலமைப்பு முயற்சிகளையே நிராகரிக்கின்றார்கள் அல்லது எள்ளி நகையாடுகிறார்கள் - எனவும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# மின் தடை ஏற்பட்டதற்கு மின்சார சபையே பொறுப்பு

## அமைச்சரவை உபகுழு தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27
மின்மாற்றி வெடித்ததன் காரணமாக நாடு முழுவதும் ஏற்பட்ட மின்சார விநியோகத் தடைக்கு இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் பொறுப்புக் கூற வேண்டும் என அமைச்சரவை உபகுழு தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளது என்று தெரிய வருகின்றது.

நாடு முழுவதிலும் கடந்த 13 ஆம் திகதி மின் தடை ஏற்பட்டிருந்தது. இது கடந்த ஆறு மாத காலத்துக்குள் நாடளாவிய ரீதியில் ஏற்பட்ட மூன்றாவது மின்தடையாகும். இதற்குச் சதிவேலைகள் காரணமாக இருக்கலாம் என்று ஆளும் தரப்பு அமைச்சர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

தொடர் மின் தடை தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக அமைச்சரவை உபகுழு ஒன்றை, ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மின்சக்தி எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியாம் பலப்பிட்டிய ஆகியோர் இணைந்து அமைத்திருந்தனர்.

இந்தக் குழுவினர் தமது அறிக்கையை வழங்கியுள்ளனர். அதிலேயே மேற்படி பரிந்துரை குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தனது கடமையைச் சரிவரச் செய்யாத காரணத்தால், பொது முகாமையாளரை அந்தப் பதவியில் இருந்து நீக்க வேண்டும். அத்துடன் இலங்கை மின்சார சபையின் திட்டதிணைக்களத்தைக் கலைத்து விட வேண்டும். மின்சாரத்தைக் கொள்வனவு செய்வது தொடர்பாக தேசிய திட்ட பிரிவு ஒன்று புதிதாக ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற பரிந்துரைகளையும் அமைச்சரவை உபகுழு முன்வைத்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-ஐ-5)

# குற்றவாளிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தாமதம்

## சந்தேகம் வெளியிடுகின்றார் விஜித ஹேரத்

கொழும்பு, மார்ச் 27
திரை மறைவிலான அரசியல் ஒப்பந்தங்கள் காரணமாகவா குற்றமிழைத்தவர்களுக்கு எதிராகச்சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்ற சந்தேகம் எழுந்துள்ளது என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள கட்சித் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஊழல், மோசடிகளில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் பொலிஸ் நிதி மோசடிப் பிரிவு, லஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு உள்ளிட்ட பல இடங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனினும், அவை தொடர்பிலான விசாரணைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணி மேற்கொண்ட முறைப்பாடுகள் தொடர்பிலான, விசாரணைகள் தாமதமடைந்துள்ளமையானது விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளது.

வசீம் தாஜுதீன் கொலை உள்ளிட்ட வழக்குகளில் சாட்சிகள் காணப்படுகின்ற போதிலும், சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இது பல சந்தேகங்களைத் தோற்றுவிக்கின்றது. அரசியல் கொடுக்கல் வாங்கல்கள், இந்த விசாரணை நடவடிக்கைகளிலும் காணப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுகின்றது. எனினும், குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வரை ஜே.வி.பியின் அழுத்தங்கள் தொடரும் - என்றார். (ற-ஐ-5)

## கண்ணீர் அஞ்சலி

### சிவஞானசுந்தரம் ஞானசேகரன் (சேகர்) சின்னவன்



தோற்றம்: 12.11.1972 மறைவு: 21.03.2016

யாழ். மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும்,
சுவிஸ் St. Gallen ஐ வசிப்பிடமாகவும்
கொண்டிருந்த சிவஞானசுந்தரம்
ஞானசேகரன் 21.03.2016 திங்கட்கிழமை
சிவபதமடைந்தார்.

அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து
நாங்கள் ஆழ்ந்த துயரம் அடைந்துள்ளோம்.
அவரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எங்களது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

**உன் பிரிவால் துயருறும்
நண்பன் பூ. அன்பழகன் மற்றும்
மாதகல் மேற்கு நண்பர்கள்.**

**தொடர்பு: 077 7743 185**

(C/30062) (10.17.18)

# தென்னிலங்கை வர்த்தகர்களது வியாபாரத்தைத் தடுத்து நிறுத்துக

## வலி.தெற்கு வணிகர் கழகக் கூட்டத்தில் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,மார்ச் 27

வலி.தெற்கில் தென்னிலங்கை வர்த்தகர்களால் மேற்கொள்ளப்படும் நடைபாதை வியாபாரத்துக்கு முற்றாகத் தடைவிதிப்பதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண் டும் என்று வலி.தெற்கு வணிகர் கழக தலைவர் லயன் சி.ஹரிகரன் தெரிவித்தார்.

பொலிஸாரும், பிரதேசசபைச் செயலரும் இதற்கான அனைத்து ஒத்துழைப்பையும் வழங்க முன்வந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வலி.தெற்கு வணிகர் கழகக் கூட்டம் வணிகர்கழகத் தலைவர் லயன் சி.ஹரிகரன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத் தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எமது பிரதேசத்தில் தென்னிலங்கை வர்த்தகர்களது நடைபாதை வியாபாரத்தால் பல்வேறுபட்ட பிரச்சினைகளைச் சமூகம் எதிர்கொள்கின் றது.

இந்த வர்த்தகர்கள் வீதி யோரங்களில் தங்கி நிற்பதால் சுகாதார ரீதியான பல்வேறுபட்ட பிரச்சினையை எமது பிரதேசம் எதிர்கொள்கின்றது. அதே நேரத்தில் பல மில்லியன் ரூபாக்களை முதலீடாகக் கொண்டு வர்த்தக நிலையத்தை ஆரம்பித்து, பிரதேச சபைக்கு வருடா வருடம் வரி செலுத்துகின்ற எமது பிரதேச வர்த்தகர்கள் இவர்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

> பல மில்லியன் ரூபாக்களை முதலீடாக கொண்டு வர்த்தக நிலையத்தை ஆரம்பித்து, பிரதேச சபைக்கு வருடா வருடம் வரி செலுத்துகின்ற எமது பிரதேச வர்த்தகர்கள் இவர்களால் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

நாம் இன, மத, மொழி வேறுபாடுகள் காரணமாக இவர்களைத் தடை செய்யவில்லை. ஆனால், இவர்கள் வேண்டுமானால் நிரந்தரமாகக் கடைகளை வாடகைக்குப் பெற்று, முறைப் படி பிரதேச சபையிடம் வியாபார உரிமம் பெற்று தமது வர்த்தக முயற்சிகளை மேற் கொள்ளலாம். இந்தநடவடிக்கையை மேற் கொள்வதற்கு அனைவரதும் முழு ஒத்துழைப்பு எமக்குத் தேவை - என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் வலி. தெற்கு பிரதேச சபை தவிசாளர், நடைபாதை வியாபாரம் அகற் றப்பட வேண்டும் என்று இங்கு மேற்கொள்ளப்படும் முடிவுக்கு எமக்கு எந்தவித மாற்றுக் கருத்தும் இல்லை என்று குறிப் பிட்டார்.

சுன்னாகம் உப பொலிஸ் பரிசோதகர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்:-

சட்டத்தில் நடைபாதை வியாபாரத்தை அகற்றுவது தொடர்பில் தமக்கு சட்ட பூர்வமாக எந்த அதிகாரமும் கிடையாது. ஆயினும் தம்மிடம் வியாபார உரிமம் பெறாத முறை யற்ற கடைகளை அகற்றும்படி பிரதேச சபை உத்தரவிட்டால் நிச்சயமாக நாம் அதற்கு முழு ஒத்துழைப்பு வழங்கி அகற்றுவோம் என்று தெரிவித்தார்.

இறுதியாக கருத்து வெளியிட்ட வலி.தெற்கு பிரதேச சபைச் செயலாளர்-

நடைபாதை வியாபாரத்தை அகற்றுவது தொடர்பாக உடனடியாக பொலிஸாருக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தல்களை வழங்குகின்றோம். இந்த வியா பாரிகளுக்கு வியாபார உரிமம் எம்மால் ஒருபோதும் வழங்கப்படாது. எமது வியாபாரிகள் பண்டிகைக் கால வியாபாரத்தில் மக்களுக்கு ஏற்ற வகையில் பொருள்களைக் குறைந்த விலையில் வழங்க முன்வரவேண்டும். அடுத்த வருடத்தில் இருந்து வியாபார உரிமம் வழங்கப்படும்போது வர்த்தக சங்கத்தின் பரிந்துரை கட்டாயமாக்கப்படும்.

வர்த்தக சங்கத்தின் அலுவலகத்துக்கு சுன்னாகம் சந்தைக் கட்டடத் தொகுதியில் ஒரு கட்டடத்தை வழங்குகின்றோம். நடைபாதை வியாபாரிகளைக் கட்டுப்படுத்துவதற்கு குழு ஒன்றை நியமியுங்கள். அனைத்து ஒத்துழைப்புக்களையும் நாம் வழங்குவோம்-என்றார். (ற-ஜ-ரி5)

### பேச்சுத்திறன் காணும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 27

பாலர் கல்விக்கழக நிர்வாகத்திலுள்ள பத்து ஞானக் குழந்தைகள் இல்ல பாலர் பாடசாலைகள் இணைந்துவழங்கும்பேச்சுத்திறன் காணும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இராமநாதன் வீதியில் அமைந்துள்ள ராஜா கிறீம் ஹவுஸின் ஹம்சிகா மண்டபத்தில் நடைபெறவுள்ளது. யாழ்.பாலர் கல்விக்கழகத் தலைவர் எஸ்.பி.காசிநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் அதிபர் செல்வி.சா.மாணிக்கம் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஜ)

### விபத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி,மார்ச் 27

சாரதிய அனுமதிப் பத்திரம் பெறாத 17 வயதுச் சிறுவன் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, மாகாண மட்டப் பரீட்சைக்குச் சென்ற மாணவனை மோதியதுடன், அவ்வழியே வந்த நடமாடும் பாண் உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்யும் ஓட்டோவுடனும் மோதியது. இதனால் ஓட்டோ வீதியை விட்டு விலகி குடை சாய்ந்தது. விபத்தில் மோட்டார் சைக்கிளோட்டி, ஓட்டோ சாரதி, 9 வயது மாணவன் ஆகியோர் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று காலை 8 மணியளவில் சங்கத்தானை பொற்றொழிலாளர் வீதியில் இடம்பெற்றது. காயமடைந்தவர்களை சம்பவ இடத்துக்கு அருகில் உள்ள மக்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். (ற-ஜ-9)

### உலக நாடக தின விழா

யாழ்ப்பாணம்,மார்ச் 27

புத்தாக்க அரங்க இயக்கத்தின் ஏற்பாட்டில் உலக நாடக தின விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் இயக்குநர் எஸ்.ரி.குமரன் தலைமையில் மல்லாகத்தில் அமைந்துள்ள அரங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தெருவெளி நாடகப் பயிற்சிநெறியை நிறைவு செய்த ஆற்றுகையாளர்களுக்கான சான்றிதழ் வழங்கல் நிகழ்வும், சமகால இலங்கைத் தமிழ் நாடகங்களின் போக்குகள் தொடர்பான கருத்தாடல் நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

உலக நாடக தின சிறப்பு ஆற்றுகையாக 'குருவும் சிஷ்யனும்' நகைச்சுவை நாடக ஆற்றுகை இடம்பெறவுள்ளது. (ற-ஜ)



வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்கான வருடாந்த கண்காணிப்புப் பரிசோதனை நிகழ்வு நேற்றுக்காலை வல்வெட்டித்துறை தீருவில் பொது மைதானத்தில் நடைபெற்றது. வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மீடின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வட மாகாணத்துக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜீ கே. பெரேரோ மற்றும் வடமராட்சிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம். ஏ. ஜவ்பர் ஆகியோர் கலந்து கொண்டனர்,(ற-ஜ-109)

### ஆண்டு நிறைவும் கால்கோள் விழாவும்

யாழ்ப்பாணம்,மார்ச் 27

பொற்பதி அறிவாலயத்தின் 4 ஆவது ஆண்டு நிறைவும், சரஸ்வதி முன்பள்ளியின் 31 ஆவது கால்கோள் விழாவும் இன்று பிற்பகல் 2:30 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலயத்தில் நடைபெறவுள்ளன.

பொற்பதி அறிவாலயம், மற்றும் சரஸ் வதி முன்பள்ளி ஆகியவற்றின் தலைவர் சண். வாமதேவன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொள்ளவுள்ளார். (ற-ஜ-ரி4)

# ஆண்களில் தங்கி வாழும் போக்கைப் பெண்கள் மாற்ற வேண்டும்

## பெண்களின் குரல் அமைப்பின் தலைவி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 27

ஆண்களில் தங்கி வாழும் போக்கை மாற்றி பெண்களாகிய நாம் பொருளாதார விடுதலையை அடையப் பாடுபடுவோம். உழைக்கும் பெண்கள் தன்னம்பிக்கை உடையவர்களாகவும், மகிழ்ச்சியாகவும், அழகாகவும் இருக்கின்றனர் என்ற தத்துவார்த்த சிந்தனையை பெண்கள் மத்தியில் ஊன்றி விதைப்போம்.- இவ்வாறு பெண்களின் குரல் அமைப்பின் தலைவி மிதிலா ஶ்ரீபத்மநாதன் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் பெண்கள் குரல் அமைப்பால் நடத்தப்பட்ட மகளிர் தினத்தில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இன்றைய பெண்கள் தின நிகழ்வின் கருப்பொருள் பெண்கள் பொருளாதாரத்தில் செழிப்படைய வேண்டும் என்பதாகும். போர் முடிவடைந்து இத் தனை வருட காலங்களாகி விட்ட போதும், எங்கள் நாட்டு அரசோ அல்லது வெளிநாட்டு அரச சார் பற்ற நிறுவனங்களோ உதவி செய்யும் என்ற எதிர்பார்ப்புக்கள் மலையேறிப் போய் விட்டன.

இனியாவது எமது கரங்களை நாமே உயர்த்த வேண்டும். எமது சொந்தக் கால்களில் நின்று உணவு, உடை, என்ற அத்தனை வசதிகளையும் பெற வேண்டும் என்றசிந்தனைகளைஎமக்குள்ளே உள்நிறுத்தி இன்றிலிருந்து உறுதிமொழி எடுத்துக் கொள்வோம்.

உலகம் பொருளாதாரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் காலமாக மாறிவிட்டது. பெண்களைப் பொருளாதார ரீதியாக சுமையென சமூகம் எண்ணுகிறது. பெண்கள் பொருளாதாரத்தில் பங்களிப்புச் செய்யும்போது குடும்பத்திலும், சமூகத்திலும் அவர்களுக்கான மதிப்பு உயர்கின்றது.

நாட்டின் மொத்தச் சனத் தொகையில் 52 வீதம் பெண்களாக இருக்கின்றனர். நாட்டு மக்களில் அரைவாசிக்கு மேல் பெண்களாக இருப்பதால், மொத்த உற்பத்தியில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்கப்படும்போது அவர்களுக்கு இயல்பாகவே உரிமைகள் கிடைத்துவிடும்.

பெண்கள் ஆண்களுக்குத்தாம் சுமை என்ற எண்ணத்தை மாற்ற வேண்டும். கல்வி அறிவும், பொருளாதார விடுதலையும் அடைந்த பெண்கள் அதிகம் தன்னம்பிக்கையும், சுயமதிப்பும் உள்ளவர்களாக இருக்கின்றனர். இவை அவர்களின் உள்ளத்தில் மாற்றங்களை உருவாக்கும். இதுதான் உண்மையான விடுதலையாகவும், சுதந்திரமாகவும் இருக்க முடியும். இந்தப் பெண்கள் தினத்தில் நாம் இந்தத் தீர்மானத்தை ஒற்றுமையாக எடுத்துக் கொள்வோம். ஆண்களில் தங்கி வாழும் நிலைமாறி பெண்களாகிய நாம் பொருளாதார விடுதலையை அடையப் பாடுபடுவோம் -என்றார். (ற-ஜ-ரி)

# கிளி. கடலுக்குள் எல்லைதாண்டும் மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கை

## மாவட்ட அரச அதிபர் அருமைநாயகம் தெரிவிப்பு

கிளிநொச்சி,மார்ச் 27

கிளிநொச்சி மாவட்ட கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடும் பிற மாவட்ட மீனவர்கள் மீது பாகுபாடு அற்ற வகையில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட அரச அதிபர் சு.அருமைநாயகம் தெரிவித்தார்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக எல்லை தாண்டி இரும்புப் பைப் கொண்டு தொழில் புரிந்த 12 பாடுகள் அவதானிக்கப்பட்டு அவை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கிளிநொச்சி மாவட்ட மீனவர்களின் நீண்டநாள் பிரச்சினையாகிய எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபடும் பிற மாவட்ட மீனவர்கள் விடயம் தொடர்பில் கூட்டு நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன் முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் முகமாக கடலுக்கு நேரடியாகச் சென்று அவதானித்தபோது மேலும் பல இரும்புப் பைப் மூலமான பாடுகளை பிற மாவட்ட மீனவர்கள் கடலில் வீசியுள்ளனர்.

> “பாகுபாடு அற்ற விதத்தில் உடனடியாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. சட்ட விரோதமாக இதனை மேற்கொள்பவர்கள் உடனடியாக பாடுகளை அகற்ற வேண்டும். அவ்வாறு அகற்றத் தவறுகின்ற பட்சத்தில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதே எமக்கு உள்ள ஒரே மாற்று வழியாக உள்ளது.”

இதன் காரணமாக இவர்கள் மீதும் பாகுபாடு அற்ற விதத்தில் உடனடியாக சட்ட நடவடிக்கை மேற் கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. சட்ட விரோதமாக இதனை மேற்கொள்பவர்கள் உடனடியாகப் பாடுகளை அகற்ற வேண்டும். அவ்வாறு அகற்றத் தவறுகின்ற பட்சத்தில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்வதே எமக்கு உள்ள ஒரே மாற்று வழியாக உள்ளது.

இதனால் இவை போன்ற தொடர் நடவடிக்கைக்கான ஏற்பாட்டில் இறங்கியுள்ளோம். அடுத்த கட்ட கடல் நடவடிக்கையின்போது பொலிஸ் மற்றும் கடற்படையினரின் உதவிகளையும் நாடுவதற்கு எண்ணியுள்ளோம்.-என்றார். (ற-ஐ-101)

# வைத்தியசாலைகளுக்கு அபிவிருத்திச் சங்கங்கள்

## வட மாகாண சபை தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 27

வட மாகாண சபைக்குட்பட்ட வைத்தியசாலைகளில் வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கங்களை உருவாக்க வட மாகாண சபை தீர்மானித்துள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மத்திய சுகாதார அமைச்சின் சுற்றறிக்கைகளுக்கேற்ப வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கங்கள் வைத்தியசாலைகளில் இயங்கி வருகின்றபோதிலும், மாகாண சுகாதார அமைச்சரால் நியமிக்கப்படும் வைத்தியசாலைப் பணியாளர்களுடன் வெளியாள்களைக் கொண்ட வைத்தியசாலை அபிவிருத்திக் குழுக்கள் இயங்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முதற் கட்டமாக பொது மற்றும் ஆதார வைத்தியசாலைகளில் இந்தக் குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன என்றும் வடமாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மாகாண சுகாதார அமைச்சரால் வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள், தாதிய அலுவலர்கள், ஏனைய அலுவலர்கள் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவுக்கு நியமிக்கப்படவுள்ளனர் எனவும், அவர்களது பெயர் விவரங்களை மாகாண சுகாதார அமைச்சருக்கு அறிவிக்குமாறும் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கு அவர் அறிவித்துள்ளார். (ற-ஐ-9)

# துணுக்காய் வலயக் கல்வி பணிப்பாளருக்கு மாற்றல்

துணுக்காய் வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி மாலினி வெனிற்றன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். நாளை திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் அவர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்று வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்தார்.

துணுக்காய் கல்வி வலயப் பணிப்பாளருக்கு எதிராக இலங்கை ஆசிரியர் சங்கம் சுமார் 20க்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுக்களைச்சில வருடங்களுக்கு முன்னரே சுமத்தியிருந்தது. அது தொடர்பில் விசாரணை செய்யுமாறு உரிய அதிகாரிகளையும் வடமாகாண ஆளுநர்களையும் கோரியிருந்தது. எனினும் அதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து உரிய விசாரணை நடத்துமாறு கோரிப்போராட்டங்கள் நடத்தப்பட்டு வந்திருந்த நிலையில், கடந்த வாரமும் துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு எதிராக வடமாகாண கல்வி அமைச்சு அலுவலகம் முன்பாக போராட்டம் நடத்தப்பட்டு வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் மனுவும் கொடுக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் வடமாகாண கல்வி அமைச்சு அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளார். அதனால் இதுவரை வடமராட்சி வலய நிர்வாகப் பதில் பிரதிக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த புஸ்பலிங்கம் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் நாளை தனது கடமைகளைப் பொறுப்பேற்பார் என்று இரவீந்திரன் தெரிவித்தார்.

இது தவிர, துணுக்காய் வலயப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள் சிலருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளதால் அவை பற்றிய விசாரணைகளுக்கும் புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையிலான குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அது பற்றிய விசாரணையும் நாளை ஆரம்பிக்கப்படும் என்று இரவீந்திரன் மேலும் தெரிவித்தார். (ற-ஐ-4)

# உண்மைக்கான உரிமைக்குரிய தினம் பளையில் கடைப்பிடிப்பு

கிளிநொச்சி, மார்ச் 27

நிலைமாறுகால நீதியை வலியுறுத்தியும், நல்லிணக்கப் பொறிமுறைச் செயன்முறையை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் உண்மைக்கான உரிமைக்குரிய சர்வதேச தினம் கடந்த வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.



பளை தம்பகாமம் பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மக்கள் தமக்கு நிரந்தரமான, நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என மெழுகுவர்த்திகளை ஏந்தி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

ஐக்கிய நாடுகள் சபையால் மனித உரிமைகள் தொடர்பான விவகாரங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டும், நிலைமாறுகால நீதியை முக்கியமான தூண்களில் ஒன்றான உண்மைக்கான உரிமையை வலியுறுத்தும் விதத்திலும், “உண்மைக்கான உரிமைக்குரிய சர்வதேச தினம்” சர்வதேச ரீதியாக மார்ச் 24 ஆம் திகதி கொண்டாடப்படுகின் றது.

இலங்கை அரசு 2015 ஆம் ஆண்டு மனித உரிமைகள் சபைக்கு நிலைமாறு கால நீதியை உறுதிப்படுத்தும் வகையிலும் நல்லிணக்கத்துக்கான பொறிமுறையை மேற்கொள்வதாகவும் உறுதி அளித்திருந்தது.

ஆனால் இன்று வரையிலும் காத்திரமாக எந்த வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. காணாமற் போனோர் தொடர்பான எந்தவித உண்மைகளும் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு வழங்கப்படவில்லை. அவர்களது உரிமைகளுக்கு மதிப்பளிக்கப்படவில்லை.

இந்த நிலையில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் சமூகமட்ட அமைப்புக்களுடனும், குறித்த பாதிக்கப்பட்ட இலக்குக் குழுவினருடனும் நீண்டகாலமாக அவர்களது உரிமைக்காக குரல் கொடுத்து வருகின்றது.

இதற்கமைவாக நிலைமாறு கால நீதியின் முக்கியத்துவத்தை தெரியப்படுத்தும் விதத்தில் இந்தத் தினம் கொண்டாடப்பட்டது. நிகழ்வுக்கு சமூகமட்ட அமைப்புக்களைச் சார்ந்தவர்களும், பொது மக்கள் பலரும் கலந்து கொண்டு நிலைமாறு கால நீதியை வலியுறுத்தித் தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர். (ற-ஐ-ரி5)



ashok STEEL
நீடித்த வலிமை

அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு,
பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும்,
சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த
அசோக் TMT இரும்புக் கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க
15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.100,000 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397/ 076 6084369, மேல் மாகாணம் - 077 3263518, மத்திய மாகாணம் - 077 3825832,
வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3

SLS
375

# இலங்கையில் ஆறு பிரதேசங்களில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஊடுருவல்

## சிங்கள ஊடகம் பரபரப்புத் தகவல்

கொழும்பு, மார்ச் 27

ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடைய நபர்கள் இலங்கையின் ஆறு பிரதேசங்களில் ஊடுருவியுள்ளனர் என புலனாய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தைத் தடைசெய்வதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததால், அந்த இயக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் எனச் சந்தேகிக்கப்படுபவர்களைக் கைதுசெய்வதில் முட்டுக்கட்டைகள் உள்ளன என்று புலனாய்வுப்பிரிவினர் தெரிவித்துள்ளனர் எனவும் தெரியவருகின்றது.

இது தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ள மேலதிக தகவல்கள் என்று குறித்த சிங்கள ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையிலுள்ள முஸ்லிம் தீவிரவாதிகளில் சுமார் முப்பது பேர் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர் என்று சந்தேகிக்கப்படுகின்றது. கலேவெல பிரதேசத்திலிருந்து சென்று ஐ.எஸ். இயக்கத்துடன் இணைந்து கொண்டார் எனச் சந்தேகிக்கப்படும் நபரொருவர் இராணுவத் தாக்குதலொன்றில் அண்மையில் கொல்லப்பட்டுள்ளார்.

> "இந்த இயக்கத்துடன் தொடர்பு வைத்திருப்பவர்களை ஒடுக்கும் பொறுப்பு புலனாய்வுப் பொலிஸ் பிரிவினருக்கும் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டும்."

இந்தப் பயங்கரவாத இயக்கம் இலங்கையில் வேரூன்றுவதைத் தடுப்பதற்குப் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்படாததால் அந்த இயக்கம் காலப்போக்கில் நாட்டின் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாற இடமிருக்கின்றது என்று ஊகங்கள் வெளியாகியுள்ளன.

நிலைமை மேலும் விபரீதமாவதற்கு முன்னர் இந்த இயக்கத்துடன் தொடர்பு வைத்திருப்பவர்களை ஒடுக்கும் பொறுப்பு புலனாய்வுப் பொலிஸ் பிரிவினருக்கும் பயங்கரவாத ஒழிப்புப் பிரிவினருக்கும் வழங்கப்பட வேண்டும். அத்துடன், இந்த இயக்கத்தை இலங்கையில் தடை செய்யப்பட்ட இயக்கமாகப் பிரகடனப்படுத்தவும் வேண்டும்.

வேலை வாய்ப்புக்கள் என்ற போர்வையில் மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று திரும்பும் இலங்கையர்கள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டும். அவர்கள் தொழிலுக் காகச் சென்ற இடங்களில் தொழில் செய்துகொண்டிருக்கிறார்களா? என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டியது முக்கியமாகும். அத்துடன், பல்வேறு வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வருபவர்களில் சந்தேகத்துக்கு இடமானவர்களை விமான நிலையத்திலிருந்தே கண்காணிக்கத் தொடங்கவேண்டும்.

ஐ.எஸ். இயக்கத்துடன் சம்பந்தப்பட்ட சுமார் 60 வலைத்தளங்கள் இன்னமும் தடைசெய்யப்படாமல் இருக்கின்றன. இதன்மூலம் இலங்கையில் அந்த இயக்கம் வேரூன்ற வாய்ப்புக்கள் உள்ளன என்று உயர் மட்ட இராணுவ புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், மாலைதீவிலிருந்து புடைவை வியாபாரம் செய்யும் போர்வையில் இலங்கைக்கு வருபவர்களும் தீவிரமாகக் கண்காணிக்கப்படவேண்டும். மாலைதீவு அரசு இதுவரை அந்த இயக்கத்துடன் தொடர்புடைய பலரைக் கைதுசெய் துள்ளது. அவர்கள் இலங்கை வழியாகவே மாலைதீவுக்கும் அதே வழியாகவே வெளிநாடுகளுக்கும் செல்வது நிரூபணமாகியுள்ளது.

இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் தகவல்களின்படி இலங்கையில் கொலன்னாவ, சாலமுல்ல, தெஹிவளை, குருநாகல் மற்றும் கிழக்கு மாகாணத்தின் ஒரு சில பகுதிகளிலும் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புடைய நபர்கள் ஊடுருவியுள்ளனர் எனத் தெரியவந்துள்ளது.

அத்துடன், சிரியாவிலுள்ள ஐ.எஸ். இயக்கத்தின் ஆதரவாளர்கள் சுமார் 45 பேர் இலங்கையில் இருக்கின்றனர் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது - என்றுள்ளது. (ற-ஐ)

### யாழ்.மாநகராட்சி மன்றத்தின் ஆலோசனைக் குழு கூடியது

யாழ்ப்பாணம், மார்ச் 27

யாழ்.மாநகராட்சி மன்றத்தின் ஆலோசனைக்குழு நேற்று சனிக்கிழமை கூடியது.

11 பேர் கொண்ட இந்த ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் மாநகரப்பகுதி அபிவிருத்தி குறித்ததான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் மாநகர ஆணையாளருக்குப் பின்னர் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-17)

### அறிவுச்சோலை இல்லம் நாளை முதல் மீள இயங்கும்

யாழ்ப்பாணம்,மார்ச் 27

வடக்கு கிழக்குப் பகுதிகளில் இடம்பெற்ற போரால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்புக்காக இயங்கிய அறிவுச்சோலைஇல்லம்மீண்டும்நாளை முதல் இயங்கவுள்ளது.

போர்க்காலத்தில் 1991ஆண்டு முதல் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ,முல்லைத்தீவு மாவட்டங்களில் இயங்கிய குறித்த அறிவுச்சோலை இல்லத்தில் பல நூற்றுக்கணக்கான சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வந்தபோதிலும், போர் காரணமாக குறித்த இல்லம் முழுமையாக அழிவடைந்தது. மேற்படி இல்லத்தை மீளவும் இயங்க வைக்கப் பலரும் மேற்கொண்ட முயற்சியால் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது. (ற-ஐ-101)




LADIES 1ST
புதுமைப் பெண்களுக்காக

வாழ்வின் வழமையான பழைமைகளைத் தாண்டி உலகை வென்றெடுக்கும் ஆற்றல் கொண்டவர்கள் பெண்கள் என்பது சம்பத் வங்கிக்குத் தெரியும். அதனால் தான் வாழ்க்கை • சவால்களை எதிர்கொண்டு பயணிக்கும் உங்களுக்காகவே சம்பத் வங்கி லேடிஸ் 1st கணக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. நீங்கள் முன்வைக்கும் ஒவ்வொரு காலடிக்கும் இன்றும் நாளையும் எதிர்காலத்திலும் லேடிஸ் 1st கணக்கு உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என நாம் நம்புகின்றோம்.

- சேமிப்புத் தொகைக்கு மேலதிக வட்டி • குறைந்த வட்டி வீதத்தில் வீடமைப்பு, வாகன மற்றும் தனிநபர் கடன்கள்
- 5 வருடங்கள் வரையான முதலீட்டுத் திட்டம் • டெபிட் மற்றும் கடனட்டைகளுக்கு விசேட சலுகைகள். • காப்புறுதி வசதி • சம்பள முற்பணம்

Like us on facebook.com/Sampathbankplc

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings A+(lka) 0112 30 30 50 www.sampath.lk


SINGER
15 மாதுங்கள் வரை வட்டி இன்றி செலுத்துங்கள்
SINGER உன்னத புதுவருடக் கொண்டாட்டம்
அனைத்து கணினிகளுடனும் டொங்கல் ஒன்று இலவசம்
கலர் பிரிண்டர் இலவசம்
வட்டி இன்றி
4 வருடங்கள் வரை நீடித்த உத்தரவாதம்
DELL - NB - I3 (DELL Inspiron 3543)
★ Intel i3 - 5005U, 2.0GHz
★ 4GB, 500GB, HD Webcam
★ 15.6" HD Display, DVD RW
★ McAfee Virus Guard
ரு.84,999/-
விசேட விலை ரு.75,999/-
4 வருட உத்தரவாதம் இலவசம்
கலர் பிரிண்டர் இலவசம்
DELL - NB - DC5G (DELL Inspiron 3543)
★ Intel Celeron Dual Core 1.5GHz
★ 4GB, 500GB, HD Webcam
★ 15.6" HD Display, DVD RW
★ McAfee Virus Guard
ரு.64,999/-
விசேட விலை ரு.57,999/-
DELL - NB - I5 - SVGA (DELL Inspiron 5559)
★ Intel i5 - 6200U, 2.3GHz
★ 4GB, 500GB, HD Webcam
★ 15.6" HD Display, DVD RW
★ AMD RADEON 2GB DDR3L (Ded. VGA)
★ McAfee Virus Guard
ரு.105,999/-
விசேட விலை ரு.95,999/-
மாதாந்தம் ரு.4,999/-
DELL - I7- 6 GEN (DELL Inspiron 5559)
★ Intel i7 - 5500U, 2.4GHz
★ 8GB, 1TB HDD, HD Webcam
★ 15.6" HD Display, DVD RW
★ AMD RADEON 4GB (Ded. VGA)
★ McAfee Virus Guard
விசேட விலை ரு.127,999/-
DELL - AIO - DC (Inspiron 3043)
★ Intel Dual Core 2.16GHz
★ 2GB RAM, 500GB, HD Webcam
★ Card Reader, Integrated Speakers
★ 10/100/1000 Internet Port
★ 19.5" LED Backlight, WiFi, Bluetooth
★ Keyboard & Mouse, McAfee Virus Guard
கலர் பிரிண்டர் இலவசம்
6th Gen
SINX-CEL-DC SINGER X SERIES
★ Intel Dual Core
★ 500GB Hard Disk
★ 15.6" HD LED Display
★ 2GB DDR3 RAM
★ WiFi, Bluetooth
ரு.49,999/-
விசேட விலை ரு.46,999/-
வட்டி இன்றி
12 மாதங்கள் வரை ரு.2,846/-
SINX-QC-5G SINGER X SERIES
★ Intel N3700 Quad Core
★ 2GB, 500GB, 15.6" HD Display
★ DVD Writer, WiFi, Bluetooth
★ 1MP Webcam
ரு.54,999/-
விசேட விலை ரு.49,999/-
வட்டி இன்றி
12 மாதங்கள் வரை ரு.3,500/-
SINX-I3-6GEN SINGER X SERIES
★ Intel Core I3 - 6100U (6th Gen)
★ 4GB, 500GB, 15.6" HD Display
★ DVD Writer, WiFi Bluetooth
★ 1MP Webcam
ரு.74,999/-
விசேட விலை ரு.69,999/-
வட்டி இன்றி
12 மாதங்கள் வரை ரு.4,500/-
www.masters.lk
011 5 400 400
http:// www.singersl.com
நிபந்தனைகளுக்குட்பட்டது
யாழ்ப்பாணம் (ஸ்ரான்லி வீதி) 021-2225408
யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி வீதி) 021-2216320
நெல்லியடி 021-2264937
பருத்தித்துறை 021-2263411
சங்கானை 021-2251100
சுன்னாகம் 021-2240555
முல்லைத்தீவு 021-2290180
சாவகச்சேரி 021-2270197
மானிப்பாய் 021-2255343
கொடிகாமம் 077-7858232
கிளிநொச்சி 021-2280199
கிடைக்குமிடங்கள்
SINGER Plus

# சிறுவிளம்பரங்கள்



## விற்பனைக்கு



### வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு மிக அண்மையில் சகல வசதிகளையும் கொண்ட வீடு உடனடியாக விற்பனைக்குள்ளது.

077 078 3832

### காணி விற்பனைக்கு

மானிப்பாய், லோட்டன் றோட்டில் அமைந்த கிணற்றுடன் கூடிய 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

077 844 8741

### காணி விற்பனைக்கு

வல்வெட்டித்துறை, பருத்தித்துறை கடற்கரை வீதி, பொலிகண்டியில் கடற்கரைக்கு முன்பாக 17 பரப்புக்காணி உடைந்த வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. உல்லாச ஹோட்டல் கட்டுவதற்கு உகந்த இடம்.

077 742 0240

### விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள ஹோட்டல் தளபாடங்கள் விற்பனைக்குள்ளன.

077 446 4008 /077 421 3931

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் வடக்கு, உடுவில் (றோட்டில்) வீதியில், GREEN ஆஸ்பத்திரிக்குப் பின்புறமாக சந்திக்கு அண்மையாகவுள்ள ஐந்து (05) பரப்புக் காணி விற்பனைக்கு. இல 17, உடுவில் வீதி,மானிப்பாய்.

தொடர்பு:
இரவீந்திரன் - 077 727 0310
Sam - 075 565 5053
Sam - UK - London
+44 7818557193 (69531) (11,18,20)

### வீடு விற்பனைக்கு

நாரந்தனை மத்தி வடக்கில் நான்கு அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.

077 956 2755, 075 623 1549

### காணி விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி புதிய சந்தைக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக டச்சு வீதியில் LoLc வங்கிக்கு அருகில் நிலப்பரப்பு 4குளி 09½ கொண்ட காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு : 077 723 8272

### காணி விற்பனைக்கு

மூளாய் மானிப்பாய் வீதியில் (மூளாய் அரசடி சந்திக்கருகில்) குமரன் புலம் என்னும் பெயர் உடைய 16 பரப்பு உறுதிக்காணி விற்பனைக்கு உள்ளது. (68237) (14,18,20)

தொடர்பு : 077 613 3144

### நிலம் விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை கிழக்கு

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை கிழக்கு 6+ பரப்பு நிலம் பழைய D.R Office முன்னால், தெல்லிப்பழை சந்தியிலிருந்து 5 நிமிட தூரம். விலை ரூபா பரப்பு 5 ½ லட்சம்.

தொடர்பு: 072 4817545

### காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு கோயிற்பற்று, மாதகலையும் பெரிய விளானையும் இணைக்கும் தாரிடப்பட்டு புனரமைக்கப்பட்ட வீதியில் முன்பு நெற் செய்கை செய்யப்பட்டதும் தற்சமயம் பயன் தரும் பல பனைகளைக் கொண்டதுமான 15 பரப்பு நெற்காணி விற்பனைக்கு உண்டு.

077 474 7277 மேபிள்
Email: bachellar@gmail.com

## வாடகைக்கு

### வாடகைக்குண்டு

கிளிநொச்சி, இரத்தினபுரம் பிரதான வீதியோரம் நீர், மின்சார வசதியுடன் 2 அறைகள் கொண்ட விசாலமான வீடு வாடகைக்கு உண்டு.

076 545 6609

### வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்கு உண்டு. 7அறைகளும், குளியல் அறை, A/C வசதியுடன் கூடிய அளவு வாகன தரிப்பிடங்களுடன் வீடு ஒன்று வாடகைக்குண்டு. கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் அமைந்துள்ளது. வாடகை பேசித் தீர்மானிக்கப்படும். முக்கியம்: கம்பனிகள் விரும்பத்தக்கது.

075 246 7590

### திருமணக்கார் வாடகைக்கு

CAD-xxxx
தொடரிலக்கமுடைய வெள்ளை நிற Toyota Car வாடகைக்கு உண்டு.

075 242 2148

### வீடு வாடகைக்கு

யாழ் மாநகர சபை எல்லைக்குள் வீடு வாடகைக்கு உண்டு வாகனத் தரிப்பிடத்துடன்.

075 830 6634

### அறைகள் வாடகைக்குண்டு

யாழ் நகரிலிருந்து 5Km தூரத்துக்குட்பட்ட பாதுகாப்பான சூழலில் பெண்களுக்கான தங்குமிடம் சகல வசதிகளுடன் உண்டு.

தொடர்பு : 077 528 0687

### மாடிவீடு வாடகைக்குண்டு

யாழ்.கந்தர்மடம் சந்திக்கு அருகில் பலாலிவீதியில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள்/ குடும்பத்துக்கு உகந்த சகல நவீன வசதிகளும் மற்றும் வாகனத் தரிப்பிட வசதிகளும் உள்ள மாடிவீடு வாடகைக்கு உண்டு.

077 253 0865

### வீடு வாடகைக்கு - யாழ்ப்பாணத்தில்

இல.322, பலாலி வீதி, ஊரெழு பிள்ளையார் கோயிலுக்கு முன்பாக ஐந்து அறைகள், 2 வாகனத்தரிப்பிடம், குளியல்அறைகள், சமையல்அறை, பெரிய வரவேற்பறை, சாப்பாட்டறை, (Sitting Hall, Living Hall, Dining Hall) கொண்ட 2000 சதுர அடி (2003 இல் இருந்து இன்று வரை) AeroLanka (Pvt) Ltd. China Railwey -5 Engineering Sierra Construction (Pvt) Ltd போன்ற நிறுவனங்கள் தங்கள் அலுவலகமாக பாவிக்கப்பட்ட சகல வசதிகளுடனும் கொண்ட வீடு வாடகைக்குண்டு. நிறுவனங்கள் அல்லது தொழில் தகைமையுடைய குடும்பங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு : 071 273 1776

## தேவை





### வீடு வாடகைக்குத் தேவை

காரியாலயம் ஒன்றுக்கு கொக்குவில்/ கொக்குவிலை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. பிரதான வீதியில் அமைந்திருத்தல் விரும்பத்தக்கது. (K.K.S Road)

076 822 8525

### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1985 செப்டெம்பர் 02. நட்சத்திரம் ரேவதி, 53½ கிரகபாவம் 7இல் சூரியன், செவ்வாய் Development Officer மணமகனுக்கு அரச உத்தியோகம் பார்க்கும் மணமகள்தேவை.

077 906 2476, 021 221 3763

### மணமகள் தேவை

UK குடியுரிமையுடைய சொந்தமாக Super market நடத்திவரும் யாழ் இந்து உயரம் 5' 8" 1984 இல் பூராட நட்சத்திரத்தில் பிறந்த செவ்வாய்க் குற்றமற்ற மணமகனுக்கு உள்நாட்டில் A/L படித்த தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (68633)(2.9.20)

004 479 045 35905

### வேலையாள்கள் தேவை

புதிதாகத் திறக்கப்பட்ட உணவகம் ஒன்றுக்கு

- சமையல் ஆள்
- ரொட்டி போடுபவர்
- பலகாரம் செய்பவர்
- உதவியாளர்
- பரிமாறுபவர்

உவருட அனுபவம் உள்ளவர்கள் நேரில் வரவும்.

இல.1037, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
021 205 4538, 077 078 2375

### வேலையாள்கள் தேவை

கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள பிரபல கவரிங் காட்சியறைக்கு வேலையாள்கள் தேவை. (70219) (14,18,20)

M &M Fashions
207/5, Kasthuriar Road, Jaffna.
021 221 6145/ 077 351 5980

### வேலையாள்கள் தேவை

சுன்னாகத்தில் உள்ள பிரபல புடைவை விற்பனை நிலையம் ஒன்றுக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை. (20-35)

077 725 1143, 021 224 0012

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 1990 பூசம் 3 ஆம் கால் 7 செவ்வாய் 37 பாவம் தொழில்புரியும் 5' 5" அழகிய சிவந்த மணமகளுக்கு பெற்றோர் தகுந்தவர்னை உள்நாட்டில் எதிர் பார்க்கின்றார்கள்

076 636 9545

### பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் தொலைபேசி விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள

- விற்பனையாளர்
- சிட்டை எழுதுநர்
- கணக்காளர்
- தொலைபேசி திருத்துநர்

077 361 1282
Yarl Phone Shop
No.09, Hospital Road, Jaffna.

## ஏனையவை

### தவறிவிட்டது

நந்தாவில் லேன் , கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த பத்மநாதன் கபிலன் என்பவரின் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதி, வரி அனுமதிப்பத்திரம் என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

077 778 8599

### விஷேட பல் வைத்திய சேவை

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல் நிரந்தரமாக பற்களைப்
- பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

சன்றைஸ் மெடி கிளினிக்
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

றோயல் மெடிக்கல் சென்ரர்
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### விற்பனையாளர்கள் தேவை

யாழ்.நகரிலுள்ள புடைவைக் கடைக்கு, யாழ்.மாநகர சபைக்குட்பட்ட ஆண் விற்பனையாளர்கள் தேவை.

077 768 4520

### திறப்பு விழா

எமது நிறுவனத்தின் புதிய கிளை
நியூநெல்சன் சாரதி பாடசாலை
இன்று (27.03.2016) ஞாயிற்றுக் கிழமை காலை 9.14 - 10.44 மணி வரையுள்ள சுபவேளையில் சீரணிச்சந்தி, சண்டிலிப்பாயில் திறந்து வைக்கப்படவுள்ளதால் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்
077 358 1916, 077 794 2312

### IMMEDIATE VACANCY

- Management Assistant
- Multi Duty Clerk

Hostel Facility available
Call for Interview Monday to Friday 9am to 5pm
Tel : 011 257 4054, 077 373
Email: supplysris@gmail.com

SUPPLY AND LOGISTIC SERVICES
7B, 1/1 Deanston Place, Colombo 03.

உதயன் விளம்பரத் தொடர்புக்கு—
advt@uthayan.com
0215671111


Sprite
COOL
கேஷ்
ரூ.
100,000*
தங்க மூடியினை அனுப்பினால்
தினமும்
ஒரு லட்சம்*
வெல்வதற்கான வாய்ப்பு
த.பெ.இல 06, பியகம
Sprite
100
50
20
தங்க மூடிக்கடியிலுள்ள
பெறுமதிக்கு
உடனடி
கேஷ்
மேம்படுத்தல் கால எல்லை 2016 பெப்ரவரி 22 முதல் ஏப்ரல் 04 வரை மட்டுமே.
இச்சலுகை 175ml மற்றும் 300ml கண்ணாடி போத்தல்களுக்கு மட்டுமே உரியது. ரூ.100,000/- வெல்வதற்கான வாய்ப்பு என குறிப்பிடப்பட்டிருக்கும் தங்க நிற மூடிகளை, த.பெ.இல 06, பியகம என்ற முகவரிக்கு அனுப்பி, நாள்தோறும் ஒரு இலட்சம் ரூபாவை வெல்லுங்கள். மேலும், ரூ.20/-, 50/-, 100/- பணப்பரிசுகளை உடனடியாக வெல்லுங்கள்.
கீழ் குறிப்பிடும் குளிர்பானங்கள் போட்டிக்கு செல்லுபடியாகும்.
Sprite
Coca-Cola
Fanta
Fanta
Fanta
LION SODA
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது. போட்டி விபரங்களுக்கு அழையுங்கள் 0115 115 777 அல்லது lk.coca-cola.com இணையத்தளத்திற்கு பிரவேசியுங்கள்.

# இலங்கை வருவோர் மீது கடும் கண்காணிப்புகள்

பாதுகாப்புச் செயலர் கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 27

இலங்கைக்குள் வரும் சகல நபர்கள் பற்றியும் கடுமையான கண்காணிப்பு மேற்கொள்ளப்படுகின்றது என்று பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

சர்வதேச ரீதியில் செயற்படும் பயங்கரவாத அமைப்புக்களின் உறுப்பினர்கள் இலங்கைக்குப் வருவதைத் தடுப்பதற்கே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடு எனவும் அவர் கூறியுள்ளார்.

சில நபர்கள் அரசியல் புகலிடம் தேடி அகதிகளாக இலங்கைக்கு வருகின்றனர். சர்வதேச சட்டத்துக்கு அமைய இவ்வாறான வர்களைத் திருப்பி யனுப்ப இலங்கைக்கு முடியாது என்று அரசு அறிவித்துள்ளது என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

இருப்பினும், இத்தகைய நபர்களால், தேசிய பாதுகாப்புக்கு எந்த வகையிலும் அச்சுறுத்தல்கள் வராதமுறையில் மிகவும் அவதானமாக இருக்கின்றோம் என்றும் அவர் கூறியுள்ளார். (ந-ஜ-5)


## இடமாற்றம்

நக்கா றோட் இல.18, யாழ்.இல் இயங்கி வந்த பிருந்தா மில்ஸ் என்னும் அரைக்கும் ஆலை 179, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

மேலும் முழு உழுந்து பாதியாக்குதல், கச்சான் கோதுநீக்குதல், தேங்காய் எண்ணை, நல்லெண்ணெய் ஊற்றுதல், ஈர அரிசி திரித்து வறுத்தல், உறைப்பில்லாமல் சரக்குத்தூள், சீயாக்காய், கோப்பி அரைத்தல், நெல் உடைத்துத் தீட்டுதல் மேலும் சகல விதமான அரைத்தல் வேலைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

அரிசி மா 70/=, ஆட்டா மா - 100/= அவித்த கோதுமை மா - 100/=

பிருந்தா மில்ஸ்

இல.179, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 077 991 2304

## மேட்டுக்காணி விற்பனைக்கு

பளை, இயக்கச்சி, கோவில்வயல், வாடியடிச் சந்தியில் 40 ஏக்கர் விஸ்தீரணமுள்ள மேட்டுக் காணி விற்பனைக்கு உண்டு. தென்னைப் பயிர்ச் செய்கைக்கும், ஏனைய பயிர்ச் செய்கைக்கும் உகந்தது. நன்னீர் வளமுடைய நிலம்.

குறிப்பு: யுத்த காலத்தின் முன் தென்னைகள் நின்று பயனளித்த நிலமாகும்.

விலை - 01 ஏக்கர் ரூபா 2,25,000/=

தொடர்பு: 077 500 2162

## மகப்பேறு இனவிருத்தி நிலையம்

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடி வயிற்றுநோ கருச்சிதைவு மாதவிடாய் உட்பட சகல விதமான பிரச்சினைகளுக்கு சிகிச்சையளித்தலும் மகப்பேறு இனவிருத்திக்கான சிகிச்சைகளும். IVF, ICSI. யும் கொடைமுட்டை (donor egg) விந்து நன்கொடை (donor Sperm) போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராட்சியத்தில் (UK) 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் திருநெல்வேலி நொதேன் சென்றல் வைத்திய சாலையில் அளித்து வருகின்றார். சென்ற மாதம் இவரின் சிகிச்சை மூலம் இரு தாய்மாருக்கு சோதனைக்குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

தொடர்புகளுக்கு: திருமதி றாஜேஸ்வரி

இல: 077 343 9988

021 221 9988, 021 221 9977,

021 222 2263 (சி. 22235)(12.18)

## வேலைவாய்ப்பு

இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் எமது Golden Group Company இல்

குறைந்த பட்ச தகைமையுடன் நான்கு வகையான பதவிகள்

- விநியோகஸ்தர்
- மேற்பார்வையாளர்
- உதவி முகாமையாளர்
- Administration

இரண்டு நாள்கள் நேர்முகத் தேர்வு நடைபெறும். 28,29 திகதிகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை

அடிப்படைச் சம்பளம் 20,000/= மற்றும் கமிஷன், தங்குமிடம், (தூர இடங்களில் இருந்து வருவோருக்கு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா விரும்பத்தக்கது.

குறிப்பு: பதிவுக் கட்டணம் மேற்கொள்ளப்படும்.

077 998 7699, 021 300 4664

இல.38, பற்றிக்ஸ் வீதி (சென்.சாள்ஸ் பாடசாலை அருகில்)

077 621 9536

## யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது

ஸ்ரீ கௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (pvt)Ltd

P. ஜெய்சங்கர்

கொழும்பில் கடந்த 25 வருடங்களாக கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம், தங்களின் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம், கல்வி, திருமணம், குழந்தைகள், தொழில்வாய்ப்புகள் வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றைக் கூறிப் புகழ் பெற்ற சோதிடர்கள் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:

384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி, நல்லூர்)

தொலைபேசி: 021 221 7944

கொழும்பு முகவரி:

19,1/1, கொத்தலாவல மாவத்தை, பம்பலப்பிட்டி

தொலைபேசி: 011 258 6180/ 011 258 6208 (சி. 22235)(12.18)

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்.நகரின் மையப்பகுதியில் இயங்கிவரும் முன்னணி நட்சத்திர Hotel ஆன Tilko Jaffna City Hotel இல் பின்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

- சமையலாளர்
- சமையல் உதவியாளர்
- உணவு பரிமாறுநர் / உணவு பரிமாறுநர் (பயிலுநர்) (Trainee Waiter / Waiter)
- விடுதிப் பணியாள் (Bell Desk Boy)
- பராமரிப்பு உதவியாளர் (Maintenance Helpers)
- மின்னிணைப்பு மற்றும் குழாய் இணைப்பு

குறைந்தது மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
அனுபவம் மற்றும் வயதுக்கு ஏற்ப சம்பளம் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 330 6985

மின்னஞ்சல் அனுப்ப வேண்டிய முகவரி :

tilko.tilak@gmail.com

## பொன்விழாப் பொன்மனச் செம்மல்கள்

பாலசுப்ரமணியம் தவமணி தம்பதியினர்

வாழிய வாழியவே.....!!!




தம்பியும் மைத்துனனுமான
தவராசா தம்பதியினருடன் அவர்பெற்ற
தீபன், தீபா குடும்பமாக இணைந்து
நோர்வேயில் கொண்டாடும் பொன்விழாத் தம்பதியினரை
பூமாலை மனதினால் தூவி பாமாலை பாடி வாழ்த்துகின்றோம்
இல்லறத்தை நல்லறமாக்கிய இல்லத்தரசியே - அன்றி
பாசக்கயிற்றினால் அங்கிளை இறுகக்கட்டி
பாரினில் போற்றும் - இல்வாழ்க்கையினால்
பாசமழையினில் - உங்கள் பிள்ளைகளை
வழிகாட்டினீர்கள் - மட்டுமல்லாது எமக்கும்
எம்போன்ற இளையோர்க்கும் ஓர் எடுத்துக்காட்டாக
வாழ்கின்ற பொன்விழாத் தம்பதியினரே - உந்தன்
வச்சிர விழாவினில் நாமும் கலந்து
மலர் தூவி வாழ்த்துவோம்.

பொன்விழாக்காணும் பொன்னான இதயம் படைத்த
பொன்மனச் செம்மல்களே!!! - அன்று
அம்மி மிதித்து அருந்ததி பார்த்து
அழகு தேவதையை அன்புடன்
கரம்பிடித்து, இல்லறத்தில் இணைந்து
ஆண்மகவு நால்வரைப் பெற்று - இன்று

ஆனந்தமாக வாழும் அன்புச் செல்வங்களுடன்
அன்பு நடமாடும் கலைக்கூடமாக
நல்லதோர் குடும்பம் பல்கலைக் கழகமெனும்
வளாகத்தில் நல்மகவு, நால்வரைக் கரம்பிடித்த
நங்கையர் நால்வரும் பெற்ற ஒன்பது
பேரச்சிறார்களுடன் உடன் பிறந்த



வாழ்த்துவோர்: சுகு சாந்தியுடன்

நிவேஷ் மானுவும்,

மிலேனியம் றெஸ்ரோரன்ற் யாழ்ப்பாணம் (கலட்டி)

# மகிந்த இறக்குமதி செய்த 1800 கார்களைக் காணோம்

## நிதியமைச்சர் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 27

ஜனாதிபதி செயலகத்தின்தேவைக்கு என்று கூறப்பட்டு மகிந்த அரசின் காலத்தில் இறக் குமதி செய்யப் பட்ட ஆயிரத்து 800 கார்களைக் காணவில்லை என்று நிதி அமைச் சர் ரவி கருணாநாயக்கா நாடாளு மன்றத்தில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர்மேலும்தெரிவித்துள் ளதாவது-

என் மீது 5 ஆவது தடவையாக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்துள்ளனர். பொது எதிரணி என்று கூறிக் கொள் வோர் தம்மிடம் 51நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர் என்று சொல்கின்றனர். ஆனால் 37 பேர் மாத்திரமே கையெழுத்திட் டுள்ளனர். இதனை வைத்து இவர் களால் என்ன செய்ய முடியும்.

அண்மையில் கொழும்பில் நடத் திய கூட்டத்தில் மகிந்த ராஜபக்ச, தனது காலத்தில் இடம்பெற்ற செலவுகளை நியாயப்படுத்தினார். அது மட்டுமல்லாது நீதிமன்றத் தையும் விமர்சித்துள்ளார். தனது குடும்பத்தைப் பழிவாங்குவதாகக் குறிப்பிட்டு நீதிமன்றத்தை அவமதித்துள்ளார். எனவே மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மகிந்தவின் ஆட்சிக் காலத்தில் 35 ஆயிரம் மில்லியன் ரூபா நிதிச் செலவில் ஆயிரத்து 800 கார்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. அவை ஜனாதிபதி செயலகத்துக்கு அவசியம் என்று கூறப்படிருந்தது ஆனாலும் அவை தற்போது எங்கே என்பது தெரியாது – என்றும் தெரிவித்துள்ளார். (ற-ஐ-5)

# எதிர்க்கட்சித் தலைவர் போன்று செயற்படவில்லை சம்பந்தன்

## விமர்சிக்கின்றார் தினேஸ் குணவர்த்தன

கொழும்பு, மார்ச் 27

எதிர்க்கட்சித் தலைவர் முழு நாடு தொடர்பிலும் கரி சனை செலுத்த வேண்டும். ஆனால் இரா.சம்பந்தன் அவ்வாறு செயற்படுவது போன்று தெரியவில்லை - இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர்தினேஸ்குணவர்த்தனதெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசின் பங்காளிக் கட்சி போன்று செயற்படுகின்றது. நாட்டில் கோதுமை மா விலை அதிகரிக் கப்பட்டது. மின் சாரம் தடைப் பட்டது. இதன் போது எதிர்க்கட் சித் தலைவர் எதுவும் தெரி விக்கவில்லை. நாட்டில் எதுவித பிரச்சினையும் இல்லாமல் இருக் கின்றது என்பது போல் அவர் செயற்படுகின்றார். எதிர்க்கட்சித்தலை வர் தெரிவு முறை யாக இடம்பெற வில்லை. இந்த அரசு தமக்கு வேண்டிய ஒரு வரைஎதிர்க்கட்சித் தலைவராக நியமித்துள்ளது. அவர் அரசுக்கு வேண்டியதைச் செய்து கொண் டிருக்கின்றார்.

மகிந்த ராஜபக் சவை மாத்திரம் விமர்சிப்பதை நோக்காகக் கொண்டு எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தன் தனது பணிகளை நடத்தி வருகின் றார். நாட்டு மக் கள் பொருளாதா ரச்சிக்கல்களுக்கு முகம் கொடுத் துள்ளநிலையில் அதுபற்றிதனை யும் அவர் இது வரை தெரிவிக்க வில்லை.

நாம்தான் நாட் டின் உண்மை யான எதிர்க்கட்சி யாகச்செயற்பட்டு வருகின்றோம். சகல விடயங்க ளிலும் குரல் கொடுத்து வரு கின்றோம் - என் றார். (ற-ஐ-5)


## கண்ணீர் அஞ்சலி



சாவகச்சேரி தனுஷன் ஜீவல்லறி
உரிமையாளர்

**சிவலோகநாதன் சிறிசங்கர்**

அவர்கள் 24.03.2016 வியாழக் கிழமை இறைபதம் எய்திய செய்தி அறிந்து அதிர்ச்சியும் துயரமும் அடைந்தோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தின ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த் திக்கின்றோம்.

அமரர் விநாயகமூர்த்தி (ஆசிரியர்)
குடும்பத்தினர்.

மீசாலை வடக்கு.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
செல்வி மோ.சுதர்சினி
அவர்களின் அன்புத்
தந்தையார்

**பெருமாள் மோகன்**

அவர்கள் 25.03.2016 அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர்கள் நலன் பேண் ஒன்றியம்,
கிளி/ அக்கராயன் மகாவித்தியாலயம்.**

விண்ணக வாழ்வின்

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



**பிலோமினா ஞானமுத்து**

கடவுளே உமது பேரன்புக்கேற்ப எனக்கு இரங்கும் உமது அளவற்ற இரக்கத்திற்கேற்ப எனது குற்றங்களைத் துடைத்தருளும் (தி.பா.51 - 1)

மண்ணில்
03.12.1935

விண்ணில்
27.03.2013

எமது அன்புத் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து
மூன்று ஆண்டுகள் பறந்தோடிவிட்டன
உங்கள் அன்பு வதனம் எம்மைச் சுற்றி வந்து
வட்டமிடுகின்றது என்றுமே உங்களை மறக்க
முடியாதம்மா!

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தேவாலய வீதி,
மல்லாகம்.

(70259) (13.18)

## 9 ஆம் ஆண்டு நினைவு தினம்

திருமதி
**இராஜேஸ்வரி கருணைஆனந்தன்**



தோற்றம்
20.03.1950

மறைவு
27.03.2007

*எமது குடும்பத்தின் தலைவியாக இருந்து
நாம் மேன்மையுற அல்லும் பகலும்
ஓயாது அர்ப்பணித்த உனை மறவோம்*

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

14A/6 டிக்மனஸ் வீதி,
பம்பலப்பிட்டி.
தொடர்பு: 2555108

பாசமிகு கணவர், மக்கள்,
பேரப்பிள்ளைகள்

## நீங்காத நினைவுகளுடன் சிவதர்ம அஞ்சலி

19 ஆம் ஆண்டு



மண்மகிழ
05.10.1938

மண்நெகிழ
10.10.1997

அமரர் மயிலு சிவநாதன்(J.P)
நாடாளுமன்ற உரைபெயர்ப்பாளர்

24 ஆம் ஆண்டு



மண்மகிழ
27.05.1969

மண்நெகிழ
18.03.1992

அமரர் சிவநாதன் தர்மவாணி(அமுதா)
யாழ்.பல்கலைக்கழகம்

கொல்லங்கலட்டி

**எங்கள் குடும்ப நிறைகுடங்கள் சரிந்தன**

ஜெயம் பெற்றிட ஜெகந்தனிலே அவதரித்தீரே சிவா அபயம் கொடுத்து அண்டியோரை அரவணைத்தீரே
பயம் நீக்கி பாலகரைப் பண்புடன் வளர்த்தீரே காயம் பொய்யென இறைவன் கழலடி சேர்ந்தீரே சிவா !!
என் செல்வமே சிந்தை குளிர்ந்திடவே சிரமாய் இருந்தீரே சொந்தமென்று வந்த வாழ்வு தூரத்தே நின்றதுவோ
நந்துகளும் நாரைகளும் உன் பிரிவைப் பாடாதோ வெந்து வந்த யமன் வெறிநாயாக வந்தானோ
என் திரவியமே சொந்த வீடு பற்றிவிட்டாய் ஒளி சோதி வாணி ஆகிவிட்டாய்
என் உயிர் உள்ள வரை உங்கள் நினைவுதான்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

V.C லேன், கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை

சிவநாதன் குடும்பம்.

## ஓராண்டு நினைவில்

பாசம் மிக்க மகனாக
அன்பு நிறைந்த
கணவனாக
வழிகாட்டிய தந்தையாக
வாழவைத்த சகோதரனாக
மதிப்புமிக்க உறவினனாக
மரியாதைக்குரிய
நண்பனாக
எல்லாருக்கும்
எல்லாமுமாய்
வாழ்ந்த எங்கள்
குலவிளக்கே...

புன்னகைக்கும் உந்தன்
வதன முகமும்
கலகலப்பான உந்தன்
சிரிப்பொலியும்
பார்க்காமலேயே
கேட்காமலேயே
இன்றைய நாட்கள்
இருள்படிந்து
நகர்கின்றன...

கால நதிக் கரையில்
நகரும் வாழ்க்கைப்
பயணத்தில்
எல்லாம்
கடந்துபோகும்
என்பதுவும்
இணைவதும் பிரிவதும்
இயற்கையின் நியதி என்பதுவும்
உண்மை எனும்போதும்
மெய் உணர
மறுக்கின்றது...

"எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு" எனும்
கிருஷ்ணரின் வரிகளை
தத்துவமாய்ச்
சொன்னாலும்
நேற்றைய நாட்களில் எம்
கூட நடந்தவரே
நாளைய எங்கள்
பயணத்திலும்
நீங்கள் நம்பிக்கையாய்
இருப்பீர்கள்.

என்றும்
உங்கள் நினைவு சுமந்து வாழும்
தாய், மனைவி, சகோதரர்கள்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.



கலாபூஷணம் - கலைவாரிதி
**இரத்தினசிங்கம் கிருஷ்ணதுரை**
(பண்ணாகம்)
மண்ணுலகில் 22.09.1944
விண்ணுலகில் 09.04.2015
திதி 27.03.2016

# போர்க்குற்ற விசாரணைகளின் போது சாட்சிகள் பாதுகாப்பை உறுதி செய்க

## பிரிட்டன் தமிழர் பேரவை வலியுறுத்து

போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிவான்கள் மற்றும் விசாரணையாளர்களின் பங்குபற்றலை உறுதிப்படுத்தவும், சாட்சியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவிடம், பிரிட்டன் தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

பிரிட்டன் தமிழர் பேரவையால் வருடாந்தம் நடத்தப்படும், தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்ற குழுவினருடனான சந்திப்பு கடந்த 23 ஆம் திகதி நடத்தப்பட்டுள்ளது.

பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இந்தச் சந்திப்புக்கான தனது வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார். பிரிட்டன் பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில், இலங்கையின் ஜனாதிபதியும் - பிரதமரும் சர்வதேச நாடுகளின் வல்லுநர்கள் மற்றும் அவர்களின் அனுபவங்களின் பங்களிப்புடன் பொறுப்புக் கூறல் தொடர்பான நடவடிக் கைகள் மற்றும் மீள் புனரமைப்பை நிறை வேற்ற வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார். இந்த ஒன்று கூடலில் பங்கு பற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இலங்கையில் போர்க்குற்ற விசாரணையில் சர்வதேச நீதிவான்கள் மற்றும் விசாரணையாளர்களின் பங்கு பற்றலை உறுதிப்படுத்தவும் கோரி இலங்கை அரசுக்கு அழுத்தங்களை பிரயோகிக்குமாறும் பிரிட்டன் தமிழர் பேரவையால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதன் போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழர்களின் உரிமைகள் கிடைக்கும் வரையில் பிரிட்டன் தொடர்ச்சியாக தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் என்ற உறுதிமொழியை வழங்கினர். அத்துடன் இலங்கை அரசு உடனடியாக போர்க் குற்றம் மற்றும் சித்திரவதை தொடர்பான குற்றச்செயல்களுக்கு பொறுப்புக்கூறல் தொடர்பாக காத்திரமான நடவடிக்கைகளை மேற்க்கொள்வதுடன் மீள் புனரமைப்ப மேற்கொள்ளல் வேண்டும் எனவும் தமது கோரிக்கையை முன் வைத்தனர். (ற-ஐ-5)






TITAN

டைட்டான் கைக்கடிகாரம்
ஒன்றை கொள்வனவு
செய்து



3,800 ரூபாவிலிருந்து




பயணப்பை ஒன்றை
இலவசமாக
பெற்றிடுங்கள்

*இச்சலுகை ரூ. 5000/- மேல் கொள்வனவு செய்பவர்களுக்கே செல்லுபடியாகும். *நிபந்தனைகளுக்குட்பட்டது

Karan Watch - Jaffna 0212226807 / 0777043636

புதிய விநியோகத்தர்கள் விசாரணைகளுக்கு :
0773-613045 / 0112- 301561

Abans

Godrej | LOCKING SOLUTIONS AND SYSTEMS
ALL 5 LEVELS OF SECURITY
SINCE 1897

பாதுகாப்புத் தீர்வுகளும் முறைகளும்
நிலையானது நீடித்துழைப்பது




410/- ரூபாவிலிருந்து

கீழ்வரும் அபான்ஸ் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளமுடியும்
யாழ்ப்பாணம்: 021 2220981, சுன்னாகம்: 021 2240440, நெல்லியடி: 021 2264934, கிளிநொச்சி: 021 2285411, சாவகச்சேரி: 021 2270005, சங்கானை: 021 2250106, முள்ளியவளை: 077 1092102

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

உங்களுக்கு பெறுமதி வாய்ந்தவற்றை எந்நேரமும் காத்திடும் கொட்ரிஜ் லொக்ஸ்

Abans




www.emeraldshirts.com www.facebook.com/Emeraldsrilanka www.twitter.com/Emerald_Shirts

# இலக்குகளை அடையாத அமைச்சுகள் பிரதமர் ரணிலின் கட்டுப்பாட்டுக்குள்

கொழும்பு, மார்ச் 27

இந்த ஆண்டின் முதல் காலாண்டுக்குள் திட்டமிட்ட இலக்குகளை அடையாத அமைச்சுக்கள் மற்றும் முக்கிய பொதுநிறுவனங்களை தனது நேரடிக் கண்காணிப்புக்குள் கொண்டு வருவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

சில அமைச்சுக்களும், பல பொது நிறுவனங்களும் கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் பின்பற்றிய அதே அசமந்தப் போக்கைத் தொடர்வதன் காரணமாக நல்லாட்சி அரசின் கொள்கைகளைத் தவறவிட்டுள்ளன என்று கிடைத்துள்ள முறைப்பாடுகளை அடுத்தே பிரதமர் இந்த முடிவை எடுத்துள்ளார்.

அதேவேளை, பிரதமர் அடுத்த மாதம் முதல் வாரத்தில் மேற்கொள்ளவுள்ள சீனப் பயணத்தை தொடர்ந்து கல்வி அமைச்சின் தேசிய மட்ட செயற்பாடுகளை முழுமையாக மீளாய்வு செய்யவுள்ளார். கல்வி அமைச்சின் உயர்மட்ட பெண் அதிகாரியொருவரே அனைத்து செயற்பாடுகளினதும் பின்னடைவுக்குக் காரணம் என்று பிரதமருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் இணைந்ததாக மேலும் மூன்று அமைச்சுக்கள் மற்றும் நான்கு பொது நிறுவனங்களும் அடுத்த வரவு செலவுத் திட்ட முன்வைப்புக்கு முன்னர் பிரதமரின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன.

கடந்த காலங்களில் முற்றிலும் அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்த வெளிவிவகார அமைச்சை மறுசீரமைப்பதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரடியாக தலையிட்டிருந்தார். அத்துடன் பல்வேறு குற்றச்சாட்டுக்களுக்கும் உள்ளாகியிருந்த தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் மற் றும் உப அதிபர்களையும் பிரதமர் இடமாற்றம் செய்திருந்தார்.

வினைத்திறனுடன் செயற்படாத அமைச்சுக்களைத் தமது நேரடிக்கண்காணிப்பில் கொண்டு வரும் பிரதமரின் முடிவு, ஐ.தே.க. – சிறிலங்கா சுதந்திரக் கட்சி அரசுக்குள் விரிசலை ஏற்படுத்தலாம் என்றும் கருதப்படுகிறது.

ஏற்கனவே, தமது அமைச்சுக்களில் பிரதமர் தலையீடு செய்கின்றார் என்றும், தமக்குத் தெரியாமல் முடிவுகள் எடுக்கப்படுகின்றன என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் பலரும் விசனம் தெரிவித்திருந்தனர்.

(ற-ஐ-5)






உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## போர்க்குற்றங்கள் குறித்த சுதந்திர விசாரணைக்கு மனம் கொள்வரா...?

நல்லாட்சி அரசினால் முன்னெடுக்கப்படும், ஜனநாயக விரோத செயற்பாடுகளுக்கு எதிராக, அனைத்து நாடாளுமன்ற ஒன்றியத்திடம் முறைப்பாடு செய்வதற்கு, ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளின் பிரதானிகள் முனைந்துள்ளதாக தகவல்கள், செய்திகள் அடுத்தடுத்து வெளிவந்து கொண்டிருக்கின்றன.

ஆட்சியில் உள்ள அரசு,ஜனநாயகவிரோதச் செயற்பாடுகள் ஊடாக, (ஒன்றிணைந்த) எதிர்க்கட்சிகளை ஓரங்கட்டும் வழியில் நடப்பதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

எதிர்க்கட்சிகளுக்கு எதிராக, அரசினால் தொடர்ச்சியாக ஏற்படுத்தப்படும் நெருக்கடிகளால், கூட்டாக ஜெனிவாவிடம் முறைப்பாடு செய்வதைத் தவிர தமக்கு வேறு மார்க்கம் எதுவும் இல்லை என்றும் அவர்கள் அழுத்தம் திருத்தமாக தெரிவித்து உள்ளனர்.

உள்நாட்டின் பிரச்சினைகள் எதுவாக இருப்பினும், அவை இங்கேயே பேசித் தீர்க்கப்பட வேண்டும் என முன்னைய அரசு விடாப்பிடியாக இருந்தது.

அதற்கான வல்லமை, இயலுமை இங்கு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆட்சிக் காலத்தில், இங்குள்ள பிரச்சினைகள் இந்த நாட்டிலேயே தீர்க்கப்பட வேண்டும். அவற்றில் வெளியார் தலையிடவோ அன்றி, அவர்களின் உதவிகளைத் தேடி ஓடுவதோ வேண்டத் தக்கதன்று என்ற நிலைப்பாடே மேலெழுந்து நின்றது.

உள்நாட்டுப் பிரச்சினைகளை வெளியார் கையில் கொடுப்பது, நாட்டுப்பற்று இல்லாதவர்களின் அடிமைத் தனம் சார்ந்த போக்கு என்று கனத்த குரல்களில் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டன.

உள்நாட்டுப் பிரச்சினைகளை, அனைத்துலக நாடுகளுக்குக் கொண்டு சென்று தீர்க்க முயல்பவர்கள் தேசத் துரோகிகள் என்று, கடந்த கால ஆட்சியாளர்கள் பச்சை குத்தியதும் மறக்கத்தக்கவை அல்லவே.

அதேவேளை, நாட்டில் மலை மேடாகக் குவிந்துள்ள பல பிரச்சினைகளை-- இனப்பிரச்சினை உட்பட பெரிய பிரச்சினைகளை--

தீர்க்கக் கூடிய வல்லமையும் இந்த நாட்டின் அரசியல் தலைவர்களிடம் இல்லை என்ற எண்ணப்போக்கும் உயர்ந்து நின்றதை மறப்பதற்கு இல்லை.

கூட்டிக் கழித்து பெருக்கிப் பிரித்துப் பார்த்தால்--

நாட்டில் நீண்ட காலமாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு, தக்க தீர்வொன்றைக் கண்டு, அதனோடு நாட்டை, ஏனைய ஜனநாயக நாடுகளுக்கு இணையாக சமதர்ம, சமாதான, ஜனநாயக நாடாகக் கட்டியெழுப்புவதற்கு--

போர்க்குற்றங்கள் குறித்து சுதந்திர விசாரணைக்கு, இப்போதைய அரசின் கதவுகள் அகலத் திறக்கப்பட வேண்டும்.

எதிர்பார்க்கலாமா....? என்ன...?

# ஐ.எஸ். பயங்கரவாதிகளின் இலக்காகுமா இலங்கை?

எம்.ஐ.முபாறக்

ஐ.எஸ். பயங்கரவாத இயக்கம் இலங்கையில் மாத்திரமல்ல முழு உலகிலும் தடைசெய்யப்பட வேண்டிய இயக்கம் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால், இந்த விவகாரத்தைப் பயன்படுத்தி எங்கோ இருக்கும் ஐ.எஸ். இயக்கத்தையும் இலங்கை முஸ்லிம்களையும் முடிச்சுப் போடும் வேலையை பேரினவாத அமைப்புகள் செய்யக்கூடாது.

உலகில் உள்ள பயங்கரவாதிகள் எல்லோரும் ஏதோவோர் இனத்தைச் சேர்ந்தவர்கள்தான். ஆனால், அந்த இனம் அவர்களின் செயற்பாடுகளுக்குப் பொறுப்பேற்க முடியாது. குறிப்பிட்ட இனத்தின் ஆதரவுடன் -அனுமதியுடன் பயங்கரவாத அமைப்புக்கள் உருவாவதில்லை. அவ்வாறுதான் ஐ.எஸ். இயக்கமும். அவர்கள் முஸ்லிம் களாக இருக்கலாம். ஆனால், அவர்களின் பயங்கரவாத செயற்பாடுகளுக்கும் முஸ்லிம்களுக்கும் சம்பந்தம் கிடையாது.

> ஐ.எஸ். தொடர்பில் இலங்கை அஞ்சுவது சரியா? இலங்கை மீது தாக்குதல் நடத்த வேண்டிய தேவை ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு உண்டா? என்றெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

### உலகை உலுக்கிய தாக்குதல்கள்

பெல்ஜியத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்கள் இன்று உலகையே உலுக்கியுள்ளன. பெரும் பாலும் அனைத்து நாடுகளும் இன்று ஒரு வகையான அச்சத் தில் மூழ்கி இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

இந்தியா மற்றும் இலங்கை உள்ளிட்ட நாடுகள் தங்களது விமான நிலையங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்தும் அளவுக்கு நிலைமை சென்றுள்ளது. மேற்கு நாடுகளுடன் நல்லுறவைப் பேணி வரும் நாடுகள் இவ்வாறான தாக்குதல்களுக்கு இலக்காகி விடுமோ என்ற அச்சமே இதற்குக் காரணம்.

ஐ.எஸ். பயங்கரவாதிகள் இதுவரை நடத்திய தாக்குதல்கள் தொடர்பில் செலுத்தப்படாத கவனத்தை உலகநாடுகள்பெல்ஜியம் தாக்குதல்கள் தொடர்பில் செலுத்தத் தொடங்கியுள்ளன. எந்த வித அறிகுறிகளுமின்றி இந்தப் பயங்கரவாதிகள் திடீரென தாக்குதல்களை நடத்தி வருவதும் இந்த அவதானத்துக்குக் காரணமாகும்.

இலங்கையிலும் இவ்வாறான நிலைமை ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் இப்போது சிலருக்கு ஏற்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இதனால் இந்த ஐ.எஸ். அமைப்பை இலங்கை தடை செய்யவேண்டும் என்ற கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டு வருகின்றன.


இந்தக் கோரிக்கை சரியா? ஐ.எஸ். தொடர் பில் இலங்கை அஞ்சுவது சரியா? இலங்கை மீது தாக்குதல் நடத்த வேண்டிய தேவை ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு உண்டா? என்றெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியுள்ளது.

ஐ.எஸ். பயங்கரவாதிகள் நிலை கொண்டிருக்கும் - மற்றும் தாக்குதல்கள் நடத்திவரும் நாடுகளை எடுத்துப் பார்த்தால் அவை முஸ்லிம் நாடுகளாகவும் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராகச் செயற்படும் நாடுகளாகவும் இருப்பதைக் காணலாம்.

மத்திய கிழக்கைத் தளமாகக் கொண்டு முஸ்லிம் நாடுகள் அனைத்தையும் கைப்பற்றி - அவற்றை ஒன்றிணைத்து 'கிலாபத்' ஆட்சியை நிறுவுவது என்ற பொய்க் கோஷத்தை முன்வைத்துத்தான் முஸ்லிம் நாடுகள் பலவற்றுக்குள் அவர் கள் நுழைந்துள்ளனர்.

மத்திய கிழக்குக்குப் புறம்பாக ஆப்கான், இந்தோனேசியா மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளில் அவர்கள் கால் பதிக்கத் தொடங்கிவிட்டனர். அவற்றுள் ஆப்கானிஸ்தானில்தான் அவர்களின் செயற்பாடுகள் தீவிரமாக உள்ளன.

அதேபோல், பாகிஸ்தான் மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் அவர்கள் கால் பதிப்பதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன. அத்தோடு,ஏனைய முஸ்லிம் நாடுகளையும்





> ஐ.எஸ். இயக்கத்திட மிருந்து மாத்திரமல்ல வேறு இயக்கங்களிடம் இருந்தும் இலங்கைக்கு அச்சுறுத்தல் இருக்கின்றதா என்று தேடிப்பார்க்க வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு. அதை இலங்கைப் புலனாய்வுப் பிரிவு செவ்வனே செய்ய வேண்டும்

அவர்கள் குறிவைத்துள்ளனர்.
இது தவிர முஸ்லிம் அல்லாத நாடுகளில் அவர்கள் தாக்குதல்கள் நடத்துவதற்குக் காரணம் அந்த நாடுகள் ஐ.எஸ். இயக்கத்துக்கு எதிராகச் செயற்படுவதுதான். ரஷ்யா, பிரான்ஸ் மற்றும் பெல்ஜியம் போன்ற நாடுகள் அவர்களின் தாக்குதல்களுக்கு இதுவரை இலக்காகி உள்ளன. மேலும், அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போன்ற நாடுகள் இவர்களின் தாக்குதல் பட்டியலில் அடுத்த இடத்தில் உள்ளன.

**ஐ.எஸ்.அமைப்புக்கு எதிரான நாடுகள்**

இந்த நாடுகள் அனைத்தும் ஐ.எஸ். அமைப்புக்கு எதிராகச் செயற்பட்டு வரும் நாடுகளாகும். சிரியாவில் இயங் கும் ஐ.எஸ்கள் மீது ரஷ்யா தொடர்ச்சியாக வான் தாக்குதல்களை நடத்தி வருகின்றது. அதேபோல், அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளும் ஐ. எஸ்களுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றன.
இதன் காரணமாகத்தான் ஐ.எஸ். பயங்கரவாதிகள் இந்த நாடுகள் மீது தாக்குதல்களை நடத்துகின்றனர் -நடத்தத் திட்டமிட்டுள்ளனர். அந்த வரிசையில் இலங்கை மீதும் தாக்குதல் நடத்தப்படுமா என்று கேள்வி எழுப்பப்படுகின்றது. இலங்கை ஒரு முஸ்லிம் நாடும் அல்ல, அது ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள நாடும் அல்ல. அப்படி இருக்கும்போது ஐ.எஸ். பயங்கரவாதிகள் இலங்கையை இலக்குவைப்பார்களா என்ற கேள்வி எழுகின்றது.
ஆனால், பொதுபலசேனா போன்ற பேரினவாதிகள் ஐ.எஸ்களின் அச்சுறுத்தல்கள் இலங்கையில் இருப்பதாகக் கூறி பீதியைக் கிளப்பி வருகின்றனர். இப்போது ஜாதிக ஹெல உறுமயவின் இணை அமைப்பு ஒன்று ஐ.எஸ். இயக்கம் இலங்கையில் தடைசெய்யப்பட வேண்டும் என்ற கோரிக் கையை ஜனாதிபதியிடம் முன்வைத் துள்ளது.
ஐ.எஸ். பயங்கரவாத இயக்கம் இலங்கையில் மாத்திரமல்ல முழு உலகிலும் தடை செய்யப்பட வேண்டிய இயக்கம் என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது. ஆனால், இந்த விவகாரத்தைப் பயன்படுத்தி எங்கோ இருக்கும் ஐ.எஸ். இயக்கத்தையும் இலங்கை முஸ்லிம்களையும் முடிச்சுப் போடும் வேலையை இந்த் அமைப்புக்கள் செய்யக்கூடாது.
ஐ.எஸ். இயக்கத்திடமிருந்து மாத்திரமல்ல வேறு இயக்கங்களிடம் இருந்தும் இலங்கைக்கு அச்சுறுத்தல் இருக்கின்றதா என்று தேடிப்பார்க்க வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு உண்டு. அதை இலங்கைப்புலனாய்வுப்பிரிவு செவ்வனே செய்ய வேண்டும்.
ஆனால், எந்தவொரு பயங்கரவாதக் குழுவையும் ஏதாவது ஓர் இனத்துடன் தொடர்புபடுத்தி விசாரணைகள் செய்யப்படக்கூடாது.

**ஐ.எஸ்.இயக்கமும் இலங்கை முஸ்லிம்களும்**

ஐ.எஸ். இயக்கத்தின் பயங்கரவாத செயற்பாடுகளை இலங்கை முஸ்லிம்களுடன் இணைப்பதற்கு பேரினவாதிகள் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருக்கும் நிலையில், அவர்களுக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இலங்கை அரசு செயற்பட்டுவிடக்கூடாது. இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக அரசு எடுக்கும் நடவடிக்கைகள் மிகவும் இரகசியமாக இருப்பதே நல்லது. அது வெளிப்படையாக இருக்கும்போது சில வேளை, இனங்களிடையே வீண் பதற்றத்தை ஏற்படுத்தக்கூடும்.
அதேபோல், ஐ.எஸ். இயக்கத்தை இலங்கையில் தடைசெய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமாக இருந்தால் அதற்கு முழு ஆதரவையும் வழங்க வேண்டியது இலங்கை முஸ்லிம்களின் கடமையாகும். இந்த நாட்டில் எதுவித குழப்பமும் இன்றி சகல இனங்களும் சகோதரத்துவ உணர்வுடன் வாழ வேண்டும் என்பதற்காகவே இனவாத மகிந்த அரசைக் கவிழ்ப்பதற்கு முஸ்லிம்கள் அணி திரண்டனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## காவோலை விழ குருத்தோலை சிரிக்கிறது

ஆன்மிக ஈடுபாடு எமது மக்கள் மத்தியில் அருகிவரும் நிலையில் எங்கள் நாட்டில் கோயில்கள் பெருகி வருகின்றன. பூசைகள் தவறாமல் நடந்து கொண்டு தான் இருகின்றன. விழாக்காலங்கள் தவிர ஏனைய நாள்களில் வழிபடும் பக்தர்கள் ஒரு சிலரே. நேரமின்மையும் இயந்திர வாழ்க்கை வாழும் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையேயான நீண்ட இடைவெளிக்கு ஒரு காரணமாகும்.
எதையோ தேடிக்கொண்டு கையில் தொலைபேசியுடன் தனக்குத்தானே பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் ஓய்வில்லாது நடைப் பிணங்களாய் ஒரு சிலர் இருப்பது புரிகிறது. இந்தச் சூழ்நிலையில் 70 வயதைத் தாண்டிய முதுமையுடனும், நெஞ்சின் சுமையுடனும், கையில் இரண்டு மந்தாரைப் பூக்களுடன் அருகே இருக்கும் சிறிய கோயில் வளவுக்குள் சென்ற மூதாட்டியொருவர் பூட்டிய மூலஸ்தான கதவருகில் பரமனின் பாதாரவிந்தத்தை நினைத்து மலர்களை வைப்பதற்குக் குனிந்தாள்.
அங்கே ஒன்றும் வைக்காதே; சாயங்காலப் பூசை நேரத்தில் வை, என்ற அசரீரி ஒன்று காதில் விழ தடுமாறிய அந்த மூதாட்டி திகைத்து திரும்பிப் பார்த்தாள். அது அந்தக் கோயில் நிர்வாகியின் அதட்டலும் அதிகாரத் தோரணையுடனுமான குரல். வீதி விளக்குகள் ஒளிராத நிலையில் இருளில் தனியே வரமுடிவதில்லை என்ற காரணம் கூறியும் செவிமடுக்காமல் தொடர்ந்தும் அலட்சியமாய் பூச்சாண்டி காட்டினார். அங்கே கொலு இருப்பவன் அந்தக் காலைப் பொழுதில் எங்கே போனான்?கிழவியின் கையில் இருந்த இரண்டு மந்தாரைப் பூக்களும் ஈரவிழிகள் சிந்திய வெப்பத்தில் காய்ந்து நிலத்தில் வீழ்ந்தன. சுமை குறைக்கச் சென்றவருக்கு காய்ந்த ஓலை விழ குருத்தோலை சிரித்த கதையானது. வயோதிபத்தையும் இயலாமையையும் மதிக்கத் தெரியாத மனிதனுக்கு கோயில் ஏது குளம் ஏது. இனி அவருக் கும் வரும் முதுமையை அவர் அவர் மறந்தது வேடிக்கை தான். தெய்வீக பண்புகளுடன் வாழத்தெரியவில்லை மனிதப் பண்புடன் ஆவது வாழக் கற்றுக்கொள்ளுங்கள்

உதயன் வாசகி
கல்வயல்

## ஆசிரியர்களிடம் ஒழுக்கம் வேண்டும்

கிளிநொச்சிப் பாடசாலை ஒன்றில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகப் பத்திரிகைகளில் வெளி வந்த செய்தியைப் பார்த்தபோது நெஞ்சம் பதறிப்போய்விட்டது.
பாடசாலையொன்றின் அதிபர் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் தெரிவிக்கப்பட்டுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்னர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் உண்மையாக இடம்பெற்றிருக்குமானால் முழுக்கல்விச் சமூகத்துக்கும் அது மாறாத இழுக்கை ஏற்படுத்தி விடக்கூடியது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்று வரிசைப்படுத்தியிருக்கிறார்கள் எமது முன்னோர்கள். இதில் தெய்வத்துக்கு முதலிடத்தில் குரு இடம்பிடித்திருப்பது கவனிக்கத்தக்கது. மாணவர்கள் தமக்குக் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர்களைத் தெய்வமாகப் போற்றுகின்றனர். மாணவர்களுக்கு ஒழுக்கத்தையும், நல்ல விழுமியங்களையும் போதித்து அவர்களை நற்பிரசைகளாக்குகின்ற முக்கியமான பணி ஆசிரியர்களுக்கே உரியது. பெற்றோர்கள் தமது பிள்ளைகளை முழுநம்பிக்கையுடன் ஆசிரியர்களிடம் ஒப்படைத்து விடுகின்றனர். இந்த நம்பிக்கையைப் பாதுகாக்கவேண்டியது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.
ஆனால் இன்று வெளிவருகின்ற செய்திகள் முழு ஆசிரிய சமூகத்துக்கும் தலைக்குனிவை ஏற்படுத்துவதாக உள்ளன. ஒரு சிலஆசிரியர்கள்விடுகின்றதவறுகள்முழுக்கல்விச்சமூகத்தையும் பாதித்து விடுவதோடு, அவர்கள் மீது சந்தேகங்களையும் ஏற்படுத்தி விடுகின்றன.
ஆகவேசமூகத்தில்உயர்ந்தநிலையில்வைத்துப்போற்றப்படுகின்ற ஆசிரியர்கள் ஒழுக்க சீலர்களாகத் திகழ்ந்து மாணவச் செல்வங்களுக்கு கல்வியோடு பாதுகாப்பையும் வழங்க வேண்டும்.

பா.ஜீவராணி, வட்டக்கச்சி


softlogic TV
SMART LEDTV
உயர்ந்த தரம்
சிறந்த விலை
குறுகிய காலத்தில் இலங்கையில்
அதிகளவில் பிரசித்தமான தொலைக்காட்சி
மலிவான விலை
இலகு கொடுப்பனவுத் திட்டங்கள்
அழகான வடிவமைப்பு
சிறந்த தள்ளுபடிகள்
TVSLE50S390D 50"
MHL Mirroring
WIFI Built-in
Skyshare Wireless Mirroring
TV-Optimized Android 4.4
Metal Design
ரு.139,999/-
மாதாந்தம் ரு. 8,400/- தொடக்கம்
ஒரே தடவையில் செலுத்துகையில் ரூபா. 20,000/- பரிமாற்ற தள்ளுபடி
TVSLE40E300D 40"
Digital 5.1
Satellite support
Energy Saving
ரு.79,999/-
மாதாந்தம் ரு. 4,800/- தொடக்கம்
ஒரே தடவையில் செலுத்துகையில் ரூபா. 20,000/- பரிமாற்ற தள்ளுபடி
LE32S390D 32"
MHL Mirroring | WIFI Built-in
Skyshare Wireless Mirroring
TV-Optimized Android 4.4
Metal Design
ரு. 54,999/-
ரூபா. 7,000/- பரிமாற்ற தள்ளுபடி
மாதாந்தம் ரு. 3,200/- தொடக்கம்
ஒரே தடவையில் செலுத்துகையில் ரூபா. 7,000/- பரிமாற்ற தள்ளுபடி
LE32E300 32"
Digital 5.1
Satellite support
Energy Saving
ரூபா. 7,000/- பரிமாற்ற தள்ளுபடி
MHL (Mobile High-Definition Link) கேபிள் ஒன்று இலவசம்
ரு. 49,999/-
மாதாந்தம் ரு. 2,867/- தொடக்கம்
ஒரே தடவையில் செலுத்துகையில் ரூபா. 10,000/- பரிமாற்ற தள்ளுபடி
SFT24E600D 24"
ரூபா. 5,000/- பரிமாற்ற தள்ளுபடி
Digital 5.1
Satellite support
Energy Saving
ரு. 34,999/-
மாதாந்தம் ரு. 2,060/- தொடக்கம்
ஒரே தடவையில் செலுத்துகையில் ரூபா. 9,500 /- பரிமாற்ற தள்ளுபடி
softlogic
BEST IN THE BUSINESS
011 5 705 705
அழைப்பு 011 5 541 900
12-60


Hero
அறிமுகப்படுத்துகின்றோம்
எப்போதும் அருகிலேயே இருக்க
Duet
ஹீரோ டுவட்
110 CC
உலோக உடல்
அறிமுக விலை ரூ. 225,500/-
5 YEAR WARRANTY
புத்தம் புதிய 110CC எஞ்சின்
உலோக உடல் (Metal Body)
facebook.com/HeroMotoCorpSriLanka
துரித அழைப்புகளுக்கு: 011 5777000
அங்கீகரிக்கப்பட்ட விநியோகஸ்தர் - R.G ட்ரேடர்ஸ் - யாழ்ப்பாணம்: 077 7340056 / 021 2226185
நாடளாவிய ரீதியிலுள்ள அபான்ஸ்
ஹீரோ காட்சியறைகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற ஹீரோ முகவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.
Abans



# சூரியகாந்தி

# தீவிரவாதிகளால் சோதனைக்குள்ளாகும் முஸ்லிம்கள்



சேரலாதன்

பெல்ஜியத்தின் தலைநகரான பிரஸல்சில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களில் பலர் கொல்லப்பட்டதும், ஏராளமானவர்கள் காயங்களுக்கு உள்ளானதும், சொத்துக்களுக்குப்பேரழிவுகள் ஏற்பட்டதும் ஐரோப்பா முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது.

இந்தக் குண்டுத் தாக்குதலின் மூலமாக ஐ.எஸ்.தீவிரவாதிகள் மேற்குலக நாடுகளுக்கு எச்சரிக்கைச் செய்தியொன்றை விடுத்துள்ளதாகக் கருத முடியும். ஈராக்கிலும், சிரியாவிலும் நிலைகொண்டுள்ள ஐ.எஸ். தீவிரவாதிகள் மனித குலத்துக்கே ஒவ்வாத கொடிய செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.



தமக்குப் பிடிக்காதவர் களைக் கொலை செய்வதென்பது இவர்களுக்குத் தற்போது ஒரு பொழுது போக்காகவே மாறியுள்ளது. மனித உயிர்கள் இவர்களுக்குக் கிள்ளுக் கீரையாகவே தெரிகின்றது. இவர்க ளின் கொடிய செயல்களுக்கு அஞ்சி லட்சக் கணக்கான மக்கள் ஐரோப்பிய நாடுகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர். ஏற்கனவே அந்த நாடுகளில் அகதி வாழ்க்கை வாழ்ந்து வரும் மக்களுடன் இவர்களும் இணைந்து கொள்வதால் பெரும் நெருக் கடியானதொரு நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை மேற்குலக நாடுகள் ஐ.எஸ். தீவிரவாதிகளின் மறைவிடங்கள்மீதுதொடர்குண்டு வீச்சுக்களை நடத்தி வருகின்றன. இதனால் தீவிர வாதிகள் அழிவுகளையும் எதிர் கொண்டு வருகின்றனர். இதனால் ஆத்திரமடைந்த அவர்கள் மேற்குலக நாடுகளில் அவ்வப்போது தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். பிரான்ஸ் நாட்டின் தலைநகரான பரிசில் இடம் பெற்ற தீவிரவாதத் தாக்குதல்கள் அகதிகள் விடயத்தில் ஒரு கடுமையான போக்கை உருவாக்கியுள்ள நிலையில் தற்போது பெல்ஜியத்தில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஐ.எஸ்.தீவிரவாதிகளின் செயல்கள் உலகம் முழுவதும் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்கள் மீதும் வெறுப்பை ஏற்படுத்துவதாக உள்ளதை அவதானிக்க முடிகின்றது. அத்துடன் முஸ்லிம்கள் தீவிரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்ற கருத்தும் உருவாகியுள்ளது. ஆனால் ஒரு சிறிய அளவினரான தீவிரவாதிகளின் செயல்களால் முஸ் லிம் மக்கள் அனைவரும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.


இதேவேளை பெல்ஜியத்தில் இடம் பெற்ற தாக்குதல்கள் அரபு நாடுகளிலிருந்து இடம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடைந்து வருகின்ற அப்பாவி மக்களைத்தான் பெரிதும் பாதித்துள்ளது. தமது நாடுகள் பயங்கரவாதிகளால் தாக்கப்படுவதை விரும்பாத மேற்குலக நாடுகள் முஸ்லிம் மக்களுக்கு அகதி அந்தஸ்தை வழங்குவதில் கடும் போக்கைக் கடைப் பிடிக்க ஆரம்பித்து விட்டன. பெல்ஜியத் தாக்குதலைத் தொடர்ந்து அகதிகளை வலுக்கட்டாயமாக அவர்களின் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பி வைக்கின்ற செயற்பாடுகளை ஆரம்பித்தாலும் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இன்று பயங்கரவாதச் செயல்கள் தொடர்பான அச்சம் பல நாடுகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எவரை யும் சந்தேகக் கண்ணுடன் நோக்க வேண்டியதொரு நிலையும் உருவாகி யுள்ளது. முஸ்லிம் நாடுகளில் அமெரிக்கத் தலையீட்டின் பின்னரே இஸ்லாமிய தீவிரவாதம் தோன்றியதாகக் குற்றம் சுமத்தப்படுகின்றது. ஆனால் இதை முழு அளவில் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அமெரிக்கா வின் நேரடித் தலையீட்டுக்கு முன்னரே பாகிஸ்தானிலும், ஆப்கானிஸ்தானிலும் தீவிரவாத இயக்கங்கள் தோன்றிவிட்டன. காஸ்மீர் பிரச்சினையை மையமாகக் கொண்டு பாகிஸ்தானில் தீவிரவாதம் தலை யெடுத்த நிலையில் ஆப்கானிஸ்தானில் ஆட்சியைக் கைப்பற்றும் அளவுக்குத் தலிபான் தீவிரவாதிகள் பலம் பெற்றிருந்தனர். பின்னர் தலிபான்களின் ஆதரவு பெற்ற பின்லேடனின் அல்கொய்தா தீவிரவாதிகள் அமெரிக்காவில் நிகழ்த்தியமோசமான குண்டுத் தாக்குதல்களின் பின்னரே உலக பயங்கரவாதத்தை ஒழிக்க வேண்டும் என்ற வைராக்கியத்துடன் அமெரிக்கா களம் இறங்கியது. இதன் பயனாக ஆப்கானிஸ்தானில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த தலிபான்கள் விரட்டியடிக்கப்பட்டனர். பின்னர் ஈராக்கின் பக்கம் அமெரிக்காவின் பார்வை திரும்பியது. சதாம் ஹுசைன் பதவியில் இருந்து அகற்றப்பட்டுத் தூக்கிலும் தொங்க விடப்பட்டார். லிபியாவிலும், எகிப்திலும் கூட ஆட்சி மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. சிரிய ஜனாதிபதியையும் பதவியில் இருந்து அகற்றுவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. ஆனால் ஐ.எஸ்.தீவிரவாதிகள் இஸ்லாமிய மதத்தின் பெயரைக் கூறிக் கொண்டு செய்கின்ற ஈனத்தனங்கள் இஸ்லாத்துக்கு இழுக்கைத் தருகின்றது. அதுமட்டுமல்லாது இஸ்லாத்தின் மீதும், இஸ்லாமிய மக்கள் மீதும் தவறான அபிப்பிராயத்தையும் ஏற்படுத்தி வருகின்றது. இந்த நிலை நீடிக்குமானால் முஸ்லிம் மக்கள் மற்றவர்களால் ஓரம்கட்டப்படும் நிலை உருவாகிவிடும். குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடுவாரென எதிர்பார்க்கப்படும் டொனால்ட் ட்ரம்ப் சில வேளை அந்த நாட்டின் ஜனாதிபதியானால் நிலைமை மோசமான கட்டத்தை ஏற்படுத்தி விடும். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது முஸ்லிம் இனத்தவர்களுக்கு இது வொரு சோதனையான காலம்தான்.

"

ஐ.எஸ்.தீவிரவாதிகளின் செயல்கள் உலகம் முழுவதும் ஒட்டுமொத்த முஸ்லிம் மக்கள் மீதும் வெறுப்பை ஏற்படுத்துவதாக உள்ளதை அவதானிக்க முடி கின்றது. அத்துடன் முஸ்லிம்கள் தீவிரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்ற கருத்தும் உருவாகியுள்ளது. ஆனால் ஒரு சிறிய அளவினரான தீவிரவாதிகளின் செயல்களால் முஸ்லிம் மக்கள் அனைவரும் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.







# எதிர்ப்பை சம்பாதிக்கும் எட்கா!

ஸ்டோஸ்வாமி

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே கைச்சாத்திட முன்மொழியப்பட்டுள்ள எட்கா எனப்படும் பொருளாதார மற்றும் தொழிநுட்ப கூட்டு ஒப்பந்தம் இலங்கையின் உள்நாட்டு அரசியலில் அதிர்வலைகளைத்தோற்றுவித்துள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு எட்கா ஒப்பந்தத்தில் ஆர்வம் காண்பிக்கின்ற போதிலும் மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தரப்புக்கள் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. அதிலும் தொழிற்சங்கங்களிடமிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் மற்றும் தொழில்வல்லுநர்கள் கடும் கண்டனங்களையும் வெளியிட்டுள்ளனர்.

ஏறக்குறைய 45 தொழிற் சங்கங்கள் ஒன்றிணைந்து உத்தேச உடன்படிக்கையினை எதிர்த்து கடந்த மாதத்தில் பேரணி ஒன்றினை கொழும்பில் நடத்தியிருந்தன. சுமார் 10,000 பேரின் பங்கேற்புடன் அந்த பேரணி இடம்பெற்றிருந்தது. எட்காவினை நிராகரிக்கும் சுவரொட்டிகளையும் தற்போது தலைநகரில் பரவலாக காணக்கிடைக்கிறது. எட்காவினை எதிர்க்கும் போராட்ட வடிவங்கள் நாளாந்தம் மாறுபட்டுக்கொண்டிருக்கின்றனவே தவிர எதிர்ப்பில் எந்தவித தணிப்பையும் காணக் கிடைக்கவில்லை.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கண்டியில் ஊடகங்களிடம் பேசிய இலங்கைக்கான இந்தியத் தூதுவர் வை.கே. சின்ஹா, குறித்த ஒப்பந்தம் தொடர்பான இலங்கையின் முன்மொழிவு தொடர்பில் இந்தியா ஆராய்வதாகக் குறிப்பிட்டிருந்தார். பிரதமர் ரணில், கடந்த புரட்டாதி மாதம் இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தபோது எட்கா விடயத்தினை முன்மொழிந்ததாக குறிப்பிட்ட சின்ஹா, சில நாள்களுக்கு முன்புதான் இலங்கையிடமிருந்து உத்தேச ஒப்பந்தத்தின் வரைவு தமக்கு கிடைக்கப் பெற்றதாகவும் இந்திய அதிகாரிகள், குறித்த வரைவை ஆராய்ந்த பின் பதிலளிப்பார்கள் என்றும் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை, இலங்கை தயாரித்துள்ள உத்தேச நகல் வரைபின் பிரதிகள் நாடாளுமன்றில் வைத்து கட்சித்தலைவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அபிவிருத்தி உத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்திருக்கிறார். ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திசநாயக்கவின் கேள்வியொன்றுக்கு பதிலளித்து உரையாற்றுகையில், ஒப்பந்தத்தின் இறுதி வரைவு கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

எட்கா ஒப்பந்தத்தினால் இலங்கையை விட இந்தியாவே அதிக நன்மைகளை அனுபவிக்கும் என்று பரவலாக குற்றஞ்சாட்டப்படுகிறது. குறிப்பாக இந்திய ஆளணியினரை இலங்கையில் ஈடுபடுத்துவதற்கு கடும் கண்டனம் எழுப்பப்படுகிறது.

### சர்ச்சைக்குள்ளாகியுள்ள அம்புலன்ஸ் சேவை

கடந்த ஆண்டு பங்குனி மாதத்தில் இந்திய பிரதமர் மோடி இலங்கைக்கு வந்திருந்தபோது இலங்கை விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாகவே இந்த நோயாளர்காவு வண்டிச்சேவைக்காக முதற்கட்டமாக இந்திய அரசு 7.5 மில்லியன் டொலர்களை இலங்கைக்கு வழங்க உறுதியளித்ததாகத் தெரிவித்திருக்கிறார் இந்தியத் தூதுவர். இந்த அம்புலன்ஸ் சேவையை மேல் மற்றும் தென் மாகாணங்களில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 88 நோயாளர்காவு வண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டு அதற்குரிய சாரதிகள், தாதியர்கள் மற்றும் சுகாதார பணியாளர்களாக இலங்கையர்களே தெரிவுசெய்யப்படுவரென தெரிவித்துள்ள தூதுவர், மேற்படி சேவையினை மேற்பார்வை செய்வதற்கென சில இந்தியர்கள் ஈடுபடுத்தப் படுவரெனவும் குறிப்பிட்டார்.

### சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் பெற்ற அனுபவம்

எட்கா உடன்படிக்கை தொடர்பில் கடும் விமர்சனத்தினை இலங்கை எதிர்கொள்வதற்கு மற்றொரு காரணம் இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையில் இலங்கைக்குக் கிடைத்த ஏமாற்றமாகும். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் கைச்சாத்திட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் நன்மைகளை அதிகளவில் இந்தியாவே அனுபவிக்கின்றது. மத்தியவங்கியின் தரவுகளின்படி, கடந்த 15 ஆண்டுகளில் இந்தியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதி வெறும் 645 மில்லியன் அமெரிக்கன் டொலர்களாயிருக்கும் அதே வேளை இலங்கைக்கான இந்தியாவின் ஏற்றுமதி 4 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை தொட்டிருக்கிறது.

### சம்பந்தன் மூச்சுமில்லை

எட்கா தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் கொந்தளித்துக் கொண்டிருக்கையில் அரசை விமர்சிக்கத் தகுந்த பொறுப்பிலிருக்கும் சம்பந்தனிடமிருந்து எந்தவிதமான எதிர்வினையையும் இதுவரை காணக்கிடைக்கவில்லை. குறித்த ஒப்பந்தம் தொடர்பிலான தமது நிலைப்பாடு பற்றி பெயரளவில் ஓர் அறிக்கை தானும் இன்னும் வெளியிடப்படவில்லை.

பல்வேறு மட்டங்களிலிருந்து குறிப்பாக உயர்மட்ட தொழில்சார் வல்லுநர்களிடமிருந்து எதிர்ப்புகள் வலுக்கின்ற போதிலும் ஒப்பந்தம் தொடர்பில் அரசாங்கம் நெகிழ்சிப் போக்கினை கடைப்பிடிப்பதாக தெரியவில்லை. எனினும் குறித்த உடன்படிக்கை எதிர்வரும் ஜூன் மாதமளவில் கைவிசாத்திட எதிர்பார்க்கப்படும் நிலையில் ஒப்பந்த இறுதி வரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுமென நம்பப்படுகிறது. அந்த தடைதாண்டல் படியே எட்காவின் எதிர்காலத்தை தீர்மானிப்பதாகக்கூட அமையலாம்.

> எட்கா ஒப்பந்தத்தினால் இலங்கையை விட இந்தியாவே அதிக நன்மைகளை அனுபவிக்கும் என்று பரவலாக குற்றஞ் சாட்டப்படுகிறது. குறிப்பாக இந்திய ஆளணி யினரை இலங்கையில் ஈடுபடுத்து வதற்கு கடும் கண்டனம் எழுப்பப்படுகிறது.

# மீண்டும் சர்ச்சைக்குள்ளாகிய விஜய் ரிவியின் சூப்பர் சிங்கர்

உசிலமணி

**"வாக்களிப்பு மூலம் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வதாக விஜய் தொலைக்காட்சி சொல்லிக் கொண்டாலும், ஏற்கனவே வெற்றியாளர் ஒருவரை நிர்ணயித்து அவரை வெற்றி பெற வைப்பதற்காகவே செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு சூப்பர் சிங்கர் ஆரம்பித்ததிலிருந்து சொல்லப் பட்டு வருகின்றது. அதனை சந்தேகத்துக்கு இடமின்றி உறுதி செய்யும் வகையிலும் சம்பவங்கள் இடம்பெற்றாலும் மக்கள் 'ரியாலிட்டி ஷோக்களிற்கு' அடிமையாக இருப்பதால் அதனை தமக்கான வாய்ப்பாக பயன்படுத்துகின்றனர் தொலைக்காட்சி நிர்வாகத்தினர்."**


ஆனந்த்

தமிழகத்திலிருந்து ஒளிபரப்பாகும் விஜய் தொலைக்காட்சியின் 'ரியாலிட்டி ஷோ' நிகழ்ச்சியான சூப்பர் சிங்கர் மீண்டும் ஒரு முறை சர்ச்சைக்குள்ளாக்கப்பட்டுள்ளது. கடந்த 18 ஆம் திகதி சூப்பர் சிங்கர் பருவகாலம் 5 இன் இறுதி நிகழ்வு இடம்பெற்றது. இதில் வெற்றியாளராக அறிவிக்கப்பட்ட ஆனந்த் அரவிந்தாக்ஷன் தொடர் பிலேயே சர்சை உருவாகியுள்ளது. பின்னணிப் பாடகராக ஏற்கனவே படங்களில் பாடல்களைப் பாடியுள்ள ஆனந்தை எவ்வாறு வெற்றியாளர் என்று அறிவிக்கலாம் என்பதே சர்சைக்கான காரணம்.

கடந்த ஆண்டு சூப்பர் சிங்கர் ஜூனியர்ஸுக்கான இறுதி நிகழ்வு இடம் பெற்றது. இதில் வெற்றியாளராக ஸ்பூத்தி அறிவிக்கப்பட்டார். இரண்டாதாக ஜெசிக்கா ஜூட் தெரிவு செய்யப் பட்டார். ஜெசிக்கா ஜூட்டுக்கே அதிகளவு வாக்குகள் கிடைத்திருந்தாகவும், விஜய் தொலைக்காட்சி நிர்வாகம் அதனைப் புறந்தள்ளி ஸ்பூத்திக்கு முதலிடம் கொடுத்தாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. சமூக வலைத் தளத்தில் தீயாகப் பரவிய இந்தக் குற்றச்சாட்டினால் இறுதியில் விஜய் தொலைக்காட்சி பதிலளிக்க வேண்டிய நிர்பந்தத்துக்குத் தள்ளப்பட்டது.

இறுதிப் போட்டிக்கான வெற்றியாளரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் ஜெசிக்கா ஜூட்டே முன்னிலை பெற்றிருந் தாக ஒப்புக் கொண்டது விஜய் தொலைக் காட்சி நிர்வாகம். ஆனால் ஸ்பூதியை தாம் வெற்றியாளராக அறிவித்ததை நியாயப்படுத்தியும் இருந்தது. அதாவது இறுதிப் போட்டியில் வெற்றியாளரைத் தேர்வு செய்வதற்கு ரசிகர்களின் வாக்களிப்புடன் நடுவர்களின் முடிவையும் சேர்த்துக் கொள்வதாக அறிவித்தது. நடுவர்களின் புள்ளியிடல்களின் அடிப்படையில் ஸ்பூதியே முன்னிலையில் இருந்தாகவும், வாக்களிப்பு மற்றும் நடுவர்களின் புள்ளியிடல்களின் அடிப்படையில் ஸ்பூத்தி வெற்றியாளராகத் தேர்வு செய்யப்பட்டதாகவும் விஜய் தொலைக் காட்சி தெரிவித்திருந்தது.

இது கடந்த ஆண்டு மிகப் பெரிய சர்ச்சையைத் தமிழகத்தில் மாத் திரமல்ல புலம் பெயர் தேசங்களிலும் ஏற்படுத்தியிருந்தது. காரணம் ஜெசிக்கா ஜூட், ஈழத் தமிழ் அகதியாக கனடாவில் வசிப்பவர் என்பதால் இந்தச் சர்சை பல்வேறு இடங்களிலும்அதிர்வலையை ஏற்படுத்தியி ருந்தது.

இந்தச் சர்ச்சைகளுக்கு நடுவில் சூப்பர் சிங்கர் பருவகாலம் 5 இடம் பெற்றது. இறுதி நிகழ்வு இடம் பெற்று வெற்றியாளர் அறிவிக்கப்படும் வரையில் இங்கு சர்ச்சைகள் தோன்றவில்லை.

வெற்றியாளர் அறிவிக்கப்பட்ட பின்னரே சர்ச்சைகள் உருப்பெறத் தொடங்கின. கடந்த ஆண்டைப் போன்று வாக்களிப்பில் தில்லு முல்லு என்று பிரச்சினை கிளம்பவில்லை. மாறாக வெற்றியாளரே சர்சைக்குரியவராக மாறினார். வெற்றியாளர் என்று அறிவிக்கப்பட்ட ஆனந்த் அரவிந்தாக்ஷன் ஏற்கனவே பின்னணிப் பாடகராக இருப்பவர் என்பதுதான் சர்சைக்குத் தூபமிட்டது. 2012 ஆம் ஆண்டு வெளிவந்த ஆரோகணம் திரைப் படத்தில் 'இந்த வான் வெளி விடியாதோ' என்ற பாடலையும், அதே ஆண்டு வெளிவந்த நீர்ப் பறவை திரைப்படத்தில் 'யார் வீட்டு மகனோ' என்ற பாடலையும் பாடியவர் ஆனந்த்.

இது மட்டுமல்ல பத்து எண்ணுறதுக்குள்ள, இவன் வேற மாதிரி, பாண் டிய நாடு, மத யானைக் கூட்டம் உள்ளிட்ட திரைப் படங்களில் பின்னணிப் பாடகராக ஆனந்த் ஏற்கனவே அறிமுகமாகியிருக்கின்றார். இப்படியான பின்னணிப் பாடகரைக் கொண்டு வந்து அவரை வெற்றியாள ராக அறிவித்துள்ளனர். இதில், ஆனந்த் இந்தத் தொடரில் இடையிலே 'எலிமினேட்' நீக்கப்பட்டு மக்களின் வாக்களிப்பின் மூலம் மீளவும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டதாக அறிவித்தனர்.




சூப்பர் சிங்கரில் வெற்றி பெற்ற திவாகரை யாரும் மறந்திருக்க மாட் டார்கள். அந்தத் தொடரில் திவாகரின் வீட்டுக்குள் சென்றும் அவரையும் அவரது குடும்பத்தைப் பற்றியும் 'வீடியோ' எடுத்து அதை வெளியிட்டது விஜய் தொலைக் காட்சி. இவ்வாறான நிலையில் ஆனந்த் ஒரு பின்னணிப் பாடகராக இருக்கின்றார் என்ற உண்மையைச் சொல்லாமலும், அவரது பின்ன ணியை வெளியிடாமலும் இறுதி 'எபிசோட்' வரை நகர்த்தியது ஏன் ? மக் களை முட்டாள்களாக்குகின்றதா விஜய் தொலைக் காட்சி ? இந்தக் கேள்விகள் தான் தற்போது சர்சைக்குரியதாக சமூகவலைத் தளத்தில் எழுப்பப்பட்டு வருகின்றது.

வாக்களிப்பு மூலம் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வதாக விஜய் தொலைக்காட்சி சொல்லிக் கொண்டாலும், ஏற்கனவே வெற்றியாளர் ஒருவரை நிர்ணயித்து அவரை வெற்றி பெற வைப்பதற்காகவே செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டு சூப்பர் சிங்கர் ஆரம்பித்ததிலிருந்து சொல்லப் பட்டு வருகின்றது. அதனை சந்தேகத் துக்கு இடமின்றி உறுதி செய்யும் வகையிலும் சம்பவங்கள் இடம்பெற்றாலும் மக் கள், 'ரியாலிட்டி ஷோக்களுக்கு' அடிமையாக இருப்பதால் அதனைத் தமக்கான வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றனர் தொலைக் காட்சி நிர்வாகத்தினர்.

ஆனந்த் அரவிந்தாக்ஷன் மீதான குற்றச் சாட்டுக்கள் தொடர்பில் விஜய் தொலைக் காட்சியின் நிகழ்ச்சி தலைமை பொறுப்பாளர் பிரதீப், 'சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருபவர் கள் பலரும், நான் கோரஸ் பாடியிருக்கேன். அல்பம் வெளியிட்டிருக்கேன். ஒரு பாட்டு பாடியிருக்கேன். அது வெளி வருமா? வராதா? எனத் தெரியல என்றும் வருகிறார்கள்.

நிகழ்ச்சிக்கு வருபவர்கள் இதுவரைக்கும் ஒரு பாட்டுக்கூட பாடியிருக்கக்கூடாது என்று எங்களது விதிமுறைகளில் இல்லை. பங்கேற்பாளர்கள் ஏற்கனவே பாடியிருந்தால் அது நடுவர்கள், நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் சக திறமைசாலிகள் வரைக்கும் தெரியும்.

எப்படியும் மூடி மறைக்க முடியாது. நிகழ்ச்சி முன்னோட்டத்தில்கூட செல்லக் குரலுக்கான தேடல் என்றுதான் அறிவிக்கிறோம். புதிய குரலுக்கான தேடல் என்று அறிவிப்பு வெளியிடவில்லை.

இதை இங்கே மறைக்க ஒன்றுமே இல்லை. பங்கேற்பாளர்கள் ஒரு சீசனுக்குள் வந்த பிறகு அந்த சீசன் முடியும் வரைக்கும் வெளியே சென்று பாடக்கூடாது என்றுதான் விதிகள் வைத்திருக்கிறோம். அதைத் தவிர எதுவும் இல்லை. நல்ல குரலை தேர்வு செய்கிறோம் என்பதுதான் எங்கள் எண்ணம்.

ஆனந்த் அரவிந்தாக்ஷன் கூறும்போது கூட, நான் இந்த மேடைக்கு சீனியர் தான். வெளியே எனக்கு இதுவரைக்கும் கிடைக்காத அடையாளத்தை இந்த மேடை ஏற்படுத்திக் கொடுக்கும் என்றே, உள்ளே வருகிறேன் என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, இது எங்களைப் பொறுத்தவரைக்கும் சர்ச்சைக்குரிய விடயம் இல்லை. தொடர்ந்து இதே மாதிரி நல்ல குரலை அடையாளப் படுத்துவோம் என்று பிரதீப் தமது செயற்பாட்டை நியாயப்படுத்துகின்றார்.

பிரதீப்பின் இந்தக் கருத்தையும் சர்ச்சைக்குரியதாக மாற்றி விட்டுள்ளனர் சமூகவலைத்தளப் பாவனையாளர்கள். தொடர்ந்தும் இதே மாதிரி நல்ல குரலை அடையாளப்படுத்துவோம் என்று தெரிவித்ததன் அடிப்படையில்,

(39 ஆம் பக்கம் பார்க்க)

# கட்டுக்கடங்காமல் போகும் இளசுகளின் தனி வாழ்க்கை

தமிழில் சாரி

பொருளாதாரச் சுணக்கம் காரணமாக உலகமே பாதிக்கப்பட்டு வருகிறது. வளரும் நாடுகள் மட்டுமல்லாமல், பணக்கார நாடுகளும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளன. குழந்தைகளுடன் இருக்கும் குடும்பத்தவர்களைவிடத் தனியாக இருக்கும் இளைஞர்களும் இளம்பெண்களும் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் அவதிப்படுவது பணக்கார நாடுகளில் அதிகரித்திருக்கிறது. அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா, ஸ்பெயின், இத்தாலி, பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளில் 25 வயது முதல் 29 வயது வரையிலான இளைஞர்கள் செலவுகளைச் சமாளிக்க முடியாமல் திண்டாடுகின்றனர். 'தி கார்டியன்' பத்திரிகை திரட்டிய தரவுகள் இதைத் தெரிவிக்கின்றன.

**கைக்கெட்டாத செலவு**

சம்பாதிக்கும் இளைஞர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய வருமான வரியைச் செலுத்திய பிறகு, கைக்குக் கிடைக்கும் தொகையில் அனைத்துத் தேவைகளையும் பூர்த்திசெய்ய முடியாமல் தவிக்கின்றனர். செலவுகளை எப்படியெல்லாம் குறைக்க முடியும் என்று யோசித்துச் செயற்படுத்துகின்றனர். பலர் கூடுதலாகச் சம்பாதிக்க மற்றொரு வேலையையும் பார்க்கின்றனர். ஓய்வெடுப்பது, சுற்றுலா செல்வது, பொழுதுபோக்குவது போன்றவை குறைந்துவிட்டன. நிலமை மிகவும் மோசமாகிவிட்ட நிலையில், சிலர் தங்களுடைய பெற்றோருடன் மீண்டும் சேர்ந்து தங்கவும் தொடங்கியுள்ளனர்.

அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின் ஆகிய வளர்ந்த நாடுகளில் இளைஞர்கள் இப்போது சம்பாதிக்கும் பணத்தின் உண்மையான மதிப்பு 20 அல்லது 30 ஆண்டுகளுக்கு முன்னால் அவர்களுடைய வயதில் இருந்தவர்கள் சம்பாதித்ததைவிட மிகமிகக் குறைவாகவே இருக்கிறது. அதேசமயம், அவர்களுடைய சொந்தச் செலவுகள் அதிகமாக இருக்கின்றன. தனி வீடு அல்லது மாடிக் குடியிருப்பில் வசிப்பவர்கள் வாடகையைச் சமாளிக்க முடியாமல் இன்னொருவருடன் அறையையோ, இன்னும் சிலருடன் வீட்டையோ பகிர்ந்துகொண்டு செலவைக் குறைக்கப் பார்க்கின்றனர்.

அமெரிக்காவில் 2010ஆம் ஆண்டுதான் தனிக் கட்டைகளுக்கு மிகவும் மோசமான ஆண்டாக இருந்தது. தனியாக வாழும் இளைஞர்கள் - இளம்பெண்கள் வருமான வரிக்குப் பிறகு வருடம் ஒன்றுக்குப் பெற்ற ஊதியம் சராசரியாக 27,757 டொலர்களாக இருந்தது. இது தேசிய சராசரி வருமானத்தைவிடக் குறைவு. 1979இல் வாங்கிய ஊதியத்தின் உண்மை மதிப்பு இதைவிடக் கூடுதல். அதாவது, 29,638 டொலர்கள்.



**தனிமையின் விலை**

தனியாக வாழ்தல் என்ற தலைப்பில் புத்தகம் எழுதிய எரிக் கிளினன்பர்க் இதை நன்கு அலசியிருக்கிறார். தனியாக வாழ்வது என்பது 1950களில் தொடங்கி 1980கள் வரையில் படுவேகமாக வளர்ந்தது. அதற்குப் பிறகு, சற்றே வேகம் தணிந்திருக்கிறது. அரசு எடுத்துக் கொள்வது போக கைக்குக் கிடைக்கும் வருவாய் குறைவுதான் என்றாலும் தனியாக வசிப்பதால் பெரியவர்களாகிவிட்டோம் என்ற எண்ணத் தூண்டுதலால்தான் தனியாக வசிக்கின்றனர்.

அமெரிக்காவில் 2014இல் எடுத்த கணக்கெடுப்பின்படி 25 வயது முதல் 29 வயது வரையில் தனியாக வசிப்போர் எண்ணிக்கை மொத்த மக்கள் எண்ணிக்கையில் 27.6%. ஐரோப்பிய நாடுகளில் இது 32.7% என்று கண்டறியப்பட்டிருக்கிறது.

படித்த பெண்கள் தனியாக வாழ முற்படுவதும், திருமணமான சில ஆண்டுகளுக்குள்ளேயே மணவிலக்குப் பெறுவதும் இந்த எண்ணிக்கை அதிகரிப்பதற்கு முக்கியக் காரணங்களாக இருக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளில் தனியாக வசிப்பவர்களுக்கான வீட்டு வாடகை குறைவு. அதனால் திருமணம் செய்துகொள்வதையும் குழந்தை பெற்றுக்கொள்வதையும் தள்ளிப்போட இளைஞர்கள், இளம்பெண்கள் விரும்புவதாலும் தனியாக வாழ்வோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது.

**தனி வீடும், செலவுக் குறைப்பும்**

ஆஷ்லே போல் (29), என்பவர் அமெரிக்கா வின் போர்ட்லேண்ட் ஓரிகான் என்ற இடத்தில் வசிக்கிறார். அவருடைய வார்த்தைகள் இவை: "சொந்த தொடர் மாடிக் குடியிருப்பில் தனியாக வசிக்க ஆசைப்பட்டு வந்தேன். என்னுடைய சம்பளம் அதற்கு இடம் தரவில்லை. வீட்டைவிட்டு வந்தபோது 25 வயதுதான் ஆகியிருந்தது. என்னுடைய பெற்றோர் வசித்ததைப் போல வசதியான வீட்டில் வாழவேண்டும் என்ற ஆசையில் சரியாகக் கவனிக்காமல் வாடகை அதிகமுள்ள தனி வீட்டுக்கு ஒப்பந்தம் செய்துகொண்டுவிட்டேன். கடைசியில், என்னுடைய வீட்டுக்குத் தேவையான கட்டில், சோபா, நாற்காலி, மேசை, தரை விரிப்புக்கள், சுவர் அலங்காரங்கள், பண்ட பாத்திரங்கள் வாங்குவதற்கே அதிகம் செலவிட நேர்ந்தது."

நண்பர்களோடு உல்லாசச் சுற்றுலா செல்லவும் வெளியிடங்களுக்குச் சென்று விருந்து சாப்பிடவும் ஆசைப்பட்டாலும் பணம் போதாததால் குறைத்துக்கொண்டிருக்கிறார் இவர்.

ஜெர்மனியின் பெர்லின் நகர தொடர் மாடிக் குடியிருப்பில் கடந்த 3 ஆண்டுகளாகத் தனியாக வசிக்கிறார் மார்ட்டின் கிளாஷ் (24). ஜெர்மனியத் தலைநகரின் ஒதுக்குப்புறத்தில் பிறருடன் சேர்ந்து தொடர்மாடிக் குடியிருப்பில் வாழ்ந்தார்.


"ஒரு பெருநகரத்துக்குச் செல்லும்போது நண்பர்களுடன் சேர்ந்து வசிப்பது பல நன்மைகளைத் தரும். பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சி உதவியாளராக வேலை கிடைத்திருப்பதால் வீட்டிலிருந்து அலுவலகத்துக்குச் செல்ல நிறையே நேரம் எடுத்துக்கொள்வது நல்லதல்ல; பல்கலைக்கழகத்துக்கு அருகிலேயே வசிக்க விரும்பினேன். இப்போது அப்படித்தான் குடியிருக்கிறேன். என் வேலைகளை நானே செய்துகொள்கிறேன். என்னை மற்றவர்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற உணர்விலிருந்து விடுபட்டிருக்கிறேன். முதலில் மாதம் 300 யூரோ வாடகையில் குடியிருந்தேன். என்னுடைய அதிர்ஷ்டம் மேலும் 100 யூரோக்குத் தனி இடம் கிடைத்திருக்கிறது. இதிலேயே மின் கட்டணம் உள்பட எல்லாச் செலவுகளும் சேர்ந்துவிட்டன. பொறுமையாகத் தேடினால் குறைந்த வாடகைக்கு நல்ல இடம் கிடைக்கும். 4 பேர் ஒன்றாகக் குடியிருந்து திடீரென்று பிரிந்து அவசரத்தில் வீடு தேடினால் குறைந்த வாடகைக்குக் கிடைக்காது.

எனக்குக் கிடைக்கும் உதவித் தொகை போதவில்லை. எனவே, ஒன்றுக்கும் மேற்பட்ட வேலைகளைச் செய்கிறேன்.

(27 ஆம் பக்கம் பார்க்க)

# பாவமன்னிப்பு

நெடுந்தீவு மகேஷ்



நேரம், காலம், தூரம் அனைத்தையும் தாண்டிச் செல்லும் வலிமை எமது சிந்தனைக்கு மாத்திரம்தான் உண்டு. நான் ஓர் ஆசிரியனாக எனது ஊரிலேயுள்ள அந்தப் பெரிய பாடசாலையிலே கடமையாற்றிய நாள்கள் இன்னமும் நினைவிலே உண்டு. அன்று என்னோடு பணியாற்றிய சிறந்த ஆசிரியர்கள் பலர் இருந்தனர். அந்த நாள்கள் மகிழ்ச் சிகரமானவை.இன்றும் எனது நினைவிலே நிற்கும் சிறந்த ஆசிரியர்களில் ஒருவர் சரஸ்வதி ரீச்சர். முதல் நியமனம் பெற்று எங்கள் பாடசாலைக்கு அவள் வந்திருந்தாள். இளவயதினளான சரஸ்வதி ஓர் அழகிதான். அவளின் அழகிலும் அவள் நடக்கும்போது தோன்றும் நளின அசைவுகளிலும் ஓர் இனிமை சூழும் கவர்ச்சி உண்டு.

அவரின் பார்வையிலே படரும் காந்த சக்திக்குள் கட்டுண்டு அவளையே திருமணம் செய்ய விரும்பி யவர்கள் பலர். ஆனால் எல்லோரையும் விலக்கிச் சரஸ்வதியைத் திருமணம் செய்து கொண்டவன் குமாரசாமி. அவன் ஓர் ஆங்கில ஆசிரியன். அவனும் அழகன்தான். அவர்கள் இருவருமே எங்களின் நண்பர்கள்தான்.

எனது மனைவி, பிள்ளைகளுக்கு அவர்களின் மீது விருப்பமும் பாசமும் நிறையவே உண்டு. அவர்கள் இருவரும் பாடசாலைக்கு அருகிலேயே கணவன் மனைவியெனத் தங்கியிருந்தார்கள். அவர்களின் வீட்டுக்கு நாங்கள், எனது மனைவி பிள்ளைகளுடன் சென்றிருந்து உறவாடி உண்டு களித்த நாள்கள் எல்லாமே பசுமையானவை.

சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல் லாம் அவர்களும் எங்களின் வீட்டிலே தமது ஓய்வு நேரங்களைக் கழித்தி ருப்பார்கள். அவர்கள் அந்தப் பாடசாலையிலிருந்து ம ாற்றலாகி எங்களின் ஊரைவிட்டுப் போன பின்னர் அவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைக்கவேயில்லை.

இன்று, நான் வந்து ஒதுங்கியிருக்கும் இந்த ஊரிலேயுள்ள பள்ளியிலேதான் சரஸ்வதி ரீச்சர் படிப்பிக்கிறா என்று சொன்னார்கள். அன்பும் பண்பும் கலந்த குடும்பம் அவர்களுடையது. அன்றைய எங்கள் ஊரில் நடந்த திருமண நாளைக் கடந்து தொடர்ந்து சென்ற அவர்களின் வாழ்க்கைப் பயணம் மிகவும் குதூகலமானது. அது எல்லோருக்குமே பிடித்தமானதுதான். என் எண்ணத்தில் குமாரசாமியும் சரஸ்வதியும் புதுமணத் தம்பதிகளாய் ஊர்வலம் போன அந்த நாள்கள் நிழலாடின.

நான் பலரையும் விசாரித்து சரஸ்வதி ரீச்சர் இருக்கும் வீட்டின் அடையாளத்தைத் தெரிந்து கொண்டேன். இப்பொழுது வீட்டின் அயலுக்கே வந்து விட்டேன். வீட்டின் பாதையோரத்தில் நிற்கிறேன். அது ஒரு மேல் வீடு. இரண்டடுக்கு மாடிவீடு. முற்றத்தில் பூஞ்செடிகளும் குறோட்டன் செடிகளும் அவற்றுக்கு நீர் விசிறும் தண்ணீர்ப் பைப்புகளும் தெரிந்தன. கேற்றுக்கு வெளியே நின்றிருந்தேன். அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய நீல வர்ணம் கதவுகளுக்குக் கவர்ச்சியாக இருந்தது. உட்புறமாகப் பூட்டப்பட்டிருந்த கதவை வெளியே நின்று கொண்டு திறக்க முடியவில்லை. கதவில் தட்டினேன்.

நாயொன்று குரைக்கத் தொடங்கியது. யாரோ வந்தி ருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு கதவைத் திறந்தவர் சரஸ்வதி ரீச்சரேதான்! நான் அவரை அடையாளம் கண்டு கொண்டேன். என்னிடத்திலும் பெரிதாக மாற்றம் எதுவும் ஏற்படவில்லைப் போலும்! குரைத்துக் கொண்டே நின்ற நாயைப் பார்த்தேன். "அது கடிக்காது சேர்!" என்ற சரஸ்வதி ரீச்சரின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து அவரைப் பார்த்தேன்.

"வாருங்கள் சேர்" என்றவாறு சரஸ்வதி ரீச்சர் என்னை வரவேற்றார். அதே சிரிப்பு, அதே நளினம் எனது முகம் மலர்ந்தது. கேற்றைத் தாண்டி முற்றத்தில் இறங்கினேன். என்னை அழைத்தவாறு முன்னால் நடந்து வீட்டுக்கு உள்ளே சென்றார். எனது கண்கள் அங்கே பலரையும் தேடின. சரஸ்வதி ரீச்சரைத் தவிர வேறு எவரையும் அங்கே காணவில்லை.

என் கண்கள் அந்தப் பெரிய வரவேற்பறையையும் அங்கெல்லாம் அழகுற அடுக்கப்பட்டிருந்த தளபாடங் களையும் அலங்காரப் பொருள்களையும் புத்தகங் களையும் சுற்றிச் சுழன்றன. அந்தச் சுவரிலே தொங்க விடப் பட்டிருந்த படங்களையும் கண்கள் மேய்ந்தன. "இருங்கோ சேர்! எப்படி இருக்கிறீங்கள்?" சரஸ்வதி ரீச்சர்தான் பேசினார். ரீச்சரின் குரலில் இருந்த இனிமை குறையவேயில்லை. "நான் நல்லாய் இருக்கிறேன் ரீச்சர்! சுகமாய் இருக்கிறேன்!" என்று சொல்லிக் கொண்டே அங்கு போடப்பட்டிருந்த குசன் சீற்றில் அமர்ந்து கொண்டேன். எனக்கு எதிரில் இருந்த சீற்றில் ரீச்சர் அமர்ந்து கொண்டார். பழைய நினைவுகள் சில வந்து போயின. "குமாரசாமி மாஸ்ரர் எங்கே போயிட்டார்? பிள்ளைகள் எங்கே?" என்று அவர்களைப் பார்க்கும் ஆரவத்தோடு எனது கேள்விகளை அடுக்கினேன். 'பிள்ளைகள் ரியுசனுக்குப் போயிட்டார்கள், கிட்டேதான்! இப்ப வந்துவிடுவார்கள்" என்றவர், என்னைப் பார்த்தார். குமாரசாமி மாஸ்ரரைப் பற்றி எதுவுமே கூறவில்லை. நான் மீண்டும் அவரைப் பற்றிக் கேட்க எண்ணினேன். ஆனால் கேட்கவில்லை.

இவர்களோடு படிப்பித்த அந்த நாள்களில் நாங்கள் மிகவும் நெருங்கிய உறவினர்கள் போலவும் ஒருவருக் கொருவர் உதவும் நண்பர்களாகவுமே பழகினோம். எதனையும் மனந்திறந்து சொல்லும் வெட்கமின்மை எம்மிடத்தில் வளர்ந்திருந்தது. குமாரசாமி மாஸ்ரரைப் பற்றி நான் கேட்ட கேள்விக்கு, சரஸ்வதி ரீச்சர் எதுவுமே சொல் லாமல் மௌனமாக இருந்தமை என்னை எவ்வாறெல் லாமோ சிந்திக்கத் தூண்டியது. அத்தகைய கற்பனை முடிவுகளுக்குள் என்னை நான் இழுத்துச் செல்லத் துணியாமல் "மாஸ்ரர் எங்கே போய் விட்டார்?" என்ற கேள்வியை மீண்டும் கேட்டு வைத்தேன்.

சரஸ்வதி ரீச்சரின் மலர்ந்த முகம், கூம்பிச் சுருங்கியது. ஆனால் ஒரு சிறு புன்னகையை வலிந்து வரவழைத்துக் கொண்டே, "அவர் இப்ப இங்கே இல்லை!" என்றார். எங்கே போய்விட்டார்? என நான் கேட்கவில்லை. அவராகவே பேச்சைத் தொடர்ந்தார். "எங்களை உங்களுக்கு நல்லாய்த் தெரியுந்தானே சேர். அவரை நான் காதலிச்சுத்தான் கலியாணம் செய்தனான். நாங்கள் அங்கயிருந்து இங்க வந்தபிறகு சங்கவி பிறந்தவள். அதுக்குப் பிறகு ரெண்டு வருசத்தால சாருகன் பிறந்தான். எந்தப் பிரச்சினையும் எங்களுக்குள்ள இருந்ததில்லை. நாங்கள் ரெண்டு பேருமே உழைக்கிறோம். பிள்ளைகள் இப்ப படிக்கிறாங்கள் எங்கடை தேவைகளுக்கு வேண்டிய மாதிரிப் போதிய அளவு பணம் இருந்தது. செலவு செய்தனாங்கள். பிள்ளைகளையும் நன்றாகப் பார்த்தனாங்கள். எப்போதும் சந்தோசமாத்தான் இருந்தனாங்கள். என்னவோ தெரியவேயில்லை சேர், இப்ப அவர் இங்கே வாறதில்லை." ரீச்சர் சொல் லிக்கொண்டே போனார். நான் எதுவும் பேசவில்லை.

"அவர் இப்ப நிர்மலா ரீச்சரோடதான், அவவுடைய வீட்டிலையே நிற்கிறதாய்க் கேள்வி" என்று சொல் லிக்கொண்டு கைகளைப் பிசைந்தவாறு நிலத்தை நோக்கினார். கண்கள் கலங்கின.

"யார் அந்த நிர்மலா ரீச்சர்?"

எனக்கு, ரிச்சரின் கதையைக் கேட்டுத் தெளிந்து, ரீச்சருக்குச் சார்பாகத் துலங்கும் வகை தெரியவில்லை. எனக்குள் பூதாகாரமாக எழுந்த மனச்சாட்சியின் அச்சுறுத்தல்கள் என்னை மௌனமாக்கின.

"பிள்ளைகள் அவர் மீது வைத்திருக்கும் அன்பைக்கூட இந்த மனுசன் மதிக்காமல் போனது அதுகளுக்கும் வேதனைதான்! எனக்கு வெளியில போகவும் வெட்கமாக் கிடக்குது! பள்ளிக்கூடம் போக விருப்பமேயில்லை. பார்க்கிற எல்லோரும் என்னை ஏளனமாய்ப் பார்க்கிறது மாதிரி ஒரு பிரமை." சரஸ்வதி ரீச்சர் சொல்லிக்கொண்டே இருந்தார்.

"பிள்ளைகளும் வளர்ந்திட்டுதுகள் வயது வந்த பிள்ளைகளையும் வைத்துக்கொண்டு இந்த மனுசன் இப்பிடிச் செய்து போட்டுது ஆற்றாமையின் வெளிப்பாடாய் ரீச்சர் விம்மினார்.

அந்த வார்த்தைகளின் வலிமை என்னையும் பல தி சைகளில் இருந்து நெருக்கி அச்சுறுத்தி எனக்கும் எதனையோ உணர்த்துவது போலத் தெரிந்தது. என்னையே நான் ஆராய்ந்தேன்.

ஆனால் குமாரசாமி மாஸ்ரரின் செய்கையை ஆதரிக்கவோ! சரஸ்வதி ரீச்சரின் உண்மைகளுக்கு ஒத்தூதவோ என்னிடம் வார்த்தைகள் இருக்கவில் லை. ரீச்சர் சொன்னவைகளுக்கு எல்லாம் தலையசைத்தேன். ஓம், ஓம் என அனைத்தையும் ஒப்புக் கொண்டதாகக் காட்டிக் கொண்டேன். எதனையும் மறுத்துரைக்க இயலாமல் நீதிக்கு மயங்கும் குற்றவாளியாகி மௌனமானேன். ரீச்சரிடம் நான் என்னைக் காட்டிக் கொள்ளவில்லை.

எனது மௌனம் சரஸ்வதி ரீச்சரை அதற்கு மேலும் தனது நியாயத்தைச் சொல்லி அரற்றும் வகைக்கு அனுமதிக்கவில்லை என்பது தெரிந்தது. "இருங்கோ சேர் ரீ போட்டுக் கொண்டு வாறன்" என்று சொல்லிக் கொண்டே சரஸ்வதி ரீச்சர் எழுந்து குசினியை நோக்கி நடந்தார். எனது சிந்தனைகள் சிதறின. குமாரசாமி மாஸ்ரரைப் பற்றிச் சொல்லப்பட்டவை யாவுமே என்னையும் சுட்டன. மனம் தத்தளித்தது.

அறையிலே காணும் காட்சிகள் எவையும் மனதில் பதிவேறவில்லை. பார்வை இங்கேயும் மனக் காட்சிகள் எங்கோ ஒரு வெளியிலேயும் சுழன்றன. ஒன்றுமே புரியாதவாறு புகை மூடிய கனவுகள். தேநீர்க் கோப்பையுடன் திரும்பிய சரஸ்வதி ரீச்சர். "எப்பிடி சேர் ரீச்சர், பிள்ளைகளெல்லாம் சுகமாக இருக்கிறார்களா?" என்ற கேள்வியையும் தன்னோடு கொண்டு வந்து வைத்தார். அவை எனது இதயத்தில் அறைந்தன.

"ஓம்! ஓம்! அவர்கள் எல்லோருமே நல்ல சுகமாக இருக்கிறார்கள்." எனது வாய் வார்த்தைகளால் பதில் சொன்னது. எண்ணத்தில் விழுந்த கிறுக்கல்களின் வேதனையோ என் உடம்பையே சுட்டது.


இந்த மானிடம் இழந்த ஆண்மை, அந்தப் பொறுப்பான குடும்பப் பெண்மையின் முன்னே தலை குனிந்தது. நான் அதனை வெளிக் காட்டவில் லை. தேநீரைக் குடித்த வேளையுடன் அங்கிருந்து புறப்பட அவசரப்பட்டது மனம். சுரஸ்வதி ரீச்சரிடம் சொல்லிக் கொண்டுதான் புறப்பட்டேன்.

எனது உள்ளத்தை எரிக்கின்ற அந்த எண்ணங் களுக்குள் அவள் வந்து நின்று கரகம் ஆடினாள். நான் எனது மனைவியையும் பிள்ளைகளையும் பிரிந்திருக்கக் காரணமான அவளின் குறித்த பார்வையில் இருந்தவை என்ன?

என் உடல் ஆசைகளும் சுயநலத்திற்குள்ளே என்னை அமிழ்த்திக் களித்த அந்த வேளைகளும் எவ்வகையில் எனக்குச் சொர்க்கமாயின?

(32 ஆம் பக்கம் பார்க்க)

எவர் கண் பட்டதோ! வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிப் பாலைக் கொட்டைபோல ஆயிரத்து இருநூறு ரூபா கொடுத்து வாங்கிய செருப்பு! காணாமற் போய் விட்டது. என்னை மறந்து வாய் விட்டழுதேன். தெருவீதியில் எவராவது வந்து விட்டால் வாய் விட்டழுவதை நிறுத்தி விட்டு மனத்துக்குள் அழுதேன்.



# ராசி இல்லாத ராசா

மிருசுவில் தமிழ்தாசன்

நான் சொன்னேன் பார்த்தீர்களா! எனக்கு ஏதாவது நல்லது நடந்தால் அது இந்தக் கடவுளுக்குப் பிடிக்காது. உடனேயே அவன் ஏதாவது கெட்டதையும் எனக்குக் கொடுத்து விடுவான். இப்போது நான் பதுக்கிப் பாதுகாத்து பொத்தி வைத்திருந்த செருப்பை போட்ட முதல் நாளிலேயே தொலைக்க வேண்டியதாகிவிட்டது. என்ன நடந்திருக்கும் என்று எனக்குப் புரிபடவில்லை. கால் விறைத்து உணர்ச்சியற்றிருந்த வேளையில் எங்கேயோ வழியில் தான் விழுந்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டேன். கடவுளே! வாங்கி ஆசைக்கொருநாள்க் கூடப் போடவில்லை! எவர் கண் பட்டதோ! வாயைக் கட்டி வயிற்றைக் கட்டிப் பாலைக் கொட்டைபோல ஆயிரத்து இருநூறு ரூபா கொடுத்து வாங்கிய செருப்பு! காணாமற் போய்விட்டது. என்னை மறந்து வாய் விட்டழுதேன். தெருவீதியில் எவராவது வந்து விட்டால் வாய் விட்டழுவதை நிறுத்தி விட்டு மனத்துக்குள் அழுதேன். இனி அழுதென்ன! தொழுதென்ன! செருப்பு என்னை விட்டுப்போனது போனது தான். நல்ல நாள் பார்த்துச் செருப்பணிந்தும் பயனில்லாமல் போய்விட்டதே. இனியும் நட்டநடு வீதியில் நின்று எவ்வளவு நேரம் தான் அழுவது! எப்படியும் நான் வந்த வழியில்தான் செருப்பு விழுந்திருக்க வேண்டும். அது மீண்டும் எனது கையில் கிடைக்குமென்ற நம்பிக்கையும் என்னை விட்டுப் போகவில்லை. இன்று துருத்தி ஆட்டம் வேலைக்கு இனிப் போக முடியாது. தொலைந்துபோன செருப்பைத்தேடி எடுத்தபின்தான் இனி மறுவேலை. வந்தபாதையை நோக்கித் திரும்பவும் நடப்பதற்கு ஆயத்தமானேன். என்னுடைய இந்தத் துன்பத்தைக் கூறி எவரிடம் நோவேன்! எவர்க்கெடுத்துரைப்பேன்!

நடந்து.... நடந்து கிட்டத்தட்ட சைக்கிளில் ஏறிய இடம் வரைக்கும் போன பின்புதான் அந்தச் சந்திக் கரையில் எனது ஒற்றைச் செருப்பு அனாதரவாகக் கிடந்தது. அப்பாடா பிள்ளையார் என்னைக் கைவிடவில்லை. பாடுபட்டுத் தேடிய பணமல்லவா! அது என்னை விட்டு ஒருபோதும் போகாது. ஓடோடிச் சென்று அதைத் தூக்கியணைத்து ஆசை தீர முத்தம் கொடுத்தேன். திருவிழாவில் தொலைந்து போன குழந்தை மீண்டும் கையில் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியே எனக்கு. என்னையறியாது இரண்டு சொட்டுக் கண்ணீரும் செருப்பின் மீது விழுந்து என் கையிலும் தெறித்தது. சரி! எல்லாம் சந்தோசம். இனி வேலைத்தலத்துக்குப் பக்கத்தில் வைத்துவிட்டு வந்த இடது கால்ச் செருப்பையும் எடுத்து இரண்டையும் ஒன்று சேர்க்க வேண்டும். அதை வேண்டுமானால் நாளைக்கு வேலைக்குப்போகும் போதும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அது வரைக்கும் பொறுமையில்லையே! அது மட்டுமல்ல அந்தப் புதிய செருப்பை மழையிலும் வெயிலிலும் அநாதரவாக விட்டு விட்டு இரவு என்னால் உறங்கவே முடியாது. இரண்டு செருப்புக்களையும் ஒன்றாக்கி வைத்து வீட்டில் அழகு பார்க்க வேண்டும். அத்துடன் அதனையும் எடுத்து வந்தால்தானே நாளைக்குச் செருப்பணிந்து வேலைக்குப் போகலாம். என்னுடைய செருப்பினழகை இன்று காணாதவர்களுக்கு நாளையாவது காட்டிப் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். இனியும் யோசித்து என்ன பயன்! மீண்டும் மூன்று கிலோ மீற்றர் நடைப் பயணத்துக்குத் தயாராகிக் கொண்டிருந்தேன். கையில் ஒற்றைச் செருப்பு. மதுரையை நோக்கி ஒற்றைச் சிலம்புடன் போன கோவலனுடைய கதையின் ஞாபகம் என் மனத்தில் வந்து நின்றது. அந்த ஒற்றைச் சிலம்பினால் கண்ணகிக்கு நடந்த கதியை எண்ணிப் பார்த்த எனக்கு என்னுடைய ஒற்றைச் செருப்பும் ஒருவித பயத்தைக் கொடுத்தது. வேண்டாம் வீண்வம்பு. செருப்பை எனது சேர்ட்டை உயர்த்தி சாறத்துக்குள் சொருகி வைத்துவிட்டேன். இப்போது சரி. எவரும் கண்டுகொள்ளமாட்டார்கள். எல்லாம் திருப்தி. பாதயாத்திரை வெற்றிகரமாகத் தொடர்ந்து கொண்டிருந்தது. இதோ மாமரத் தடிக்கு வந்து விட்டேன். இங்கே தான் எனது இடது கால்ச் செருப்பை வைத்து விட்டுப் போயிருந்தேன். இப்போது அதை எடுத்துக் கொண்டால் பாழாய்ப்போன இந்தச் செருப்புப் பிரச்சினைக்கு ஒரு முடிவு வந்துவிடும்.

இதென்னடா இது! இங்கேதான் வைத்தேனே! காணவில்லையே! அதற்குள் எங்கே போயிருக்கும்? ஒன்றுமே புரியவில்லை. ஒன்று கிடைக்க மற்றது தொலைந்து கொண்டே போகின்றதே. ஒற்றைச் செருப்பை எவரும் எடுக்க மாட்டார்களே. சரியாகத் தேடிப் பார்த்தேன்.

(32 ஆம் பக்கம் பார்க்க)



புதிய நகைச்சுவைத் தொடர் 4

## கட்டுக்கடங்காமல் போகும்....

தொடர்ச்சி

எனக்கும் என்னுடைய தந்தையின் தலைமுறைக்கும் உள்ள முக்கிய வித்தியாசம், நாங்கள் எங்கும் ஓரிடத்தில் நீண்ட காலத்துக்கு நிலையாகத் தங்குவதே இல்லை. ஆசிரியராக இருப்பதால் இந்த வேலைக்கு அதிகப் போட்டி இல்லை என்ற வகையில் நான் அதிர்ஷ்டக்காரன். என்னுடன் படித்தவர்கள் எப்போதும் நாடுவிட்டு நாடு போய்க் கொண்டே இருக்கிறார்கள். 2 வாரங்கள் கோபன்ஹேகன் நகரில் இருந்தால் 2 வாரங்கள் நியூயோர்க்கில் ஏதோ பயிற்சிக்காகப் போகிறார்கள். எங்கு வேண்டுமானாலும் வசிக்க வேண்டும், மிகவும் குறுகிய அவகாசத்தில் பெட்டி, படுக்கைகளைத் தயார் செய்துகொண்டு புறப்பட்டு விட வேண்டும் என்ற பயிற்சி எங்களுக்கு அளிக்கப். பட்டிருக்கிறது. அதனால்தான் நாங்கள் குழந்தைகள் பெறுவதைத் தள்ளிப்போடுகிறோம்" - என்கிறார் கிளாஷ். ஜில் மக்காய் (30), தனியாக வசிப்பதற்காகப் பல தியாகங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. ஜில் மக் காய்க்கு ஒரேயொரு படுக்கை அறை உள்ள தொடர்மாடிக் குடியிருப்பு அவருடைய அப்பாவால் கிடைத்தது. "இந்த வீடு மட்டும் இல்லாமல் என்னால் முனைவர் பட்ட ஆய்வை முடித் திருக்கவே முடியாது. வாடகை கொடுக்க வேண்டியிருந்தால் செலவைச் சமாளிக்க முடியாமல் மீண்டும் என் பெற்றோரிடமே போயிருப்பேன். இப்போதும்கூட இதர செலவுகளைச் சமாளிப்பது கடினமாகத்தான் இருக்கிறது. ஒப்பந்த ஊதியத்தில் வேலை செய்கிறேன். ஊதியம் ஆண்டுதோறும் உயராது. செலவுக்குப் பணம் வேண்டும் என்பதற்காக இரவில் தனிப்பாட வகுப்புகளை நடத்துகிறேன். இதனால் பொழுது போக்குகளுக்குச் செல்வதற்கு நேரமே கிடைப்பதில்லை. இதனால் படிப்பு, வேலை, ஆசிரியர் பணி, வீட்டில் வேலை என்று தொடர்ச்சியாக உழைக்க வேண்டியிருக்கிறது. அதற்குப் பிறகு நண்பர்களுடன் வெளியே செல்ல நேரம் கிடைத்தாலும் உடலில் தெம்பு இல்லாததால் படுத்துத் தூங்கிவிடுகிறேன்." வேகவேகமாக மேற்கத்தையக் கலாசாரத்தை அப்படியே பற்றிப் பிடித்திழுத்துத் தம்மீது போர்த்திக் கொள்ளும் எங்கள் இளைஞர்களுக்கும் இது ஒரு பாடமாக இருக்கட்டும்.

மூலம் 'த கார்டியன்',



சினிமா

# கோடை மழை

## வெயிலுக்கு இதம்

பாரம்பரியமான திருட்டுத் தொழில் மிச்சமிருக்கும் கிராமம் ஒன்றின் முகத்தைக் குறைவான ஒப்பனையுடன் நமக்குக் காட்ட முயற்சிக்கிறார் அறிமுக இயக்குநர் கதிரவன்.

பல தலைமுறைகளைப் பின் தொடர்ந்த திருட்டுத் தொழிலில் ஒரு சிலர் மட்டும் ஆர்வம் காட்டிவரும் கிராமம் அது. அங்கே நேர்மையாகவும் மதிப்பாகவும் வாழ்கின்றன பல குடும்பங்கள். அந்த ஊரின் காவல் நிலையத்தில் ஆய்வாளராகப் பணியாற்றுகிறார் உள்ளூர் வாசியான களஞ்சியம். அவரது தங்கையான ஸ்ரீப்ரியங்காவைக் கண்டதும் காதலிக்கிறார் இராணுவ வீரரான கண்ணன். விடுமுறையில் ஊருக்கு வந்தால் நண்பன் பொடுங்குதான் அவரது உலகம். பொடுங்குவோ கண்ணனுக்குத் தெரியாமல் திருட்டுத் தொழிலைச் செய்து வருகிறான்: ஒரு கட்டத்தில் பொடுங்குவின் முகத்திரை விலக, அவனை வெறுத்து ஒதுக்கி விடுகிறார் கண்ணன். கண்ணனின் காதலும் நட்பும் என்ன ஆகின்றன என்பது மீதிக் கதை.இப்படியொரு கிராமம் இன்னும் இருக்கிறதா என்ற கேள்வி எழுந்தாலும், அந்தக் கிராமத்தின் அன்றாட வாழ்வையும் அங்கே வாழும் மனிதர்களையும் பிரதிபலிக்கும் வகையில் பாத்திரங்களை வார்த்திருக்கிறார் இயக்குநர் கதிரவன். காட்சிகளில் தமிழகத்தின் தென்மாவட்ட கிராமிய வாழ்வின் பழக்கவழக்கங்கள், சொலவடைகள் போன்றவற்றைச் சரியான இடங்களில் பொருத்தி விடுகிறார்.

இயக்குநரே ஒளிப்பதிவாளராகவும் இருப்பதால் கதையினூடே கமரா மிக நுட்பமாகப் பயணிக்கிறது. காட்சிகளில் விரியும் கிராமத்தின் வறட்சியும், அந்த வறட்சிக்குள் கவரும் கள்ளிக்காட்டின் பசுமையும் என கமராவும் யதார்த்தமாகக் கதை சொல்கிறது. ஒரே நேர்கோட்டில் சீராக நிகழும் அழுத்தமான சம்பவங்களுடன் திரைக்கதை பயணித்தாலும் அப்பட்டமான இடைச் செருகலாகத் துருத்திக்கொண்டு தனியாகத் தெரியும் நகைச்சுவை அதன் வேகத்துக்குப் பெரும் தடை. கதை வேகமாக நகர வேண்டிய இறுதிக் கட்டத்தில் வரும் குத்துப் பாடலும் முட்டுக் கட்டை. இருப்பினும் படத்தின் உச்சக்கட்டம் நிமிர்ந்து அமர வைத்து விடுகிறது. நாயகனாக நடித்திருக்கும் கண்ணன், தனது கதாபாத்திரத்தில் இயல்பாகப் பொருந்திவிடுகிறார். யதார்த்தத்தை மீறாத சண்டைக் காட்சிகளில் அவரது திறமை பளிச்சிடுகிறது. அண்ணனின் கலப்படமற்ற பாசம், காதலனின் பிடிவாதமான அன்பு இரண்டுக்கும் இடையில் அல்லாடும் கிராமத்துப் பெண்ணாகப் பிரியங்கா பளிச்சிடுகிறார். முரட்டுத்தனமும் முன்கோபமும் கொண்ட காவல் ஆய்வாளராக இயக்குநர் களஞ்சியமும், நண்பனுக்குத் தெரியாமலேயே தனது திருட்டுத் தொழிலுக்கு அவனைப் பயன்படுத்திவிட்டு நட்பை இழந்து நிற்கும் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் கலை சேகரும் தரமான நடிப்பைத் தந்திருக்கிறார்கள். ஒளிப்பதிவுக்கு அடுத்த நிலையில் படத்தைக் காப்பாற்றுவது சாம்பசிவத்தின் இசை. மண் வாசனையை மெட்டுக்களில் ஏற்றி, பாடல் வரிகளைச் சிதைக்காத வண்ணம் வாத்தியங்களைப் பயன்படுத்திக் கவர்ந்திருக்கிறார் இந்த அறிமுக இசையமைப்பாளர். யதார்த்தமான இந்தக் கதையில் பொழுதுபோக்குக்காகச் சேர்க்கப்பட்ட அம்சங்கள் சுவையானவையாக இல்லை என்பதுதான் பிரச்சினை. இதில் கூடுதல் கவனம் செலுத்தியிருந்தால் கொண்டாடப்படவேண்டிய படமாக இருந்திருக்கும்.



# புகழ்

## மங்கலான வெளிச்சம்

ஊரின் பொது இடமாக இருந்துவரும் விளையாட்டு மைதானத்தை ஆக்கிரமிக்க முனையும் அதிகார வர்க்கத்துடன் துணிச்சலாக மோதும் ஒரு சாமானிய இளைஞனின் கதைதான் புகழ். உண்மைச் சம்பவத்திலிருந்து உருவான இந்தக் கதையை அரசியல் விறு விறுப்புத் திரைப்படமாகத் தர முயன்றிருக்கிறார் இயக்குநர் மணிமாறன்.

தமிழகத்தின் தொலைதூர நகரங்களில் ஒன்றான வாலாஜாபாத்தில் பூ வியாபாரம் செய்யும் எளிய குடும்பம் கருணாசுடையது. அவரது தம்பியான புகழ் (ஜெய்) அண்ணனுக்கு வியாபாரத்தில் உதவியாக இருந்தாலும், தனது பகுதி மக்களுடன் நெருக்கமாக இருப்பவன். மக்களின் பிரச்சினைக்காகப் போராடுபவன்.

ஊருக்கென்று பரந்து விரிந்த ஒரே பொது இடமாக இருக்கும் விளையாட்டு மைதானத்தில் நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடுவது புகழின் பொழுது போக்கு. அந்த விளையாட்டு மைதானத்தை ஆக்கிரமித்து அதைத்தனக்கு உடைமையாக்க நினைக்கிறார் கல்வி அமைச்சர். இதற்காகத் தனது கட்சியின் உள்ளூர் பிரமுகர் மாரிமுத்துவைப் பயன்படுத்திக் கொள் கிறார். இளைஞர் படைக்கும் அரசியல் சக்திகளுக்கும் இடையே நடக்கும் மோதலில் வெல்வது யார்? ஊருக்கும் விளையாட்டு மைதானத்துக்குமான உறவையும் அது பாதுகாப்பில்லாமல் இருப்பதையும் ஒரே காட்சியில் விவரித்து விட்டு பிரச்சினைக்குள் நுழைந்து விடுகிறது திரைக்கதை. அதன் பிறகு உள்ளூர் அரசியலை நுணுக்கமாக விவரித்துச் செல்வதன் வழியே அது எத்தனை கறாரான தொழிலாக வளர்ந்து நிற்கிறது என்பதை யதார்த்தமாகப் பதிய வைக்கிறார் இயக்குநர் மணிமாறன். புகழை மீறி மைதானத்தை ஆக்கிரமிக்க முடியாது என்ற நிலவரம் தெரிந்ததும், புகழின் நெருங்கிய நண்பனையே அரசியல் ஆயுதமாக மாற்றி, புகழை பலமிழக்கச் செய்வது வரையிலான படத்தின் முதல்பாதி விறுவிறுப்பாக நகர்ந்து செல்கிறது.

இரண்டாவது பாதியில் இன்னும் விறுவிறுப்பாக நகர்ந்திருக்க வேண்டிய திரைக்கதை எதிர்பார்க்கும் பாதையிலேயே பயணிப்பதுடன், ஆங்காங்கே தேங்கி நின்று விடுகிறது. அரசியல்வாதிக்கும் புகழுக்கும் இடையேயான மோதல் முற்றுவதைச் சொல்லப் பல காட்சிகளை வீணடித்திருப்பது இதற்கு முக்கியமான காரணம். கதைச் சுருக்கத்தில் ஒரு வரி சேர்க்குமளவுக்குக்கூடக் காதல் அத்தியாயம் படத்தோடு ஒட்டவில்லை, மக்கள் போராட்டமாக உருப்பெறும் ஒரு பிரச்சினை, நாயகனின் தனிப் பல பராக்கிரமத்தில் முடிவது ஏமாற்றமளிக்கிறது.

புகழ், புகழின் அரசியல் நண்பன், அண்ணன் கருணாஸ், நகர்மன்றத் தலைவர் மாரிமுத்து, கம்யூனிஸ்ட் தோழர் உள்ளிட்ட கதாபாத்திரங்களை நம்பகத்தன்மையுடன் வார்த்திருப்பது படத்துடன் பார்வையாளர்களை பிரமிக்க வைக்கிறது. உள்ளாட்சி அமைப்பில் நடைமுறை அரசியல் எவ் வாறு உள்ளது என்பதையும் அதில் சாதியின் இடம் என்ன என்பதையும் அழுத்தமாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார். அரசியலில் சிறிய மட்டத்தில் இருக்கும் தலைவர்கள் மேலே வருவதற்காகப் படும் துன்பங்களையும் யதார்த்தமாகக் காட்சிப்படுத்துகிறார் இயக்குநர். பிழைக்கத் தெரியாதவர் என்று இடித்துரைக்கும் மனைவி, நீயெல்லாம் சரிப்பட்டு வர மாட்டாய் என்று திட்டும் அமைச்சர் ஆகியோருக்கிடையே மாரிமுத்து படும் துன்பம் நன்கு உணர்த்தப்படுகிறது.

ஜெய் தனது கதாபாத்திரத்தில் பொருந்தி, தேவைக்கேற்ற நடிப்பை வழங்கியிருக்கிறார். கோபம் கொண்ட இளைஞனாக வீரியத்துடன் வெளிப்படும் அவர், காதலைச் சொல்லக் கூச்சப்படும் இடத்திலும் பாராட்ட வைக்கிறார். பொது லட்சியத்துக்காக இளைஞர்கள் அரசியல் சக்திகளை எதிர்த்துப் போராடுவதை மையமாகக் கொண்ட இந்தப் படம், அதை ஓரளவு நம்பகத்தன்மையுடன் சித்திரிக்கிறது. எதிர்பார்க்கக்கூடிய காட்சிகளும் மெதுவான நகர்வும் படத்தின் தாக்கத்தைக் குறைக்கின்றன.



# ஒன்றுபட வேண்டிய சிறுபான்மை இனங்கள்

சந்திரசேகர ஆசாத்

அண்மையில் அம்பாறை பாலமுனை பொது மைதானத்தில் இடம்பெற்ற சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 19ஆவது தேசிய மாநாட்டில் தலைமையுரையாற்றிய அதன் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அனுபவமும், ஆற்றலும் வாய்ந்த ஒரு தலைவர் எனவும் அவர் சகல சிறுபான்மை இனங்களையும் ஒன்று திரட்டி ஒரு பலமான சக்தியாக எழுச்சி பெற்று எமது உரிமைகளையும் வென்றெடுக்கும் வகையில் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

முஸ்லிம் தலைமைகளாலும், மலையகத் தலைமைகளாலும், மதிக்கப்படும் ஒரு தலைவர் என்ற வகையில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இப்படியான ஒரு கோரிக்கையை முன்வைப்பது காலத்தின் கட்டாயத் தேவை மட்டுமன்றி ஒரு நியாயமான முன்னெடுப்புமாகும்.

ஆனால், இந்த மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டபோதிலும் இந்தக் கோரிக்கை தொடர்பாகக் கருத்து எதையும் அவர்கள் வெளியிடவில்லை. அது மட்டுமன்றி இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசின் அடுத்தகட்ட நகர்வு என்ன என்பது தொடர்பாகவும் எதுவும் கூறவில்லை. அது மட்டுமன்றி அந்த மாநாட்டில் சம்பந்தன் ஒன்றுபட்ட இலங்கைக்குள் அனைத்து மக்களுக்கும் சமவாய்ப்பு வழங்கும்படியான அதிகாரப் பகிர்வு பற்றியும், முஸ்லிம்களுக்கான தனி அதிகார அலகு பற்றியும் வெளியிட்ட கருத்துக்களுக்கும் அவர்கள் இருவருமே எந்த விதமான பதிலையும் வெளியிடவில்லை. இந்த மௌனம்கூட ரவூப் ஹக்கீமின் வேண்டுகையின் அவசியத்தை வெளிப்படுத்துகின்றது. இவற்றை மேலோட்டமாகப் பார்க்கும்போது ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றவைபோல் தோன்றினாலும்கூட இந்த மௌனம் சிறுபான்மை மக்களுக்குச் சாதகமான முறையில் உடைய வேண்டுமானால் ஹக்கீமின் கோரிக்கை செயல்வடிவம் பெறவேண்டும்.

அண்மையில் நாடாளுமன்றத்தில் புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றிய ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டபோது மூன்று முக்கிய விடயங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் மாற்றம், தேர்தல் முறையில் மாற்றம், தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்பனவே இந்த மூன்று முக்கிய விடயங்களுமாகும். ஆனால், மகிந்த அணியினர் நாடாளுமன்றத்திலும் வெளியேயும் கொடுத்த அழுத்தங்கள் காரணமாக தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்ற விடயம் கைவிடப்பட்டது.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியானதும், நல்லாட்சி அரசு பதவிக்கு வந்ததும் சிறுபான்மை மக்கள் வழங்கிய பேராதரவால்தான் என்பதை எவரும் மறுத்து விட முடியாது. ஆனால் அரசு இனவாதிகளின் அழுத்தங்களுக்கு உட்பட்டு இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான அம்சத்தை அரசமைப்பில் இணைப்பதிலிருந்து பின்வாங்கிவிட்டது.

இதில் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம். இனவாதிகளின் அழுத்தங்களுக்கு எதிரான அழுத்தங்கள் சிறுபான்மையினரால் கொடுக்கப்படவில்லை என்பதும் அப்படி அழுத்தம் கொடுக்கக்கூடிய ஒரு பலமான சக்தி சிறுபான்மையினரிடம் இல்லையென்பதுமாகும்.

இந்த நிலையில் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் கோரிக்கை எவ்வளவு காத்திரமானதும், அவசியமானதும் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். இதன் அவசியத் தேவை தமிழ், முஸ்லிம், மலையக மக்களால் உணரப்பட்ட போதிலும் இந்த விடயத்தில் அரசியல் தலைமைகள் வாய் வார்த்தைகளுக்கு அப்பால் ஓர் அங்குல நகர்வைக்கூட மேற்கொள்ளவில்லை என்பதுதான் ஒரு கசப்பான உண்மையாகும்.

தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் ஒரு பரந்துபட்ட ஐக்கியம் உருவாக்கப்படாவிட்டாலும்கூட ஒவ்வொரு இனமும் தாங்கள் ஒரு சக்தியாக ஒற்றுமைப்பட்டுத் திரண்டிருக்கும் நிலமைகூட உருவாகவில்லை.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இலங்கை சுதந்திரம் பெற்ற காலத்தில் ஒற்றுமையுடன் தமிழ் காங்கிரஸை ஆதரித்தனர். தமிழ் காங்கிரஸிலிருந்து எஸ்.ஜே.வி. செல்வ நாயகம் தலைமையில் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்ட பின்பு தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சிக்குத் தமது பேராதரவை வழங்கினர்.

மக்கள் ஐக்கியமாகச் சிந்தித்துச் செயற்பட்ட போதிலும் இரு கட்சிகளும் எதிரெதிராகவே செயற்பட்டன. ஒன்று சம மதிப்புக் கோரிக்கையை முன்வைத்தால் மற்றது கூட்டாட்சியைக் கொள்கையாகப் பிரகடனம் செய்யும். ஒன்று இந்துப் பல்கலைக்கழகம் கோரினால் மற்றது தமிழ் பல்கலைக்கழகம் கோரும். அதாவது தமிழ் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய நன்மைகளை இரு கட்சிகளும் ஒன்றுடன் ஒன்று முரண் பட்டதன் மூலம் தடுத்து வந்தமை வரலாறு. ஆனால் இந்த இரு கட்சிகளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்குவதில் மட்டும் ஒரே கொள்கையைக் கொண்டிருந்தன. 1965இல் ஐக்கிய தேசியக் கட்சி அரசில் இரு கட்சிகளுமே பங்காளிகளாக விளங்கின.

1976இல் தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற மூன்று அமைப்புக்களும் ஒன்றிணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கின. 1977 தேர்தலில் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்துப் போட்டியிட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி வரலாறு காணாத வெற்றியை ஈட்டியது. தேர்தல் முடிந்ததுமே தொண்டமான் தமிழர் விடுதலைக் கூட்டணியைக் கைவிட்டு மந்திரிப் பதவியைப் பெற்றுக் கொண்டார். தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழீழக் கோரிக்கையைக் கைவிடவே அது இளைஞர்கள் கையில் சென்று ஆயுதப் போராட்ட வடிவத்தை விடுத்தது.

ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்ற காலப்பகுதியில் தமிழ் மக்களின் அரசியல் குரலாகச் சிதறிக் கிடந்த தமிழ்த் தலைமைகளை ஒன்றிணைத்து தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அன்று தொட்டு இன்று வரை தமிழ் மக்கள் ஏகமனதாக தமது ஆதரவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கி வருகின்றன.

எந்தத் தமிழ் மக்களின் பரந்துபட்ட ஐக்கியத்தின் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் படிப்படியாகச் சிதைக்கப்பட்டு வருவதுதான் கவலையளிக்கும் விடயமாகும். முதலில் கஜேந்திரகுமார் குழுவினர் புறமொதுக்கப்பட்ட நிலையில் அவர்கள் தமிழ் மக்கள் தேசிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினர். தற்சமயம் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இலக்கு வைக்கப்பட்ட நிலையில் அவர் தமிழ் மக்கள் பேரவையில் இணைந்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் தலைமையிலுள்ள ஒரு சிலரின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகள் காரணமாகவும் அரசியல் கைதிகள் விவகாரம், காணாமற் போனோர் பிரச்சினை என்பன தொடர்பில் காட்டப்படும் அசமந்தப் போக்குக் காரணமாகவும் மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் பிளவுகள் ஏற்படக்கூடும் என்ற அச்சம் தமிழ் மக்கள் மத்தியில் நிலவி வருகிறது.

இந்த மூன்று தரப்பினருமே இனப்பிரச்சினை தொடர்பாக வெவ்வேறு சுலோகங்களைப் பாவித்தாலும் ஒன்றிணைந்த வடக்கு- கிழக்கில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பகிர்வு என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர். அப்படியானால் ஏன் இந்தப் பிளவுகள்? பதவியாசைகளும், அதிகார வெறியும் தவிர வேறு எதுவும் இருப்பதாகக் கருத முடியவில்லை. இந்தச் சுயநல அரசியல்தான் காலம் காலமாக தமிழ் மக்கள் மத்தியில் ஓர் உறுதியான ஐக்கியத்தைக் கட்டி எழுப்பத் தடையாக இருந்து வந்துள்ளது.

யதார்த்தத்தில் தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் மேலும் மேலும் பிளவுபடுவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. ஐக்கியப்படுவதற்கான வாய்ப்புக்கள் எதையும் காணமுடியவில்லை.

தமிழரசுக் கட்சி ஆரம்பத்தில் தமிழ் பேசும் மக்களின் கட்சியாகவே உருவாக்கப்பட்டது. மன்சூர் மௌலானா, எம்.எம்.ஏ.முஸ்தபா முதலியோர் அதன் நிறுவக உறுப்பினர்களாவர். தலைமையுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக அவர்கள் வெளியேறும் நிலை ஏற்பட்டது. இதில் மூதூர் தொகுதியில் தங்கத்துரையின் வெற்றிக்காக மன்சூர் மௌலானா திட்டமிட்டுத் தோற்கடிக்கப்பட்டதும் ஒரு காரணமாகும்.

இளைஞனாக இருந்த காலத்தில் தீவிர தமிழரசுக் கட்சி ஆதரவாளராயிருந்த எம்.எச்.எம். அஷ்ரப் தலைமையில் முஸ்லிம் காங்கிரஸ் உருவாக்கப்பட்டது. இது இலங்கை வாழ் முஸ்லிம்களை ஒரே குடையில் கொண்டு வந்து ஐக்கியப்படுத்துவதில் பெரும் வெற்றி பெற்றது. ஆனால் அவரின் இறப்பின் பின் அது சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என மூன்று அணிகளாக உடைந்தது. அவர்களும் முஸ்லிம் மக்கள் மத்தியில் பிளவுபட்டுக் கிடந்தாலும் அது கொள்கை ரீதியான பிளவு என்று சொல்லிவிட முடியாது. ஏனெனில் ரவூப் ஹக்கீமோ, ரிஷாத் பதியுதீனோ, ஹிஸ்புல்லாவோ எந்த அரசு வந்தாலும் அதில் ஒன்றாக அமைச்சர்களாகப் பதவி வகிப்பர். அங்கும்கூட முஸ்லிம் மக்களின் நலன்களை விடப் பதவி மோகமும், அதிகார வெறியுமே முன்நிற்கின்றன என்றே கருத வேண்டியுள்ளது.

அதேவேளையில் ஜனநாயகத் தேசிய முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், மலையக மக்கள் முன்னணி என்பன ஒன்றிணைந்து தமிழ்த் தேசிய முற்போக்கு முன்னணியை உருவாக்கியிருப்பது ஓர் ஆரோக்கியமான முன்னெடுப்பாகும். எனினும் இதுவும்கூட ஐக்கியப் பாதையில் இன்னும் வெகு தூரம் முன்செல்ல வேண்டியுள்ளது. இப்படியாக மூன்று சக்திகளிடையே உள்ள அரசியல் தலைமைகளும் தனிப்பட்ட வகையில் கூடத் தமது இனத்துக்குள்ளேயே ஐக்கியத்தைக் கட்டி வளர்க்கவில்லை. அப்படியான நிலையில் மூன்று இனங்களும சிறு பான்மையினர் என்ற வகையில் ஒன்றிணைந்து ஒரே சக்தியாகத் திரண்டெழ முடியுமா என்ற கேள்வி எழுகின்றது.

முடியும்! நிச்சயமாக முடியும்! சுயநல, பதவி மோக, அதிகார வெறி அரசியல் களையப்பட்டு வெளிநாட்டு உளவு நிறுவனங்களுக்கு விலை போகாமல் மக்கள் நல அரசியலைக் கையில் எடுத்தால் நிச்சயமாக உறுதியான நேர்மையான ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

தமிழ், முஸ்லிம், மலையக அரசியல் தலைமைகள் ஒவ்வொரு இனங்களின் தனித்துவங்களுக்கும் பங்கம் ஏற்படாத வகையில் ஒரு பொதுக் கொள்கையின் அடிப்படையில் ஓர் ஐக்கியத்தை உருவாக்கி பொது முன்னணியாக பொது வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படும் ஒரு நிலை உருவாகும்போது நிச்சயமாக இலங்கையில் சிறுபான்மை இனங்கள் நியாயமான உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

சிறுபான்மை இனங்களுக்கு இடையிலான ஐக்கியம் என்பது வெற்றுக் கோசமாக இருக்கும் வரை விமோசனத்துக்கான கதவுகள் திறக்கப்படுவது கடினமான காரியமாகவே அமையும்.



# இந்த வாரம் 27.03.2016 முதல் 02.04.2016 வரை

# உங்களுக்கு எப்படி?

## மேடம்

குரு, சுக்கிரன், கேது நற்பலன் தருவர். மனதில் பலநாள் இருந்த கவலை நீங்கும். பணிகள் குறித்த காலத்தில் நிறைவேறும். தம்பி, தங்கை வாழ்வு வளம்பெற உதவுவீர்கள். புத்திரர்கள் உங்கள் வழிகாட்டுதலால் முன்னேற்றப் பாதையில் செயல்படுவர். இஷ்ட தெய்வ அருள்பலம் நல்வாழ்வு தரும். எதிரிகள் விலகிச் செல்வர். கடன்களைச் செலுத்துவீர்கள். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். வாழ்க்கைத் துணைவர் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், பண வரவில் திருப்திகரமான நிலையும் உண்டு. பணியாளர்கள், சலுகை களை எளிதில் பெறுவர்.

## இடபம்

சூரியன், புதன், சந்திரனால் நன்மை உண்டு. செயல்களில் நிதானமும், திட்டமிடுதலும் இருந்தால் வெற்றி உறுதி. சில அதிர்ஷ்டகரமான பலன்கள் கிடைக்கும். உறவினர்கள் நட்புடன் நடந்து கொள்வர். வாகனத்தில் மிதவேகம் பின்பற்ற வேண்டும். புத்திரர்கள் உங்கள் சொல்கேட்டு நடந்து படிப்பு வேலையில் முன்னேறுவர். எதிர்ப்பாளரால் வந்த தொந்தரவு இருக்காது. சேமிப்புக் கூடும். வாழ்க்கைத் துணைவரின் செயல் எதிர்காலத்துக்கு நன்மை தரும். குடும்பத்துக்குத் தேவையான பொருள் வாங்கித் தருவீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து இலாபம் கூடும். அரசு சார்ந்த உதவி பெறலாம்.

## மிதுனம்

பெரும்பான்மை கிரகங்கள் அனுகூலமாக உள்ளன. புதிய திட்டங்களை செயல்படுத்துவீர்கள். உங்கள் நலம் விரும்புபவர்களின் உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். சிலர் வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்கள், உங்களின் பரிபூரண அன்பைபெறும் வகையில் செயல்படுவர். வழக்கு, விவகாரத்தில் சுமுக தீர்வு கிடைக்கும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித்தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிக்கு தேவையான அரசு உதவி பெறலாம். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர்.

## கடகம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். வாழ்வில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். தொடர்பில்லாத பணிகளைத் தவிர்ப்பீர்கள். தம்பி, தங்கைகளின் கருத்து, மனதுக்குச் சங்கடம் தரும். வாகனப் பராமரிப்புச் செலவு குறையும். புத்திரர்கள் புதிய லட்சியங்களை மனதில் நிறுத்தி செயல்படுவர். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். மனைவி உங்கள் மீதான நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொள்ள நல்ல சூழல் உருவாகும். தவறா மல் பயன்படுத்தினால் லாபம் பெருகும். பணி யா ளர்கள் பாதுகாப்பில் உரிய அக்கறை கொள்ளவும். பெண்கள் குடும்பநலன் பேணி பாதுகாத்திடுவர்.

## சிங்கம்

புதன், சந்திரனால் ஓரளவு நன்மை கிடைக்கும். திட்டமிட்ட முயற்சி நிறைவேற தாமதமாகலாம். சிலர் மீது அதிருப்தி இருந்தாலும் அதை வெளிக்காட்ட வேண்டாம். பயணங்களை பயன் அறிந்து மேற்கொள்ளவும். தம்பி, தங்கை ஓரளவு உதவுவர். சிலர் மனதில், வீடு, பணியிடம் மாற்றுகிற எண்ணம் ஏற்படலாம். புத்திரர்களின் அறிவாற்றல் வளர்ந்து, மனதுக்கு மகிழ்ச்சி தரும். எதிரிகள் இடைஞ்சல் செய்தாலும் சமாளித்து விடுவீர்கள். மனைவியின் உடல்நலத்துக்குச் சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டியால் இலாபம் குறையும். சேமித்து வைத்த பணம் செலவாகும். பணியாளர்கள் அதிக வேலைப்பளுவைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

## கன்னி

செவ்வாய், சனீஸ்வரர், கேது அதிக நன்மை தருவர். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தாமதமான செயல்களில் முன்னேற்றம் ஏற்படும். பொது இடங்களில் எவரிடமும் அதிகம் பேச வேண்டாம். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர்களின் செயல் திறன் வளர தேவையான ஆலோசனை சொல்வீர்கள். வெகுநாள் இருந்த பிரச்சினையின் தீவிரம் குறையும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். அரசியல்வாதிகள் பதவி பெற, அதிக முயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு நிர்வாகத்திருடன் மோதல் போக்கு வரலாம்.

## துலாம்

பெரும்பான்மை கிரகங்களால் நன்மை உண்டாகும். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும். மனம், செயலில் புத்துணர்வு ஏற்படும். பணிகளை எளிதாக நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் உங்கள் மீதான அன்பு பாசம் கூடும். வாகனம் இயக்கும் போது மெதுவாகச் செல்லவும். புத்திரர்கள், தனது முன்னேற்றத்துக்கான பணியை முழுமனதுடன் மேற்கொள்வர். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். வாழ்க்கைத் துணைவருடன் கருத்து ஒற்றுமை ஏற்படும். தொழிலில் உற்பத்தி, விற்பனை செழித்து இலாபம் கூடும். பணியாளர்களுக்குச் சலுகைகள் தாராளமாகக் கிடைக்கும். பெண்கள், தாய்வீட்டு உதவி கேட்டுப் பெறுவர்.

## விருச்சிகம்

சுக்கிரன், சந்திரன் மட்டுமே அனுகூல பலன் தருவர். பிறர் தரும் வாக்குறுதியை நம்பி செயல்களில் ஈடுபட வேண்டாம். உங்களைப் பற்றித் தெரியாதவர்களிடம் முக்கிய பிரச்சினைகள் பற்றிச் சொல்ல வேண்டாம். குடும்ப உறுப்பினர் தரும் ஆதரவு, மனதுக்கு ஊக்கம் தரும். வாகனம் இயக்கும் போது, மிதவேகத்தில் செல்லவும். புத்திரர்கள், உடல்நிலையில் சிறு பிரச்னை வந்து நீங்கும். எதிரிகளால் வருகிற பிரச்சினைகளை சமயோசிதமாக சரி செய்வீர்கள். மனைவி அல்லது கணவர் சொல்லும் ஆலோசனை, குடும்பத்தின் எதிர்கால நலன் சிறக்க உதவும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு வேலை இழுத்தடிக்கும்.

## தனுசு

புதன், குரு, சுக்கிரன், கேதுவால் நன்மை ஏற்படும். வெகுநாள் திட்டங்களைச் செயல்படுத்த வாய்ப்புத் தேடி வரும். திட்டமிட்ட பணிகளை வேகமாக முடித்து விடுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனப் பயணம் எளிதாக அமையும். புத்திரர்கள் படிப்பு, வேலைத் திறனில் மேம்பட பயிற்சி பெறுவர். பூர்வ புண்ணிய நற்பலன் ஆதாயங்களை பெற்றுத்தரும். விவகாரம் அனுகாத சுமுகவாழ்வு உருவாகும். மனைவி ஒற்றுமையுடன் நடந்து கொள்வார். உறவினர்களின் வருகை வீட்டில் மகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் பொறுப்புடன் பணிபுரிந்து பாராட்டு பெறுவர். பெண்கள் வீட்டு அலங்கார பொருளகள் வாங்குவர்.

மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் பெற, புதிய

## மகரம்

சூரியன், செவ்வாய், சுக்கிரன், சனீஸ்வரர் அளப்பரிய நற்பலன் தருவர். புதியவர்களால் உதவி கிடைக்கும். முக்கியமான பணி சிறப்பாக நிறைவேறும். உறவினர்களின் வருகையால், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். வாகன பராமரிப்புச் செலவு அதிகரிக்கும். புத்திரர்கள், பெற்றோரின் கருத்துக்களை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வர். உடல்நிலை நன்றாக இருக்கும். மனைவி, உங்களிடம் அதிக பாசம் கொள்வார். சுற்றுலா சென்றுவர திட்டமிடுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள், புதிய தொழில்நுட்பங்களைக் கற்று பணியில் முன்னேறுவர்.

## கும்பம்

குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மை உண்டு. உடல்நலத்தில் உரிய கவனம் கொள்வதால், பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றலாம். கடந்த கால நற்செயலுக்கு புகழும், நன்மையும் தேடி வரும். வீடு, வாகனத்தில் மாற்றம் செய்ய இடமுண்டு. புத்திரர்களின் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். பூர்வச்சொத்து பராமரிப்புக்கான செலவு அதிகரிக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். வாழ்க்கைத் துணை உங்கள் செல்வ வளம் பெருக உதவி செய்வார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெருக திட்டங்களை மாற்றுவீர்கள். பணியாளர்களுக்கு வேலைப்பளு வெகுவாக குறையும். மாணவர்கள் நன்றாகப் படித்து பாராட்டு பெறுவர். துர்க்கை வழிபாடு, துன்பம் போக்கும்.

## மீனம்

சுக்கிரன், ராகு வியத்தகு அளவில் நன்மை வழங்குவர். சுயதிறமையை வளர்த்துக் கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் அன்புடன் நடந்து கொள்வர். இஷ்டதெய்வ அருள்பலம் துணை நிற்கும். வாகன பராமரிப்புச் செலவு குறையும். பொது இடங்களில் தேவையின்றி பேசுவதைத் தவிர்க்க வேண்டும். புத்திரர்கள் நல்ல முறையில் முன்னேறி, பெற்றோருக்குப் பெருமை சேர்ப்பர். கடன், நோய் தொந்தரவு குறையும். தொழில், வியாபாரம் செழித்து பணவரவு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கடுமையாக இருக்கும். பெண்கள் பிரார்த்தனை நிறைவேறி இஷ்டதெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் படிப்பு மற்றும் பாதுகாப்பில் கவனம் கொள்ளவும்.



# பெண்களின் கல்வியும் சமுதாய முன்னேற்றமும்

மக்களின் கல்வியறிவு, உலகத்தில் நடக்கும் எந்த மாற்றத்துக்கும் அடித்தளமாகிறது. அது சமயத்துடன் சம்பந்தப்பட்டதாகவிருக்கலாம் அல்லது விஞ்ஞானத்துடன் சம்பந்தப்பட்டதாகவிருக்கலாம், அவைகளின் வளர்ச்சிக்கும் மாற்றங்களுக்கும் ஒரு சமுதாயம் மேற்கொள்ளும் கல்வி அமைப்பு இன்றியமையாதது.

அதிலும் பெண்களின் கல்வி ஒரு காத்திரமான அறிவுத்தளத்தில் சமுதாயம் வளர உதவுகிறது. சமுதாயத்தின் மூலமான ஒரு குடும்பம் நல்ல மாதிரி அமைய அந்தக் குடும்பத்தைக் கொண்டு நடத்தும் பெண்ணின் அறிவு உதவி செய்கிறது.

இன்றைய காலகட்டத்தில் பெண்களின் படிப்பு பல விதத்திலும் வளர்ச்சியடைந்திருக்கிறது. வீட்டில் அடைந்து கிடந்த பெண்கள் விண்வெளிப்பயணம் செய்ய அவர்களின் கல்வி துணை செய்கிறது. குடும்பத்தின் பொருளாதாரம் சீர் சிறப்பாக அமைந்து நிம்மதியான வாழ்க்கை வாழ, பெண்கள் படிப்பதும் வேலைக்குப் போவதும் தவிர்க்க முடியாத அம்சமாக இன்று கருதப்படுகிறது. கடந்த இருநாறு வருடங்களாகத் தொடரப்படும் பெண்கள் கல்வியால் இலங்கை பல விதத்திலும் மற்றைய தென்னாசிய நாடுகளைவிட முன்னேறியிருக்கிறது. உதாரணமாக, குழந்தைகள் ஆரோக்கியமாக வளரப் பெண்களின் படிப்பும் அதனால் அவர்கள் பெறும் பல்விதமான அறிவும் மிகவும் இன்றியமையாதது என்பதற்கு, இலங்கையில் பெண்களின் படிப்பு நிலை உயர, தாய்சேய் நலமும் உயர்ந்திருக்கிறது என்று சுகாதார திணைக்கள அறிக்கைகள் சொல்கின்றன.

'பெண்கள் சமுதாயத்தின் கண்கள்' என்று முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தக்கண்கள் தங்களுக்கும், தங்கள் சமுதாய முன்னேற்றத்துக்கும் வளம் கொடுக்கும் நல்ல பல பாதைகளை அவர்கள் பெறும் கல்வி மூலம் கண்டுதெரிந்து கொள்கிறார்கள். செல்வத்தில் பெரும் செல்வம் கல்விச் செல்வம் என்பதை உணர்ந்து கொண்ட எங்கள் மூதாதையோர் தங்களால் முடிந்தவரை அந்தச் செல்வத்தைப் பெண்களுக்கும் கொடுக்க நினைத்துப் பல கல்வி நிலையங்களை பெண்களுக்காக அமைத்தார்கள்.

பெண்களுக்கான கலை, கலாசார, சமய அறிவு பற்றிய கல்வியின் முக்கியத்துவத்தை, மூவாயிரம் வருடங்களுக்கு முன்னரே உரோமா ஆதிக்க வர்க்கம் உணர்ந்திருந்தது. உரோம ஆட்சியில் மேன்மட்ட வர்க்கத்துப் பெண்களுக்கு பல தரப்பட்ட கல்விகள் கொடுக்கப்பட்டன. ஆண்களுக்கான கல்வி குருகுல முறையில் இருந்த போது பெண்களுக்காகத் தனியாகக் கல்வி நிலையங்கள் இந்தியாவில் இருந்திருக்கின்றன.

ஒரு சமுதாயம் எப்படி வளர்கிறது என்பதை அவதானிக்க அந்நாட்டில் பெண்களின் கல்வியும் அந்தக்கல்வி மூலம் பெண்கள் சமுதாயத்துக்குச் செய்யும் பல தரப்பட்ட பணிகளையும் வைத்து அளவிடலாம்.

கடந்த இருநாறு வருடங்களாகப் பெண்களின் உயர்கல்வியின் நிலை படிப்படியாக உயர்ந்து, இன்று பல நாடுகளில் ஆண்களைவிடப் பெண்கள் நல்ல விதத்தில் சித்தியடைவதும் பரவிக்கொண்டு வருகிறது.

1981(அல்லது82) ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி அமைப்பால் நடத்தப்பட்ட ஆய்வின்படி, தென்னாசியாவில் உயர்கல்வியை நாடும் பெண்களின் தொகையில் இலங்கை முன்னிடம் வகித்தது. அதிலும் வடபகுதிப் பெண்கள் பலர் இலங்கையின் தென்பகுதிப் பெண்களைவிட (விகிதாசாரப்படி), கூடிய கல்வித்தரத்தில் இருந்தார்கள் என இவ்வறிக்கை கூறுகிறது. இலங்கை சுதந்திரம் அடைந்தபின் கன்னங்கராவால் கொண்டு வரப்பட்ட கல்வித்திட்டத்தால்,1931இல் இலங்கையிலுள்ள அத்தனை மக்களுக்கும் கல்வி கொடுக்கப்படவேண்டும் என்ற சட்டம் நடைமுறைக்கு வந்தது. கடந்த முப்பது வருடங்களாக நடந்த போஜரின் பல காரணத்தாலும் வேறு பல காரணங்களாலும் இலங்கையிற் சில பகுதிகளில் கல்வி நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. ஆதிகாலம் தொடக்கம்,காலத்துக்காலம் பெண்களின் படிப்பு பல திருப்பு முனைகளைக் கண்டிருக்கிறது. படித்த பெண்கள் அவர்கள் வாழ்ந்த சமுதாயத்தின் சமய வளர்ச்சிக்கும், கலை கலா வளர்ச்சிகளுக்கும் உதவியிருக்கிறார்கள். எங்கள் தமிழ்ச் சமுதாயம் முப்பது வருடப்போரால் துயருற்று வாடியது. எங்களின் கல்வி, கலை கலா வளர்ச்சிகள் மிகவும் பாதிக்கப்பட்டன. இன்று அமைதியான சூழ்நிலையில் மக்கள் தங்கள் வாழ்க்கையைச் சீர்திருத்திக்கொள்ளவும், தங்கள் பிள்ளைகளுக்குத் தங்களால் முடிந்த அளவு உயர் கல்வியைக் கொடுக்கவும் பாடுபடுகிறார்கள். அவற்றில் படிக்கும் மாணவிகள் எதிர் நோக்கும் சவால்கள் பல. பெண் களுக்கு முன்னால் விரிந்து கிடக்கும் பல தடைகளையும் தாண்டித் தன்னையும் தான் வாழ்ந்துகொண்டிருக்கும் சமுதாயத்தையும் மேன்படுத்துபவர்கள் பெண்கள்.

# குடும்பமும் பெண்களும்

இணையவள்

குடும்பம் என்னும் நிறுவனத்தின் நங்கூரமாகப் பெண்ணே கருதப்படுகிறாள். குடும்பத்தைச் சிந்தாமல் சிதறாமல் கட்டிக்காக்கும் பொறுப்பு பெண்ணுக்கு மட்டுமே உரியதாகி விட்டது. இந்த அடிப்படையில் தான் பெண் வளர்க்கப்படுகிறாள்; நெறிப்படுத்தப்படுகிறாள். பெண்களுக்கெனச் சில கட்டுப்பாடுகளை ஆண்கள் விதிக்கின்றனர். இருப்பினும் பெண்கள் குடும்பப் பொறுப்புடன் செயற்படுகின்றனர். பெண்களின் அன்றாடச் செயற்பாடுகளில் ஆண்கள் குறுக்கிடுகின்றனர்.

பெண்களைக் கண்ணும் கருத்துமாகப் பேணிக்காத்து ஒருவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்னும் எண்ணமே சமூகத்தில் பொதுவாகத் திகழ்கிறது. குழந்தைகளை நல்லமுறையில் வளர்க்க வேண்டிய கட்டாயத்தால் இன்று சமுதாயத்தில் பல பெண்கள் கணவனின் கொடுமைகளைத் தாங்கிக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். குடும்பம் என்னும் நிறுவனத்தில் உரிய பங்கைப் பெறாமலே பெண்கள் குடும்பத்துக்குள் இயங்கிக் கட்டுப்பட்டு வாழ்வதற்கே பழகிக் கொள்கின்றனர். குடும்ப நிறுவனத்தில் தனக்கு இரண்டாவது இடமே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்னும் மனநிலை மேலோங்குகிறது.

ஒரு பெண்ணுக்குத் தாய் என்ற உறவு ஏற்பட்டவுடன் அவள் குழந்தைகளுக்கும் தந்தைக்கும் இடையே பாலமாக இருக்க வேண்டியவள் ஆகிறாள். இரு பக்கத்தாரும் உணர்ச்சி வயப்படும்போது இவளே அதிர்வு தாங்கியாகச் செயல்படுகிறாள். குழந்தைகள் தவறு செய்தால் தாய்க்குத்தான் இடிமொழி எல்லாம். எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு இணக்கம் ஏற்படுத்துபவளாக அன்னை விளங்குகிறாள்.



## பாவ மன்னிப்பு (தொடர்ச்சி)

கலாசாரம், கட்டுப்பாடு, கணவன் மனைவி என்ற உறவுகள் அனைத்தையும் உடைத்தெறிந்து அவள் மீது காமம் கொள்ள வைத்த உறவுக்குப் பெயரென்ன? திருமணம் பொய்யானதா? பொய்யாக்கப்பட்டதா? எனது குடும்ப வாழ்க்கையின் இடையே புகுந்த இவளிடத்தில் என் மனைவியிடம் தோன்றாத என்ன புதுமையைக் கண்டு கொண்டேன்? எல்லாம் பொய்யே!

மனம் அழுதது. எனது நான்கு பிள்ளைகளும் வயது வந்தவர்கள் அப்பா அப்பா என்று அன்போடு அழைத்து எனக்கு அருகிலிருந்து சிரித்தவர்கள். அவர்களின் வளர்ச்சி, உயர்ச்சி எல்லாமே என்னோடு கட்டுண்டு கிடக்கும் உண்மைகளாயின. அந்த உண்மையைத் தெளிந்து கொண்டேன். அவற்றை இதுநாள்வரை ஏன் மறந்தேன். உடலின் உத்தமமற்ற சிறுதுளி உணர்வுகளுக்காய் நிரந்தரமான குடும்ப உறவைக் குலைத்துக் கொண்ட எனது செய்கை எனக்கு ஒரு பாடமாகியது. என்னை அது ஏளனம் செய்தது. என் மனைக்கு வெளியே, என்னைச் சுயநலத்தோடு அணைத்துச் சிறுபொழுது களிப்போடு அருகிருந்த அவளின் கைகளுக்குள் இன்று புதிதாக ஒரு பரந்தாமனைப் பார்த்தேன். என்னை உதாசீனம் செய்யும் வகையில் அவளிடத்திலிருந்த இந்தப் பாலுணர்வின் வேகம் புனிதமற்றது. சொந்த மனைக்கு வெளியே என்னிடத்தில் தோன்றிய இந்த ஆசை யும் அர்த்தமற்றதுதான். மனைவி பிள்ளைகள் உறவு. குடும்பம் குதூகலம் தரும் வாழ்க்கை. இவை எல்லாமே எதனால் மறக்கடிக்கப்பட்டது?. குமாரசாமி மாஸ்ரரின் செய்கை மீது எனக்கு ஏற்பட்ட அனுதாபம் எனது அனுபவத்தை அவருக்கு உணர்த்தத் துடித்தது. ஒருத்தி என்னைத் தன்வசமாக்கினாள். பாலுணர்வின் பரிமாற்றம். இந்தப் புது உறவு எனது குடும்பத்தின் மகிழ்ச்சியையே குலைக்கத் துணை போனது. நானோ இன்று பெரும் குற்றவாளியாகி என் குடும்பத்தினர் முன்னே நிற்கிறேன். என்னால் அமைதி கொள்ள முடியவில்லை. எவ்வாறு நான் எனது மனைவி, பிள்ளைகளிடத்தில் எனது தவறுக்காக மன்னிப்பை வேண்டப்போகிறேன்? பிள்ளைகள் என்னை எவ்வாறு வரவேற்கப் போகிறார்கள்? மனம் குழம்பியது. நடை சோர்ந்தது.

எனது வீட்டின் வாசலில் நிற்கிறேன். எனது வீட்டின் கதவுகளை மெல்லத் தட்டுகிறேன். பாவமன் னிப்புக்கான, வேண்டுதல்களோடு!

---

## ராசி... (தொடர்ச்சி)

அந்தச் சுற்று வட்டாரத்திலேயே என்னுடைய செருப்பையோ அது கிடந்த அடையாளத்தையோ காணவில்லை. அது மறைந்து போன மாயமென்ன! எனக்கு ஒன்றுமே புரியவில்லை. பைத்தியம் பிடிக்கும் போன்றதொரு நிலைமை. மற்றவர்களுக்கு இந்தச் செருப்பு விடயம் சாதாரணமாக இருக்கலாம். ஆனால் எனக்கு இது ஒரு பேரிழப்பு. ஆத்திரத்தையடக்க முடியவில்லை. வாயில் வந்தவைகளையெல்லாம் வார்த்தைகளாக்கி என்னை மறந்த நிலையில் கையில் கிடந்த வலது கால்ச் செருப்பைத் தூர வீசியெறிந்தேன். சொல்லி வைத்தது போல எங்கேயோவிருந்து ஓடிவந்த தங்கப்பன் நான் எறிந்த செருப்பை மிகுந்த ஆசையாக ஏந்தியெடுத்துக் கொண்டான். இவன் முன்பு கிரிக்கெட் விளையாட்டில் சிறந்த பந்து வீச்சாளனாக இருந்திருப்பானோ என்று எண்ணத் தோன்றியது. தங்கப்பன் இந்தப் பகுதியில் பிச்சை எடுப்பவன். சித்த சுவாதீன மற்றவன் பைத்தியக்காரன் என எல்லோராலும் ஏளனமாக அழைக்கப்படுபவன். இப்போது என்னுடய புத்தம் புதிய செருப்பில் ஒன்று அவன் வசமாகிவிட்டதை நினைக்க எனக்கு எரிச்சலாகவும் ஏமாற்றமாகவுமிருந்தது. சரி! பாவம்! பிச்சைக்காரன்தானே! அவனாவது வைத்திருந்து பயன்படுத்தட்டும். இந்தச் செருப்புடன் மற்றுமொரு பொருத்தமற்ற செருப்பையும் சேர்த்து அவன் அணிந்து கொண்டாலும் யாரும் அவனைப் பார்த்துச் சிரிக்க மாட்டார்கள். ஏனென்றால் அவன் ஒரு மனநோயாளி. பொருத்தமற்ற செருப்பை வேறு யாருமே அணிந்து கொள்ளமுடியாது. பாவம்! அவனாவது அணியட்டும். செருப்பை ஏந்தியெடுத்த தங்கப்பன் என்னைப் பார்த்து ஓர் அகங்காரச் சிரிப்பை உதிர்த்தபடி தோளில் கிடந்த துணிப் பையை எடுத்து விரித்தான். அதற்குள் இன் னொரு செருப்பு. சந்தேகமேயில்லை. மாம ரத்தடியில் நான் வைத்து விட்ட எனது இடது கால்ச் செருப்புத்தானது. ஏற்கனவே அதை எடுத்து விட்டவன் இப்போது எறிந்த வலதுகால்ச் செருப்பை யும் ஒன்றாக்கித் தனது கால்களில் அணிந்து அழகு பார்த்துப் பெருமைப்பட்டான். கடவுளே ஆயிரத்து இருநூறு ரூபாவுக்கு ஆசைப்பட்டு வாங்கிய செருப்பை, ஒரு தடவைக்கு மூன்று தடவைகள் கால் நடையாகப் பதினெட்டுக் கிலோ மீற்றரை நடந்து யாரோ ஒரு பிச்சைக்காரனிடம் ஒன்றிணைத்துக் கொடுத்துவிட்ட என்னை என்னவென்று சொல்ல! யார் பைத்தியக்காரன்! நானா? அவனா? பொதுவாக எனது வாழ்க்கையில் நடப்பவை எல்லாமே இப்படித்தான். எனக்கு ராசி எண்டதே இல்லை!

# செல்லப்பாவும் மாரிமுத்துவும்

கலாபூசணம் மு.மாசிலாமணி

செல்லப்பாவுக்கும் அவரது மனைவி பூமணிக்கும் ஒரு நாளாவது மாரிமுத்துவைக் காணாமல் பொழுது போகாது. இரண்டு கிழமையாக மாரிமுத்து செல்லப்பா வீட்டுப் பக்கம் வரவே இல்லை என்பதால், அவர்களது ஆவல் அதிகமாகவே இருந்தது.

பூமணி கேட்டா "இஞ்சாருங்கோ! மாரிமுத்துவை வழிதெருவிலை காணேல்லையோ" என்று. "இல்லையப்பா! சிலநேரம் வன்னிப் பக்கம் தொழில் நிமித்தம் ஆள் போயிருக்கும்" என்றார். அவர் சொல்லி முடிய முன் பட லேக்கை "செல்லப்பாண்ணை செல்லப்பாண்ணை" என முனகிக் கேட்டது. "ஆரது?" என செல்லப்பா கேட்க"அது நான். மாரிமுத்து, மாரிமுத்து" என கோட்டடியிலை முதலியார் கூப்பிடுவதுபோல் பதில் வந்தது. பூமணி சொன்னா, "அட! எங்கடை மாரிமுத்து. கேற்றைத் திறந்து விடுங்கோ." செல்லப்பாவுக்கு ஓடர் வழங்கப்பட்டது. கேற்றைத் திறந்து விட்ட செல்லப்பா "உனக்கு ஆயுள் 100, உன்னைப் பற்றித்தான் கதைச்சுக் கொண்டிருக்க நீயும் வாறாய். எங்கையப்பா போனனி" என வினவ அது பெருங்கதை அண்ணை எண்டார். பூமணி கேட்டா "கோயிலிலை பெருங்கதை கேட்கப் போனனியோ?" "பூமணி அக்காவுக்கு என்னோடை பகிடி விடாட்டி பொச்சம் தீராது" எனச் செல்லமாகக் கோபித்தார். "அவவின்ரை கதையை விடு என்ன நடந்தது" என்று ஆவலாகக் கேட்டார் செல்லப்பா. "சொல்லுறன் அண்ணை. அதுசரி! ஏன் இப்பவெல்லாம் கேற்றை பொழுதுபட முதலே பூட்டுறியள்?" "நீ எந்த உலகத்திலை இருக்கிறாய்? யாழ்ப்பாணத்திலை அழையா விருந்தாளியள் செய்யும் அட்டகாசம் உனக்குத் தெரியாதோ" என்றார் செல்லப்பா.

பூமணி கேட்டா அந்தப் பெருங்கதையை சொல்லு என்று. "நான் ஓர் அயிற்ரிங் வாச்சர் வேலைக் கெல்லே இரண்டு கிழமையாய் வன்னிக்குப் போணான்" எனச் சொல்ல பூமணி சொன்னா "அப்பிடிச்சொல்லு அதுதான் ஆளை இந்தப்பக்கம் காணேல்லை" என்றார். செல்லப்பா கேட் டார், "உதென்ன வலது கைவிரல்களிலை கார்த்திகை விளக்கீட்டுக்கு கிளுவந்தடியிலை பந்தம் சுத்தின மாதிரி சுத்திக் கட்டியிருக்கு" என்று.

"அதுதான் பெருங்கதையண்ணை. நையிற் வாச்சர் வேலை. பீதாம்பரம் பிறக்கிறாசிரியாற்றை 20 ஏக்கர் தென்னந் தோட்டத்திலை வன்னியிலை டியூட்டி. ஒரு நாள் நடுச்சாமம் ஒரு தனியன் யானை, அரைப் பனை உயரமிருக்கும். என்னோடை நேரடி மோதலுக்கு வந்திட்டுது." "அடக் கடவுளே!" எனப் பூமணி பதைபதைக்க, மாரிமுத்து சொன்னார் "என்னட்டைத் தப்பேலுமோ! ஒழிச்சு வைச்சிருந்த சீன வெடியைக் கொளுத்தி ஒரு விசுக்கு விசுக்கி விட்டன். யானைப் பிள்ளை எடுத்தார் ஓட்டம். யானைக்குச் சீனவெடியெண்டால் பயம் எனப் பூமணி தனது கண்டுபிடிப்பைச் சொல்ல, மாரிமுத்து சொன்னார், "யானை வெடிக்குப் பயந்து ஓடேல்லை, நான் ஐயோ எண்டு பிலத்துக் கத்தின கத்தினதாலை எடுத்தார் ஓட்டம்."




எம்.ஜீ.ஆர் படத்திலை கன்னத்தில் என்னடி காயம் எனக் கேட்டுப் பாடுவது போல் கையில் என்னடா காயம் எனச் செல்லமாக செல்லப்பா கேட்க மாரிமுத்து சொன்னார், "வெடியை எறியிறத்துக்குப் பதிலாய் கொள்ளிக் கட்டையை எறிஞ்சு போட்டு வெடியைக் கையில் வைத்திருந்திட்டன். அது வெடிச்சுப் போட்டுது. அதுதான் காயம்."



# நாள் எதுவாகுமோ?

இந்த மண் படும் பாடும்
இங்கு வாழும்
பெண்ணினம் படும் பாடும்
போதும் போதுமென்றாகும்
படும் துயரம் நிறைந்ததாகும்


மண்ணை மண்ணாக்குது
ஒரு கூட்டம்
பெண்மையைப் புண்ணாக்குது
இன்னொரு கூட்டம்

கண்ணை மூடிக் கிடக்குது
ஆளும் கூட்டம்
கண்டும் காணாமலும் செயற்படும்
காவற் கூட்டம்
பட்டதுபோதும் இனியிங்கு
படுவதற்கு பலம் இல்லையென்று
பரிதவித்து அழுகுது
மக்கள் கூட்டம்

மண்ணாசையும் பெண்ணாசையும்
மனிதனை வசமாக்கி மயக்கமாக்க
பண்ணக்கூடாத படுபாதக
விளைவுகளை
[illegible]
[illegible]
[illegible]

மண்ணிது மண்ணாக மாண்புற
பெண் பெண்ணாக பெருமையுற
வன்கொடுமை விடைபெறுமோ
நல்லாட்சி என்பது சொல்
லாட்சிகொள்ளாது
நடைமுறைச் சாத்தியமாக
நலம்செறிந்த
நாடாகும் நாள் எதுவாகுமோ?

அல்வாயூர் சிவ.சிவநேசன்



# கடுமையான உழைப்பைவிட புத்திசாலித்தனமான உழைப்பே சிறந்தது

■ தனசேகர்

கடுமையாக உழைத்தால் முன்னேறலாம். புத்திசாலித்தனமாக உழைத்தால் வேகமாக முன்னேறலாம். கடுமையான உழைப்பும், புத்திசாலித்தனமும் இணையும்போது அற்புதம் நிகழ ஆரம்பிக்கும். கடுமையாக எல்லோருக்கும் உழைக்கத் தெரியும். ஆனால் எப்படி புத்திசாலிதனமாகச் செயற்படுவது? அதற்கு முன் நாம் எந்த வகையைச் சேர்ந்தவர்கள் என்பதை தெரிந்துகொள்ளவேண்டும்.

எதையும் யோசிக்காமல் செய்ய ஆரம்பித்தால் கடுமையாக உழைப்பவர் எனக் கொள்ளலாம். யோசித்து தெளிவான திட்டங்களைக் கையில் வைத்துக்கொண்டு வேலை செய்ய ஆரம்பித்தால் புத்திசாலித்தனமாகச் செயற்படுபவர் எனக் கொள்ளலாம். இதில் நீங்கள் எந்த வகை என்பதை தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

சரி எந்த விடயத்தையும் புத்திசாலித்தனமாக அணுகுவது எப்படி?

நீங்கள் செய்ய வேண்டிய விடயத்தை தெளிவாகப் புரிந்து கொள்ளுங்கள்.

நீங்கள் செய்ய வேண்டிய விடயத்தை சுலபமாகவும்,எளிமையாகவும் செய்யக்கூடிய ஒரு வழி உள்ளது என்பதை மனதார நம்புங்கள். இந்த வார்த்தையை மனதுக்குள் திரும்பத் திரும்ப சொல்லிக்கொள்ளுங்கள்.

உடனே சிந்திக்க ஆரம்பியுங்கள், சிந்தனையில் வருபவற்றை மனதிலே குறித்துக்கொள்ளுங்கள். எதையும் நல்லது, கெட்டது என சிந்தனை தடையில்லாமல் சிந்தியுங்கள்.

ஒரு சின்ன யோசனை கிடைத்த உடன் அதை உடனே திட்டமாக்குங்கள்.

இதைவிட ஒரு சிறப்பான, எளிய திட்டம் ஒன்று உள்ளது, அதையும் எம்மால் கண்டுபிடிக்க முடியும் என மறுபடியும் மனதிற்குள் சொல்லிக் கொள்ளுங்கள்.

இப்போது முதல் திட்டத்தை உருவாக்க என்னென்ன வழிமுறைகளை, சிந்தனைகளை, பின்பற்றினோமோ அவற்றை மறுபடியும் பயன்படுத்தாமல் வேறு ஒரு திட்டத்தை உருவாக்குங்கள். இதைதிரும்பத்திரும்பச்செய்து பல திட்டங்களை உருவாக்குங்கள்.

எல்லாத் திட்டங்களிலும் உள்ள நல்லது கெட்டதை உங்கள் உள்ளுணர்வால் ஆராய்ந்து, எல்லாவற்றையும் இணைத்து இறுதித் திட்டத்தை உருவாக்குங்கள்.

உங்கள் திட்டத்தை எவரிடமாவது விளக்கி தேவையான மாற்றத்தை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

திட்டத்தை நிறைவேற்ற கடுமையாக உழையுங்கள்.

எதையும் யோசித்துச் செய்வதுதான் புத்திசாலித்தனம். எப்படி யோசிக்க வேண்டும் என்பதைதான் மேலே பார்த்தோம். மேலே சொன்னவற்றைப் படிக்கும்போது சில ஆச்சரியமான மனம் சார்ந்த விடயங்களையும் பார்க்கலாம்.

நம் மூளைதான் எல்லாவற்றையும் செய்கிறது. அது சிறப்பாகச் செயற்படச் வேண்டுமென்றால் அதனைச் சிறப்பாக ஊக்கப்படுத்தவேண்டும். மற்றொன்று எம் உள்ளுணர்வு தேர்ந்தெடுக்கும் போது பகுத்தறிவ்வவிட உள்ளுணர்வுதான் சரியானதைத் தேர்ந்தெடுக்கிறது என அறிவியல் சொல்லுகிறது. எனவே நாம் புத்திசாலித்தனமாகச் செயல்பட மனமும், உள்ளுணர்வும் முக்கியம்.

ஓர் ஊரில் இரண்டு நண்பர்கள் இருந்தனர். இருவரும் மரவெட்டிகள். அதில் ஒருவர் பலசாலி. மற்றொருவர் புத்திசாலி. காலையில் மரம் வெட்டச் சென்று மாலையில் திரும்பி வரும் போது யார் அதிகமாக மரம் வெட்டியது என எண்ணிப் பார்ப்பார்கள். எப்போதும் புத்திசாலி நபர்தான் நாளின் இறுதியில் அதிக மரம் வெட்டியிருப்பார். இதை பார்த்த பலசாலி புத்திசாலியிடம் காரணத்தை இவ்வாறாகக் கேட்டார், "நான் காலையிலிருந்து மாலைவரை இடைவிடாமல் மரம் வெட்டிக் கொண்டிருக்கிறேன். நீயோ இடைவெளிவிட்டு வெட்டிக் கொண்டிருக்கிறாய். ஆனால் நாளின் இறுதியில் நீதான் வெல்கிறாய். அதன் ரகசியம் என்ன?" என்று அதற்கு அந்தப் புத்திசாலி சொன்னார், "நாம் தொடர்ந்து வெட்டும் போது சிறிது நேரத்தில் உடலும் மனமும் சோர்ந்து விடுகிறது, கோடரியும் மழுங்கி விடுகிறது. அதனால் சிறிது ஓய்வு எடுத்து மரம் வெட்டுகிறேன். ஓய்விலும் எனது கோடரியை நான் கூர் தீட்டிக்கொண்டிருப்பேன். இதனால் மறுபடியும் முழு வீச்சுடன் வெட்ட ஆரம்பிப்பேன். இதனால் நாள் முழுவதும் முழுத் தெம்புடன் மரம் வெட்டுகிறேன். நாளின் இறுதியில் அதிகமான மரக்கட்டைகளை சேகரிக்கிறேன்" என்று.

மேலே உள்ள கதையில் சொன் னது போல் கடின உழைப்பை விட . புத்திசாலித்தனத்துடன்கூடிய கடின உழைப்பே உண்மையான முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும். எதிலும் வெற்றி பெற கடினமாக அல்ல, புத்திசாலிதனமாகச் செயற்படுங்கள் ■

> எதையும் யோசிக்காமல் செய்ய ஆரம்பித்தால் கடுமையாக உழைப்பவர் எனக் கொள்ளலாம். யோசித்து தெளிவான திட்டங்களை கையில் வைத்துக்கொண்டு வேலை செய்ய ஆரம்பித்தால் புத்திசாலித்தனமாகச் செயல்படுபவர் என கொள்ளலாம்

## வழி மாறிய பாதம்....



வெள்ளி நிலாக்காட்டி
அமுதூட்டி வளர்த்த அன்னை
பள்ளிக்குத் தோள் சுமந்து
இப்பார் சிறக்க வைத்த தந்தை
அள்ளி வைத்தோம் உன் மீது
அளவிலா ஆசைகளை
கொள்ளி வைக்க ஒரு பிள்ளை
தவம் கிடந்து பெற்றெடுத்தோம்-இன்று
உன் குரலோ கேட்காமல் மனம்
கொதிக்கின்றோம்;தவிக்கின்றோம்

"அம்மாவும் அப்பாவும்
கண்கண்ட தெய்வம்" என்றாய்
தெய்வத்தைத் தெருவோரம்
அலைந்து திரிய வைத்ததேனோ?
நீ வருவாயென எதிர்பார்த்து
நெடுநாளாய்க் காத்திருந்த
கண்கண்ட தெய்வங்களை
கைத் தொலைபேசியிலும் கை
வண்ணம் காட்டி விட்டாய்
தொலைபேசி இலக்கத்தையும்
மாற்றி விட்டாய்
தொல்லையாக எமை நினைத்து
தூரத்தள்ளி வைத்து விட்டாய்

வெளிநாட்டில் நீ இன்று
ஓய்வின்றி உழைத்தாலும்
உன் மனைவி உன் பிள்ளை
உன் குடும்பம் உன்
பொறுப்பில்
பத்து வருடங்கள் உன்
முகம்பாராது
பற்றி எரியுதடா பெத்த மனம்
இப்புவியில்
வயோதிபர் இல்லம் நோக்கி
நாம் இன்று செல்கின்றோம்.
வாழ்வு தவறிய உன்
நினைவுச்
சுமைகளோடு.....

- வேலணையூர் பொன்.நகுலதாசன்

# வேற்றுக்கிரகவாசிகள் இருக்கின்றார்களா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

ம.பா.மகாலிங்கசிவம்

### ஈரான்

1976.09.19 ஈரான் தலைநகர் தெஹ்ரானில் இருந்த (Imperial Iranian Airforce) இற்கு நூற்றுக்கணக்கானோரிடம் இருந்து தகவல் வந்தது. தாம் மிகப் பெரிய சிவப்பு ஒளியை வானத்தில் கண்டதாக அந்தத்தகவல் இருந்தது. அப்போது நேரம் நள்ளிரவு 12.30 ராடார் திரை மூலம் தேடிய போது வானத்தில் சிவப்பு நிறப் பொருள் ஒன்று பறந்து கொண்டிருப்பது தெரிந்தது. விமானப்படைத்தளத்திலிருந்து F4 வகை போர் விமானம் ஒன்று அனுப்பப்பட்டது. பறக்கும் தட்டின் பிரகாசமான சிவப்பு ஒளி காரணமாக அதன் வடிவத்தை விமானியால் சரியாகப் பறக்க முடியவில்லை. சத்தமின்றிப் பறந்து கொண்டிருந்த குறித்த பறக்கும் தட்டை அண்மித்த விமானம் 25 மைல் தூரத்துக்குள் வந்ததும் விமானத்திலுள்ள அனைத்துக் கருவிகளும் செயலிழந்தன. கீழ் நோக்கி விழுந்து கொண்டிருந்த விமானம் குறிப்பிட்ட தூரத்துக்கு அப்பால் பறந்ததும் இயந்திரங்கள் இயங்கத் தொடங்கவே விமானி விமானத்தைத் திருப்பிக் கொண்டு விமான நிலையத்துக்கு வந்து சேர்ந்தார். அடுத்து இன்னொரு F4 விமானம் அனுப்பப்பட்டது. அந்த விமானப் பறக்கும் தட்டை நெருங்க முன்னரே அந்தப் பறக்கும் தட்டிலிருந்து சிறிய ஒளிப்பகுதி ஒன்று விமானத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது. விமானி பயத்தில் விமானத்தைத் திருப்ப முற்பட்டார். விமானத்தை நெருங்கிய அந்தச் சிறிய ஒளிக் கோளம் விமானத்தைச் சுற்றி வந்தது. அப்போது விமானத்தின் சகல இயந்திரங்களும் செயலிழந்து இருந்தன. எந்தத் தாக்குதலும் நடத்தாமல் அந்த ஒளிக் கோளம் மீண்டும் பறக்கும் தட்டுடன் சென்று சேரவே விமானம் செயற்படத் தொடங்கியது.

### பிரிட்டன்

26.12.2013 இல் பிரிட்டனின் கேட்வின் விமான நிலையத்தை நோக்கி வந்துகொண்டிருந்த போயிங் 777 விமானத்தின் விமானி வானில் 6 ஒளிதட்டுக்கள் பறந்து கொண்டிருப்பதைப் பார்த்தார். உடனடியாக Airtraffic control trarer இற்கு இதனைத் தெரிவித்தார். கட்டுப்பாட்டு நிலையத்தில் இருப்பவர்கள் தம்மிடமுள்ள கருவிகள் மூலம் அதனை அவதானித்து அடையாளம் தெரியாத பறக்கும் பொருள்கள் (UFO) தமது விமானநிலையத்தின் அருகில் வந்து சென்றதை உறுதிப்படுத்தினர்.

இந்த இடத்தின் அருகில் தான் (Scientolog head quarter)s இருப்பது இந்த் நிகழ்வுக்குக் கூடிய முக்கியத்துவத்தைத் தந்தது. ஏனெனில் இவர்கள் (church of scientology) உடன் தொடர்புடையவர்கள். தங்களுக்கும் வேற்றுக்கிரக வாசிகளுக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறும் இவர்கள் அது தொடர்பாக கட்டுரைகளை எழுதிவருவதும் குறிப்பிடத்தக்கதாகும். 2009ஜூன் 13இல் இங்கிலாந்தைச் சேர்ந்த சில இளைஞர்கள் வானில் வினோத பொருள்களைக் கண்டனர். அவை பறக்கும் தட்டுக்களாக இருக்கலாம் எனத் தெரிவித்தனர். உல்ஸ் வட்டர் என்ற பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் டெலிகிராப் நாளிதழுக்கு செவ்வியழித்த பால் ஹைறக் (28வது) என்பவர் கொடுத்த செவ்வியில். அன்று இரவு அனைவரும் தூங்கிக் கொண்டிருந்த நேரம். நாங்கள் திடீரென்று ஏதோ சத்தம் கேட்டு எழுந்தோம். அப்போது வானில் மின்னும் வினோத பொருள் ஒன்றைப் பார்த்தோம். ஆங்கிலப் படங்களில் வரும் பறக்கும் தட்டுப் போல் எங்களுக்குத் தோன்றியது, திகில் ஏற்படுத்தியது. அவை ஏற்படுத்திய ஒளி எங்களுக்குப் பிரமிப்பை ஏற்படுத்தியது. அவை ஒரு சீரான பாதையில் ஆனால் நேராக இல்லாமல் பறப்பதைப்போல் எங்களுக்குத் தோன்றியது. அவற்றின் வெளிச்சம் அதிகரிப்பதும் மங்குவதுமாக இருந்தது. மொத்தம் ஆறுதட்டுக்கள் இருந்தன. ஆனால் அவை அனைத்தையும் ஒரே நேரத்தில் பார்க்க முடியவில்லை. ஒன்றின் வெளிச்சம் மங்கியபோது மற்றவை வெளிச்சம் கூட ஆரம்பித்தன என்று கூறினார்.

### அமெரிக்க உளவுத் துறைத் தகவல்

13.01.2015இல் வெளியிடப்பட்ட அமெரிக்க உளவுத்துறையின் தகவல் விஞ்ஞானிகளுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக இருந்தது. தமது இணையத்தளத்தில் வெளியிட்ட அறிக்கையில்,வேற்றுக்கிரக வாசிகள் என்று அழைக்கப்படும் ஏலியன்கள் பலபரிமாணவடிவங்களில் பூமியில் இறங்கியுள்ளனர். பூமிக்கு எண்ணற்ற வேற்றுக் கிரக உயிரிகள் வருகின்றன. இவற்றில் சிலவகையானவை பரிணாம வளர்ச்சி பெற்று முந்தைய ஏலியன்கள் படங்களில் இருந்து வேறுபட்டவையாகவுள்ளன. அவை நவீன விமானம்/ பறக்கும் தட்டுக்கள் மூலம் வந்து உள்ளன. ஏலியன்கள் வருகைதரும் பறக்கும் தட்டுக்கள் குழுவாகவே வந்து இறங்குகின்றன. அவற்றின் நோக்கம் எவருக்கும் தொந்தரவு தருவதாக இல்லை. பறக்கும் தட்டை எங்கு இறக்கவேண்டும் என்பதை ஆழ்ந்து சிந்தித்துத்தான் முடிவெடுக்கின்றனர் என அந்தக் குறிப்பில் உள்ளது.

### இலங்கையில்

உலக நாடுகள் பலவற்றிலும் வேற்றுக் கிரக வாசிகள் பற்றிய தகவல்கள் இருக்க எமது நாடான இலங்கையை அவர்கள் புறக்கணித்து விட்டார்களா? என்ற கேள்வி வாசகர் மனதில் தோன்றலாம்.

இலங்கையிலும் இது தொடர்பான பலசம்பவங்கள் பதிவாகி உள்ளன.

1993ஆம் ஆண்டு கோண்டாவிலில் கலை பண்பாட்டுக் கழக கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அது முடியும்வேளையில் (நள்ளிரவு ஒரு மணி இருக்கலாம்) 9 ஒளிவட்டங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கிச் செல்வதை நான் உட்பட அங்கிருந்த பலரும் கண்டோம். அப்போது பறக்கும் தட்டுக்கள் பற்றி நான் அறிந்திருக்கவில்லை. எனினும் அது தொடர்பான செய்தி பத்திரிகையில் வருகிறதா எனத்தேடியபோது சம்பவம் நடந்த மூன்றாம் நாள் வீரகேசரிப்பத்திரிகையில் மட்டக்களப்பு மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்துள் இறங்கிய ஒளிவட்டங்கள் என்னும் தலைப்பில் செய்தி வந்திருந்தது. பிள்ளையார் ஆலயத்துள் 9 ஒளி வட்டங்களும் தரை இறங்கியதைக்கண்ட ஊரவர்கள் பூட்டியிருந்த கதவைத் திறந்து தேடிய போதும் எதுவும் காணப்படவில்லை என்றும் அந்தச் செய்திக் குறிப்புக் காணப்பட்டது.

2002 இல் இலங்கையில் புராதன பிரதேசங்களில் ஒன்றான திம்புலாகலைக் குன்றின் உச்சியில் பிரதேசவாசிகள் விசித்திரமான நீல நிற ஒளியை அவதானித்தனர். அதே காலப்பகுதியில் பொலனறுவை அநுராதபுரப்பகுதிகளிலும் புதுமையான நீலநிற ஒளியை உடைய விண்கலம் ஒன்று அவதானிக்கப்பட்ட செய்தி ஊடகங்களில் முக்கியத்துவம் பெற்றிருந்தது.

2009 ஆம் ஆண்டு (?) மட்டக்களப்பு களுதாவளையில் இடம்பெற்ற சம்பவம் மிகவும் பரபரப்பாகப் பேசப்பட்டது. தினக்குரல் பத்திரிகையில் ஒருபக்கம் நிறைய இதுபற்றிய செய்திக்கட்டுரை வெளியிடப்பட்டிருந்தது. களுதாவளையில் இரவு 8 மணியளவில் தோட்டத்தைப் பார்க்க விவசாயிகள் ஒருவர் சென்றார். தோட்டத்தினுள் 6 உருவங்கள் ஒன்றை ஒன்று கலைத்து விளையாடுவதை மங்கிய ஒளியில் அவர் கண்டார். அவை நாய்களாக இருக்கும் என நினைத்து அதில் கவனம் செலுத்தாமல் அவர் கடந்து வந்து விட்டார். சற்றுத்தூரம் சென்ற பின்தான் நாய்கள் என்றால் கலைத்துச் செல்லும்போது குரைக்கும் சத்தம் கேட்டிருக்கும். இவை அமைதியாக ஓடுகின்றனவே என்று நினத்தபடி மீண்டும் அந்த இடத்துக்குச் சென்று உருவங்களை நோக்கித் தனது ரோச் லைட்டைத் திருப்பினார். அவை நாய்கள் அல்ல. ஒன்றரை அல்லது இரண்டு அடி உயரம் கொண்டகுள்ள மனிதர்கள் போன்று காணப்பட்ட அந்த உருவங்கள் தம் மீது ரோச் வெளிச்சம் பட்டதும் கண்களில் சிவப்பு ஒளி வீசியபடி அவரை நோக்கி வரத் தொடங்கின. பயத்தினால் வீட்டுக்கு ஓடி வந்த அவர் பலரையும் கூட்டிச்சென்று தோட்டம் முழுவதும் தேடிய போது அவற்றைக் காண முடியவில்லை.

அடுத்தநாள் மாலை நேரம் களுதாவளையிலுள்ள பாடசாலை ஒன்றில் புலமைப்பரிசில் பரீட்சைக்காக மேலதிக வகுப்பு மேல்மாடியில் நடைபெற்றது. அந்த வகுப்புக்குப் பிந்தி வந்த இரு மாணவிகள் மேல்மாடிப்படிகளில் ஏறச் செல்லும்போது அந்த ஆறு உருவங்களும் நின்றுள்ளனர். செல்லும் அவசரத்தில் இவர்கள் அவற்றைக் கவனிக்காது நெருங்கிச்சென்றுள்ளனர். அவர்களுள் இருமாணவிகளின் முகத்திலும்,கைகளிலும் தாக்கி அவை காயத்தை ஏற்படுத்தின. மாணவிகளின் அலறல் கேட்டு அனைவரும் வரவே அவை ஓடத் தொடங்கின. துரத்திச்சென்றவர்கள் களுதாவளையிலுள்ள கோயில் ஒன்றுக்குள் அவை செல்வதைக் கண்டு ஊரவர்களில் மேலும் பலரையும் அழைத்துச் சென்று கோயிலுக்குள் தேடியபோதும் அவற்றைக் காணமுடியவில்லை. இது பத்திரிகையில் வந்த அனைவரும் அறிந்த உண்மைச்சம்பவம் ஆகும். எனினும். நீண்ட காலத்துக்கு முன் நடந்த இந்தச் சம்பவம் இடம்பெற்ற ஆண்டு, பாடசாலை, கோயில் என்பவை தொடர்பான தகவல்கள் நினைவில் இல்லாத காரணத்தால் தெளிவாகத் தர முடியாமைக்கு மன்னிக்கவும்.

### விஞ்ஞானத்தின் நிலை

வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய பல தகவல்கள் உண்மையாக இருந்தாலும் விஞ்ஞானம் இன்றும் அதனை முழுமையாக ஏற்றுக்கொள்ளவில்லை. பறக்கும் தட்டைத்தேடும் ஆராய்ச்சி பற்றிய விஞ்ஞானிகள் இருவரின் கருத்துக்களை அடுத்து நோக்கலாம்.

இயற்பியல் விஞ்ஞானியான ஸ்டீபன் ஹாக்கிங் இந்த ஆராய்ச்சி ஆபத்தானது. எமக்கு நாமே தீமை செய்வது போன்றது (சொந்தச் செலவில் சூனியம் வைப்பது) அமெரிக்காவைக் கொலம்பஸ் கண்டுபிடித்ததும் அங்குள்ள பூர்வீகக் குடிகளை அழித்துவிட்டனர். அதுபோல வேற்றுக்கிரக வாசிகளைத் தேடிச் செல்வது ஆபத்தையே ஏற்படுத்தும்- என்றார். இந்தக்கூற்று வேற்றுக்கிரகவாசிகள் இருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறது.

அடையாளம் தெரியாத பறக்கும் பொருள்கள் ஆய்வு மையத்தின் இயக்குநரான பீற்றர் தேவன் மோட் ஆறுவயதுச் சிறுவனாக இருக்கும் போது தான் பறக்கும் தட்டைக் கண்டபடியால் தான் தனக்குப் பறக்கும் தட்டு துறையில் ஆர்வம் ஏற்பட்டது என்று கூறுகிறார். பறக்கும் தட்டு இருப்பதற்கு ஆதாரம் இருக்கிறதா என்ற வினாவுக்கு. பல ஆதாரங்கள் காட்டி விட்டோம். நேரில் பார்த்த பலர் சாட்சியங்களாக உள்ளனர். சரி அதைக்கூட நம்ப வேண்டாம் என சிலர் கற்பனையாகச் சொல்லி இருக்கலாம். ஆனால் நேரடியான ஆதாரங்களும் உள்ளன. பறக்கும் தட்டு இறங்கிச் சென்ற தடங்கள் அவை விட்டுச் சென்ற உலோகப் பொருள்கள் எனப் பலதும் கண்முன் காட்ட முடியும். பிரிட்டன் கோதுமை வயலில் உண்டான மர்ம வளையங்கள் பற்றி இன்னும் சரியான விளக்கம் தர எம்மால் முடியவில்லையே என அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார். (பிச்சைக்காரன் என்னும் தலைப்பில் இந்த வயலில் திடீரெனத் தோன்றிய காட்சி புகைப்படமாக இடம் பெற்றுள்ளது. குறித்த வயலில் வேலை செய்த உழவர்கள் படுக்கச்செல்லும்போது வயலுக்குக் குறித்துநுட்பமான உருவம் இருக்கவில்லை. விடிந்த போது இந்த உருவம் இருந்தது. சாதாரண மனிதர்களாற் செய்யப்பட முடியாத இந்த செங் கோண வடிவில் அமைந்த உருவத்தை ஒரே இரவில் எவர் செய்தது என்பது இன்னும் கண்டறியப்படவில்லை.

இதேவேளை- நாஸாவினால் செவ்வாய்க்கிரகத்துக்கு அனுப்பப்பட்ட கியூரியோ சிட்டி என்ற விண்கலம் செவ்வாயிலிருந்து தொடர்ச்சியாகப் புகைப்படங்களை அனுப்பி வருகிறது. 2012 ஓகஸ்ட் மாதத்தில் அந்த விண்கலம் எடுத்து அனுப்பிய புகைப்படம் ஆய்வுக்குட்பட்டபோது விஞ்ஞானிகள் பேரதிர்ச்சி அடைந்தனர். இனங் காணப்படாத ஒளிப் பொருள் ஒன்று செவ்வாய்க் கிரகத்தில் காணப்பட்டது. பல புகைப்படங்களை ஒப்பு நோக்கிய போது அந்த ஒளிப்பொருள் அங்கு மிங்கும் அசைந்து செல்வது தெரிந்தது.

(தொடரும்)



# வரலாற்றில் இன்றைய தினம்

1625 - முதலாம் சார்ள்ஸ் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் அயர்லாந்து அரசரானதுடன், பிரான்ஸின் அரசராகவும் பிரகடனம்.

1794 - நிரந்தரக் கடற்படையை, அமெரிக்கா 6விரைவுக் கப்பல்களுடன் கட்டியெழுப்ப அதிகாரமளிக்கப்பட்டது.

1871 - முதலாவது சர்வதேச றக்பி உதைபந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

1910 - ஹங்கேரியில் நடன நிகழ்வின்போது ஏற்பட்ட தீயில் 312பேர் சாவு.

1958 - நிகிடோ குருஷேவ் சோவியத் ஒன்றியப் பிரதமரானார்.

1977 - உலக வரலாற்றிலேயே மோசமான விமான விபத்து இரண்டு 747 விமானங்கள் மங்கலான விமான ஓடுபாதையில் மோதிக்கொண்டதில் ஏற்பட்டது. இதில் 583பேர் கொல்லப்பட்டதுடன் 61பேர் உயிர்பிழைத்தனர்.

1980 - அலெக்ஸான்ரியா எல் கிலா[illegible]ட் எண்ணெய் மேடை சரிந்ததில் 123 பேர் சாவு.

1981 - 12மில்லியன் தொழிலாளர்கள் 4மணிநேர எச்சரிக்கை வேலை நிறுத்தத்தை போலந்தில் மேற்கொண்டனர்.

1990 - கஸ்ரோவுக்கு எதிரான பரப்புரையை மேற்கொள்ள 'மார்றி தொலைக்காட்சி' சேவையை அமெரிக்கா கியூபாவுக்கு ஒளிபரப்பத் தொடங்கியது.

1993 - ஜியாங் ஷெமின், மக்கள் சீனக் குடியரசின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.

1998 - ஆண்களின் சக்தியற்ற தன்மைக்கு மருந்தாக வயக்காராவைப் பயன்படுத்த அமெரிக்க உணவு மற்றும் ஔடதநிர்வாகம் அனுமதி வழங்கியது.

1988 - புலிகளுடன் பேசி சமாதானத்துக்கு வரச் செய்யுமாறு இந்திய இராணுவ அதிகாரி பொது மக்களிடம் கோரிக்கை

2002 - குடாநாட்டைத் தமது சந்தையாக மாற்ற தென்னிலங்கை வர்த்தகர்கள் முயற்சி; யாழ்.மக்களின் அவசரதேவை அதுவல்ல என கூட்டுறவுச் சமாசம் குற்றச்சாட்டு.


2008 - 13 ஆவது திருத்தச் சட்ட நடைமுறையை ஒருபோதும் தமிழர் ஏற்கார் என சம்பந்தன் தெரிவிப்பு. அதுமிகவும் பின்னடைவான சட்டம் எனவும் அவர் தெரிவிப்பு.

2009 - உதயன் மீதான தாக்குதலுக்கு ஊடக அமைப்புக்கள் கண்டனம்.

2009 - வன்னியில் கடும் ஷெல் தாக்குதல், கர்ப்பிணிப் பெண்கள் 4பேர் உட்பட 61பேர் சாவு.

2009 - அரசியல் தீர்வு, வன்னி நிலைமை தொடர்பாக தமிழ் - முஸ்லிம் கட்சிகளுடன் ஜனாதிபதி ஆலோசனை.

2009 - செயற்கைஏரி ஒன்றை அமைக்க ஏற்படுத்தப்பட்ட அணை உடைந்து இந்தோனேஷயாவில் 99 பேர்வரை சாவு.



ச.பவப்பிரியன்
தரம் - 3
மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.



க.விவர்ணிகா
தரம் - 3D
யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.

## விடுகதைகள்


1. கறுப்புக் கோட்டு போட்டிருப்பார்; கழற்றிக் கீழே வைக்க மாட்டார்; விருந்துச் சாப்பாடு என்றாலோ விழுந்தடித்து ஓடி வருவார், அவர் யார்?
2. தகப்பனுக்குப் பத்துப் பிள்ளைகள், அவர்கள் தலைக்குப் பின்னே தொப்பியுண்டு. அவர்கள் யார்?
3. குதிரை தாவத்தாவ குறையுது வாலின் நீளம், அது என்ன?
4. மஞ்சள் புடைவை கட்டி வரிசையாய் பெண்கள் பலர், கயிற்றைப் பிடித்துக் கொண்டு கடையில் தொங்குகின்றார்கள் அவர்கள் யார்?
5. என் பெயரைக் கேட்பவர் அனேகர். என்னைப் போட்டு மிதிப்பவர் அனேகர். எவர் பெயரையும் கேட்பதுமில்லை, எவரையும் போட்டு மிதிப்பதும் இல்லை நான் யார்?
6. பல்லைப் பிடித்து அழுத்தினால், பதறிப் பதறி நான் அழுவேன். நான் யார்?
7. கழனியிலே கதிர் விளையும்; கையால் பறிக்க மாட்டேன், கத்திரியால் வெட்டிடுவேன் அது என்ன?
8. மூண்டாசு கட்டின சின்னப்பையன், வீட்டுச் சுவரில் மோதினான், வெளிச்சம் போட்டுச் செத்தான். அவன் யார்?

### விடைகள்:

1. காகம்,
2. கைவிரல்களும் நகங்களும்,
3. ஊசியும் நூலும்,
4. வாழைப்பழச் சீப்பு,
5. தெரு,
6. ஹார்மோனியம் அல்லது பியானோ,
7. தலை முடி,
8. தீக்குச்சி,



# வெல்ல முடியாது!



அந்த ஆமையாருக்கு முயலை வென்றதால் கிடைத்த பிரபல்யம், பெருமை எல்லாம் தனக்குக் கிடைக்காமல் போய்விட்டதே என்று நத்தையாருக்கு அதிக வருத்தம்! என்னைப் போலமெதுவாகநகர்ந்து செல்லக்கூடிய ஓர் ஆமையால் துள்ளிப் பாய்ந்து துரிதமாக ஓடக் கூடிய முயலை எப்படித்தான் வெற்றி கொள்ள முடிந்ததோ என நத்தைக்கு ஆச்சரியமாயிருந்தது!

இரவும் பகலும் இதையே எண்ணிக் கொண்டிருந்த நத்தையாருக்குத் தூக்கமே பிடிக்கவில்லை; படுக்கையில் கிடந்து புரண்டு கொண்டிருந்தது!

நானும் மெதுவாக ஊர்ந்து செல்லும் இனம் தானே...? ஆமை போல நானும் சாதனை படைத்து கௌரவம் அடைய வேண்டும் என்று அனுதினமும் தீவிரமாகச் சிந்தித்தது. என்ன பண்ணலாம் என்று மண்டையைப் போட்டுக் குடைந்து கொண்டது நத்தை.

திடீரென்று ஒரு நல்ல யோசனை நத்தையின் மூளையில் உதித்தது! மெதுவாக ஓட்டும் சைக்கிள் பந்தயம் மனிதர்களால் நடத்தப்படுவதைப்போல தானும் மெதுவாக ஓடும் ஓர் ஓட்டப்பந்தயம் வைக்கலாம் என்று திட்டம் தீட்டியது!

தன்னுடன் போட்டியிட எவரை அழைப்பது என எண்ணிப் பார்த்தது நத்தை.

"நான் எல்லாப் போட்டியிலும் எவரை வேண்டுமானாலும் வென்று விடுவேன். இந்தக்காட்டில்என்னை எவராலும் வெல்ல முடியாது. என் உடற்பலத்தால் முடியாவிட்டாலும் என் மூளையைப் பயன்படுத்தி அனைவரையும் வெல்வேன்" என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு தலைக் கனத்துடன் திரிந்து வந்தது ஒரு நரி.

தற்பெருமை பேசித் தனக்கு நிகர் எவருமில்லை எனநினைக்கும் அந்த நரியே தன்னோடு போட்டியிடச் சரியான நபர் என்று முடிவு செய்தது நத்தை.

மறுநாள் மாலையில் நரியைச் சந்தித்த நத்தை... "என்னோடு போட்டி போடநீ தயாரா?" என்று கேட்டது.

அதைக் கேட்டது நரி விழுந்து விழுந்து சிரித்தது. பிறகு "அப்படி என்ன போட்டி...? கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லேன்" என்றது.

"இது ஒரு விநோதமான போட்டி. மெதுவாகச் செல்லும் போட்டி. எம் இருவரில் யார் மெதுவாகச் செல்கிறோமோ அவரே வெற்றிபெற்றவராவார். ஆனால் ஒரு நிபந்தனை இருந்த இடத்திலேயே இருக்காமல் வெற்றிக்கோட்டை நோக்கி நகர்ந்தபடியே இருக்க வேண்டும்" என்றது நத்தை.

தனக்கே உரிய அகந்தையாலும், அடுத்த இனத்தை அற்பமாக எண்ணும் அலட்சியப் புத்தியாலும் போட்டியில் பங்கெடுக்க நரி சம்மதித்தது.

நந்தையாரோடு நரியார் போட்டி போடும் செய்தி காட்டுத் தீயெனப் பரவியது!

எல்லாவிலங்குகளும் போட்டி நடக்கும் இடத்துக்கு வந்து சேர்ந்தன.

தரையில் போடப்பட்டிருந்த கோட்டில் நந்தையும் நரியும் தயார்நிலையில் நின்றன. சிங்கராஜா விசில் ஊதிப் போட்டியைத் தொடங்கி வைத்தார்.நத்தை வழக்கம் போல் மெதுவாக ஊர்ந்தது.

நரிக்குத்தான் தர்மசங்கடம். தன்னுடைய முன்னங்கால்களைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சிரமப்பட்டு நகர்த்திக் கொண்டிருந்தது!

வெகுநேரமாகியும் நத்தை சொற்ப தூரத்தைக்கூட கடந்தபாட்டைக்காணோம். அதைக் கண்ட நரிக்கு ஆவேசமாகவும் ஆத்திரமாகவும் இருந்தது. கால்கள் வலிஎடுத்தன. பசியோ வயிற்றைக் கிள்ளியது. தலைசுற்றியது. மாலைமங்கி இரவு நெருங்கியும் கூட நத்தையார் பாதித் தூரத்தைக் கூடக் கடக்கவில்லை. வெற்றிக் கோடோ வெகு தொலைவில் காணப்பட்டது. நரிக்குச் சங்கடமாக இருந்தது.

"போகிற போக்கைப் பார்த்தால் சாகிற அளவில் கொண்டு போய் விட்டு விடுமோ" என எண்ணத் தோன்றியது. போட்டி முடிய இன்னும் எத்தனை நாளாகும் என்றே நரிக்குப்புரியவில்லை.

தன்னால் இனிமேலும் தாக்குப்பிடிக்க முடியாது என்று நன்றாகவே உணர்ந்து கொண்ட நரி தனது தோல்வியை நத்தையிடம் ஒப்புக்கொண்டது. தலையைத் தொங்கப்போட்டபடி ஓடியது.

நரியின் தலைக்கனத்தைத் தவிடு பொடியாக்கிய நத்தையை ஏனைய விலங்குகள் பாராட்டின.



# முகம் பளபளக்க...

சிலருக்கு முகத்தில் காது, கால், கைகளில் நிறைய முடிகள் இருக்கும். அவர்கள் வேப்பங்கொழுந்து, குப்பை மேனி இலை, விரலி மஞ்சள் அரைத்துப் பூசி பத்து நிமிடம் உலரவிட்டு பின் கழுவினால் முடி உதிர்ந்து விடும்.

**முக அழகு**

முகத்தில் பருக்கள் இருந்தால் வெள்ளைப் பூண்டையும், துத்தி இலையையும் சம அளவு எடுத்து அதை நறுக்கி, பின் நல்லெண்ணெயில் போட்டுக் நன்கு காய்ச்சி தினசரி பருக்கள் உள்ள இடத்தில் தடவி வந்தால், விரைவில் பருக்கள் இருந்த இடம் தெரியாமல் போய்விடும். உடம்பில் தழும்புகள் இருந்தால் அந்த இடத்தில அவரை இலையின் சாற்றைப் பூசி வந்தால் தழும்புகள் படிப்படியாக மறைய ஆரம்பிக்கும். தோல் மிருதுவாகவும், பளபளப்பாகவும் இருக்க வேண்டும் என்றால், கொத்தமல்லி இலையில் சாறு எடுத்து அதில் சிறிதளவு கஸ்தூரி மஞ்சள்தூளைக் கலந்து தோல் மீது தடவி வந்தர்ல் தோல் மிருதுவாகவும் பளபளப்பாகவும் மாற ஆரம்பிக்கும்.

# செம்பட்டை தலைமுடியா?

சிலருக்கு தலைமுடி செம்பட்டை நிறத்தில் இருக்கும், அதனை ஸ்ரைல் என்று நினைத்து அப்படி விட்டுவிடாதீர்கள். சத்துக்கள் குறைபாட்டினால் கூட முடியின் நிறம் மாற லாம், எனவே செம்பட்டை நிறத்தில் இருக்கும் முடியைக் கருமையாக மாற்ற சில வழிகள்:

1. ஆமணக்கு எண்ணெயைத் தலையில் விட்டு நல்ல மசாஜ் செய்து பின்பு குளிக்கவும், சில மாதங்களில் செம்பட்டை நிறம் கருமையாக மாறும்.
2. தினமும் தலைக்கு குளிக்கும் முன்பு நல்ல தேங்காய்ப் பால் தேய்த்து பின்பு குளிக்க வும். நில ஆவாரை, மரிக்கொழுந்து இரண்டையும் சம அளவு எடுத்து நன்றாக அரைத்து தலையில் தேய்த்து அரை மணி நேரம் நன்றாக தலையில் ஊறிய பின்பு குளிக்கவும்.
3. தினமும் கட்டாயம் தலைக்கு தேங்காய் எண்ணெய் தேய்த்து வரவும். ஒலிவ் ஓயிலை தலைக்குத் தேய்த்து மசாஜ் செய்தாலும் நல்ல பயன் கிடைக்கும். தினமும் உணவில் கீரை வகைகளும், செம்பருத்தி பூவும் சாப்பிட்டால் நல்ல பயன் கிடைக்கும்.
4. முட்டை வெள்ளைக் கருவைத் தலையில் தடவி சிறிது நேரம் கழித்துக் கழுவி விடவேண்டும். இவ்வாறு வாரம் இருமுறை செய்து வந்தால் செம் பட்டை மறையும்.
5. மரிகொழுண்டு இலையையும், செம்பருத்தி இலையையும் அரைத்து, தலைக்கு தடவி குளித்து வந்தால், செம்பட்டை முடி கறுப்பாகும்.
6. கரட்டையும், எலுமிச்சம் சாற்றையும் தேங்காய் எண்ணெயில் கலந்து தினமும் தடவி வந்தால் முடி நன்றாகக் கறுப்பாக வளரும்.



# கை விரல்களை அழகாக்கும் மசாஜ்



இரவு படுக்கச் செல்வதற்கு முன் பும், அதிகாலையிலும் கை விரல் களில் விளக்கெண்ணெய் அல்லது ஒலிவ் ஓயில் தடவிக் கொண்டு இரண்டு கைவிரல்களையும் கோர்த்து பிணைந்து பதினைந்து நிமிடங்கள் உருவி விட்டுக் கொண் டால் கைவிரல்கள் சதை பிடிப்பற்று அழகாக இருக்கும்.

கை விரல்களை ரைப் அடிப்பது போல் அசைக்கவும். இது கைக ளுக்கு நல்ல பயிற்சி. நகம் வெட்டு வதற்கு முன்பு சோப்புத் தண்ணீ ரில் சிறிது நேரம் ஊறவிடவும். நகம் வெட்டிய பின்னர் ஸ்கீன் கிறீம் தடவவும். வாரம் ஒரு முறையாவது நகங்களை வெட்டி விடவும். நகங்களை அதிக நேரம் தண்ணீரில் வைக்காதீர்கள். நகத்தில் உள்ள ஈரபசை போய் விடும். நகத்தில் வெடிப்பு இருந்தால் நெயில்; பொலிஷ் போட்டால் மறையும். நகங்கள் ஆரோக்கியமாக வும், வலிமையாகவும் இருக்க உணவில் கல்சியம் மற்றும் புரதச்சத்துக் களை அதி கமாகச் சேர்த்துக் கொள்ளவும்.

# மாம்பழ இனிப்பு



**தேவையான பொருள்கள்**

மாம்பழக்கூழ் 2 பழத்துடையது
சீனி கூழின் அளவில் பாதி
எலுமிச்சைச் சாறு 1 மூடி
வெண்ணெய் தேவைக்கு

**செய்முறை**

மாம்பழக்கூழ், சீனி சேர்த்து அடுப்பில் கிளறவும். சேர்ந்து கெட்டியாக வந்ததும் எலுமிச்சைச் சாறு சேர்த்துக் கிளறி கரண்டியால் எடுக்க கெட்டியாக விழ வேண்டும். வெண்ணெய் தடவிய தட்டில் கொட்டி ஆறியதும் துண்டு போடலாம்.

வி.சிவராஜா

# அம்மாடியோவ்!

# இவ்வளவோ செலவா!



ஜேர்மனியில் தற்போது சுமார் 82 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். இங்கு ஒரு பிள்ளை பிறந்து 18 வயது வரை வளர்வதற்கு ஏற்படும் செலவுகளை அரசு கணக்கிட்டுள்ளது. பல படிகளில் மொத்தச் செலவும் மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பிள்ளை தனது சொந்தக்காலில் சுயமாக உழைத்து வாழக்கூடிய சூழல் வரும் வரை சுமார் ஒரு லட்சத்து முப்பத்தோராயிரத்து இரு நூற்றி ஐம்பத்தாறு யூரோ (131,256) செலவாகிறது.

ஒரு நாட்டில் பல வளங்கள் இருப்பினும் மனிதவளங்களும் சரியான அளவில் காணப்பட்டால்தான் அந்த நாடு முன்னேற்றமடைய முடியும். இன்றைய கணினி அறிவியல் தொழில்நுட்ப உலகில் பல வளங்கள் பல்கிப் பெருகிக் காணப்பட்டாலும் மனித வளத்துக்குப் பற்றாக்குறை ஏற்படின் அந்த நாடு வளர்ச்சி பெற்று முன்னேற முடியாமலே இருக்கும். இதற்காகவே ஐக்கிய நாடுகள் சபையானது மனிதவள மேம்பாட்டு நிறுவனத்தை நிறுவிப் பல பணிகளை ஆற்றிவருகின்றது.

இன்று பல நாடுகளில் நிகழும் போர் அழிவுகளாலும், இயற்கை அழிவுகளாலும், இன - மத - நிற, முரண்பாடுகளாலும் தினம் தினம் ஆயிரக்கணக்கான உயிர்கள் அழிகின்றன. அதனால் மனித வளத்தின் பெருக்கம் குறைந்து வருகிறது. இருப்பினும் பல நாடுகளில் மனித வளம் பெருகி நாடு முன்னேறப் பல வழிகளில் உதவி புரிந்து வருகின்றன.

ஆனால், உலகிலேயே அதிக சனத்தொகை கொண்ட சீனா போன்ற நாடுகளில் ஆசைக்கு ஒரு பிள்ளை என்ற சட்டம் கடந்த காலங்களில் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டதால் சகல துறைகளிலும் முன்னேற்றம் கண்டுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜேர்மனியைப் பொறுத்த அளவில் சனத்தொகைப் பெருக்கம் கட்டுப்படுத்தப்படுவதால் அல்லாது ஒவ்வொரு மனிதரினதும் சுயவிருப்பத்தால் சனத்தொகை வளர்ச்சி குறைந்து வருகிறது. இங்கு வாழும் வெளிநாட்டவர்களுக்கு இது பொருந்தாது.

ஜேர்மனியில் இன்னும் பத்து வருடங்களில் சனத்தொகை குறைவடையும் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். அதேநேரம் ஆசியா, ஆபிரிக்கா, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் சனத்தொகை பெருமளவு அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மனியின் காலநிலை, கல்வி, கலாசாரம், பொருளாதாரம், எதிர்கால வாழ்வியல், நாகரிக மாற்றம், போன்ற பல காரணிகளால் குழந்தைகளைப் பெற்றுக்கொள்வோரின் எண்ணிக்கை குறைவடைந்து வருகிறது. ஜேர்மனியர்கள் ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளை அளவாகப் பெற்று நல்ல ஆரோக்கியமுள்ளவர்களாகவும், கல்வி அறிவியலில் வல்லவர்களாகவும், பொருளாதார சமூக வாழ்வில் சிறந்தவர்களாகவும் உருவாக்கி விடுகின்றனர். இதனால்தான் 2015 ஆண்டில் மனித வளம், மனிதவாழ்வியலுக்கு உலகில் சிறந்த நாடாக ஜேர்மனி தெரிவு செய்யப்பட்டது.

ஜேர்மனியில் தற்போது சுமார் 82 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். இங்கு ஒரு பிள்ளை பிறந்து 18 வயது வரை வளர்வதற்கு ஏற்படும் செலவுகளை அரசு கணக்கிட்டுள்ளது. பல படிகளில் மொத்தச் செலவும் மதிப்பிடப் பட்டுள்ளது. ஒரு பிள்ளை தனது சொந்தக் காலில் சுயமாக உழைத்து வாழக்கூடிய சூழல் வரும் வரை சுமார் ஒரு லட்சத்து முப்பத்தோராயிரத்து இரு நூற்றி ஐம்பத்தாறு யூரோ (131,256) செலவாகிறது என அரச புள்ளிவிவரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இலங்கைப் பணத்துக்குப் பெருக்கிக் கணக்குப்பார்த்தால் தலை விறைக்கும். குழந்தை வளர்ப்பு என்பது இலேசான காரியமல்ல என்பதைத்தான் இது காட்டுகிறது. ஆசிய நாடுகளில் பலர் அடுக்கடுக்காகப் பிள்ளைகளைப் பெற்றுவிட்டுத் தந்தைமார் கவலையே இல்லாமல்திரிய, தாய்மார் படும் வேதனையும் சுமக்கும் சுமையும் தாங்க முடியாதவை.

ஜேர்மனியில் ஒரு பிள்ளை பிறந்தவுடன் அப்பிள்ளைக்காக படுக்கை, படுக்கைஅறைஏற்படுத்துவதில்தொடங்கி, குடிதண்ணீர், உணவு, உடை, சுற்றம் சூழல், மருந்துவகைகள், மருத்துவச் செலவுகள், பால் உணவுப் பெருள்கள், பிள்ளையைக் கொண்டு செல்வதற்கான வண்டி வசதிகள், விளையாட்டு பொழுதுபோக்குப் பொருள்கள் கல்வி, கணினிப் பொருள்கள், குளிர், கோடை கால உடைகள், கல்வி கலாசார கொண்டாட்ட விளையாட்டு உடைகள் என இன்னோரன்ன பல செலவுகள் ஏற்படுகின்றன. இவற்றை எல்லாம் கணக்கிட்டே ஒரு பிள்ளை வளர்ப்பில் 1 - 18 வயதுவரை ஏற்படும் செலவை அரசு அறிவித்துள்ளது.

1 வயது தொடக்கம் 6 வயது வரை மாதம் 519 யூரோ. ஆக மொத்தம் 72 மாதங்களுக்கு 37,368 யூரோ.

7வயது தொடக்கம் 11 வயதுவரை மாதம் 604 படி 43,488 யூரோ.

12 வயது தொடக்கம் 18 வயதுவரை மாதம் 700 யூரோ படி 50,400 யூரோ. ஆக மொத்தம் எல்லாமாக 131,256 யுரோ.

ஒருபிள்ளைபிறந்து வளர்ந்து பெரியவனாவது வரை (18 வயது) 131,256 யூரோவை செலவு செய்வது நமக்கு ஆச்சரியமாக இருப்பினும் இது உண் மையானது. இவைபல வருடங்களாகப் புலம்பெயர்ந்து வந்து இங்கு வாழும் தமிழர்களின் பிள்ளைகளுக்கும் இதேபோன்றே செலவு ஏற்படுகிறது.

அரசு கணக்கிட்டுள்ள இந்தத் தொகையைவிட மாதாமாதம் பிள்ளைகளின் கைச்செலவுகளுக்கும் பெற்றோரின் வசதிக்கேற்ப பணம் கொடுக்கப் படுகின்றது. கைத்தொலைபேசி, விளையாட்டு, பொழுதுபோக்கு என்றும் இன்னபிற செலவுகள் ஏற்படுகின்றன. 15 வயது முதல் 18 வயது வரையான பதின்ம வயதினருக்கு மேலும் செலவுகள் காணப்படுகின்றன. இந்த வயதில் அவர்கள் ஆடம்பர உடைகள், காலணிகளை விரும்புகின்றனர். இவற்றை விட சைக்கிள், ஸ்கூட்டர், மோட்ட சைக்கிள், கார் போன்ற வாகனங்கள் ஓடிப் பழகி அனுமதிப்பத்திரம் பெறும்வரை ஏற்படும் செலவுகளும் இருக்கின்றன. இதற்கு சுமார் 2,000 - 3,000 யூரோக்கள் செலவு செய்யப்படுகின்றன. பெண் பிள்ளைகளுக்கும் தனியான செலவுகள் உண்டுதானே!

பிள்ளைகளுக்கு ஏற்படும் செலவினங்களை அரசு சில வகைகளாகப் பிரித்தும் கணக்கிட்டுள்ளது.

அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், மருத்துவம் என்பவற்றுக்கு 58 வீதம் செலவாகிறது. கல்வி, கலை, விளையாட்டு, பொழுதுபோக்கு என்பவற்றுக்கு 13 வீதம் செலவாகிறது. போக்குவரத்து, தொடர்பு சாதனங்கள் என்பவற்றுக்கு 11 வீதம் செலவாகிறது. நானாவித சிறு செலவுகள் 11 வீதமாக இருக்கிறது. விடுதிகள், உணவுச்சாலைச் செலவுகள் 06 வீதம். பிரத்தியேக கல்விச் செலவுகள் ஒரு வீதம் என்கிறது அரசு.

இந்த வேளையில் நாம் பிறந்து வளர்ந்த தேசத்தை நோக்கினால், ஒரு பிள்ளையை வளர்த்தெடுப்பதில் இவ்வளவு பணச்செலவு ஏற்படுமா என்கிற மலைப்பு ஏற்படுகிறது. சாதாரணமாக ஒவ்வொரு வீடுகளிலும் 5 , 6 பிள்ளைகள், ஏன் சில வீடுகளில் 10, 12 பிள்ளைகளும் பிறந்து வளர்ந்து வாழ்ந்து இருக்கிறார்கள். கல்வி கற்று, தொழில் செய்து, திருமணம்புரிந்து, பிள்ளைகுட்டிகள் பெற்று வாழையடி வாழையாகப் பெருகியிருக்கின்றனர்என்பதைநினைக்க வியப்பாகத்தான் இருக்கின்றது.

ஐரோப்பிய வாழ்க்கை முறைக்கும் நமது தாய் நாட்டு வாழ்க்கை முறைக்கும் நிறையவே வேறுபாடுகள் காணப்படுவதால் பிள்ளை வளர்ப்பில் நாம் பிறந்த தேசத்தில் இவ்வளவு தொகைப் பணம் செலவழிக்க வாய்ப்பில்லை என்றே படுகிறது. இவ்வளவு வசதிகள், சலுகைகள் வழங்கப்பட்டும் புலம்பெயர் தேசங்களில் நம்மவர் பிள்ளைகளில் பலர் சரியான வழிகளில்தான் வளர்க்கப்படுகிறார்கள் என்று சொல்ல முடியாது. நம் பெற்றோர்கள் விடும் பல தவறுகளும் பிள்ளைகளின் வாழ்வைப் பாதித்துவிடுகின்றன. அதாவது இந்த நாடுகளில் பல ஆண்டுகள் வாழ்ந்துகொண்டிருந்தாலும் சாதி, சமயம், நிறம், சாத்திரம், சம்பிரதாயம், பிரதேசம், ஊர், குலம், கோத்திரம், பணம், வறுமை என்று வேறுபாடுகளைக் காட்டும் பெற்றோர், தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை இருள் மயமாக்கி விடுகின்றனர். பிறக்கும் ஒவ்வொரு பிள்ளையும் அந்த நாட்டின் செல்வங்கள்தான். அவர்களைப் பேணி வளர்த்து, கல்வியூட்டி, அறிவூட்டி, நல்ல பிள்ளைகளாக்க வேண்டியது அரசின் பொறுப்பு என்று ஒருவரும் எண்ணிவிடக்கூடாது. ஒவ் வொரு பெற்றோரின் தலையாய கடமையும் பொறுப்பும் அது.



## தன்னுடைய முதலாளி தன்னைப் புறக்கணித்த போது அவனுக்கு விசரே பிடித்தது...

## ஆனால் காரணத்தை அறிந்தபோது அதிர்ந்து போனான்!!

கஜீவசி

என்னுடைய முதலாளி ஆடம்பர சொகுசுக் காரில் ஒவ்வொரு நாளும் வலம்வருவார். என்னுடைய கடமை, அவருடைய கார் வரும்போது வாசலைத் திறந்துவிட்டு அவருக்கு காலை, மாலை வாழ்த்துச் சொல்லவேண்டியதுதான். ஏனெனில் நான் அவரது சொகுசு மாளிகையில் காவலாளியாகப் பணியாற்றுகின்றேன். ஆனால், எனது முதலாளி ஒருநாள்கூட எனது வாழ்த்துக்குப் பதில் வாழ்த்துச் சொன்னதில்லை. அவரது மாளிகையில் இருந்து வெளியே வீசப்படும் குப்பைகள் அடங்கிய பையில் ஏதாவது மீதியான உணவுகள் இருக்கின்றதா என்று ஒருநாள் நான் தேடிக்கொண்டிருக்கையில் அவர் என்னைப் பார்த்துவிட்டார். நான் பதறிப்போனேன். ஆனால், எதையும் பார்க்காதது போலவே அவர் சென்றுவிட்டார். அதுதான் அவரது வழமையும்கூட. எதையும் கண்டு கொண்டதாகக் காட்டிக்கொள்ளமாட்டார் அவர்.

அடுத்த நாளே, குப்பைப் பை வைக்கும் இடத்தில் ஒரு பேப்பர் பை வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அது சுத்தமாகவும் நன்றாகவும் இருந்தது. உள்ளே நல்ல உணவுப் பொருள்கள் இருந்தன. சூடாகவும் இருந்தன. கடையிலிருந்து வாங்கி அப்போதுதான் எடுத்து வந்து வைத்தது போன்று இருந்தது அது. எங்கேயிருந்து அது வந்தது என்பதைப் பற்றி நான் அக்கறைப்படவேயில்லை. அந்தப் பையை நான் எடுத்துக்கொண்டேன். அந்த உணவைப் பார்த்ததில் என்னுடைய மகிழ்ச்சி எல்லைகடந்தது.

அதன் பின்னர் ஒவ்வொரு நாளும் அதே இடத்தில் கடதாசிப் பை ஒன்று காணப்படும்.

அதற்குள் சுத்தமான புத்துணர்ச்சியான மரக்கறிகள் காணப்படும். சில சமயங்களில் வீட்டுக்குத் தேவையான உணவுப் பொருள்கள் இருக்கும். அவற்றை நான் உண்பதுடன் வீட்டுக்கு எடுத்துச் சென்று மனைவி பிள்ளைகளுக்கும் கொடுப்பேன். இப்படி ஒவ்வொரு நாளும் முழுவதும் காய்கறிகளும் உணவும் அடங்கிய கடதாசிப் பையை இப்படி விட் டுச் செல்லும் முட்டாள்தனத்தைச் செய்வது யார் என்று எனக்கு வியப்பாக இருக்கும். இப்படி இருக்கையில் ஒருநாள் பெரும் பிரச்சினை வந்தது. என்னுடைய முதலாளி இறந்து விட்டார் என்று எனக்குச் சொல்லப்பட்டது. அதனால் முதலாளியின் மாளிகைக்கு அனுதாபிகள் பலரும் வந்து சென்றனர். அந்த நாள் எந்தவொரு கடதாசிப்பையும் எனக்குக் கிடைக்கவில்லை. வந்திருந்தவர்களில் எவராவது அதைத் தூக்கிச் சென்றிருப்பார்கள் என்று நினைத்தேன். ஆனால் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது நாள்களிலும் அதுவே தொடர்ந்து நடந்தது. தொடர்ந்து வந்த சில வாரங்களாகவும் எனக்கு உணவுப் பை கிடைக்கவேயில்லை. இது எனக்கு வேறு வழியில் பெரும் சிக்கலைத் தோற்றுவித்தது. எனது குடும்பத்துக்கு உணவளிப்பது இப்போது எனக்குப் பெரிய பிரச்சினையாக இருந்தது. அதனால், எனது சம்பளத்தை அதிகரித்துத் தரும்படி எனது முதலாளியின் மனைவியிடம் கோருவது என முடிவெடுத்தேன். அவர் முடியாதென்றால் வேலையை விட்டுவிட்டு புதிதாக ஒரு வேலை தேடிக்கொள்வது என்றும் முடிவெடுத்தேன்.

நான் எனது சம்பள விடயத்தை முதலாளியின் மனைவியிடம் சொன்னதும் அவர் அதிர்ச்சி அடைந்தார். கடந்த இரண்டு வருடங்களாக சம்பள அதிகரிப்புக் கேட்காமல்என்னசெய்துகொண்டிருந்தாய் என்று கேட்டார். அத்தோடு இரண்டு வருடங்களில் இல்லாமல் இப்போது ஏன் உனது சம்பளம் போதாமல் போய்விட்டது என்றும் கேட்டார். நான் பல பதில்களை, காரணங்களைக் கூறினாலும் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.

கடைசியில் நான் உண்மையைச் சொல்வது என்று முடிவெடுத்தேன். மரக்கறிகளாலும் உணவுகளாலும் நிரம்பியிருக்கும் கடதாசிப் பைகளைப் பற்றிய முழு விவரத்தையும் அவரிடம் எடுத்துச் சொன்னேன். இப்படித்தான் என்னுடைய நாளாந்த வாழ்க்கையின் பெரும் பகுதி சம்பளம் இல்லாமலேயே நகர்ந்து கொண்டிருந்தது என்பதையும் புரிய வைத்தேன். அதைக் கேட்டதும் அந்த நடைமுறை எப்போது நிறுத்தப்பட்டது என்று கேட்டார் முதலாளியின் மனைவி. அவருடைய கணவன் இறந்ததில் இருந்துதான் என்று சொன்னேன்.

அப்போதுதான் எனக்கே ஒரு மண்டையில் உறைத்தது. என்னுடைய முதலாளி இறந்ததில் இருந்துதான் எனக்கு அந்த கடதாசிப் பை கிடைப்பது நின்று போய் விட்டது என்கிற விடயம். இதுவரையில் எனக்கு இந்த உணவுப் பொருள்களைக் கொடுத்துக் கொண்டிருந்தவர் என்னுடைய முதலாளிதானா? நான் ஏன் இதுவரை இந்தக் கோணத்தில் சிந்திக்கவேயில்லை? ஏனென்றால், என்னுடைய வாழ்த்துக்களுக்கு ஒருபோதும் பதில் வாழ்த்தே சொல்லாத ஒரு மனிதன் எனக்காக இதனைச் செய்யக்கூடும் என்று நான் எண்ணவேயில்லை. என்னுடைய பதிலைக் கேட்டதும் முத லாளியின் மனைவி அழ ஆரம்பித்து விட்டார். அவரை அழாதீர்கள் என்று நான் மன்றாட்டமாகக் கேட்டுக் கொண்டேன். சம்பளத்தை அதிகரித்துத் தருமாறு கேட்டதற்காக என்னை மன்னித்துக்கொள்ளுங்கள் என்று சொன் னேன். எனக்கு இவ்வளவு நாள்களாக உணவு கொடுத்துக் கொண்டிருந்தவர் உங்கள் கணவர்தான் என்பது எனக்குத்தெரியாமல்போய்விட்டது. அதற்காக வருந்துகிறேன் என்றேன். நான் வாயில் காப்போனாகவே தொடர்ந்தும் மகிழ்ச்சியுடன் வேலை செய்கிறேன் என்றும் சொன்னேன்.

அதற்கு, முதலாளியின் மனைவி சொன்னார், என் கணவர் ஒரு முழுப் பை நிறைய உணவுப் பொருள்களை வழங்கி வந்த ஏழாவது நபரையும் நான் கண்டுபிடித்து விட்டேன் என்பதற்காகத்தான் நான் அழுதேன் என்று.

என்னுடைய கணவர் 7பேருக்கு ஒவ்வொரு நாளும் உணவுப் பொருள்களைக் கொடுத்து வந்தார் என்பது எனக்குத் தெரியும். அவர்களில் 6 பேரை நான் ஏற்கனவே கண்டுபிடித்து விட்டேன். இவ்வளவு நாள்களாக அந்த 7ஆவது நபரைத்தான் தேடிக்கொண்டிருந்தேன். இப்போது கண்டுபிடித்துவிட்டேன் என்று சொன்னார் முதலாளியின் மனைவி.

அந்த நாள் முதலாக எனக்கு, முழுப் பை நிறைந்த உணவுப் பொருள்கள் ஒவ்வொரு நாளும் மீண்டும் கிடைக்கத் தொடங்கின. ஆனால், இந்தமுறை பையை முதலாளியின் மகன் எனது வீட்டுக்கே எடுத்து வந்து எனது கைகளில் கொடுத்தார். ஆனால், நான் அதற்காக நன்றி சொல்லும்போதெல்லாம் அவர் பதிலளித்ததே இல்லை. அப்படியே அவரது அப்பாவைப் போல!

ஒரு நாள் "மிக்க நன்றி" என்று அவரைப் பார்த்து நான் பலமாகக் கத்தினேன். உடனே அவர் எனக்குத் திரும்பிப் பதிலளித்தார். தான் பதிலளிக்காமல் போவதை அவமதிப்பாகக் கருத வேண்டாம் என்றும் தனது தந்தையைப் போலவே தனக்கும் கேட்டல் குறைபாடு உள்ளதால் இந்த நிலை என்றும் அவர் தாழ்மையுடன் என்னிடம் சொல்லிக்கொண்டார்.

ஓ! மனிதர்களின் நடத்தைகளுக்குப் பின்னால் உள்ள உண்மையைப் பற்றித் தெரியாமலேயே பல சமயங்களில் நாங்கள் அவர்களை பிழையாக மதிப்பிட்டுவிடுகிறோம். ஒவ்வொருவருமே கடுமையான போராட்டங்களுடன்தான் வாழ்க்கையை நகர்த்துகிறார்கள். அவர்களுடன் பண்பாகவும் மரியாதை யாகவும் நடந்துகொள்வது அவசியம். எச்சரிக்கையாக இருக்கவேண்டும், எல்லாமே உங்களைப் பற்றியது மட்டுமல்ல. உய்த்துணர்வதற்கு முன்பாக ஒரு விடயம் இருக்கிறது செய்வதற்கு, அது 'வின வுங்கள்'.

முடிவுகளுக்கு அவசரமாகத் தாவிவிடாதீர்கள். ஏனெனில் உண்மையில் அது ஒரு பழக்கமாக இருக்க முடியாது. கடைசியில் அது உங்களை மிகவும் காயப்படுத்துவதாக வந்து முடிந்துவிடலாம். எங்களைச் சுற்றி நடப்பவற்றை நாம் எப்படி எடுத்துக்கொள்கிறோம் என்பதே எமது பிரச்சினைகள் பலவற்றுக்குக் காரணம். நீங்கள் ஒருபோதுமே அனுபவித்திருக்காத ஒரு சூழலைப் பற்றி, நிலமையைப் பற்றி ஒருபோதும் மதிப்பிடவோ அனுமானிக்கவோ முயற்சிக்காதீர்கள். போதுமான அளவுக்குப் புரிந்துகொள்வதற்கு, கற்றுக் கொள்வதற்கு உரிய அடக்கத்துடன் இருங்கள். எல்லாமே உங்களுக்குத் தெரியும் என்றில்லை. எங்களைப் பற்றியும் மற்றவர்களைப் பற்றியும் நாம் புரிந்துகொள்ளும் முறைகளை மாற்றிக்கொள்வோம். எல்லாக் கதைகளுக்கும் இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. நீங்கள் கேட்பவற்றை மட்டுமே நம்பாதீர்கள்.

நீங்கள் சந்திக்கும் எல்லோருமே தமக்கான போராட்டத்துடன்தான் இருக்கிறார்கள்; அது பற்றி உங்களுக்கு எதுவுமே தெரியாது.

# மீண்டும் சர்ச்சைக்குள்ளாகிய சூப்பர் சிங்கர்

(24ஆம் பக்கத் தொடர்ச்சி)



அடுத்த போட்டித் தொடர்களில் பின்னணிப் பாடகர்கள், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், ஹரிகரன், சித்திரா ஆகியோரையும் விஜய் தொலைக் காட்சி போட்டியில் பங்குபற்ற வைத்து வெற்றி வாய்ப்பை வழங்கும் என்று 'கலாய்க்கின் றனர்'.

இதனைவிட, 'ஏற்கனவே சினிமாவில் பாடியிருந்தவர்களும் பங்குபற்றலாம் என்று இப்போது வக்காலத்து வாங்கும் விஜய் தொலைக்காட்சி, ஏன் எந்தவொரு தருணத்திலும் ஆனந்தின் திரையிசை வரலாற்றை மீட்டிப் பார்க்கவில்லை ? இப்போது இந்தச் சம்பவம் நடந்திருக்காவிடின், ஆனந்த் அடுத்த சினிமாப் பாடலைப் பாடும் சந்தர்ப்பம் கிடைக்கின்ற போது, 'இதோ எங்கள் சூப்பர் சிங்கர் டைட்டில் வின்னர் இப்போது பின்னணிப் பாடகராக ஜொலிக்கிறார்' என்று விஜய் தொலைக்காட்சி மார்க்கெட் செய்திருக்கமாட்டார்கள் என்பது நம்பக் கடினமான விடயம். (ஏற்கனவே சிவகார்த்திகேயனை வைத்து மார்க்கெட் செய்கின்றார்கள்) இந்த விடயத்தையும் சமூகவலைத் தளங்களில் உள்ளவர்கள் பகிரத் தவறவில்லை.

இந்தரியாலிட்டிஷோக்கள்தொடர்பில்' தமிழக ஊடகவியலாளர் ஒருவர் பின்வருமாறு தனது கருத்தைப் பதிவு செய்கின்றார். 'சில ஆண்டுகளுக்கு முன்பு, பிரபலதொலைக்காட்சிஒன்றில் நடைபெற்றசிறுவர்களுக்கான குரல் தேடல் இசை நிகழ்ச்சியொன்றைக் காணச் சென்றிருந்தேன். பத்திரிகையாளனாக அல்ல. பார்வையாளனாக. முதல் சுற்று என்று நினைக்கிறேன். பிரபல ஸ்டுடியோவில் பிரமாண்டமான அரங்கம் அமைத்துச் செய்தார்கள். அரங்க வடிவமைப்பாளர் எனது நண்பர். அவர் அழைத்துச் சென்றார்.

நிகழ்ச்சி நடந்து கொண் டிருந்தது. பார்வையாளர்கள் என்று சில அப்பிராணிகளை செட் செய்திருந்தார் கள். ஒரு சிறு குழந்தையை 'எலி மினேட்' செய்தார்கள். அந்தக் குழந்தை 'நீ யாருடா, கொய்யால, என் திறமையை அளவிடுவது' என்று கெத்தாக நின்றது.

'கட் கட் கட்...' என்றார் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்.

"நீ தோற்றுப் போகும் போது சிரிச்சிட்டாம்மா இருப் பாய்.... பீல் பண்ணும்மா. கண் ணில கண்ணீர் வேணும்மா" என்றார். தோல்வி மனதில் விதைக்கப்பட, சில நிமிடங்களிலேயே அந்தக் குழந்தை தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தது, என்று அந்தத் தமிழக ஊடகவியலாளர் குறிப்பிட்டிருந்தார்.

தமிழக தொலைக்காட்சிகளின் வணிக நோக்கைப் புரிந்து கொள்ளாமல் இங்கு இருப்பவர்களும், இந்த ரியாலிட்டி ஷோக்களை உருகிப் பார்த்து ரசிப்பதுதான் வேதனையானது.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 413

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | | ■ | 11 | |
| | ■ | 12 | | ■ | 13 | | ■ |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | 16 |
| 17 | | ■ | 18 | | | | |
| 19 | | 20 | | ■ | | ■ | |
| 21 | | | ■ | 22 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................

பூரணமான தபால் விலாசம்: ........................................

........................................

கையொப்பம்:........................................

### இடமிருந்து வலம்

1. வேளாண்மை செய்பவன்
4. சிலப்பதிகாரத்தில் கோவலன் காதல் நாயகி
7. ஏழுநாள்கள்
8. தென்னோலையைக் கீறிப் பெறுவது
9. இளைய சகோதரர்மார்
11. வேகம்
12. சோதிடத்தில் முக்கியம் பெறுவது
13. போதை தருவது
14. குழு
15. சிங்கம்
17. வலிமை
18. சினிமாவிலும் நாடகத்திலும் பலரும் செய்வது
19. ஓலையால் வனைந்த பெட்டி
21. சிதம்பரம்
22. படியாத தன்மை

### மேலிருந்து கீழ்

1. தர்க்கம்
2. அருள் கூர்ந்து அளிப்பது
3. முட்டாளைத் திட்டப் பாவிக்கும் சொல்
4. நெஞ்சு
5. பொருத்தமானது
6. பகுபத உறுப்பில் ஒன்று
8. இரண்டு
10. தமிழ் மாதங்களில் ஒன்று
13. இறத்தல்
14. ஒருவரைப் பற்றி மற்றொருவரிடம் கோள் சொல்லுதல்
15. பன்னிரண்டு அங்குலம்
16. கொலை செய்யாமை
17. தினசரி மாறுவது
18. நம்முடைய
20. இது அறுபத்தி நான்கு என்பர்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ. மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வது டன். அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடை களை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 411 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

**இடமிருந்து வலம்**

(1)மதிப்பு (4)பதவி (6)கரை (7)வசதி (9) கனதி (10)அலை (11)துவரம் (13)நேரு (14)வடம் (15)இரும்பு (17)பதியம் (19)முற்றல் (20)சய (21)நன்று (22)புளுகன்

**மேலிருந்து கீழ்**

(1)மகத்துவம் (2)திறை (3)புவனம் (4)பதி (5)வில்லை (8)சதி (9)கரம்பற்று (10)அரும் (12)வட (13) நேரும் (15)இயய்பு (16)புடையன் (18)திற (19)முன் (20)சக

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இல.413 பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (06.04.2016 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 411இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
பு.பிரவீணா,
மு/மல்லாவி மத்திய கல்லூரி,
யோகபுரம், மல்லாவி, முல்லைத்தீவு

**2 ஆம் பரிசு**
ஜெ.கிறிஸ்ரெலா,
மெதடிஸ்த திருச்சபை, அன்புவழிபுரம்,
திருகோணமலை.

**3 ஆம் பரிசு**
சு.பாலதர்சன்,
"அட்ஷயம்"முதியோர் பராமரிப்பு இல்லம்,
பண்டகை ஒழுங்கை, உடுப்பிட்டி

**4 ஆம் பரிசு**
ஜே.மாதவன்,
இல.41 A, சிவப்பிரகாசம் வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**5 ஆம் பரிசு**
திருமதி லீ.ஸ்கந்தமயம்,
'வைற் பீல்ட்'
சிந்தங்கேணி.

**பாராட்டுப் பெறுவோர்**

A.S.ஆசீர்வாதம்,
இல 5/3 ஆரமட் ரவர்,
33.அருத்துஷா லேன், கொழும்பு-6

செ.ஜெயபாலன் பறுனாந்து,
சென்.மேரீஸ் றோட்,
பேசாலை - 8

பா.பிரியங்கா,
2ஆம் வட்டாரம், முள்ளியவளை,
முல்லைத்தீவு.

சொற்சிலம்பம் போட்டி இல.413இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 10.04.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 411 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**



# இந்தியாவா? ஆஸ்திரேலியாவா?

## கிண்ணக் கனவை தொடர்வது யார்?







பிரகாஸ்

**ரி-20** உலகக்கிண்ணத் தொடரின் லீக் சுற்று தனது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதுவரை நடைபெற்று முடிந்த ஆட்டங்களிலேயே இன்று நடைபெறவுள்ள இந்தியா–ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் தான் பெரியதொரு முக்கியத்துவம் வாய்ந்த ஆட்டமாகக் கருதப்படுகிறது. இந்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே அரையிறுதிக்குத் தகுதிபெறும் என்ற நிலைமையே குறித்த ஆட்டத்தின் மீது இவ்வாறு பெரும் எதிர்பார்ப்பை உருவாக்கியிருக்க காரணம் எனலாம்.

இன்று களமிறங்கும் இந்திய அணியைப் பொறுத்தமட்டில் கடந்த ஆட்டங்களில் களமிறங்கிய துடுப்பாட்ட வரிசையின் படி ரோகித், தவான், கோக்லி, ரெய்னா, யுவராஜ், பாண்டியா, டோனி, ஜடேஜா, அஸ்வின், நெஹெரா, பும்ரா என்றவாறான அணியே களமிறங்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் தவான் தொடர்ந்து தடுமாற்றம்காட்டி வருகிறார். இதனால் ரஹானேயை ஆரம்ப வீரராக களமிறக்கி தவான் அணியில் இருந்து நீக்கப்படலாம் என்றும் அபிப்பிராயங்கள் வெளியாகியுள்ளன. ஆனால் ஆரம்பத் துடுப்பாட்டத்தில் இடது, வலது என்ற மாதிரியை, டோனி பின்பற்றுபவர் என்ற அடிப்படையில் இன்றைய ஆட்டத்திலும் தவான் அணியில் தொடர்வதற்கான வாய்ப்புக்கள் அதிகம். மற்றும்படி இந்திய அணி பலமாகத்தான் உள்ளது. அஸ்வின் வரை 8 துடுப்பாட்ட வீரர்களையும், பும்ரா, நெக்ரா, பாண்டியா என மூன்று வேகப்பந்து வீச்சாளர்களையும், அஸ்வின், ஜடேஜா என இரு சுழல் வீரர்களையும், யுவராஜ், ரெய்னா என இரு பகுதிநேரப் பந்துவீச்சாளர்களையும் கொண்டு அந்த அணி ஆஸ்திரேலியாவை வீழ்த்தும் வகையில் உள்ளது. சொந்த மண்ணின் பலம் அந்த அணிக்கு மேலும் கைகொடுப்பதுடன் அளவுக்கு அதிகமான நெருக்கடிகளையும் ஏற்படுத்தும்.

ஆஸ்திரேலியாவைப் பொறுத்த மட்டில் அந்த அணி எப்பொழுதும் பலமான அணி என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஆரம்ப வீரரான கவாயா சிறந்த போர்மில் (திறன்) இருப்பதும், மத்திய வரிசையில் வோர்ணர் உள்ளமையும் அந்த அணியின் முன்வரிசைப் பலம். சிமித், மக்ஸ்வெல், வற்சன் மத்திய வரிசையில் தூண்களாக உள்ளனர். மொத்தத்தில் ஆஸ்திரேலியாவின் துடுப்பாட்டம் இந்தியாவுக்கு சிறிதும் குறைவடையாமல் உள்ளது. பந்துவீச்சே ஆஸ்திரேலியாவின் பலவீனம். இந்திய ஆடுகளங்கள் சில சமயம் சுழலுக்கு சாதகமாக அமைந்துவிடும் தன்மையுடையன. அவ்வாறான ஆடுகளத்தில் சாதிக்கக்கூடிய சுழல் வீரர்கள் ஆஸ்திரேலியாவிடம் இல்லை. மக்ஸ்வெல் மட்டுமே இந்தியாவின் ஆடுகளங்களைப்பற்றி அறிந்து வைத்திருக்கும் ஒரேயொரு சுழல் வீரர். இந்த பலவீனத்தை இந்தியா சிறப்பாகப் பயன்படுத்திவிட்டால் நிச்சயம் ஆஸ்திரேலியாவை வீழ்த்திவிடலாம். இந்தியாவின் சுழல் பலத்தை ஆஸ்திரேலியா சமாளித்துவிட்டால் நிச்சயம் இந்தியாவை வீழ்த்தி விடலாம். மொத்தத்தில் ஆட்டம் அனல் பறக்கும் என்பதில் ஐயமில்லை. விடிந்தால் தெரிந்துவிடும் அரையிறுதியில் யார்? என்பது.

# புறக்கணிக்கப்படுவது ஒரு அணி மட்டுமல்ல தேசியக் கனவுகளும் சில பதக்கங்களும்

## மாகாண மட்ட போட்டிகளில் மூன்றாம் அணி ஏன் இல்லை?

இதுவரை காலமும் வலயம், மாவட்டம், மாகாணம் என்ற கட்டமைப்பிலேயே பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுவந்தன. ஆனால் கால அவகாசங்களைக் கருத்தில் கொண்டும், நிதிப் பிரச்சினை காரணமாகவும் நடப்பு வருடத்தில் மாவட்ட மட்டப்போட்டிகளை நடத்தாமல் மாகாண மட்ட போட்டிகளை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன்படி, வலயங்களில் இருந்து முதல் இரு இடங்களைப் பெறும் அணிகளே மாகாணத்துக்கு தகுதி பெறும் என்பதே பிரதான நிபந்தனை. விளையாட்டு ஆர்வலர்கள் பலரும் இந்த நிபந்தனையை கடுமையாக விமர்சித்து வருகின்றனர். உண்மையில் இந்த முறைமை என்பது பிற்போக்கான சிந்தனையாகவே எண்ணத் தோன்றுகின்றது. ஏனெனில் வலயத்தில் மூன்றாவது இடத்தைப் பெறும் அணி, மாவட்டத்தில் சாதித்து தேசியத்திலும் பதக்கம் வென்ற நிறையப் பதிவுகள் எம்மிடத்தில் உள்ளன. உதாரணமாக: கடந்த வருடத்தில் நடைபெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டத் தொடரில் வலிகாமம் வலயத்தில் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி அணி மூன்றாமிடத்தையே பெற்றிருந்தது. ஆனால், சரிவில் இருந்து மீண்டு மாவட்டம், மாகாணம் என தொடர்ச்சியாகச் சாதித்து தேசியத்தில் தங்கம் வென்று வியக்க வைத்தது. அந்த அணி வெற்றிபெற்ற தருணத்தில் பாடசாலைகள், வலயங்கள், மாவட்டங்கள் என்ற வேறுபாடுகளைக் களைந்து பலரும் ஹென்றிஸின் அணியை மிகையாகப் பாராட்டினர். நடப்பு வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த நடைமுறை கடந்த வருடத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்தால் தங்கப்பதக்கத்தை அந்த அணி சாதித்திருக்குமா. நிச்சயம் இல்லை. குறித்த அணியின் பயணம் வலயத்துடன் சுருங்கி முடங்கியிருக்கும்.

வடமாகாணத்தில் ஹொக்கி அணிகளை நான்கு பாடசாலைகள் மட்டுமே கொண்டுள்ளன. தெல்லிப்பழை யூனியன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆகியனவே அவை. இவற்றில் தெல்லிப்பழை யூனியன், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, மானிப்பாய் இந்துக்கல்லூரி மூன்றும் வலிகாமம் வலயத்தைச் சார்ந்தவை. மூன்றும் பலமான அணிகளே. இரண்டு அணிகள் மட்டுமே மாகாணத்துக்கு தகுதி பெறும் என்ற நிலையில், ஏதேனும் ஒரு அணி தனது வாய்ப்பை இழக்கப்போகிறது. அதில் விதிவிலக்கைப் பேணுதல் சிறப்பானதாக அமையும். மட்டுமல்லாமல் கபடித் தொடர்களில் தேசியத்தில் கலக்கிய சிவநகர் அ.த.க. பாடசாலையின் அணிகள் சிலவற்றின் வருகையும் இவ்வாறே அமைந்துள்ளன. இவையே இந்த மூன்றாவது அணியைப் புறக்கணித்தமையை பலரும் ஏற்றுக் கொள்ளாமைக்கு பிரதான காரணம். வலய மட்டங்களில் மூன்றாவது இடத்தைப் பெறும் அணி மாவட்ட மட்டப் போட்டிகளுக்கு உள்வாங்கப்பட வேண்டும் என்று உடற்கல்வி ஆசிரியர்களும் தமது பங்குக்கு கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர். மெய்வல்லுனர் பயிற்சி முகாமுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ். இந்து மகளிர் கல்லூரியில் கடந்த வியாழனன்று நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலில் கலந்துகொண்ட உடற்கல்வி ஆசியர்களாலேயே இந்தக் கோரிக்கை உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரிடம் முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் ஏனைய மாகாணங்களில் வலயங்களில் இரு அணிகள் தெரிவு செய்யப்பட்டே மாகாண மட்டப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றமையாலும், கால அவகாசம், பண நெருக்கடி ஆகியவற்றைக் கருத்தில் கொண் டும் அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. காரணம் என்னவாக அமைந்தாலும் வலயத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்ற அணியைப் புறக்கணித்து மாகாண மட்டத் தொடரை நடத்துவதென்பது நிச்சயம் பிற்போக்கான சிந்தனையே.

**நாளை**
**பங்குனி -15**
திங்கட்கிழமை 28.03.2016
திதி: பஞ்சமி பி.இ.02.59 வரை
நட்சத்திரம்: அனுசம் முழுவதும்
ராகுகாலம்: 07.43-09.13 வரை
சுபநேரம்: 12.13-01.43 வரை

# தேவையான குறிப்புகள்

- வெண்டைக்காய் புதியதாக இருந்தால், சமைக்கும்போது வழுவழுப்பாக இருக்கும். அதைத் தவிர்க்க, வெண்டைக்காய் மீது மோரையோ அல்லது புளி கரைத்த நீரையோ தெளித்தால் நன்றாக இருக்கும்.
- பச்சை மிளகாய் பழுக்காமல் இருக்க, ஒரு போத்தலில் மிளகாயுடன் மஞ்சள் பொடி ஒரு சிட்டிகை போட்டு, இறுக மூடி வைக்க வேண்டும்.
- பயறு வகைகளை வாங்கியதும், அவற்றை வெறும் சட்டியில் போட்டு, லேசாகச் சூடாக்க வேண்டும். அதன் பின்னர், டப்பாவில் போட்டு வைத்தால், பூச்சி பிடிக்காது.
- பருப்பு ரசம் செய்யும் போது இரண்டு பச்சை மிளகாயை நீள வாக்கில் வெட்டி, ரசம் நுரைத்து வரும்போது போடுங்கள். அதன் சுவை நன்றாக இருக்கும்.




# பிரின்ரட் லெகின்ஸ்

சிறுவர்களுக்கான பிரின்ரட் லெகின்ஸ் அதிகமாகியுள்ளன. பலவித வர்ணங்களில், பிரின்ரட் டிசைன்களுடன் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன. இவை 400 ரூபா தொடக்கம் 450 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றன.



# மிளகு சீரக இட்லி

**தேவையானவை:**
இட்லி மா - 2 கப்
பெரிய வெங்காயம் - 1
பூண்டு - 4 பல்
கறிவேப்பிலை - சிறிது
கெட்டியான புளிச்சாறு - ஒரு கரண்டி

**தாளிக்க:**
கடுகு அரைக்கரண்டி
கறிவேப்பிலை - சிறிது
எண்ணெய் - 2 கரண்டி

**அரைக்க:**
மிளகு - 2 கரண்டி
சீரகம் - 1 கரண்டி
பூண்டு - 3 பல்

**செய்முறை:**
இட்லி மாவை, சிறு சிறு இட்லிகளாக ஊற்றி எடுங்கள். மிளகு, சீரகத்தை அரைத்தெடுங்கள். எடுக்கும் தறுவாயில் பூண்டை உரித்து, அதனுடன் வைத்து நசுக்கிக் கொள்ளுங்கள்.
வெங்காயத்தைப் பொடியாக நறுக்குங்கள். எண்ணெயைக் காய வைத்து, கடுகு தாளித்து, வெங்காயம், பூண்டைச் சேருங்கள்.
அத்துடன் சிட்டிகை உப்பு, மஞ்சள்தூள் சேர்த்து நன்கு வதக்கி, அரைத்த மிளகு, சீரகம், பூண்டுக் கலவை சேர்த்து பச்சை வாசனை போக வதக்கி புளிச்சாறு, இட்லி, கறிவேப்பிலை, சிட்டிகை உப்புச் சேர்த்து கிளறி இறக்குங்கள்.



# மரக்கறி விலை நிலைவரம்

| | [illegible] | சாவகச்சேரி | [illegible] | [illegible] | திருநெல்வேலி | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 30 | – | 50 | 40 | 30 | 40 | 25 | 25 |
| கத்தரி | 80 | 60 | 100 | 80 | 60 | 120 | 50 | 80 |
| கரட் | 80 | 80 | 80–200 | 100 | 70 | 200 | 70 | 80 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 80 | 50 | 80 | 80 | 60 | 120 | 100 | 50 |
| பாகல் | 120 | 100 | 140 | 120 | 100 | 160 | 110 | 110 |
| கருணைக்கிழங்கு | 100 | 70 | 80 | – | 50 | – | 50 | 20 |
| பெ.வெங்காயம் | 60 | 70 | 70 | 80 | 70 | 80 | 60 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 70 | 50 | 60 | 60 | 80 | 60 | 65 |
| பூசணி | 50 | 40 | 25 | 40 | 40 | 60 | 35 | 35 |
| தக்காளி | 30 | 40 | 30 | 60 | 20 | 80 | 25 | 25 |
| வாழைக்காய் | 40 | 40 | 50 | 50 | 40 | 60 | 40 | 40 |
| கீரை | 40 | 40 | 40 | 20 | 40 | 40 | 20 | 15 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 40 | 20 | 40 | 20 | 20 |
| பச்சை மிளகாய் | 100 | 120 | 120 | 100 | 100 | 120 | 100 | 120 |
| புடோல் | 40 | 60 | 60 | 60 | 60 | 60 | 30 | 50 |
| கோவா | 40 | 50 | 50 | 60 | 50 | 80 | 35 | |
| வெண்டி | 70 | 60 | 60 | 80 | 80 | 60 | 60 | 60 |
| போஞ்சி | 160 | 140 | 120 | 160 | 100 | 120 | 70 | 70 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 | 140 | 120 | 160 | 100 | 70 |
| தேங்காய் | 40 | 40 | 50 | 40–50 | 40 | 30 | 30–40 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 | 80 | 80 | 80 | 60 | 60 |
| தேசிக்காய் | 100 | 160 | 120 | 120 | 140 | 160 | 110 | 110 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 120 | 120 | 160 | 80 | 80 |
| இராசவள்ளி | 140 | 140 | 140 | 140 | 140 | – | 110 | 110 |
| முருங்கைக்காய் | 700 | 400 | 800 | 400 | 400 | – | 350 | 400 |
| பனங்கிழங்கு | 05 | 05 | – | 02 | 07 | – | 03 | – |



# நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | [illegible] | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 750 | 800 | 600 | 600 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 300 | 100 | – |
| கணவாய் | 550 | 600 | 500 | 500 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 500 | 600 | 400 |
| சுறா | 550 | 600 | 600 | 800 | 600 | 600 | 600 |
| சீலா | 250 | 400 | 400 | 450 | 400 | 500 | 350 |
| விளை | 600 | 400 | 400 | 500 | 450 | 500 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 300 | 400 | – |
| கும்பிளா | 400 | 350 | 300 | 400 | 400 | 500 | 350 |
| கிளாக்கன் | 500 | 800 | – | – | 400 | 500 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | – | 300 |
| திரளி | 250 | 250 | 200 | 200 | 300 | 200 | – |
| நகரை | 200 | 250 | – | 250 | 300 | – | 300 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 250 | 250 | 150 | 250 | 300 | – | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | 300 | 150 |
| மதனம் | 150 | 250 | 180 | 350 | 300 | 400 | 200 |
| கொய் | 100 | 250 | 60 | 80 | 100 | 100 | – |
| பாலை | 350 | 200 | 250 | 400 | 350 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | 350 | 250 | 300 | – |



**மேடம்:** பிறருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். தொழிலில் இருந்த குளறுபடி சரியாகும். பணவரவு தாராளம். ஆரோக்கியம் பலம் பெறும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.



**இடபம்:** உயர் குணம் உள்ளவரின் நட்புக் கிடைக்கும். தொழிலில், திட்டமிட்ட வளர்ச்சி ஏற்படும். ஆதாயம் உயரும். பெண்கள், பணவசதிக்கேற்ப ஆடை, ஆபரணம் வாங்குவர்.



**மிதுனம்:** செயல்களில் நிதானம் அவசியம். தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை. குடும்ப ஒற்றுமை நன்மைக்கு வழிவகுக்கும்.



**கடகம்:** உங்கள் செயலில் தடுமாற்றம் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். உறவினரைக் குறை சொல்ல வேண்டாம். வாகனத்தில் மிதவேகத்தைப் பின்பற்றவும்.



**சிங்கம்:** குடும்ப வளர்ச்சியை எண்ணி மனம் மகிழ்வீர்கள். தொழிலில் உற்பத்தி, விற்பனை வியத்தகு முன்னேற்றம் பெறும். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். வெகுநாள் சந்திக்க நினைத்த நண்பரைச் சந்திப்பீர்கள்.





**கன்னி:** மனக்குறையை அறிமுகம் இல்லாதவரிடம் பேச வேண்டாம். தொழிலில், பொறுப்பு அதிகரிக்கும். அளவான பணவரவு கிடைக்கும். சுபவிடயத்தில் எதிர்பார்ப்பு நிறைவேற தாமதமாகலாம்.



**துலாம்:** நண்பரின் நற்செயலைப் பாராட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில், நிலுவைப்பணி நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.



**விருச்சிகம்:** நண்பர்களிடம் வாக்குவாதம் செய்ய நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் உள்ள அனுகூலத்தைப் பாதுகாக்கவும். மிதமான பணவரவு கிடைக்கும். விஷ ஜந்துக்களிடம் இருந்து விலகுவது நல்லது.



**தனுசு:** கடந்த கால நற்செயலுக்கான நன்மை தேடிவரும். தொழிலில், அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். வருமானத்தில் திருப்திகரமான நிலை உண்டு. இஷ்ட தெய்வ வழிபாடு நடத்துவீர்கள்.



**மகரம்:** புதியவர்களின் அன்பும் நட்பும் கிடைக்கும். தொழிலில், விற்பனை அதிகரிக்கும். பணவரவு திருப்திகரமாகும். பெண்களுக்கு, பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.



**கும்பம்:** நண்பரின் ஆலோசனை நம்பிக் கையளிக்கும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்க, புதிய உத்தியைப் பயன்படுத்துவீர்கள். ஒவ்வாத உணவு வகைகளைத் தவிர்ப்பது நல்லது.



**மீனம்:** உறவினர், எதிர்பார்ப்பு எண்ணத்துடன் அணுகுவர். தொழிலில், நெருக்கடிக்கு ஆளாக நேரிடலாம். இலாபம் சுமாராக இருக்கும். வீட்டுச் செலவு அதிகரிக்கும். மாணவர்கள் பாதுகாப்பற்ற இடத்துக்குச் செல்ல வேண்டாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | | 7 | | | 3 |
| | 5 | | | 4 | | | | |
| 9 | | | | | | | 6 | 7 |
| | | | | 3 | | | 2 | 5 |
| | | | | | 1 | | 7 | |
| | 8 | | | 9 | | | | |
| 1 | 3 | | 4 | | | | 9 | |
| | | 8 | | | 5 | | | |
| | | | | 1 | | | | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 6 | 4 | 1 | 5 | 2 | 3 | 7 | 9 |
| 1 | 3 | 5 | 4 | 9 | 7 | 8 | 2 | 6 |
| 9 | 7 | 2 | 3 | 6 | 8 | 1 | 5 | 4 |
| 5 | 1 | 9 | 2 | 3 | 4 | 6 | 8 | 7 |
| 7 | 8 | 6 | 6 | 1 | 5 | 4 | 9 | 2 |
| 2 | 4 | 8 | 8 | 7 | 9 | 5 | 3 | 1 |
| 6 | 2 | 1 | 9 | 8 | 3 | 7 | 4 | 5 |
| 4 | 5 | 8 | 7 | 2 | 6 | 9 | 1 | 3 |
| 3 | 9 | 7 | 5 | 4 | 1 | 2 | 6 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப் பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதா கும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# வருகிறார் ஜோக்கர்

"குக்கூ" படம் மூலம் இயக்குநராக அறிமுகமானவர் ராஜுமுருகன். அட்டக்கத்தி தினேஷ், மாளவிகா நடிப்பில் வெளியான இந்தப்படம் இரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்புப் பெற்றது. விமர்சன ரீதியாகவும் வெற்றி பெற்றது.

இந்தப்படத்தின் வெற்றியை அடுத்து ராஜுமுருகன் புதிய படத்தை இயக்கத் தொடங்கினார். இந்தப்படத்தில் நடிக்கும் நடிகர்கள், நடிகைகள் உள்ளிட்ட தகவல்களை வெளியிடாமல் இருந்த படக்குழு, ஒட்டு மொத்த படப்பிடிப்பு மற்றும் இறுதிகட்ட பணிகளை முடித்து விட்டு தற்போது படத்தின் பெயரை அறிவித்துள்ளது.


இந்தப் புதிய படத்துக்கு "ஜோக்கர்" எனப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. படத்தின் நாயகனாக "ஆரண்ய காண்டம்" மற்றும் "ஜிகர்தண்டா" போன்ற படங்களில் நடித்த சோமசுந்தரம் நடித்திருக்கிறார். இவர் நாயகனாக நடிக்கும் முதல் படம் "ஜோக்கர்". நாயகிகளாக புதுமுகங்கள் காயத்திரி மற்றும் ரம்யா நடித்திருக்கிறார்கள்.

பப்பிரெட்டிப்பட்டி என்கிற கிராமத்தில் இருக்கிற மன்னர் மன்னன்தான் இந்த ஜோக்கர். படம் நகைச்சுவைக் காட்சிகள் நிறைந்ததாக இருக்கும். இதில் எழுத்தாளர் மு.ராமசாமி, பவா செல்லத்துரை, ச.பாலமுருகன் ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள். செழியன் ஒளிப்பதிவு செய்திருக்கும் படத்துக்கு ஷான் ரோல்டன் இசையமைத்திருக்கிறார். யுகபாரதி பாடல்களை எழுதியுள்ளார் தற்போது இறுதிக் கட்டப் பணிகளில் இருக்கும் ஜோக்கர் ஏப்ரல் மாத இறுதியில் வெளியாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது.










நகைச்சுவை மட்டும்

## தூக்கமே வரல கதை சொல்லுமா

**எனக்கும் வரல, உங்க அப்பனும் இன்னும் வரல. வரட்டும், ஏன் லேட்டு என்று கேட்போம். அப்புறம் பாரு, உங்க அப்பன் எத்தன கதை சொல்லுறார் என்று.**








Mr.வண்டு முருகன் :

**சாப்பிடுவதற்கு முன்னாடி கை கழுவவேணும் என்று சொல்லுவாங்க. மூன்று வேளையும் குளிச்சா தான் சாப்பிடலாம் என்று சொன்னா நம்ம நிலைமை என்னவாகிறது?**

# அகஞ் சுரக்கும் தொகுதியியல் (Endocrinology) என்றால் என்ன?

மருத்துவர் எம்.அரவிந்தன்

**1. அகஞ்சுரக்கும் தொகுதியியல் என்றால் என்ன என்பது பற்றிச் சிறிது விரிவாகக் கூறுங்கள்?**


எமது உடலில் பல வகையான ஹோர்மோன்களைச் சுரக்கும் சுரப்பிகள் உள்ளன. இவ்வாறான ஹோர் மோன்களைச் சுரக்கும் சுரப்பிகள் ஒட்டுமொத்தமாக அகஞ்சுரக்கும் தொகுதியென அழைக்கப்படுகின்றது. இந்த அகஞ் சுரக்கும் தொகுதி சம்பந்தமான நோய்கள் தொடர்பாக ஆராயும் பிரிவானது அகஞ்சுரக்கும் தொகுதியியல் (Endocrinology) என அழைக்கப்படுகின்றது. இது பொது மருத்துவத்தின் (General medicine) பிரதானமான ஒரு பிரிவாகக் கருதப்படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் பொது மருத்துவமானது மேலும் பல உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு சிறந்த முறையில் சிகிச்சை முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**2. ஹோர்மோன் சுரப்புக்கள் தொடர்பாக ஏற்படும் நோய்கள் மற்றும் பிரச்சினைகள் பற்றி விளக்கிக் கூறுங்கள்?**

எமது உடலில் பல வகையான ஹோர்மோன் சுரப்புக்கள் (Endocrine glands) உள்ளன. (படம்1) சதையியில் ஏற்படும் இன்சுலின் சுரப்புக் குறைபாடு, எதிர்ப்பினால் நீரிழிவானது ஏற்படுகின்றது. இதேபோல கழுத்துப் பகுதியிலுள்ள தைரொயிட் சுரப்பியில் ஏற்படும் பிரச்சினைகளால் தைரொயிட் குறைபாட்டு நிலை மற்றும் தைரொயிட் மிகைச்சுரப்பு நிலை என்பவை ஏற்படுகின்றன. மூளையினுள் உள்ள கபச் சுரப்பியே




பிரதானமான ஹோர்மோன் சுரப்பியாகும். இதுவே உடலிலுள்ள அனேகமான ஹோர்மோன் சுரப்பிகளைக் கட்டுப்படுத்துகின்றது. கபச் சுரப்பியில் (Pituitary gland) அல்லது அதற்கு அருகிலேற்படும் கட்டிகளால் அல்லது கபச் சுரப்பி தனது செயற்பாட்டை இழப்பதால், பல வகையான பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக கபச் சுரப்பியில் ஏற்படும் கட்டியினால் அல்லது அந்தக் கட்டியானது அருகிலுள்ள பகுதிகளைத் தொடுவதனால் (prolactin) என்ற ஹோர்மோன் சுரப்பு உடலில் அதிகரிக்கின்றது. இதனால் பெண்களில் மாதவிடாய் பிரச்சினைகள் குழந்தைப்பேறு பாதிப்படைதல், மார்பகக் காம்பினூடாகப் பால் வடிதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அதேபோல ஆண்களிலும் பாலியல் சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட நேரிடுகிறது. இவ்வாறான கட்டிகளால் தலைவலி, வாந்தி மற்றும் பார்வைக் குறைபாடுகள் போன்றவையும் ஏற்படுகின்றன. சில வகையான கபச் சுரப்பிக் கட்டிகள் ஹோர்மோன்களை மேலதிகமாகச் சுரக்கின்றன. இதனால் பல வகையான ஹோர்மோன் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. உதாரணமாக உயர ஹோர்மோனானது அதிகமாகச் சுரக்கும்போது உடல் அவயவங்களின் பருமன் அதிகரித்து




'Acromegaly' என்ற நோய் ஏற்படுகின்றது. கபச் சுரப்பியின் தொழிற்பாடு குறையும்போது அல்லது செயலிழக்கும்போது உடலில் பல வகையான ஹோர்மோன் குறைபாட்டு நோய்கள் ஏற்படுகின்றன. காலம் தாழ்த்திப் பூப்படைதல் (Delayed puberty) அல்லது குறைந்த வயதில் பூப்படைதல் என்பவையும் ஹோர்மோன் தொடர்பான பிரச்சினைகளேயாகும்.

எமது உடலிலுள்ள கல்சியம் போன்ற பல வகையான கனியுப்புக்களின் தொழிற்பாட்டைக் கட்டுப்படுத்துவதும் ஹோர் மோன்களே. எலும்பு தேயும் நோய் (Osteoporosis) என்பதும் அகஞ்சுரக்கும் தொகுதியியலில் அடங்கும் ஒரு பிரதான பிரச்சினையாகும். சிறு பிள்ளைகள் உயரம் குறைவாக இருத்தலுக்கு உயர ஹோர்மோன் (Growth hormone) குறைபாடும் ஒரு காரணமாகும். இதனை நாம் கண்டறிந்தால் ஹோர்மோன் சிகிச்சையின் மூலம் சாதாரண உயரத்தை இந்தச் சிறுவர்கள் அடைய முடியும்.

இன்றைய காலகட்டத்தில் உடற் பருமன் அதிகரிப்பதால் பல வகையான நோய்கள் ஏற்படுவதைக் காணக் கூடியதாகவுள்ளது. பல பெண்கள் மாதவிடாய்ப் பிரச்சினைகளோடு உடலில் முடி வளர்தல் போன்றவற்றுக்கும் உள்ளாகின்றார்கள். சூலகத்தில் ஏற்படும் சிறு கட்டிகள் (Polycystic ovarian syndrome) இதற்குப் பிரதானமானதொரு காரணமாகும்.

**3. இவ்வாறான ஹோர்மோன் பிரச்சினைகளைக் கண்டறிந்து கொள்வதற்கான வழிமுறைகளைப் பற்றிக் கூறுங்கள்?**

ஹோர்மோன் பிரச்சினையொன்று ஏற்பட்டுள்ளது என்று நோயாளியொருவரோ அல்லது அவரது குடும்ப வைத்தியரோ சந்தேகிக்கும் இடத்து ஹோர் மோன்கள் தொடர்பான சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைத்தல் மிகச் சிறந்ததாகும். ஹோர் மோன் தொடர்பான நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிவதன் மூலம் அவற்றை இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியும்.

**4. இன்றைய கால கட்டத்தில் ஹோர்மோன் தொடர்பான பிரச்சினைகள் அதிகளவில் கண்டறியப்பட்டு வருகின்றன. இதற்கான காரணங்களைப் பற்றிக் கூறுங்கள்?**

முதலாவதாக, மக்கள் மத்தியில் இது பற்றிய விழிப்புணர்வு சிறிது சிறிதாக ஏற்பட்டு வருகின்றது. இவ்வாறான நோய்களுக்கு சிகிச்சைகள் உள்ளன என்றும் இவற்றைச் சிகிச் சைகள் மூலம் குண மாக்க முடியுமென்றும் பொதுமக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

நீரிழிவு மற்றும் பல வகையான ஹோர் மோன் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு உடற் பருமன் அதிகரித்தலும் ஒரு பிரதான காரணமாகும். எமது இன்றைய பிழையான மேலைத் தேய (Western), துரித உணவு (Fast food) பழக்க வழக்கங்களும் உடற் பயிற்சியற்ற (Sedentary) வாழ்க்கை முறையும் இதற்கான காரணங்களாகும்.

> இன்றைய காலகட்டத்தில் உடற் பருமன் அதிகரிப்பதால் பல வகையான நோய்கள் ஏற்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது. பல பெண்கள் மாத விடாய்ப் பிரச்சினைகளோடு உடலில் முடி வளர்தல் போன்ற பிரச்சினைகளுக்கும் உள்ளாகின் றார்கள்.

**5. ஹோர்மோன் தொடர்பான பிரச்சினைகளுக்கு எமது பிரதேச மக்கள் எவ்வாறு ஆலோசனை மற்றும் சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்?**

அகஞ்சுரக்கும் தொகுதியியல் சிகிச்சை நிலையமானது யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவு நிலையத்தில் மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றது. வட மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களையும் சேர்ந்த மக்களுக்கான ஒரேயொரு ஹோர்மோன் சிகிச்சை நிலையம் இதுவேயாகும். ஹோர்மோன் தொடர்பான பிரச்சினைகள் மற்றும் நோய்கள் உள்ளவர்கள் இங்கு வருகை தருவதன் மூலம் சிறப்பான சிகிச்சையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**நீரிழிவு மற்றும் அகஞ்சுரக்கும் தொகுதியியல்,**
**சிறப்பு வைத்திய நிபுணர்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

# இரக்கத்தின் ஆண்டில் வரும் இறை இரக்க ஞாயிறு தினம்;
# இரக்கத்தைப் பகிர வழிசெய்யட்டும்

அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை
*ஊடக விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்*

கல்லறை திறந்திட காரிருள் மறைந்திட கிறீஸ்து உயிர்த் தார் அல்லுலூயா என உயிர்ப்பு ஞாயிறு தினத்தை உலகம் முழுவதிலும் கொண்டாடும் கிறிஸ்தவர்கள் அனைவர்க்கும் முதலில் உதயன் பத்தி ரிகை மூலமாக ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்பு விழா வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம். இரக்கத்தின் ஆண்டாகிய இவ்வாண்டில் உயிர்ப்பு ஞாயிறு தினத் திற்கு அடுத்த ஞாயிறு தினம் ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி கொண்டாடப்படும் இறை இரக்க ஞாயிறு தினம் பற்றி இந்தக்கட்டுரை விளக்குகிறது.

**இறை இரக்க ஞாயிறு கொண்டாட்டம் இரக்கத்தின் ஆண்டில்**

திருத்தந்தை பிரான்சீஸ் அவர்களால் வத்திக்கான் சங்க நிறைவின் 50ஆவது ஆண்டை நினைவு கூரும் வித மாக இரக்கத்தின் யூபிலி ஆண்டாக 2016ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டது. வழமையாக 25 ஆண் டுகளுக்கு ஒரு முறை பிரகடனப்படுத்தப்பட்டு வரும் யூபிலி ஆண்டு கடைசியாக 2000ஆம் ஆண்டு பிர கடனப்படுத்தப்பட்டது. இதன்படி 2025ஆம் ஆண்டிலே வரவேண்டிய யூபிலி ஆண்டு வழமைக்கு மாறான வித மாக 2016ஆம் ஆண்டு பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இரக்கத்தின் யூபிலி ஆண்டும் – உயிர்ப்பு ஞாயிறு தினத்துக்குப் பின்வரும் ஞாயிறு தினத்தில் கொண் டாடப்படும் இறை இரக்க ஞாயிறு கொண்டாட்டமும் இறை இரக்கத்தோடு தொடர்புடையவை என்பதில் ஒன்றுபடுகின்றன. இவ்வாண்டு இறை இரக்க ஞாயிறு கொண்டாட்டம், இரக்கத்தின் ஆண்டில் வருகிறது என்பதில் சிறப்பு முக் கியத்துவம் பெறுகிறது.

**இறை இரக்கத்தின் அப்போஸ்தலர்-புனித பவுஸ்தீனா**

மூன்றாம் நூற்றாண்டின் முதற் புனிதையான புனித பவுஸ்தீனா இறை இரக்கத்தின் அப்போஸ்தலராக விளங்குகிறார். இவர் போலந்து நாட்டைச் சேர்ந்தவர். புனித பவுஸ்தீனா 1905ஆம் ஆண்டு 10 பிள்ளைகளில் மூன்றாவதாகப் பிறந்தவர். 1925ஆம் ஆண்டு அன் னையின் இரக்க கன்னியர் சபையில் சேர்ந்து பணி யாற் றிய காலத்தில் 1931ஆம் ஆண்டுமுதல் 1938ஆம் ஆண்டு வரை தமக்குக் கிடைத்த இயேசுவின் காட்சிகளை நாட்குறிப்பாக எழுதும் படி பணிக்கப்பட்டு 600 பக்கங்களில் எழுதினார். வழ மைக்கு மாறான இந்த நாட்குறிப்பு இவர் இயேசுவோடு கொண்டிருந்த ஆழ்ந்த இறை உறவின் வெளிப்பாடாக அமைந் தது. தனது சபை யிலேயே பெரிதும் அறியப்படாமல், தான் வாழ்ந்த மடத்தில் மட்டும் தனது இறை அனுபவம் பற்றி அறியப்பட்டவரான இவர் தனது 13 வருட துறவற வாழ்வை தனது 33 ஆவது வயதில் 1938 ஆம் ஆண்டு காசநோய் காரணமாக முடித்துக் கொண்டார். இறை இரக்கப் பக்தியைப் பரப்பும் புனித பவுஸ் தீனாவின் பணியானது பெப்ரவரி மாதம் 1931 ஆம் ஆண்டு ஆரம்பமானது. 1938 ஆம் ஆண்டு பவுஸ்தீனாவின் இறப்புக்கு முன்னதாகவே இறை இரக்கப் பக்தி, கிழக்கு ஐரோப்பாவில் பரவத் தொடங்கிவிட்டது என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். இந்த வகையில் இறை இரக்கப் பக்தி யானது புனித பவுஸ்தீனாவுக்கு 1931 ஆம் ஆண்டு முதல் 1938 ஆம் ஆண்டு வரை இயேசு கொடுத்த காட்சிகளை அடிப்படையாக வைத்து புனித பவுஸ்தீனா எழுதிய 600 பக்க நாட்குறிப்பில் எழுதிய இறை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது.

**இயேசுவின் இறை இரக்கம் தரும் செய்தி**

இயேசுவின் இறை இரக்கம் தரும் செய்தி மிகவும் சாதாரணமானது. கடவுள் நம்மை அன்பு செய்கிறார் – எம் எல்லோரையும் அன்பு செய்கிறார் – எமது பாவங் களைக் காட்டிலும் அவரது இரக்கம் பெரியது என்பதை நாம் உணரவேண்டும் என விரும்புகிறார். உணர்ந்து அவரை நம்பிக்கையுடன் நாடி அவரது இரக்கத்தைப் பெறவேண்டும். அதை அனுபவித்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். இதனால் எல்லோரும் அவரது மகிழ்வில் பங்கு கொள்ள வேண்டும். இது மூன்று பகுதிகளைக் கொண்டது. முதலாவது இரக்கத்தைக் கேட்பது இடைவிடாத செபத்தில் அவரை நாடி எமது பாவங்களுக்காக மனம் வருந்தி அவரது அளவு கடந்த இரக்கத்தை எம்மீதும் முழு உலகின் மீதும் பொழியும்படி வேண்டுதல் செய்தல் இரண் டாவது இரக்கமாக இருப்பது இறை இரக்கத்தைப் பெற்று அதை மற்றவர்க ளுடன் பகிர்வது. அன்பையும் மன் னிப்பையும் அவரைப் போல் மற்ற வர்களுடன் பகிர்வது. மூன்றாவதாக முழுமையாக இயேசு வில் நம்பிக்கை வைப்பது நாம் எவ்வளவு தூரம் நம்பிக்கை வைக்கிறோமோ அவ்வளவு தூரம் பெற்றுக்கொள் வோம்.



**இறை இரக்கப் படம் இரக்கத்தின் நீரூற்றைக் காட்டி நிற்கிறது**

இயேசுவின் காட்சிகளில் 1931ஆம் ஆண்டு தமக் குத் தெரிவிக்கப்பட்டபடி இறை இரக்க இயேசுவின்படத்தைபுனிதபவுஸ்தீனா வரைவித்தார். இயேசு வெண் நிற ஆடையில் – வலது கரத்தி னால் ஆசீர் வழங்கிக் கொண்டு – இடது கரத்தினால் தமது பாடுகளின் போது குத்தி ஊடுருவப்பட்ட திருவிலாக் காயத்தைத் தொட்டபடி – காயத்தில் இருந்து இரண்டு ஒளிக் கீற்றுக்கள் வீசும்படி – நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன் என்ற வசனங்கள் பொறிக்கப்பட்டபடி இப்படம் வரையப்பட்டுள்ளது.

இயேசுவின் திருவிலாக் காயத்தில் இருந்து வீசும் இரண்டு ஒளிக்கீற்றுக்களில் ஒன்று சிவப்பு நிறத்திலும் மற்றது வெள்ளை நிறத்திலும் தோன்றி இயேசுவின் திருக்காயத்தில் இருந்து இரத் தமும் தண்ணீரும் வெளி வந் ததைக் குறித்து நிற்கிறது. இதில் சிவப்பு நிறம் இயேசுவின் இரத்தத்தைக் குறித்து ஆன்மாக் களின் வாழ்வைக் குறித்து நிற்கிறது. வெள்ளை நிறம் தண் ணீரைக் குறித்து ஆன்மாக்களை நியாயப்படுத்துவதைக் குறித்து நிற்கிறது. முழுமையில் இந்தப் படமும் இரக்கத்தையும் மன் னிப்பையும் அன்பையும் குறித்து இரக்கத்தின் நீரூற்றைக் காட்டி நிற்கிறது.

> **"இயேசுவே நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன் – என்று இறை இரக்கப் பக்தியில் நம்பிக்கை வைத்து வாழ் வோர் ஒருபோதும் கைவிடப் படார் என்ற பெரிய உண்மை யை ஒவ்வொருவரும் தம் தனிப்பட்ட வாழ்வின் அனுபவ மாக்க முயலவேண்டும். இறை இரக்கத்தைப் பெற்று மற்ற வரோடு பகிர்வோம்."**

**திருத்தந்தையர்கள் புனித பவுஸ்தீனாவின் கல்ல றையை தரிசிப்பு**

இரண்டு திருத்தந்தையர்கள் புனித பவுஸ்தீனாவின் கல்லறையைத் தரிசிக்க போலந்துக்குச் சென்றுள் ளார்கள். போலந்து நாட்டவரான திருத்தந்தை 2ஆம் ஜோண் போல் ஜூன் மாதம் 1997 ஆம் ஆண்டு புனித பவுஸ்தீனாவின் கல்லறைக்குச் சென்று செபித்துள்ளார். அத்தோடு புனித பவுஸ்தீனாவின் புனித பண்டத்தை பேராலய வாசலில் பொறித்து வைத்தார். திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் அவர்கள் மே மாதம் 2006 ஆம் ஆண்டு போலந்துக்குச் சென்று புனித பவுஸ்தீனாவின் கல்லறையைத் தரிசித்து திருத்தந்தை 2ஆம் ஜோண் போல் அவர்களின் திருவுருவத்தை பேராலய வாசலில் அமைந்துள்ள அவதானிப்புக் கோபுரத்தில் திறந்து வைத்தார். இது போலந்தில் பொறொக்கோ நகரில் திருத் தந்தை புனித 2ஆம் ஜோண் போல் அவர்களுக்கு அமைக்கப்பட்ட ஏழாவது திருவுருவமாகும்.

**புனிதர் 2ஆம் ஜோண் போல் இறை இரக்கத்தின் திருத்தந்தை**

புனிதர் 2ஆம் ஜோண் போல் இறை இரக்கத்தின் திருத் தந்தை என அழைக்கப்படுபவர். தனது தனிப்பட்ட வாழ்விலும் போதனைகளிலும் இறை இரக்கத்தின் செய்தியையே வெளிப்படுத் திக் கொண்டிருப்பவர். 1980ஆம் ஆண்டு இறை இரக்கத்தின் திரு முகத்தை எழுதியவர். உலகின் எல்லாப் பிரச்சினைகளுக் கும் இறைஇரக்கத் தையே பதிலாக் கியவர். இறை இரக்கத்தின் செய்தியை உலகுக்குக் கொணர்ந்த பவுஸ்தீனாவை புனிதர் நிலைக்கு உயர்த் தும் பணி 1966 ஆம் ஆண்டு ஆரம் பிக் கப்பட்டது. திருத் தந்தை 2ஆம் ஜோண் போல் அவர் களே பவுஸ்தீனாவை ஏப்ரல் மாதம் 1993 ஆம் ஆண்டு அருளாளர் நிலைக்கும் ஏப்ரல் மாதம் 2000 ஆம் ஆண்டு புனிதர் நிலைக்கும் உயர்த்தியவர். திருத்தந்தை 2 ஆம் ஜோண் போல் பவுஸ்தீனாவை 2000 ஆம் யூபிலி ஆண்டில் புனிதர் நிலைக்கு உயர்த்தியபோது உயிர்ப்பு ஞாயிறு தினத்துக்கு அடுத்துவரும் ஞாயிறு தினத்தை இறைஇரக்க ஞாயிறு தினமானக் கொண்டா டும்படி அனைவரும் வியக்கும் வண்ணம் பிரகட னப்படுத்தி திருச்சபையின் திருவழிபாட்டு நாட்காட்டியில் இணைத்தார். 2002 ஆம் ஆண்டு திருத் தந்தை 2ஆம் ஜோண் போல் போலந்து நாட்டின் கொறோக்கோ நகரில் உள்ள சர்வதேச இறை இரக்கத் தலத்தை நேர்ந் தளித்தபோது முழு உலகையும் இறை இரக்கத்திடம் ஒப்படைத்தார். இந்த போலந்து கொறோக்கோ நகரில் உள்ள இந்தச் சர்வதேச இறை இரக்க தலத்தில்தான் புனித பவுஸ்தீனாவின் திருவுடல் அடக்கம் செய்யப் பட்டுள்ளது. இந்தக் கல்லறையில் திருத்தந்தை 2ஆம் ஜோண் போல் இறை இரக்க திருச் செமாலையை செபித் துள்ளார். திருத்தந்தை 2ஆம் ஜோண் போல் இறை இரக்க ஞாயிறு தினத்துக்கு முதற்தினம் இறைபதம் அடைந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

**இறை இரக்கப் பக்திக் கொண்டாட்டம்**

இறை இரக்கப் பக்தியின் ஒரு முக்கிய பகுதியாக இறை இரக்கச் செபமாலை விளங்குகிறது. இது வழமையான திருச் செபமாலையை விட வேறுபட்ட செபங்களைக் கொண்ட செபமாலையாகும். இறை இரக்கத்தைச் சிறப்பாகப் பெறக் கூடிய சிறந்த நேரம் இயேசு தாம் உயிர் துறந்த பிற்பகல் 3 மணி எனத் தெரிவித்தமை யால் இந்த நவநாள் பத்தியை நிறைவேற்ற பக்தர்கள் பிற்பகல் 3 மணிக்கு ஆலயத்தில் கூடுகிறார்கள். குருக்களின் நேரடித் தொடர்பு இன்றி முழுக்க முழுக்க பொது நிலையினரால் முன்னெடுக்கப்படும். ஒரே வழிபாடு என்கின்ற வகையில் இறைஇரக்க பத்தி முயற்சி முக்கியத்துவம் பெறுகிறது. இறை இரக்க பக்தி, இலங்கையில் மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு பக்தி முயற் சியாகும். தமிழ் மறைமாவட்டங்களிலும் குறிப்பாக யாழ். மறைமாவட்டத்திலும் இறைமக்கள் இந்தப் பக்தி முயற்சிக்கு முன்னுரிமை கொடுத்து வருகின்றனர். இறை இரக்கம் என்ற தலைப்பில் 2004 ஆம் ஆண்டு கொழும்பு கொட்டாஞ்சேனையில் வெளியிடப்பட்ட புத்தகத்தில் யாழ்ப்பாணத்திலும் மற்ற இடங்களிலும் இறை இரக்கப் பத்தி பரவ எக்ஸ். ஆர். பிரான்சீஸ் என்பவரும் பின்னர் ஜேக்கப் மரியதாஸ் சிவப்பிரகாசம் என்பவரும், பெரும் துணையாயிருந்தார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயேசுவே, நான் உம்மில் நம்பிக்கை வைக்கிறேன் – என்று இறை இரக்கப் பக்தியில் நம்பிக்கை வைத்து வாழ் வோர் ஒருபோதும் கைவிடப்படார் என்ற பெரிய உண்மையை ஒவ்வொருவரும் தத்தம் தனிப்பட்ட வாழ்வின் அனுபவமாக்க முயலவேண்டும். இறை இரக்கத்தைப் பெற்று மற்றவரோடு பகிர்வோம். எமது நாடு இன்று எதிர் நோக்குகின்ற அனைத்துப் பிரச் சினைளுக்கும் இறை இரக்கமே தீர்வாகட்டும்.

# இனவாதத் தரப்புக்களின் கூக்குரல் அடக்கி ஒடுக்கப்படுமா?

வந்தியத்தேவர்

அனைவரதும் தனித்துவத்தைப் பேணுபவரே அரசியலுக்குத் தகுதியானவர். வாக்குறுதிகளை வழங்குவதும், பேசித்தீர்த்துக் கொள்வோம் எனச் சொல்லிச் சொல்லியே பிரச்சினைகளைத் தட்டிக் கழித்துக் காலத்தை நீட்டிக் கொண்டிருப்பதும் நாட்டின் அரசியலில் வழமையாகி விட்டது. இது பிரச்சினைகளை வளர்க்க உதவுமேயன்றி, அவற்றுக்கான தீர்வாக அமையாது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து இடம்பெற்ற இவ்வாறான நீண்ட இழுத் தடிப்பே இலங்கையில் இடம் பெற்ற மோசமான போருக்கு அடித்தளமாக அமைந்தது. அதனால்தான் மீண்டும் ஒரு போர் ஏற்படாதவாறு சமாதானத்துக்கான அடித்தளம் அமைய வேண்டும் என்பதை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. புத்தபெருமான் இன்றிருந்தால் நல்லாட்சி அரசை உதைத்துத்தள்ளியிருப்பார் என்பது உதய கம்மன்பிலவின் கருத்து. மூன்று இனங்களிலும் முட்டாள்கள் இருக்கத்தான் செய்தார்கள்; செய்கிறார்கள், இது ஆட்சிக் கட்டிலில் அமர்ந் திருந்தவர்களால் இப்போது உணரப்படும் ஒன்றாகியுள்ளது. சந்திரிகா அம்மையாரும் கூட இதைத் தற்சமயம் ஒப்புக் கொண்டுள்ளார். புத்தபெருமான் தர்மத்தின் நாயகன் . எல்லா உயிர்களும் ஒன்றே என்பதையும் அவைகளுக்குத் துன்பம் நிகழக்கூடாது, துன்பங்களை ஏற்படுத்தக்கூடாது என்றும் போசித்த மகான் அவர், தற் போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசும், புத்தரின் போதனைகளைக் கவனத்தில் கொண்டு ஒரு நீதியான நல்லாட்சியை நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்று அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டுகின்றது. இப்படியான ஒரு நல்ல நோக்கத்தைக் கொண்டவர்களை எட்டி உதைப்பாரா புத்தபெருமான். அன்றேல் அர சியலில் முன்னிலைபெற இனவாதத்தை கருவியாக்க முயலும் உதய கம்மன்பில போன்ற இனவாதிகளை உதைப்பாரா? புத்தபெருமான் எவரை எட்டி உதைப்பார் என்பதைக்கூட உணர்ந்து கொள்ள முடியாதவர் உதய கம்மன்பில. சந்திரிகா அம் மையார் கூறிய முட்டாள்கள் வரிசையில் இடம் பெறும் உதய கம்மன்பிலவோடு கூடித்திரியும் எடுபிடிகளுக்கும், இது பொருந்தும். மீண்டும் ஒரு பிரபாகரன் உருவாகக் கூடாது என்பதில் சிங்களத் தலைமைகளிடையே கருத்து வேறுபாடு கிடையாது. உதயகம்மன்பிலவும் இந்தக் கருத்தை மறுதலிக்க மாட்டார் என் பதில் ஐயமில்லை.

**கடந்த காலங்களில் விட்ட தவறுகள்**

கடந்தகாலங்களில் சாத்வீக முறையில், அகிம்சை வழியில் போராடிய தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண விரும்பாத, தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கை களுக்கும் போராட்ங்களுக்கும் செவிமடுக்காமல் நாங்கள்தான் எல்லாமும், எமக்கு மட்டுமே இந்த நாடு என்று திமிர் பிடித்தவர்களாகச் செயற்பட சிங்களத்தலைமைகளே பிரபாகரன் உருவாகக் காரணமானவர்கள். இந் தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் பிரபாகரனுக்கு ஆதரவு நல்காவிடினும் கூட, அவருக்கெதிராக சிங்கள அரசியல் தலைமைகளுக்கு உதவி செய்யாதிருந்தால் நாட்டின் தலை எழுத்து வேறுபட்டிருந்திருக்கவும் கூடும். இப்படிப்பட்ட ஒரு சூழலில் இருந்து ஒரு வகையாக நாடு விடுபட்டு இப்போது சமாதானம், ஐக்கியம் என்ற நிலையை உருவாக்க முனையும் தருணத்தில் உதய கம்மன்பில, விமல் வீரவன்ச போன் றவர்கள் தொடர்ந்தும் இலங்கையை இம்சைக்கு உள்ளாக்க முனைந்தால் மீண்டும் ஒரு பிரபாகரன் உருவாக்கக் கூடாது என்ற எண்ணம் சாத்தியப்படுமா? “போன புத்தி ஆனைகட்டி இழுத்தாலும் வராது” என்பதுதான் நியதியா? தமிழர்களும் இந்த நாட்டின் குடிமக்களே என்ற நியாயமான புத்தி சிங்களத்தலைமைகளிடம் இருந்து ஏற்கனவே தொலைந்துபோன ஒன்று. அப்படியான கருத்து தொலைந்திருந்தபோது ஆனைகட்டி இழுத்தாலும் வராது. என்ற நிலைமாறி புதிய அரசுத் தலைமைகளிடம் அது மீண்டும் துளிர் விடத்தொடங்கியுள்ளது. அதனால் தான் சிறுபான்மை இனங்களும் ஏனையவர்கள் போல் உரிமைகள் பெற்ற இனமாக வாழ வேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் மனதில் தோன்றியுள்ளது. முடிந்தவரை அதனை நிறைவேற்ற வேண்டுமென அவர் விரும்பியுள்ளார். எனினும் தன் புத்தியும் இல்லாமல் பிறர் புத்தியையும் கேளாமல் அலையும் முட்டாள்களின் போக்கால் அரசுத் தலைவர் விரும்பும், ஐக்கியம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரும் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அரசமைப்புமுறை என்பன உருவாகுமா என்பவை கேள்விக்குரியதாக மாறி வருகிறது . மூர்க்கனும் முதலையும் கொண்டது விடாதென் பர். இனவாதத்தைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்டுள்ள விமல் வீரவன்ச, உதய கம்மன்பில கும்பலுடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்சவும் சேர்ந்து கொள்ளத் துடிக்கிறார் போலும். மக்கள் விரும்பினால் அரசியலுக்கு வருவேன் என அவர் சூளுரைக்கத் தொடங்கியுள்ளார். நீங்கள் கண்டிப்பாக ஓர் அரசியல்வாதியாக வந்து சேவையாற்றுங்கள் என்று மக்கள் எரையும் வலிந்து வற்புறுத்தியதாகச் சரித்திரமில்லை.

தெருவில் நின்ற ஒருவரைப்பிடித்து நீங்கள் அரசியலுக்கு வாருங்கள் என்று மக்கள் தள்ளிவிட்டவர்களும்அல்ல. கட்சிகளுள் இணைந்து இனவாதத்தைத் தூண்டி பதவிபெற்றவர்களை நாட்டு மக்கள் நிராகரிக்க வேண்டும். கட்சிக்குள் இழுக்கக்கூடாது, தமது தனித்துவத்தைப் பேணுவதுடன் ஏனையவர்களின் தனித்துவத்துக்கும் மதிப்புளிக்கும் மனிதர்களே அரசியலுக்குவரத் தகுதியானவர்கள் என்பதை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும்.



மீண்டும் ஒரு பிரபாகரன் உருவாகக் கூடாது என்பதில் சிங்களத் தலைமைகளிடையே கருத்து வேறுபாடு கிடையாது. உதய கம்மன்பிலவும் இந்தக் கருத்தை மறுதலிக்க மாட்டார் என்பதில் ஐயமில்லை

# SRI LANKA'S MOST ACCEPTED BRITISH MBA PROGRAMME

**Batch Commencement**
**27th of March**

Cardiff
Metropolitan
University

# MBA

## MASTER OF BUSINESS ADMINISTRATION

**Call now**
**0769 289 784**



INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY
ICBT

ICBT
CAMPUS
JAFFNA
www.icbt.lk

(C/29899) (10.17)

580 Hospital Rd, Jaffna Tel: 021-4 777 888


TVS
வாங்குவோர் வெல்வோர்
உயர் விசேடத்துவங்களை தேடிச் செல்லும் உங்களுக்காக
TVS இடமிருந்து விசேட பரிசுகள்
உயர் விசேடத்துவம், நேர்த்தியான
வடிவமைப்பு மற்றும் ஒப்பற்ற நம்பிக்கையை
கொண்டு மெருகேற்றப்பட்ட
TVS உற்பத்தியினை கொள்வனவு செய்யுங்கள்,
வியக்க வைக்கும் பல பரிசுகளை வெல்லுங்கள்
1 சூப்பர் பரிசு ரூ.500,000/-
2 TVS metro மோட்டார் சைக்கிள்கள் 5
3 கையடக்க தொலைபேசிகள் 100
நவீன தொழில்நுட்பம்/ உயர் சக்தி/ எரிபொருள் சிக்கனம்/
கவர்ச்சியான தோற்றம்/ ஒப்பற்ற நம்பிக்கை
• மேலதிக விபரங்களை அருகிலுள்ள TVS விற்பனை முகவரிடம் பெற்றுக்கொள்ளுங்கள்
• 2016 பெப்ரவரி 20ம் திகதியிலிருந்து ஏப்பிரல் 30ம் திகதி வரை மட்டுமே
• சீட்டிழுப்பு 2016 மே மாதம் 06 திகதி இடம்பெறும்
நிபந்தனைகளுக்கு உட்பட்டது
TVS
0114 600 500
WP/GT/4533


இப்பண்டிகைக்காலத்தில்
அபான்ஸ் இடமிருந்து
வீடு நிறைய பொருட்கள்
முதலாம் பரிசு ரூ.500,000 பெறுமதியானது
இரண்டாம் பரிசு ரூ.300,000 பெறுமதியானது
மூன்றாம் பரிசு ஹீரோ டேஷ் ஸ்கூட்டர்
LG Life's Good
40% வரை தள்ளுப்படி
சிறந்த Hi-Fi செட்அப்ஸ்
நியாயமான விலைகளில்
1,300W PMPO
LG Hi-Fi சிஸ்டம்
DM5330
• 1,300W PMPO
• 3CD/DVD மற்றும் USB ப்ளேபேக்
• பேஷ் ப்ளாஸ்ட்
ரூ.29,999
ரூ.27,999
சேமிப்பு ரூ.2,000
வட்டியில்லா 15 கொடுப்பனவு
6,500W PMPO
LG Hi-Fi சிஸ்டம்
DM5540
• 3CD/DVD மற்றும் USB - ப்ளேபேக்
• பேஷ் ப்ளாஸ்ட்
• ஒடோ இக்வலைசர்
• X - மெட்டல் பேஸ் - ஸ்பீக்கர்ஸ்
ரூ.49,999
ரூ.44,999
சேமிப்பு ரூ.5,000
ஸ்மார்ட் போன் ஒன்று இலவசம்
வட்டியில்லா 15 கொடுப்பனவு
32,000W PMPO
LG X-BOOM
CM9550
• 4.2 செணல்
• ஸ்மார்ட் DJ
• ப்ளூ டூத், மல்டி - பொய்ண்ட்
• USB x 2
• LED வெளிச்சம்
ரூ.109,999
ரூ.89,999
சேமிப்பு ரூ.20,000
வட்டியில்லா 15 கொடுப்பனவு
LG Hi-Fi செட்அப்ஸ் அபான்ஸ் இடமிருந்து மட்டுமே
9,000W PMPO
LG Hi-Fi சிஸ்டம்
DM7630
• 5.1 சரவுண்ட் சேனல்
• 3CD/DVD மற்றும் USB - ப்ளேபேக்
• பேஷ் ப்ளாஸ்ட்
• கரோக்கி
ரூ.69,999
ரூ.59,999
சேமிப்பு ரூ.10,000
வட்டியில்லா 15 கொடுப்பனவு
DVD
Bluetooth
USB playback
HD UPSCALING
11,000W PMPO
LG டவர் ஒடியோ சிஸ்டம்
LHD675
பவர் PMPO 11,000W | 2 சப் வுபர் DVD/ CD/ VCD பார்க்க, கேட்க | ப்ளூ டூத் | USB | Full HD பார்க்க| TV இணைப்பு
ரூ.49,999
ரூ.39,999
சேமிப்பு ரூ.10,000
வட்டியில்லா 15 கொடுப்பனவு
*நிபந்தனைகளுக்குட்பட்டது
HOTLINE 0714020799
us at www.facebook.com/abans
Abans
ABS GARDNER DIXON HALL

## பதிவுகள்









மன்னார் மாதர் அபி விருத்தி ஒன்றியத்தின் ஏற் பாட்டில், மன்னார் நகர சபை மண்டபத்தில் அண்மையில் மக ளிர் தின நிகழ்வுகள், ஒன்றியத்தின் மாவட்ட இணைப்பாளர் மகாலட்சுமி குரு சாந்தன் தலைமையில் நடைபெற்றன. இதன் போது பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெறும் வன்முறைகள் குறித்து விசேட பட்டிமன்றம் மற் றும் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றன. (ஐ-56)



வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் பிரமாண அடிப்படை யிலான நிதியிலிருந்து வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலயம், தரணிக்குளம் ஜோசப்வாஸ் தேவாலயம், வவுனியா தமிழ்ச்சங்கம் ஆகியனவற்றுக்கு ஒலி பெருக்கித் தொகுதியும், மறவன்குளம் மகாலக்ஷ்மி கோயில், சாளம்பன் முத்து மாரியம்மன் கோயில், வேப்பங்குளம் ஓமந்தைப் பிள்ளையார் கோயில் ஆகிய ஆலயங்களின் கட்டுமானப்பணிகளுக்காக காசோலைகளும், முல்லைத்தீவு தேவிபுரம் முதியோர் இல்லத்துக்கான காசோலையும், கள்ளிக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த வறிய குடும்பத்தின் சுய தொழில் முயற்சிக்காக தையல் இயந்திரம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட ஐந்து விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன. (ஐ)



தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சும், தேசிய இளைஞர் மன்றமும், இளைஞர் கழக சம்மேளனமும் இணைந்து தம்புள்ள சிகிரியாவில் இளைஞர், யுவதிகளை வளப்படுத்தும் ஒரு வேலைத்திட்டமாக ஜோவன்புர இளைஞர் முகாம் ஒன்று நடத்தப்பட உள்ளது. அந்த முகாமில் யாழ். மாவட்டத்தில் இருந்து 180 இளைஞர், யுவதிகள் பங்குபற்றவுள்ளனர். அவர்களுக்குத் தேவையான அனைத்து மின்சார உபகரணங்களை தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் பரப்புரைச் செயலாளர் கணேஸ்வரன் வேலாயுதம் வழங்கினார். (ஐ)



சுழிபுரம், திருவடிநிலை சைவத்தமிழ் வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்தை வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் அண்மையில் திறந்து வைத்து மாணவர்களின் பாவனைக்குக் கையளித்தார். பாடசாலையின் அதிபர் தலைமை யில் இடம்பெற்ற நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினருடன், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராசா, வலி.மேற்கு பிரதேசபையின் முன்னாள் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ)





வவுனியா, ஓமந்தை மருதங்குளம் தந்தை செல்வா முன்பள்ளி பாலர் பாடசாலையில் நடைபெற்ற விளை யாட்டுப்போட்டி, பாடசாலை ஆசிரியரின் தலைமையில் அண்மையில் நடை பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தி னராக வடக்கு மாகாண சுகாதார அமைச் சர் ப.சத்தியலிங்கம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான மயில்வாகனம், தியாகராசா, லிங்கநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ)






வவுனியா நகர, கோட்டமட்ட பாடசாலைக்கிடையிலான விளையாட்டுப் போட்டி கோட்டக் கல்வி அதிகாரி ஞா.இளைய தம்பி தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுனியா பிரதேச செயலர் கா.உதயராஜா கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (ஐ-402)






வவுனியா தம்பனைச்சோலை கேதீஸ்வரா வித்தியாலயத்தின் 26 ஆவது ஆண்டுநிறைவு விழாவும், கண்காட்சியும் பாடசாலை அதிபர் திருமதி சி. பத்மநாதன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன. கண்காட்சியில் பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களும் இடம்பெற்றிருந்தன. (ஐ)





சாவகச்சேரி, சங்கத்தானை நாமகள் முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுவிழா முன்பள்ளி மைதானத்தில் நடைபெற்றது. முன்பள்ளி பொறுப்பதிகாரி திருமதி நா.தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையாவும், சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கி, சாவகச்சேரி கிளை முகாமையாளர் திருமதி நே.சுஜாதா, தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ஐ-9)



பாசையூர் மேற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினருக்கான பற்றிக் வண்ணச் சாயமிடும் தொழிற்சாலை வட மாகாண மீன்பிடித் தொழில் அமைச்சர் பா.டெனீஸ்வரனால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. பற்றிக் சாயமிடும் பணியில் இணைக்கப்பட்டுள்ள பணியாளர்களுடன் வட மாகாண சபை உறுப்பினர் இ.ஆனல்ட், யாழ் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அன்று, கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தலைவர் நா.தனேந்திரன் ஆகியோர் காணப்படுகின்றனர். (ஐ-135)




யாழ்.கொட்டடிக் கிராம அபிவிருத்திச் சங்கமும், சனசமூக நிலையமும் இணைந்து நடத்திய சர்வதேச மகளிர் தின நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட மகளிருடன், பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தேசிய சேமிப்பு வங்கியின் நாவலர் வீதிக்கிளை முகாமையாளர் திருமதி துஸ்யந்தி அருளானந்தன், சிறப்பு விருந்தினர்களான யாழ்.பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அன்றூ, ஜே/83 கிராம அலுவலர் திருமதி யூலின் சாலினி ஆகியோர் காணப்படுகின்றனர். (ஜ-135)



புதுக்குடியிருப்பு கல்விக் கோட்ட தமிழ்த்தினப் போட்டியில் ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ஜ)





யாழ்ப்பாணம் சுகவாழ்வு நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற இளைஞர், யுவதிகளுக்கான வலுவூட்டல் நிகழ்வு, வளவாளர் கலாநிதி பா.தனபாலனின் வழிகாட்டலில் இடம்பெற்றது. (ஜ-29)



லயன். மருத்துவர் க.இராஜரெட்ணத்தின் 36 வருட வைத்திய சேவையைப் பாராட்டி "வைத்திய பூண்பண்டித்" எனும் உயர் விருதும், "கீர்த்தி ஸ்ரீ தேசப்பந்து வைத்திய அபிமானி" எனும் பட்டமும் அண்மையில் கொழும்பில் வைத்து வழங்கப்பட்டன. (ஜ)



பொன்னாலை, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் அண்மையில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. (ஜ)



உரும்பிராய் ஏ.எஸ்.என். கல்வி நிறுவனத்தின் பரிசளிப்பு விழாவில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கி வைத்தார். (ஜ)

# உதவிக்கு அழைத்த பொலிஸார் பின்னர் சிறையில் அடைத்தனர்

## பிணையில் விடுதலையான டிப்பர் சாரதி தெரிவிப்பு

வவுனியா, மார்ச் 27

உதவிக்கு அழைத்த பொலிஸார் உதவியைப் பெற்று விட்டு அந்த உதவியைக் குற்றச் செயலாக்கித் தனக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளதாக அதே பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பிணையில் விடுவிக்கப்பட்ட சாரதி குற்றஞ்சாட்டியுள்ளார். அதற்கு முதல் பொலிஸார் தாக்கியுள்ளதாகவும், அதனால் காயமடைந்து வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் சாரதி தெரிவித்துள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி காலை ஓமந்தையில் உள்ள கல்லுடைக்கும் நிலையத்தில் கல் ஏற்றச் சென்ற டிப்பர் சாரதியை ஆலயமொன்றுக்கு அருகில் நின்ற பொலிஸார் மறித்து இறங்குமாறு கூறியுள்ளனர். சாரதியை அழைத்த பொலிஸார் எங்கு செல்கிறாய் எனக் கேட்டனர். அப்பகுதியில் உள்ள கல்லுடைக்கும் ஆலையில் கல் ஏற்றச் செல்வதாகத் தெரிவித்துள்ளார் சாரதி. பின்னர் காட்டினுள் அனுமதியின்றித் தறிக்கப்பட்ட மரங்களை ஏற்றச் செல்கிறாயா எனக் கேட்டுத் தாக்கினர் என்று சாரதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

சாரதி மேலும் தெரிவிக்கையில்,

சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளிட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொண்டு அப்பகுதியில் உள்ள மரத்தின் கீழ் என்னை உட்காருமாறு பொலிஸார் கூறினர். அங்கு உட்கார்ந்திருந்தபோது அவ்வழியே வந்த வேறு இரு வரையும் மரத்தின் கீழ் உட்காருமாறு கூறியதால் அவர்களும் எனக்கு அருகில் அமர்ந்திருந்தனர். அவ்வேளை காட்டுக்குள் இருந்து நான்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த பொலிஸார் காட்டினுள் மரம் தறிக்கப்பட்டிருப்பதாகக் கூறினர்.

அங்கு நின்ற பொலிஸார் காட்டினுள் காணப்படும் மரங்களை ஏற்றிவந்து பொலிஸ் நிலையத்தில் பறித்து விட்டுச் செல்லுமாறு கூறியபோது நான் மறுப்புத் தெரிவிக்கவே பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று பொறுப்பதிகாரியிடம் விடுமாறு கூறினார் அங்கு நின்ற அதிகாரி.

டிப்பரில் பொலிஸ் அலுவலரை ஏற்றிக் கொண்டு ஓமந்தைப் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபோது அங்கிருந்த பொறுப்பதிகாரி என்னை அழைத்து தங்களிடம் வாகனம் இல்லாததால் காட்டினுள் காணப்படும் மரங்களை ஏற்றிக் கொண்டு வந்து பொலிஸ் நிலையத்தில் பறித்து விட்டுச் செல்லுமாறு கூறினார்.

அவரது கூற்றுக்கு மதிப்பளித்து பொலிஸ் நிலையத்திலிருந்து வந்த பத்துப் பொலிஸாரையும் அழைத்துச் சென்று காட்டினுள் காணப்பட்ட மரக்குற்றிகளை ஏற்றி வந்து பொலிஸ் நிலையத்தில் பறித்து விட்டுப் புறப்படுவதற்கு எனது ஆவணங்களை வழங்குமாறு பொலிஸாரிடம் கேட்டேன். அப்போது அதே பொறுப்பதிகாரி என்னைச் சிறையில் அடைக்குமாறு சக பொலிஸாருக்கு உத்தரவிட்டார். நீங்கள் கூறியதற்கு அமைவாகவே மரக்குற்றிகளை ஏற்றிவந்ததாக அவரிடம் கூறியபோது, மீண்டும் பொலிஸார் என்னைத் தாக்கிவிட்டு பொலிஸ் நிலையச் சிறையில் அடைத்தனர்.

மறுநாள் வியாழக்கிழமை பகல் என்னை வவுனியா அழைத்துச் சென்று அனுமதிப்பத்திரமின்றிக் காட்டில் மரங்கள் ஏற்றிவந்தபோது பிடித்ததாகக் குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். சம்பவம் தொடர்பான முழு விவரங்களையும் நீதிவானுக்கு சட்டத்தரணி மூலமும் நேரடியாகவும் தெளிவுபடுத்தியதையடுத்து நீதிவான் பிணையில் செல்ல அனுமதி வழங்கினார்—என்றார்.

வவுனியாவிலிருந்து தனது சொந்த இடத்துக்கு வந்தபோது தாக்குதல் காரணமாக உடல் அசதியாகக் காணப்பட்டதெனவும், காய்ச்சலால் பாதிக் கப்பட்டு நேற்று வைத்தியசாலைக்கு வந்தபோது, பரிசோதனை செய்த வைத்தியர்கள் தாக்குதல் காரணமாக உடலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதெனக் கூறி வைத்தியசாலையில் அனுமதித்தனர் எனவும் சாரதி மேலும் கூறினார்.

(த-4-9)

# பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,மார்ச் 27

சிறுப்பிட்டி வடக்கு, இலுப்பையடி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயப் பெருந்திருவிழா நாளை மறுதினம் முதல் நடைபெறவுள்ளது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(ற-ஐ-ரீ5)



## மரண அறிவித்தல்கள்

### செல்வன் ஸ்ரீநிவாசன் தர்சிகன்

(இடைக்காடு மகாவித்தியாலய மாணவன்)



அச்சுவேலி இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீநிவாசன் தர்சிகன் நேற்று முன்தினம் (25.03.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஸ்ரீநிவாசன் மற்றும் யோகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் ஜஸ்மினி, தர்சிகா, சோபிகா, விதுரன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இடைக்காட்டிலுள்ள இல்லத்தில் நடைபெற்று இன்று (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக இடைக்காடு சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இடைக்காடு,
அச்சுவேலி.
(c/22261)(15.17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### அஞ்சலிங்கம் தர்மதேவா

(முன்னாள் இ.போ.ச நடத்துனர்)



தோற்றம் 11.03.1959
மறைவு 25.03.2016

யாழ் நெடுந்தீவு கிழக்கை பூர்வீகமாகவும், முகமாலையை வசிப்பிடமாகவும், கிளிநொச்சியை தற்காலிகவசிப்பிடமாகவும் கொண்ட முன்னாள் இ. போ .ச நடத்துனர் அஞ்சலிங்கம் தர்மதேவா 25. 03 .2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அஞ்சலிங்கம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கராசா - நாகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சரோஜா தேவியின் அன்புக் கணவரும் தேவரஞ்சிதன் (பிரான்ஸ்), லவேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாம்பிகை(கனடா), காலஞ் சென்றவர்களான பாலசுப்பிரமணியம், ராசாத்தியம்மா (பேபி), சந்திரபோஸ் மற்றும் ரஞ்சிதமலர்(ரஞ்சி) காலஞ் சென்ற வாமாதேவா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் தவமணி, ஜெயரட்ணம், லீலாவதி, தனபாலன் (இந்திரன்) காலஞ்சென்ற சகுந்தலாதேவி மற்றும் தர்மராஜா, ஆனந்தன், பாலசரஸ்வதி, விஜயலக்ஷ்மி, கலைவாணி, ஜெயவாணி, ஜெயசங்கர் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கிளிநொச்சி 4 ஆம் வாய்க்காலிலுள்ள இல்லத்தில் 28.03.2016 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று கிளிநொச்சி இந்து மயானத்திற்கு தகனம் செய்வதற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

4 ஆம் வாய்க்கால்
கிள்நொச்சி.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### வடிவேலு கந்தசாமி



கற்குழி வடக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு கந்தசாமி 25.03.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு - சின்னத்தங்கச்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மகிந்தனின் அன்புத் தந்தையும் தர்மலிங்கம், சின்னத்துரை (வெற்றிலைச் சாஸ்திரியார்), சிவகுமாரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் பிரபாகரன்(பிரான்ஸ்), பிரேமினா, மிதுனா (U.K), பிரதீபன், உமாகரன், ஜங்கரன், சிறீதரன் (ஜேர்மனி), திவாகரன், சசிகரன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு மட்டுவில் தெற்கிலுள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நெணியன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(60783)
(14.18.19)

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா சிவகுருநாதன்

தோற்றம் 26.05.1945 மறைவு 26.03.2016



மட்டுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் நாவற்குழி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவகுருநாதன் 26. 03 .2016 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-பார்வதி தம்பதியின் மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், சாந்தம்மாவின் அன்புக் கணவரும் மதியழகன், மதிரூபன், மதிவதனன், வளர்மதி, மதீசன் ஆகியோரின் தந்தையும் திலகராணி, சிவகுமார், கவிதா, நித்தியலக்சுமி ஆகியோரின் மாமனும் விதுர்ஷன், யதுர்ஷன், டகிர்ஷன், தனுஷன், நிரோஷன், பவிஷன், சரண்ஜா, நிருஜா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் நாவற்குழி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.



### Dr.முத்துச்சாமி கோபாலசுந்தரம்

(முன்னாள் பணிப்பாளர் - கால்நடை அபிவிருத்தி அமைச்சு, முன்னாள் தலைவர் கால்நடை மருத்துவர் சங்கம் முன்னாள் தலைவர்-இலங்கை தொழில்சார் சங்கங்களின் அமைப்பு / Organization of Professional Association)

யாழ் வல்வெட்டியை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தை,ஹாம்ஸ் அவெனியுவை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. முத்துச்சாமி கோபாலசுந்தரம் 26.03.2016 சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்வெட்டி வைத்தியர் முத்துச்சாமி-ஞானபூங்கோதை தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான அளவெட்டி முத்தையா-செல்லாச்சி தம்பதிகளின் பாசமிகு மருமகனும் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும். திருமதி.நாகேஸ்வரி வேல்முருகன் காலஞ்சென்ற Dr. ஞானசுந்தரம் மற்றும் திருமதி புவனேஸ்வரி பத்மநாதன்,திருமதி.செங்கேஸ்வரி இளம்பிறைநாதன், சிவசுந்தரம்,விமலேஸ்வரி கருணாகரன், காலஞ் சென்ற மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பவானி,சியாமளா,மனோகரி Dr.முகுந்தன் (மகப்பேற்று நிபுணர் - யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகுதந்தையும். ஜெயவர்மன், மனோரதன்,சேகரன்,மீரா ஆகியோரின் மாமனாரும். சரண்யன், பிரசாந்தன் ,பிரண்னவன் சகானா,பிரசன்னா. ஆரணி, அஸ்வினி, மிதுலன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ன மலர்ச் சாலையில் இன்று (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 5.00மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு. நாளை (28.03.2016) திங்கட்கிழமை காலை 9.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கனத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
கே.முகுந்தன் (மகன்) -0777421996
சி.ஜெயவர்மன் (மருமகன்) -0777352988

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

**விற்பனைக்குண்டு**

Deepfreezer விற்பனைக்குண்டு. 6x2

076 6211700, 077 8448726

**வீடு விற்பனைக்குண்டு**

யாழ்.சுண்டுக்குளி பஸ்ரியன் சந்தியில் A9 வீதிக்கு அண்மித்ததாக சிறந்த சுற்றாடலில் வீடு விற்பனைக்கு உண்டு..

தொடர்புக்கு: 076 6575936

**அறை வாடகைக்குண்டு**

யாழ் நகர் மத்தியில் சகல வசதிகளுடன் மாணவர்களுக்கு / உத்தியோகத்தருக்கு (ஆண்கள்) அறை வாடகைக்குண்டு.

தொடர்புக்கு: 021 221 7925

**குத்தகைக்கு காணி தேவை**

* கே.கே.எஸ் வீதியில் 4 பரப்புக்கு மேற்பட்ட காணி தேவை.
* தோட்டம் செய்வதற்குரிய 50 பரப்புக்கு மேற்பட்ட காணி தேவை.

(யாழ்ப்பாணத்தில் மட்டும்)

தொடர்பு: 077 3643393

**விற்பனைக்கு**

ஒரு வயது ஜேர்மன் செப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், பொக்கட்ஸ் பெனியர் ஆண், பெண் நாயும், வான்கோழி, சில்க்கி, மணிதாரா, கினிகோழி, வெள்ளடியன் என்பன விற்பனைக்குண்டு.

மயூரன் பாம் சென்ரர்
நீர்வேலி கந்தசாமி கோவிலடி.
077 015 8690

**வேலை ஆள்கள் தேவை**

* கனரக வாகன ஓட்டுனர் (10 Wheel) (அனுபவம் விரும்பத்தக்கது)
* பொதி சுமப்பவர்

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்

தேனு களஞ்சியம்
இல.29,நவீன சந்தை உட்புறம்,திருநெல்வேலி.
021 222 6013, 021 492 1259, 075 642 0131

**ஆள்தேவை**

புடைவை வியாபாரத்தில் அனுபவம் உள்ளவரும், பழக விரும்புபவரும் தொடர்புகொள்ளவும். தொடர்பு: 077 2026295

**மணமகள் தேவை**

இந்து கௌரவ குடும்பம் பொறியியலாளர் (S.L.E.S) 1982ஆம் ஆண்டு.
சாவகச்சேரி.
தொடர்பு:
076 6020265, 072 2334477

Majestic Cineplex Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்
CEYLON THEATRES




10.00 / 1.00 / 7.00 Fri/Sat/Sun 9.30 p.m 4.00 p.m

சில்வர் ப்ரொன்ஸ்



10.00 / 1.00 / 4.00 / 7.00 Fri/Sat/Sun 9.30 p.m

விசாரணை ☎ 021- 2227712
facebook CeylonTheatres
www.ceylontheatres.lk

# சர்வதேச மகளிர் தின நிகழ்வு

கரணவாய், மார்ச் 27

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் அனுசரணையுடன், வட்டுக்கோட்டை பெண்கள் வலையமைப்பால் நடத்தப்படும் சர்வதேச மகளிர் தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வலி தென்மேற்குப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உதயன் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருமதி யசோதை சரவணபவன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இரஞ்சிதமலர் மோகனேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய இ.சரவணபவனும், கௌரவ விருந்தினர்களாக வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி வைத்தியர் திருமதி ரதினி காந்தநேசன், சட்டத்தரணி திருமதி நாகநாகேஸ்வரி, வலி. மேற்குப்பிரதேச சபை முன்னாள் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன், பிரதேச சபைச் செயலாளர் திருமதி குணவதி சண்முகலிங்கன், மூளாய் சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி மற்றும் ஆயுள்வேத வைத்தியர் திருமதி வரதராசா விக்னேஸ்வரி ,சமூக சேவகி திருமதி ரதிதேவி சோதிலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். இதில் மூத்த சாதனையாளர்களைக் கௌரவித்தல் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன.

(ற-ஜ-108)

**வாடகைக்கு**

முற்றிலும் பிரத்தியேகமான அனெக்ஸ் (தனியறை. சமயலறை. இணைந்த குளியலறை) வாடகைக்குண்டு.
2 பெண்கள் வசிக்கலாம்.

தொடர்புக்கு: 075 5549402

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் கிழக்கு தலையாழியில் (செல்வமகால் திருமண மண்டபத்திற்கு முன்) கே.கே.எஸ் வீதியிலிருந்து 150m தூரத்தில் நிலப்பரப்பு13 குளி2.95 துண்டுகளாகவும் மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு.

கோண்டாவில் கிழக்கு வன்னியசிங்கம் வீதியில் (கோண்டாவில்சந்தி ஐயப்பன் கோவிலுக்கு அருகில்) நிலப்பரப்பு21/4 உடன் கூடிய கல்வீடு விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 7286061
077 1671174

# ஜப்பான் போர்க் கப்பல்கள் கொழும்பு துறைமுகத்தில்

கொழும்பு, மார்ச் 27

ஜப்பானியக் கடற்படையின் இரு போர்க் கப்பல்கள் கடந்த வியாழக்கிழமை கொழும்புத் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தன. யூடாச்சி, யூகிரி ஆகிய பெயர்களைக் கொண்ட ஜப்பானியப் போர்க் கப்பல்களே கொழும்பு வந்துள்ளன.

இந்தக் கப்பல்களுக்கு கொழும்புத் துறைமுகத்தில் கடற் படையினர் பாரம்பரிய முறைப்படிவரவேற்புஅளித்தனர்.

ஜப்பானிய போர்க் கப்பல்கள் அணியின் கட்டளை அதிகாரியான கப்டன் தகாஷி இனோ மற்றும் போர்க் கப்பல்களின் கட்டளை அதிகாரிகளான கொமாண்டர் ரொமோவா பாபா, கொமாண்டர் ரொமோவுகி சாசே ஆகியோர் இலங்கையின் மேற்குப் பிராந்திய கடற்படைத் தலைமையகக் கட்டளை அதிகாரி ரியர் அட்மிரல் ஜெயந்த டி சில்வாவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இந்தப் போர்க் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுச் செல்வதற்கு முன்னர், கடற்படையின் போர்க் கப்பல்களுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டன.

(ற-ஜ-5)

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம்

**வருடாந்த பொதுக் கூட்டம்**

இடம் : ஆலய முன்றில்
காலம்: இன்று (27.03.2016) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : மு.ப 10.00 மணி

மேற்படி ஆலயத்தின் பொதுக்கூட்டம் இடம்பெறவிருப்பதால் பொதுச்சபை உறுப்பினர்கள் மற்றும் உபயகாரர்கள். நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது வருகை தந்து கடந்த ஆண்டிற்கான கணக்கறிக்கை. செயற்பாடுகள் ஆராய்வதோடு நடப்பாண்டுக்கான திருப்பணி. திருவிழா தொடர்பான நடைமுறைகளை கலந்தாலோசித்து ஆலய வளர்ச்சிக்கு பேருதவி வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை.

(c/22259)(15.17)

97ஆவது அரியாலை சுதேசிய திரு நாட் கொண்டாட்ட விழா
வடமாகாண ரீதியில்
**SUPER SINGER - 4**

ஆரம்பம் 02.04.2016 (சனிக்கிழமை)
இடம்: அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் கண்டி வீதி, அரியாலை.
நேரம்: மாலை 6.00 மணி
அனுமதிக்கட்டணம்: ரூபா. 500.00

உள்ளூர் போட்டியாளர்களுக்கு அனுமதி இலவசம். தொலைபேசியில் தொடர்புகொண்டு பெயர்களைப் பதிவு செய்யலாம்.

விண்ணப்ப முடிவு திகதி : 31.03.2016

தொடர்புகளுக்கு:
இ.ப.மோகன்ஜித் 077 9094663
ந.சுதேஸ்குமார் 077 6176988
திருமதி.ஸ்ரீ.ஆனந்தகுமாரசாமி 077 4455899

**கண்ணீர் அஞ்சலி**

மண்ணுலகில் 23 . 06 . 1982



விண்ணுலகில் 24 . 03 . 2016

அமரர் சி.ஸ்ரீசங்கர்
(உரிமையாளர் தனுசன் நகையகம்)

சங்கா... நீ கூடி இருந்தால்
குலுங்கி சிரிக்க வைப்பாய்
உன் நோய் மறந்து எமை சிரிக்கவைத்தாய்
கூடி அழுகிறோம்... நண்பா கூடி நீ இல்லையடா
எங்கு நாம் இனி காண்போம் சென்று வா தோழனே !

குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

ஆறாது துயருறும் கல்லூரி நண்பர்கள்
1993-1998 சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

புத்தாண்டு கால குதூகலத்தில்
சொப்ட்லொஜிக் உடன் இணைந்திடுங்கள்

softlogic max

250 மில்லியனுக்கு மேல்
பெறுமதியான தள்ளுபடிகள்
மற்றும் பரிசுகள்

Panasonic 32" LED



3 வருட உத்தரவாதம்
6,999/- மாத்திரம் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

SAMSUNG 32" LED JOY PLUS



மீதி வட்டியில்லாத 15 மாத தவணைக் கொடுப்பனவு முறையில்

3 வருட உத்தரவாதம்
6,999/- மாத்திரம் செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்
இலவச DVD

DEL Laptop 3543 i3



ரூ. 85,999/- மாதம் ரூ. 5,200/- 15 மாதங்கள் இலவசம்

6 வது Generation இல் புதிய மடிக்கணினியை 14,999/- செலுத்தி எடுத்துச் செல்லுங்கள்

FREE Printer

Panasonic 32" LED 32sv7



ஆரம்ப கட்டணம் 9,999/-
மற்றும் இலவச Home theater (XH166)

இந்தச் சலுகைகள் எமது கிளையில் மட்டுமே

தொடர்புகளுக்கு:

softlogic MAX
maximum experience

பிரதான கிளை
இல.420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (KFC கட்டடம்)
0777 397734 / 021 567 8989 / 077 982 4213

## ஊடகப்

**வியலாளர்களின் நினைவாக, நினைவுத் தூபி ஒன்றையும் அமைக்கவுள்ளதாகத்** தெரிவித்துள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே வடக்கு ஊடகவியலாளர்கள் மேற்படி கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.

தெற்கில் இடம்பெற்ற ஊடகவியலாளர் லசந்த விக்கிரமசிங்கவின் படுகொலை, பிரகீத் எக்னெலிகொடவின் கடத்தல் ஆகியன குறித்து தற்போதுள்ள அரசு பூர்வாங்க விசாரணைகளை ஆம்பித்துள்ளது.

இந்த நிலையில் வடக்கில் கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள், ஊடகப் பணியாளர்கள் தாக்கப்பட்டுள்ளனர் - கடத்தப்பட்டுள்ளனர் - கொல்லப்பட்டுள்ளனர். அதனைப் போன்று ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டு - அடித்து நொறுக்கப்பட்டு - எரியூட்டப்பட்டும் உள்ளன.

சர்வதேச ஊடக வரலாற்றில் முதன் முறையாக ஊடக நிறுவனத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் இடம்பெற்று பத்து ஆண்டுகள் நிறைவடையவுள்ளது. சர்வதேச ஊடக சுதந்திர தினத்திற்கு முதல் நாள், 2006 ஆம் ஆண்டு உதயன் பத்திரிகை வளாகத்தினுள் பிரவேசித்த ஆயுததாரிகள், நிறுவனத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த இரண்டு ஊடகப் பணியாளர்களைச் சுட்டுக் கொலை செய்ததுடன், நிறுவனத்தின் சொத்துக்கள் மீதும் தாக்குதல் நடத்தியிருந்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை.

இதேபோன்று 2000 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன், 2006 ஆம் ஆண்டு திருகோணமலையில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சுகிர்தராஜன், யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொலை செய்யப்பட்ட ரஜிவர்மன், காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் வி.நிமலராஜ் ஆகியோர் தொடர்பிலும் விசாரணை நடத்தப்படவில்லை.

இதனைவிட உதயனின் கிளிநொச்சி பிராந்திய அலுவலகம், உதயனின் தலைமை அலுவலகம் என்பவற்றின் மீதான தாக்குதல், உதயன் செய்தி ஆசிரியர் குகநாதன் மீதான தாக்குதல், உதயன் பத்திரிகை விநியோக ஊழியர் மீதான தாக்குதல் என்று எந்தவொரு சம்பவம் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்படவில்லை.

எனவே வடக்கில் கடந்த காலங்களில் இடம்பெற்ற சகல சம்பவங்களும் பட்டியல் படுத்தப்பட்டு, உரிய விசாரணைகள் நீதியாக மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதற்குரிய ஏற்பாடுகளை அமைச்சர் மேற்கொள்ளவேண்டும் என்று வடக்கு ஊடகவியலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (து-வ-5)

## இலங்கையின்

அழைத்து வரப்பட்டார்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சந்தேக நபரை தமது பொறுப்பில் எடுத்துகொண்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

தெற்கில் இயங்கிவரும் ஹெரோயின் போதைப்பொருள் கடத்தலில் முக்கிய சூத்திரதாரி வசந்த மெண்டிஸ் எனக் கூறப்படுகிறது.

இரண்டுவருடங்களாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து இது பற்றிய தகவல்கள் தெரியவந்துள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

2013 ஆம் ஆண்டு 30 கிலோ கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் லைபீரியப் பிரஜை கைதுசெய்யப்பட்ட பின்னர் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும் சில சந்தர்ப்பங்களின்போது, போதைப் பொருள் கடத்தலுடன் சம்பந்தப்பட்ட 9 பேர் கைதுசெய்யப்பட்டனர்.

10 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் துப்பாக்கியுடன் கைதுசெய்யப்பட்ட ஒஸ்டின் என்பவரும் இதில் அடங்குகின்றார்.

ஒஸ்டினிடம் நடத்தப்பட்ட விசாரணைகளை அடுத்து வசந்த மெண்டிஸ் பற்றிய தகவல் தெரியவந்துள்ளது.

வசந்த மெண்டிஸைக் கைதுசெய்ய நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்ததுடன் சிவப்பு அறிக்கையையும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வசந்த மெண்டிஸை நீதிமன்றத் தடுப்புக் காவல் உத்தரவின் கீழ் தடுத்துவைத்து விசாரிக்கவுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (து-சி)

## முஸ்லிம்களை

ளையில் நடைபெறவுள்ளது. இதற்குரிய ஏற்பாடுகள் தற்போது இடம்பெற்று வருகின்றன என்று பொது எதிரணி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அரசுக்கு எதிராகப் பொது எதிரணி உறுப்பினர்கள் கடந்த 17ஆம் திகதி கொழும்பு ஹைட்பார்க்கில் மக்கள் எதிர்ப்புப் பேரணியை நடத்தினர். இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உள்ளிட்ட 50 இற்கும் மேற்பட்ட சு.க. உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்த உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன விசேட சந்திப்பொன்றை நடத்தினார். இதன்போது அடுத்த கூட்டத்தை பேருவளையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொது எதிரணி பக்கம் தமிழ்,முஸ்லிம்கள் இல்லை எனக் கூறப்பட்டுவரும் நிலையில், அந்த மக்களும் தமக்கு ஆதரவு என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே பேருவளையில் கூட்டம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் அந்தப் பொது எதிரணி உறுப்பினர் மேலும் தெரிவித்தார். (து-சி)

## சர்வதேச

ந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவே உதவி செய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பலாலி விமான நிலையத்தைப் பிராந்திய விமான நிலையமாக அபிவிருத்தி செய்வது தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக, ஐந்து பேர் கொண்ட இந்திய தொழில்நுட்ப வல்லுநர்கள் குழு கடந்த 16ஆம் , 17 ஆம் திகதிகளில் இலங்கைக்கு வந்திருந்தது.

இந்தக் குழுவினருக்குப் பலாலி விமான நிலையத்தின் தற்போதைய நிலை மற்றும் அங்குள்ள வசதிகள் தொடர்பாக சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அதிகாரிகள் விளக்கமளித்திருந்தனர்.

பலாலி விமான நிலையத்தின் தற்போதைய நிலை தொடர்பாக இந்தியத் தொழில் நுட்பவியலாளர் குழுவுக்கு நாம் விளக்கமளித்திருந்தோம். அதன் பின்னர் அவர்கள் பலாலிக்குச் சென்று பார்வையிட்டிருந்தனர் என்று சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் அத்துல ஜெயவிக்கிரம குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்:-

பலாலி விமான நிலையத்தை, இந்தியா உள்ளிட்ட தெற்காசியப் பிராந்தியங்களுக்கான விமான சேவைகளை மேற்கொள்ளும் பிராந்திய விமான நிலையமாக மாற்றியமைக்கத் திட்டமிட்டுள்ளது. ஆனால் இது சர்வதேச விமான நிலையமாக மாற்றியமைக்கப்படாது.

இந்தியக் குழுவினர் தமது ஆய்வின் பின்னர், மேலதிகமாக காணிகளைச் சுவீகரிக்காமல் விமான நிலையத்தை அபிவிருத்தி செய்ய முடியும் என்று தெரிவித்துள்ளனர். இந்தக் அதிகாரிகள் குழு, பிராந்திய விமான நிலையமாக பலாலியைத் தரமுயர்த்துவதற்குத் தேவையான நிதி தொடர்பாக மதிப்பீடுகளைச் செய்யும். மதிப்பீடுகள் முடிவடைந்த பின்னர், அது பற்றி இந்திய - இலங்கை அரசுகளின் சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அவை அனுப்பி வைக்கப்படும்.

இந்த திட்டத்துக்கு இந்திய அரசே நிதி அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், இது குறித்து இன்னமும் விரிவாக கலந்துரையாடப்படவில்லை - என்றார். (து-வ-5)

## முகநூல்

முற்பட்டபோது பொலிஸாரால் மடக்கப்பட்டார். அவர் யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவர் ஏற்கனவே இவ்வாறு வேறொரு பெண்ணிடம் நகைகளைப் பெற்றுக் கொண்டு தலைமறைவாகியிருந்த நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. குறித்த இளைஞர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண் ஒருவருடன் முகநூல் மூலமாகத் தொடர்பெடுத்து அதன் மூலம் குறித்த பெண்ணைக் காதலிப்பதாகக் கூறியுள்ளார். அதனை நம்பிய குறித்த பெண் குறித்த நபருடன் நேரடியாகவும் பேசி வந்துள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. அதன் ஒரு கட்டத்தில் குறித்த பெண்ணின் நகைகளைப் புதிப்பிக்கவேண்டும் என்றுகூறி அந்த இளைஞன் நகைகளைப் பெற்றுச் சென்றிருந்தார். பின்னர் அந்த இளைஞரைப் பெண்ணால் பிடிக்க முடியவில்லை.

அதன் பின்னரே தான் ஏமாற்றப்பட்டதை அறிந்த குறித்த பெண், அது தொடர்பில் யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார். அது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டிருந்தனர். அது பற்றிய தகவலும் ஏனைய பொலிஸ் நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த இளைஞர் யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குச் சென்று அங்கும் ஒரு பெண்ணிடம் இவ்வாறு தொடர்பு எடுத்துக் காதலிப்பதாகக் கூறியுள்ளார். அதற்காகத் தன்னை வசதி படைத்தவர் என்றும் அவர் கூறியுள்ளார். அதனையும் அந்தப் பெண் நம்பியுள்ளார். அதனால் அந்தப் பெண்ணிடமும் நகைகளைப் பெற்று அவற்றை விற்று புதிய நகைகளைக் கொள்வனவு செய்ய வேண்டும் என்று கூறி நகைகளைப் பெற்றுள்ளார்.

இதனால் அந்த இளைஞர் மீது சந்தேகம் ஏற்படவே வவுனியா பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. உடன் விரைந்த பொலிஸார் குறித்த இளைஞரைக் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தினர். இதன்போதே அவர் ஏற்கனவே வேறொரு பெண்ணிடம் நகைகளைப் பெற்று மோசடி செய்ததோடு அது பற்றிய வழக்கு யாழ்.பொலிஸ் நிலையத்தில் உள்ளமையும், அவர் பொலிஸாரால் தேடப்படும் நபர் என்றும் தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அதனால் குறித்த இளைஞர் பின்னர் யாழ்.பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். அவர் தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு முகநூல் மூலமாகத் தொடர்பு எடுத்து காதலிப்பதாகக் கூறி பின்னர் நகைகளைப் பறி கொடுத்த சம்பவம் ஏற்கனவே யாழ்.நகரை அண்டிய பகுதியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (து-4)

## உணவு

ந்து, தனது போராட்டத்தைத் தற்காலிகமாக முடித்துக்கொண்டனர்.

கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் குடியேற்றப்பட்ட மக்கள் தமது பூர்வீக வாழ்விட நிலங்களைத் தமக்கு வழங்கும்படி பல்வேறுபட்ட போராட்டங்களை மேற்கொண்டு வந்த நிலையில், கடந்த 24ஆம் திகதி வியாழக்கிழமை முதல் ஆறுமுகம் வேலாயுதபிள்ளை உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தார்.

இந்தப் போராட்டத்துக்கு, கிராம மக்களும் ஆதரவு வழங்கி, உணவு தவிர்ப்பில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், வடக்கு மாகாண முதலமைச்சரினால் நேற்றுமாலை, வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஊடாக வழங்கப்பட்ட எழுத்து மூலமான உறுதிமொழியைத் தொடர்ந்து, குறித்த போராட்டத்தை மக்கள் தற்காலிகமாக இடைநிறுத்தினர்.

இதன்போது, வடக்கு மாகாண முதலமைச்சரினால் வழங்கப்பட்ட உறுதிமொழியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

உங்கள் உணவு தவிர்ப்பு பற்றியும், உங்கள் கோரிக்கைகள் பற்றியும் நான் அறிந்து கொண்டேன். எனது கால் வீக்கத்தின்நிமித்தம், தூர இடப்பிரயாணங்களைத் தவிர்க்க வேண்டியுள்ளது. இல்லையேல் உங்களை நேரில்வந்து சந்தித்து, உங்கள் குறைகளைக் கேட்டு வந்திருப்பேன்.

உங்கள் கோரிக்கைகளை உடனே எம்மால் நிறைவேற்ற முடியாமைக்கு வருந்துகிறேன். ஆனால் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்து அரசுடன் பேசி ஒரு சுமுகமான தீர்வைப் பெறலாம் என்று நம்புகிறேன்.

அதாவது, 3 பேர் கொண்ட ஒரு குழுவை உங்களைச் சந்திக்க இன்னும் ஒரு வாரத்தினுள் அனுப்புவேன். அவர்களிடம் உங்கள் குறைகள் அனைத்தையும் தெரிவியுங்கள்.

அவர்களின் அறிக்கையை நான், ஜனாதிபதியுடன் பகிர்ந்து அந்த அறிக்கையின் சிபார்சுகளை நடைமுறைப்படுத்தக் கோருவேன். இதற்கு மூன்று மாத காலமாவது எடுக்கும். தயவு செய்து உணவு தவிர்ப்பை கைவிட்டு, நான் குறிப்பிட்டவாறு நடவடிக்கை எடுக்க எனக்கு உங்கள் ஒத்துழைப்பைத் தருங்கள் .

ஆறுமுகம் வேலாயுதபிள்ளையின் நிலை கவலைக்கிடமாக இருப்பதை அறிந்துள்ளேன். உங்கள் யாவரிடமும் போராட்டத்தைக் கைவிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முதலமைச்சரின் குறித்த கடிதத்தை வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் மக்களுக்குத் தெரியப்படுத்தினார்.

அதனைத் தொடர்ந்து வடமாகாண சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் உணவு தவிர்ப்பில் இருந்து ஆறுமுகம் வேலாயுத பிள்ளைக்கு நீராகாரம் கொடுத்து போராட்டத்தை நேற்று மாலை 5.00 மணியளவில் முடித்து வைத்தார். (து-வ-101)

## மேலும்

மாக ஜனாதிபதி கையளித்தார். அத்துடன் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியும் விடுவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் கருத்துத் தெரிவித்திருந்த ஜனாதிபதி, இன்னமும் 3 மாதங்களில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை, அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்துவேன் என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கமைய, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் காணிகள் அதிகமாகவுள்ள கிராம சேவையாளர் பிரிவுகளை முன்னுரிமை அடிப்படையில் விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காங்கேசன்துறை வீதிக்கும், கட்டுவனுக்கும் இடைப்பட்ட பிரதேசத்திலேயே இந்தக் காணிகள் விடுவிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், வல்லை – அராலி பிரதான வீதியில், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள வீதிக்குப் பதிலாக, மாற்று வீதியினை திறந்து விடுவதற்கும் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (து-வ-5-101)

## இயற்கை

காமினி ஜெயவிக்கிரம பெரேராவால் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தின் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவு, வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் நிலப்பரப்பு ஆகியவற்றை உள்ளடக்கியே, நாகர் கோவில் இயற்கை ஒதுக்கிடப் பிரதேசம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதேபோன்று மன்னார் மாவட்டத்தில் 29 ஆயிரத்து 180 ஹெக்ரேயர் நிலப்பரப்பை உள்ளடக்கி, 'விடத்தல்தீவு இயற்கை ஒதுக்கிடம்' அமைக்கப்படவுள்ளதாகவும் வனஜீவராசிகள் அமைச்சர், குறித்த வர்த்தமானியின் ஊடாகப் பிரகடனப்படுத்தியுள்ளார். (து-வ-5)





# டயமன்ஸ் - யங்கம்பன்ஸ் இறுதியில் இன்று மோதல்

கரணவாய், மார்ச் 27

கரவெட்டிப் பிரதேச செயலகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதிநாள் நிகழ்வும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளன.

மெய்வன்மைப் போட்டிகளில் ஆண், பெண்களுக்கான 100 மீற்றர், 800 மீற்றர் மற்றும் 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டமும் இடம் பெறவுள்ளன. தொடர்ந்து கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சிவசிறி தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிர்தம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனனும் சிறப்பு விருந்தினராக வடமாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் இ.குருபரனும் கௌரவ விருந்தினராக நெல்லியடி மத்திய கல்லூரியின் அதிபர் க.கிருஸ்ண குமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-108)

# கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை அணிகள் வலயமட்ட கால்பந்தில் கிண்ணங்களை அள்ளின



கரணவாய், மார்ச் 27

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான 15வயது, 17வயதுப் பிரிவினருக்கான ஆண்களுக்கான கால்பந்தாட்டத்தில் இரு பிரிவிலும் கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலையின் அணிகள் கிண்ணம் வென்றன.

மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் கடந்த புதன் கிழமை நடை பெற்ற 15வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது. முதல் பாதியில் கொற்றா வத்தை அணியினரின் ஆதிக்கம் மேலோங்கியது. அந்த அணியின் யாணுசன் முதலாவது கோலை பதிவு செய்ய அதுவே முதல் பாதியின் ஒரே கோலாகவும் அமைந்தது. இரண்டாவது பாதியில் கோல் கணக்கில் வேறெந்த மாற்றமும் ஏற்படவில்லை. முடிவில் கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை அணி 1:0 என்ற கோல் கணக்கில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. மூன்றாமிடத்தை இமையாணன் அ.த.க. பாடசாலை அணி பெற்றது.

ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 17வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை அ.மி. த.க. பாட சாலை அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணி மோதியது. பெரும் ஆதிக்கம் செலுத்திய கொற்றாவத்தை அ.மி. த.க. பாட சாலை 8 ஆவது, 14 ஆவது நிமிடங்களில் முறையே றொபின்சன், தவராஜ் ஆகியோரின் கோல்களால் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர். இரண்டாம் பாதியில் கொற் றாவத்தை அணி வீரர் தவராஜ் மேலும் ஒரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் அந்த அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது. (ம-108-422)




# இன்றைய மோதல்கள்

பருத்தித்துறை கால்ப்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்றுவருகின்றது. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம் பெறும் முதலாவது ஆட்டத்தில் யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்துதொண்டமானாறுஒற்றுமை விளையாட்டுக் கழகமும்மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் இரண்டாவது ஆட்டத் தில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகமும்மோதவுள்ளன.

**நாமகள் வி.கழகத் தொடர்**

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத்தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல்3.45மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ரெட் றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து புத்தூர் சரஸ்வதி அணி மோத வுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொம்மர்ஸ் அணியை எதிர்த்து உதயசூரியன் அணி மோதவுள்ளது. (ம-108-23)

# முன்னேறியது கரணவாய் கொலின்ஸ் வடக்கின் வல்லவன் கால்பந்தாட்டத்தில்



கரணவாய், மார்ச் 27

வடக்கின் வல்லவன் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகம்.

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வல்வை நெடியகாடு விளையாட்டுக் கழகம் பலப்பரீட்சை நடத்தியது. தகாத வார்த்தைப் பிரயோகத்தால் கொலின்ஸ் அணியின் முன்கள வீரர் ஒருவர் நடுவரால் சிவப்பு அட்டை காட்டி வெளியேற்றப்பட 10 பேருடன் விளையாட வேண்டி துர்பாக்கிய நிலைக்கு அந்த அணி தள்ளப்பட்டது. இருப்பினும் வல்வை அணிக்கு நன்றாக ஈடுகொடுத்தது. கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கிட்டத்தட்ட அதே நிலைதான் காணப்பட்டாலும் 7 ஆவது நிமிடத்தில் கொலின்ஸ் அணியின் முன் னணி வீரர் குமார் முதல் கோலைப் பதிவு செய்தார். இரண்டு அணியினரும் கடுமையான போராட்டத்தை வெளிக்காட்டிய போதும் கோல்கணக்கில் எவ்வித மாற் றங்களும் ஏற்படாத நிலையில் 1:0 என்று முதல் வெற்றியைப் பதிவுசெய்தது கொலி ன்ஸ் விளையாட்டுக் கழகம்.

நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக இந்தியத் துணைத் தூதுவர் ஏ.நடராசன் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர்களான கனகரட்ணம் விந்தன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் தலைவர் எம்.நவநீதமணி ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-108)

# வெற்றிபெற்றது முள்ளியவளை வித்தியானந்தா

யாழ்ப்பாணம், மார்ச் 27

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்கும் புதுகுடியிருப்பு மத்திய கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டத் தொடரில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி 2 இலக்குகளால் வெற்றிபெற்றது.

புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய புதுகுடியிருப்பு மத்திய கல்லூரி அணி 37.1 பந்துப்பரிமாற்றங்கள்நிறைவில்சகல இலக்குகளையும் இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சஜிந்தன் 60 ஓட்டங்களையும், யதுர்சன் 23 ஓட்டங்களையும், கபிலன் 14 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி அணியின் சார்பாக அஞ்சயன் 3 இலக்குகளையும், அபிலாஸ் 2 இலக்குகளையும், வாகீசன் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர்.

188 ஓட்டங்களைப்பெற்றால்வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி 27.1 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 188 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அருண் 81 ஓட்டங்களையும் அஞ்சயன் 49 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணியின் சார்பில் சுஜிவன் 4 இலக்குகளையும், தர்சாந், நிம லன் இருவரும் தலா இரு இலக்குகளையும் வாகீ சன் ஓர் இலக்கினையும் வீழ்த்தினர். (ம-23-102)







# நியூசிலாந்தின் கட்டுக்கோப்பான பந்துவீச்சில் பரிதாபமானது பங்களாதேஷின் துடுப்பாட்டம்



ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற நியூசிலாந்து-பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் நியூசிலாந்து 75 ஓட்டங்களால் வெற்றி பெற்று ஓர் ஆட்டத்திலேனும் தோல்வியடையாமல் அரையிறுதிக்குத் தகுதி பெற்ற அணி என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. நியூசிலாந்து அணி அரையிறுதிக்கு ஏற்கனவே தகுதிபெற்றுவிட்ட காரணத்தினாலும் பங்களாதேஷ் தொடரில் இருந்து வெளியேறிய காரணத்தினாலும் இந்த ஆட்டம் ஒரு சம்பிரதாயபூர்வமான ஆட்டமாகவே அமைந்திருந்தது. இதனால் தனது நட்சத்திர வீரரான குப்திலுக்கு ஓய்வு கொடுத்திருந்தது நியூசிலாந்து அணி. வில்லியம்சனுடன் களமிறங்கினார் நிக்கொல்ஸ். பெரிதான பவுண்டரிகள் இல்லை. சுமாரான சராசரியில் சென்றது நியூசியின் இன்னிங்ஸ். இருவரையும் வெளியேற்றினார் ரகுமான். முன்றோ,ரெயிலர் இருவரும் மட்டுமே மத்திய வரிசையில் இரட்டை எண்களில் ஓட்டத்தை பெற்றனர். 35 ஓட்டங்களுடன் முன்றோவையும், 28 ஓட்டங்களுடன் ரெயிலரையும் வெளியேற்றினார் அல் அமின் கொசைன். பின் வரிசை வீரர்களை அச்சுறுத்தினார் ரகுமான். எவரும் இரட்டை இலக்கங்களை எட்டாமல் ஆட்டமிழக்க,முடிவில் நியூசிலாந்து 145-8. அதிகபட்சமாக வில்லியம்சன் 42 ஓட்டங்களையும், முன்றோ 35 ஓட்டங்களையும், ரெயிலர் 28 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக ரகுமான் 5 இலக்குகளையும், அல் அமின் கொசைன் 2 இலக்குகளையும், மோர்ரசா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கியது பங்களாதேஷ். மூன்றே ஓட்டங்களுடன் ரண்அவுட் ஆனார் இக்பால். மிதுன், சிப்பிர் ரகுமான் இருவரையும் தவிர வேறெந்த முன்வரிசை வீரரும் முழுமையாகப் பத்து ஓட்டங்களை எட்டவில்லை. மிதுனை வெளியேற்றினார் மக்கெலிநகன். ரகுமானை வெளியேற்றினார் மக்கலம். பின்வரிசை வீரர்கள் ஒருவர் பின் ஒருவராக ஆட்டமிழக்க 70 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது பங்களாதேஷ். அதிகபட்சமாக ஹொம் 16 ஓட்டங்களையும், சிப்பிர் ரகுமான் 12 ஓட்டங்களையும், மிதுன் 11 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக எலியாட், சொட்கி இருவரும் தலா மூன்று இலக்குகளையும், மக்கலம், சான்நெர், மக்கெலிநகன் மூவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். வில்லியம்சன் ஆட்ட நாயகனானார். (ம)

# விடைபெறுகிறார் வற்சன்

ஆஸ்திரேலிய அணியின் சகலதுறை வீரர் சேன் வற்சன், ரி-20 உலகக்கிண்ணத் தொடருடன் சர்வதேச ஆட்டங்களிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக அறிவித்துள்ளார். கடந்த வருடம் இடம்பெற்ற ஆசஸ் தொடரின் முடிவில் டெஸ்ட் ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெற்ற அவர், ஒருநாள் ஆட்டங்களிலும் ரி-20 ஆட்டங்களிலும் விளையாடுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார். தற்பொழுது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டுவருவதாகத் தெரிவித்துள்ளார். டெஸ்ட் ஆட்டங்களில் எதிர்பார்க்கப்பட்டளவு திறமையை வெளிப்படுத்தியிருக்காத அவர், மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட ஆட்டங்களில், ஆஸ்திரேலியாவின் முக்கிய வீரராகத் திகழ்ந்தார். வற்சனின் இழப்பு நிச்சயம் ஆஸ்திரேலியாவுக்குப் பின்னடைவாக அமையும் என்று சொல்லப்படுகிறது. (ம)

# வருடாந்த விளையாட்டு

## கெருடாவில் அம்பிகை முன்பள்ளியின் விளையாட்டு விழா

கரணவாய், மார்ச் 27

கெருடாவில் அம்பிகை முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. அம்பிகைசிக்கனகடனுதவுகூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.குணசேகரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தனும் சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறைப் பிரதேசசபை முன்னாள் எதிர்கட்சித் தலைவர் ஜ.ஸ்ரீரங்கேஸ்வரன்,கெருடாவில் தெற்கு கிராம சேவையாளர் ஆர்.யோகச்சந்திரன், வாழ்வெழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி பி.கமலினி மற்றும் சி.சுதாகரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கௌரிபாலன் முன்பள்ளியின் விளையாட்டுவிழா

வரணி வடக்கு கௌரிபாலன் சைவப் பிரகாச முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுவிழா இன்று பிற்பகல் 3 மணிக்கு பாடசாலையின் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

முன்பள்ளியின் முகாமைத்துவக் குழுவின் தலைவர் வ.ஜோக நாதனின் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் ஓய்வுநிலை அதிபர் திருமதி ப.இராசரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (ம-122 -108)

# ரி-20 உலகக்கிண்ணத்துடன் விடைபெறுகிறார் கேரத்?



ரி-20 உலகக் கிண்ணத் தொடர் முடிந்த பிற்பாடு ஓய்வு பற்றிய முடிவை எடுக்க உள்ளதாக இலங்கை அணியின் முன்னணி சுழல் வீரர் கேரத் தெரிவித்துள்ளார்.

தற்போதைய இலங்கை அணி அனுபவமற்ற இளம் வீரர்களால் தடுமாறி வருகிறது.

இலங்கை அணியின் இரு தூண்களாக விளங்கிய சங்கக்கார, மகேல ஆகியோரின் ஓய்வையே இன்னும் சரிசெய்ய இயலவில்லை. இந்த நிலையில் இலங்கை அணியின் நட்சத்திர சுழற்பந்து வீரரான கேரத் ஓய்வு பெறும் முடிவில் இருக்கிறார்.

ஓய்வு தொடர்பாக அவர் தெரிவிக்கையில்- நான் ஒரு சில விடயங்களைக் கண்டிப்பாக கருத்திற் கொள்ள வேண்டும். இப்போதைக்கு எனது முழுக் கவனமும் ரி-20 உலகக் கிண்ணத்தில் சிறப்பாகச் செயற்பட வேண்டும் என்பதே. அதேசமயம் இந்தத்தொடர் முடிந்த பிறகு தெரிவாளர்களிடம் கலந்தோசித்து எனது ஓய்வு குறித்து முடிவு எடுப்பேன்-என்றார். (ம)



பூநகரி பிரதேச செயலகப்பிரிவின் நடப்பு வருடத்துக்கான கபடித் தொடரில் மத்திய நண்பர்கள் வி.கழகம் கிண்ணம் வென்றுள்ளது. நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் அண்ணா வி.கழகத்தை 31:30 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வீழ்த்தியே அந்த அணி கிண்ணம் வென்றது. பூநகரி பிரதேச செயலக கபடியில் மத்திய நண்பர்கள் அணி, நடப்பு வருடத்துடன் சேர்த்து தொடர்சியாக ஆறாவது முறையாகச் சம்பியனாகியுள்ளது. (ம)

# வெற்றியைப் பறிகொடுத்தது இலங்கை ; அரையிறுதியில் இங்கிலாந்து

## மத்தியூஸின் போராட்டம் வீண்

ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 10 ஓட்டங்களால் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது இங்கிலாந்து.

இங்கிலாந்தின் துடுப்பாட்ட ஆலோசகராக மகேலவும், இலங்கைத் தெரிவுக்குழுவில் சங்காவும் உள்ளமையால் சங்கா, மகேல இருவருக்கும் இடையில் நடைபெற்ற மறைமுக மோதல் என்றவாறாகவும் இந்த ஆட்டம் பார்க்கப்பட்டது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. கேரத்தின் சுழலில் கேல்ஸ் ஆட்டமிழக்க இலங்கையின் ஆரம்பம் என்னமோ அமர்க்களமாகத்தான் இருந்தது. ஆனால் பின்பு இலக்குச் சரிவென்பது சில பந்துப்பரிமாற்றங்களுக்கு இருக்கவில்லை. மகேல வகுத்துக் கொடுத்த திட்டத்துக்கு ஏற்ப இலங்கையின் சுழலை கச்சிதமாக எதிர்கொண்டது இங்கிலாந்து. இறுதியில் நொறுக்கித் தள்ளினார் பட்லர். இலங்கையின் சுழல் பின்வரிசையில் எடுபடாமல் போக மோர்கனும் அவ்வப்பொழுது பவுண்டரிகளைப் பதிவு செய்தார். முடிவில் இங்கிலாந்து 171-4. பட்லர் 66 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பதிலுக்கு களமிறங்கியது இலங்கை. சந்திமல், டில்சான், சிறிவர்த்தன, திரிமன்னே நால்வரும் அடுத்தடுத்து ஆட்டமிழக்க 15 ஓட்டங்களில் 4 இலக்குகளை இழந்தது இலங்கை. இலங்கை 75 ஓட்டங்களுக்குள் சுருண்டுவிடும் என்று கணித்து விட்டனர் விமர்சகர்கள். வந்தார் மத்தியூஸ் எண்ணங்கள் தவிடுபொடியாகின. இலங்கையின் கொடியும் இலேசாகப் பறக்க ஆரம்பித்தது. கப்புக்கெதரவும் நிலைக்க இங்கிலாந்துக்கு இணையாக ஆதிக்கம் செலுத்தியது இலங்கை. கப்புக்கெதரவின் இடத்தை நிரப்பிய பெரேராவும் சில பவுண்டரிகளைப் பதிவுசெய்தார். 20 பந்துகளில் 33 ஓட்டங்களைப் பெற வேண்டும் என்ற நிலையில் ஆட்டமிழந்தார் பெரேரா. பெரேரா கொஞ்சம் தாக்குப் பிடித்திருந்தால் ஆட்டம் இலங்கையின் பெயரில் எழுதப்படவும் வாய்ப்பிருந்தது. மத்தியூஸ் நிலைத்தாலும் மறுமுனையில் இலக்குகள் சரிய 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இலங்கை. 73 ஓட்டங்களுடன் மத்தியூஸ் களத்தில் இருந்தார். பட்லர் ஆட்டநாயகனானார்.

(ம)



**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
af
**பிரெஞ்சு மொழி**
* பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRENCH EMBASSY யின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
*எமது CERTIFICATES & INTERNATIONAL DIPLOMA (DELF A1) பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவை யில்லை.
கட்டணம் AF மாணவர்களுக்கு 4000/= ஏனையோருக்கு 10300/=
பிரெஞ்சு மொழி பெயர்ப்புக்கள்.
*மாணவர்களுக்கு 40% கழிவு*
* இலவசம்: படிக்கும் பாடங்களின் , PHOTOCOPIES, படிப்பதற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை..
யாழ், வன்னி, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.
உடன் அழைத்து பதியவும்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

இந்தியன் ரெறாசோ சீப்ஸ் விற்பனை
மொத்த விலை ரூபா 1100/=, 1200/=
**"மாபிள்ஸ்"**
சுழிபுரம் பத்திரகாளி கோயில் சந்தி, கண்டாமை, தொல்புரம்.
077 9541877, 076 703 0343

**மொழி வகுப்புக்கள்**
திருமண பந்தத்தின் மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கு இலகுவாக சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய முறையில் ஜேர்மன் - Deutsch, நெதர்லாந்து - Dutch, French, Italian, English (LifeSkills - A1) வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
புதிய பிரிவுகள் திங்கட்கிழமை 28.03.2016 ஆரம்பமாகின்றன.
**விவேகானந்த அக்கடமி**
221/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
021 321 6928, 077 484 2464

**வீடு வாடகைக்குத் தேவை**
யாழ் மாநகரசபைக்கு உட்பட்ட பகுதியில் வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. வாகன இடவசதி விரும்பத்தக்கது.
தொடர்பு: 0774316132, 071 0408301

**Security Camera (CCTV)**
வீடு,வியாபார ஸ்தலங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எமது சேவை...
Monitor Any where... Any Time
* High Resolution & Digital Surveillance (AHD)
* Auto Recording, Online Config
* Day & Night Protection (Night vision)
* Professional Technical Support
One Year Warranty
AgoySoft
076 822 8527,
077 985 6762



BM Business Management
CSD Computing & Systems Development
CE Civil Engineering
QS Quantity Surveying
BMS Biomedical Science
LLB Law
பிரித்தானிய
உயர் தேசிய டிப்ளோமா
மற்றும் பட்டப்படிப்புகள்
UGC
* அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
* இலகு தவணைக் கட்டணம்.
* வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
* பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.
UGC இனால் அங்கீகரிக்கப்பட்டது
**MBA**
12 months British MBA
• Expert British Lecturers*
• Convenient Study Mode
• Easy payment plan
• Highly Reputed & Affordable
PEARSON | WOLVERHAMPTON | London South Bank University
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
Tel : 021 221 9910
For Details 077 710 2131
16 YEARS
No.1 Higher Education Provider (Private Sector)
COLOMBO | MT.LAVINIA | KANDY | BATTICALOA | KURUNEGALA | JAFFNA | KALMUNAI | QATAR

**சமையல் வேலைக்கு பெண்கள் தேவை**
யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்திற்கு அருகில் (64/8, இரண்டாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்) அமைந்துள்ள **சீரடி ஸாயி சங்கரா ஆலயத்திற்கு** தினசரி ஆலய தொண்டுக்கும் ஒவ்வொரு வியாழக்கிழமையும் **300 பேருக்கு (அன்னதானம்)** சமையல் செய்வதற்கும் பெண்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.
**தொடர்பு கொள்ள வேண்டிய இல:**
**077 898 0609**
**ஹி. சுபாஷினி**
(சி. 22235)(12.18)

**இலங்கையில் முதல் தடவையாகப் பெண்களுக்கான அழகுக்கலைக் கல்லூரி**
Olialakan Studioஉம் British College of Beauty Studies உம் இணைந்து நடத்தும் அழகுக் கலைப் பாடநெறிகள்.
ஆரம்பம் முதல் Advance வரை அழகுக் கலையில் பல் பிரிவுகளாக வடிவமைத்துள்ளோம்.
எங்களின் சிறப்பம்சம்...
*பண உதவி செய்து தரப்படும்.
*பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*அதிக புள்ளிகள் பெறும் மாணவர்களுக்கு Awards, பரிசில்கள் வழங்கப்படும்.
*வெளிநாடு செல்பவர்களுக்காகவே விஷேடமாக வடிவமைக்கப்பட்ட பாடநெறி.
*குறுகிய கால வகுப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.
*ஒருநாள் முதல் 6 மாத கால பாடநெறிகளும் பயிற்சி வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
குறிப்பு:- பொருத்தமான நேரத்தையும் நாள்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.
மேலதிக விவரங்களுக்கு:- Icing வகுப்புக்கள் ஆரம்பம் பதிவுகளை மேற்கொள்ளவும்.
**British College of Beauty studies**
PalalyRoad, Thirunelvely Junction.
**076 701 1645**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.03.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.